2992

T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: 45. NO: 1

November 12th 1987

D
N211,31 N87
N87·45·1
136537

D
V211,31 N87
N87.45-1

136537
சென்னை-600 008

## உள்ளடக்கம்

12—11—1987


| | | பக்கங்கள் |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும்-அமைச்சரவையும் | iii—v |
| (ii) | Personnel of the Government of Tamil Nadu .. | vii—viii |
| (iii) | தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | ix—xii |
| (iv) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகரவரிசையில்) .. .. | xii—xxi |
| 1 | வினாக்கள்—விடைகள்— | |
| | (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1–47 |
| | (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 48–121 |
| 2 | தகவல் கோரல்— | |
| | உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிக்கைகள் குறித்து .. .. .. | 122–124 |
| 3 | கவன ஈர்ப்பு— | |
| | (அ) தஞ்சை மாவட்ட விவசாயிகள் நேரடி விதைப்பிற்குக் கூட்டுறவுச் சங்கக் கடன்கள் .. .. .. | 125–131 |
| | (ஆ) கிராமங்களிலுள்ள தெரு விளக்குகள் பராமரிப்பு .. .. .. | 132–140 |
| 4 | அரசினர் சட்டமுன்வடிவுகள்— | |
| | (அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) சட்டமுன்வடிவு, 1987.. | 140–141 |
| | (ஆ) தமிழ்நாடு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1987... | 141 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| (இ) | தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987 .. | 141–142 |
| (ஈ) | தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987 .. | 171–190 |
| | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் .. .. .. | 171–172<br>183–190 |
| | திரு. கோ. வீரய்யன் .. .. | 172–176<br>188–189 |
| | *திரு. மா. மண்மாறன் .. | 176–179 |
| | திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. | 179–180 |
| | திரு. பொ. உத்திராபதி .. .. | 180–183 |
| 5 | அரசினர் தீர்மானம்— | |
| | விதி 33-ஐத் தளர்த்தல் .. .. | 142 |
| 6 | 1987–88-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை—அளித்தல். | 142–145 |
| 7 | அறிவிப்பு— | |
| | வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல் குறித்து. | 145 |
| 8 | தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 1987–88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1986–87 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி— | 145–171 |
| | திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. | 145–152 |
| | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். . | 152–171 |
| 9 | பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. | 191–192 |


---

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர்—திரு. சுந்தர்லால் குரானா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்—(இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்திய பணியாளர்கள், உள்துறை மற்றும் இலஞ்ச ஒழிப்பு). |
| 2. நிதி அமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்—(நிதி, பொது நிர்வாகம், வருவாய், கூட்டுறவு, சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்). |
| 3. உணவு அமைச்சர் .. | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்—(உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு). |
| 4. உள்ளாட்சித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. இராம வீரப்பன்—(நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்). |

| | |
|---|---|
| 5. தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. இரா்சாராம்— (பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், வேளாண்மை, வேளாண்மை நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியங்கள்). |
| 6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்— (மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளம்). |
| 7. கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சி. பொன்னையன்— (கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு, சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், மாவட்ட துணை ஆட்சியாளர், எடை-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள்பற்றி சட்டம் இயற்றல் உள்பட), கம்பெனிகள் பதிவு மற்றும் சர்க்கரைப் பாகு கழிவு). |
| 8. போக்குவரத்துத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி— (போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள், இராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்). |
| 9. வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு— (கைத்தறி மற்றும் நெசவாலைகள் வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு). |
| 10. சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன்— (மதுவிலக்கு ஆயத்துறை, கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம், செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா திட்டம், தொல்பொருள் இயல், பயண இசைவுச் சீட்டு மற்றும் மின்சாரம்). |
| 11. மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்— (சத்துணவு, மகளிர், குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், கதர், பூமிதானம் மற்றும் இராமதானம்). |
| 12. வணிக வரித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. த. இராமசாமி— (வணிக வரிகள்). |
| 13. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம்— (ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்கள்). |
| 14. பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே.கே.எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்— (பொதுப்பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்). |

## (ii) PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

*Governor of Tamil Nadu*

**Thiru SUNDAR LAL KHURANA**

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister .. | The Hon. Dr. M. G. RAMACHANDRAN —(Indian Administrative Service, Indian Police Service and other All India Services, Home and Prevention of Corruption). |
| 2. Minister for Finance .. | The Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN —(Finance, General Administration, Revenue, Co-operation, Legislature, Elections, Statistics, Youth Services Corps and Ex-Servicemen). |
| 3. Minister for Food .. | The Hon. Thiru S. RAMACHANDRAN— (Food and Price Control). |
| 4. Minister for Local Administration | The Hon. Thiru R. M. VEERAPPAN— (Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development and Rural Indebtedness, Labour, Census, Employment and Training, Indians Overceas, Refugees and Evacuees, Iron and Steel Control, News Print Control, Stationery and Printing and Government Press). |
| 5. Minister for Industries and Agriculture. | The Hon. Thiru K. RAJARAM— (Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology, Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering, Wing and Agro-Engineering, Agro-Services Co-operative Societies, Water Supply and Drainage Boards). |
| 6. Minister for Health .. | The Hon. Thiru P. U. SHANMUGAM— (Health, Environmental Pollution Control, Backward Classes and Fisheries). |

| | |
|---|---|
| 7. Minister for Education and Law. | The Hon. Thiru C. PONNAIYAN—(Education, Official Language, Tamil Development and Culture, Law, Courts, Prisons Deputy Collectors, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies and Molasses). |
| 8. Minister for Transport | The Hon. Thiru S. MUTHUSAMY—(Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways, Public, District Revenue Officers, Rural Industries including Village, Cottage and Small Industries). |
| 9. Minister for Housing and Handlooms. | The Hon. Thiru S. THIRUNAVUKKARASU—(Handlooms and Textiles, Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control). |
| 10. Minister for Tourism, Prohibition and Electricity. | The Hon. Thiru V.V. SWAMINATHAN—(Prohibition and Excise, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act, Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona, Planning, Archaelogy, Passports and Electricity). |
| 11. Minister for Noon Meal, Social Welfare and Khadi. | The Hon. Thiru R. SOUNDARARAJAN—(Nutritious Meals, Social Welfare including Women and Children's Welfare, Beggers' Home, Orphanages, Correctional Administration, Khadi, Bhoodan and Gramdhan.) |
| 12. Minister for Commercial Taxes. | The Hon. Thiru T. RAMASAMY—(Commercial Taxes). |
| 13. Minister for Adi Dravidar Welfare. | The Hon. Thiru A. ARUNACHALAM—(Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour). |
| 14. Minister for Public Works. | The Hon. Thiru K.K.S.S.R. RAMACHANDRAN—(Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf). |



### (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி.எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்

*மாற்றுத் தலைவவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு

திரு. ப.ந. இராமச்சந்திரன்

திரு. கே. குப்புசாமி

திரு. செ. செம்மலை

திரு. மா. சுந்தரதாஸ்

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் 10–11–1987 அன்று அறிவிக்கப்பெற்றது.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| பத்மநாப நம்பியார், திரு. பி.எம்., பி.ஏ., பி.ஜி.எல். | கூடுதல் செயலாளர் |
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ., பி.ஏ.இ., பி.எல். | கூடுதல் செயலாளர் |
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்.ஸி. | முதுநிலை குழு அலுவலர் |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜானகிராமன், திரு. செ. சு. பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| சீனிவாசன், திரு. கு. அ., பி.ஏ., .. | குழு அலுவலர் |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே. பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கேசவராம், திரு. எஸ்., பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்.ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| பாலகிருஷ்ணன், திரு. பா., பி.காம். | சார்புச் செயலாளர் |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| ஜான், திரு. சா., பி.ஏ. .. .. | சார்புச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| ஜோசப், திரு. மா.கு., பி.ஏ. — | சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சாமிநாதன், திரு. பொ.க. .. | விவாதப் பதிப்பாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ. பி.ஏ., பி.எல். | தலைமை நிருபர் (பேரவை) |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. .. | தலைமை நிருபர் (குழுக்கள்). |

## IV தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **அ** | |
| 1. அண்ணாதாசன் திரு. எம். | திருவரம்பூர் |
| 2. அப்துல் சமத் திரு. ஆ.கா.அ. | திருவல்லிக்கேணி |
| 3. அப்துல் மஜீத் திரு. எச். | வாணியம்பாடி |
| 4. அரங்கநாயகம் திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 5. அரிக்குமார் திரு. இரா. | பெரணமல்லூர் |
| 6. அருணாசலம் திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 7. அருணாசலம் திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 8. அன்பழகன் திரு. கே. .. | ஓமலூர் |
| 9. அன்பழகன் திரு. தி. .. | நாட்ராம்பள்ளி |
| 10. அன்பழகன் திரு. பொ. .. | இளையான்குடி |
| **ஆ** | |
| 11. ஆண்டி அம்பலம் திரு. மெ. .. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி திரு. .. | ஆண்டிமடம் |
| 13. ஆறுமுகம் திரு. அ. .. | வந்தவாசி |
| 14. ஆறுமுகம், திரு. எச்.ஜி. .. | பெண்ணாகரம் |
| 15. ஆறுமுகம் திரு. ஆர்.எஸ். .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 16. ஆறுமுகம் திரு. எ.எஸ்.ஏ. .. | விருதுநகர் |
| 17. ஆறுமுகம் திரு. மு. .. | சேலம்-2 |
| 18. ஆனந்த கிருஷ்ணா திரு. ஜி. .. | பூந்தமல்லி |
| 19. ஆனந்தன் திரு. மு. .. | உளுந்தூர்பேட்டை |
| **இ** | |
| 20. இரகுபதி திரு. கோ. .. | காட்பாடி |
| 21. இரத்தினம் திரு. எம்.வி. .. | பொள்ளாச்சி |
| 22. இரத்தினவேலு திரு. செ. .. | முசிறி |
| 23. இராசமாணிக்கம் திரு. ஆர். .. | அரூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **இ—தொடர்ச்சி.** | |
| 24. இராசமாணிக்கம் திரு. எல்ல. | .. | தாம்பரம் |
| 25. இராசரத்தினம் திரு. எப்.எம். | .. | கொளச்சல் |
| 26. இராசரத்தினம் திரு. எம். | .. | விழுப்புரம் |
| 27. இராசாங்கம் திரு. மு. | .. | திருவிடைமருதூர் |
| 28. இராசாம்பாள் திருமதி. த. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 29. இராசாராம் திரு. க. | .. | பனமரத்துப்பட்டி |
| 30. இராசாராமன் திரு. எஸ். | .. | பாபநாசம் |
| 31. இராஜேந்திரன் திரு. எஸ்.என். | | தூத்துக்குடி |
| 32. இராமச்சந்திரன் டாக்டர் எம்.ஜி. | | ஆண்டிப்பட்டி |
| 33. இராமச்சந்திரன் திரு. கே.எஸ்.எம். | .. | போடிநாயக்கனூர் |
| 34. இராமச்சந்திரன் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. | சாத்தூர் |
| 35. இராமச்சந்திரன் திரு. ச. | .. | பண்ருட்டி |
| 36. இராமச்சந்திரன் திரு. சோ.மா. | | அண்ணா நகர் |
| 37. இராமச்சந்திரன் திரு. பி. என். | | பட்டுக்கோட்டை |
| 38. இராமசாமி திரு. எஸ்.என். | .. | சாத்தான்குளம் |
| 39. இராமசாமி திரு. த. | .. | இராமநாதபுரம் |
| 40. இராமலிங்கம் டாக்டர் கே.பி. | | ராசிபுரம் |
| 41. இளங்கோவன் திரு.ஈ.வே.கி.ச. | | சத்தியமங்கலம் |
| | **ஈ** | |
| 42. ஈஸ்வரன் திரு. ஆர். | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| | **உ** | |
| 43. உச்சி திரு. கே. | .. | கூடலூர் |
| 44. உத்திராபதி திரு. பொ. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| | **எ** | |
| 45. எத்திராசன் திரு. இ. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **க** | |
| 46. கணபதி திரு. கே.ஆர். | .. | சிதம்பரம் |
| 47. கதிர்வேலு திரு. மா. | .. | ராணிப்பேட்டை |
| 48. கந்தசாமி திரு. கா.வே. | .. | கிணத்துக்கடவு |
| 49. கந்தசாமி திரு. பி. | .. | பொங்கலூர் |
| 50. கல்லன் திரு. கே. | .. | உதகமண்டலம் |
| 51. கலிதீர்த்தான் திரு. சோ. | .. | சங்கராபுரம் |
| 52. காளிமுத்து டாக்டர் கா. | .. | மதுரை கிழக்கு |
| 53. கிருஷ்ணசாமி திரு. கே.ஏ. | .. | ஆயிரம் விளக்கு |
| 54. கிருஷ்ணசாமி திரு. வி.இரா. | .. | அணைக்கட்டு |
| 55. கிருஷ்ணமூர்த்தி திரு. கி. | .. | கும்பகோணம் |
| 56. கிருஷ்ணராஜ் திரு. ஜி. | .. | சேலம்-1 |
| 57. குப்புசாமி திரு. கே. | .. | ஒட்டன்சத்திரம் |
| 58. குப்புசாமி திரு. வே. | .. | செய்யாறு |
| 59. குமரகுருபர ராமநாதன் திரு. ச. | | விளாத்திகுளம் |
| 60. குமரி அனந்தன் திரு. | .. | ராதாபுரம் |
| 61. குமாரதாஸ் டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 62. கோமதி சீனிவாசன் திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 63. கோவிந்தசாமி திரு. ஆர். | .. | குடியாத்தம் |
| 64. கோவிந்தசாமி திரு. ச. | .. | எடப்பாடி |
| 65. கோவேந்தன் திரு. எம்.ஆர். | .. | பேராவூரணி |
| | **ச** | |
| 66. சங்கரலிங்கம் திரு. ச. | .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 67. சண்முகம் திரு. இரா. | .. | திருத்தணி |
| 68. சண்முகம் திரு. என். | .. | சோளிங்கர் |
| 69. சண்முகம் திரு. ப.உ. | .. | மேல்மலையனூர் |
| 70. சண்முகையா பாண்டியன் திரு.எம். | | ஆலங்குளம் |
| 71. சந்திரசேகரன் திரு. ஆ. | .. | சோழவந்தான் |
| 72. சந்திரசேகர் திரு. மு. | .. | முகையூர் |
| 73. சம்சுல் ஆலம் திரு. வி.எஸ்.டி. | | பாளையங்கோட்டை |
| 74. சமரசம் டாக்டர் கே. | .. | காவேரிப்பட்டினம் |
| 75. சரோஜா திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ச—தொடர்ச்சி** | |
| 76. சாமிக்கண்ணு திரு. தா. .. | செங்கம் (செ.வ.) |
| 77. சித்தன் திரு. என்.எஸ்.வி. .. | திருமங்கலம் |
| 78. வெற்றிடம் .. | வில்லிவாக்கம் |
| 79. சிவக்குமார் திரு. ஆர். .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 80. சிவக்குமார் திரு. எம். .. | சூலூர் (செ.வ.) |
| 81. சிவஞானம் திரு. ந. .. | திருவோணம் |
| 82. சிவப்பிரகாசம் திரு. சீ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 83. சிவராமன் திரு. எஸ். .. | சின்னசேலம் |
| 84. சிவராஜ் திரு. சு. .. | ரிஷிவந்தியம் |
| 85. சின்னக்குழந்தை திரு. மு. .. | ஆரணி |
| 86. சின்னசாமி திரு. வே.கு. .. | பவானிசாகர் |
| 87. சின்னராசு திரு. க.இரா. .. | கிருஷ்ணகிரி |
| 88. சின்னராசு திரு. மா. .. | மேட்டுப்பாளையம் |
| 89. சுந்தரதாஸ் திரு. மா. .. | விளவன்கோடு |
| 90. சுப்பராயன் திரு. கே. .. | திருப்பூர் |
| 91. சுப்பிரமணிய ஆதித்தன் திரு. எஸ்.ஆர். | திருச்செந்தூர் |
| 92. சுப்பிரமணியன் திரு. உ. .. | சிவகங்கை |
| 93. சுப்பிரமணியன் திரு. வீ. .. | கண்டமங்கலம்(செ.வ.) |
| 94. சுப்புராயர் திரு. சி. .. | கம்பம் |
| 95. சுவாமிநாதன் திரு. வி.வி. .. | புவனகிரி |
| 96. செங்காளியப்பன் திரு. ஆர். .. | சிங்காநல்லூர் |
| 97. செங்கோட்டையன் திரு. கு.அ. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 98. செங்கோட்டையன் திரு. பெ. | கபிலர்மலை |
| 99. செம்மலை திரு. செ. .. | தாரமங்கலம் |
| 100. செல்லமுத்து திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 101. செல்லப்பா திரு. வி.கோ. .. | கடலூர் |
| 102. சேகர் திரு. கே.பி.கே. .. | பொன்னேரி (செ.வ.) |
| 103. சொர்ணலிங்கம் திரு. கா. .. | திருவாடானை |
| 104. சோலைராசு திரு. க. .. | மருங்காபுரி |
| 105. சௌந்திரராஜன் திரு. ஆர். .. | ஸ்ரீரங்கம் |
| 106. சௌமிராஜன் டாக்டர் கே. .. | தியாகராய நகர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ஞ** | |
| 107. ஞானசுந்தரம் திரு. சா. .. | மன்னார்குடி |
| **ட** | |
| 108. டேனியல்ராஜ் திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம் |
| **த** | |
| 109. தங்கமணி திரு. மு. .. | மாயூரம் |
| 110. தங்கமணி திரு. கே.எம். .. | திண்டிவனம் |
| 111. தங்கராசு திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி |
| 112. தங்கராசு திரு. செ. .. | மங்களூர் (செ.வ.) |
| 113. தங்கவேல்ராஜ் திரு. பி.எம். .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 114. தங்கவேலு திரு. வி. .. | வால்பாறை (செ.வ.) |
| 115. தமிழ்மணி திரு. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 116. தமிழரசன் திரு. கு. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 117. தனபால் திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 118. தாமரைக்கனி திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 119. தியாகராசன் திரு. ஆர். .. | விருத்தாசலம் |
| 120. திருஞானம் திரு. பி.ஆர். .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 121. திருநாவுக்கரசு திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 122. திருமலைசாமிக் கவுண்டர் திரு. சு. .. | உடுமலைப்பேட்டை |
| 123. தீர்த்தகிரி கவுண்டர் திரு. டி. .. | மொரப்பூர் |
| 124. தீர்த்தராமன் திரு. ப. . | பாலக்கோடு |
| 125. துரை அன்பரசன் திரு. .. | நெல்லிக்குப்பம் |
| 126. துரை கிருஷ்ணமூர்த்தி திரு. .. | தஞ்சாவூர் |
| 127. துரை கோவிந்தராசன் திரு. .. | திருவையாறு |
| 128. துரைசாமி திரு. சைதை சா. | சைதாப்பேட்டை |
| 129. துரைராசு திரு. எஸ்.பி. .. | காரைக்குடி |
| 130. துரை ராமசாமி திரு. .. | வெள்ளக்கோவில் |
| 131. தெய்வநாயகம் திரு. எ. .. | மதுரை சென்ட்ரல் |
| 132. தேவராஜ் திரு. வி.எம். .. | வேலூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ந** | |
| 133. நடராசன் திரு. ஆ. .. | பேரூர் |
| 134. நரசிம்ம பல்லவன் திரு. க. .. | உத்திரமேரூர் |
| 135. நரசிம்மன் திரு. பூ.மு. .. | பள்ளிப்பட்டு |
| 136. நல்லமுத்து டாக்டர் க. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 137. நல்லுசாமி திரு. என். .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 138. நாச்சிமுத்து திரு. கே.பி. .. | மேட்டூர் |
| 139. நாராயணன் திரு. பு.கோ. .. | பவானி |
| 140. நெடுஞ்செழியன் டாக்டர் இரா. | ஆத்தூர் |
| **ப** | |
| 141. பஞ்சவர்ணம் திரு. வி.எஸ். .. | அருப்புக்கோட்டை |
| 142. பட்டாபிராமன் திரு. செ. .. | திருவள்ளூர் |
| 143. பரமசிவம் திரு. பா.ந. .. | பல்லடம் |
| 144. பழனி திரு. த. .. | ஆற்காடு |
| 145. பழனிச்சாமி திரு. கா.செ. .. | காங்கேயம் |
| 146. பழனிமுத்து திரு. சி. .. | ஆத்தூர் |
| 147. பாண்டியன் திரு. பி.எச். .. | சேரன்மாதேவி |
| 148. பாண்டுரங்கன் திரு. மு. .. | கலசப்பாக்கம் |
| 149. பாப்பா சுப்பிரமணியன் திரு. .. | குத்தாலம் |
| 150. பாரதி திரு. ஜி.கே.ஜெ. .. | திருவொற்றியூர் |
| 151. பார்மலை திரு. க. .. | மானாமதுரை (செ.வ.) |
| 152. பாலகிருஷ்ணன் திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 153. பாலகிருஷ்ணன் திரு. வி. .. | சிவகாசி |
| 154. பாலச்சந்திரன் திரு. வை. .. | பத்மநாபபுரம் |
| 155. பாலசுப்பிரமணியன் திரு. க. .. | சீர்காழி (செ. வ.) |
| 156. பாலசுப்பிரமணியன் திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 157. பாலசுப்பிரமணியன் திரு. வேடசந்தூர் வி.பி. | வேடசந்தூர் |
| 158. பாலாஜி திரு. கே. .. | காஞ்சிபுரம் |
| 159. பாலுச்சாமி திரு. ஏ. .. | பரமக்குடி (செ.வ.) |
| 160. பாலுசாமி திரு. அ. .. | நிலக்கோட்டை (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ப—தொடர்ச்சி** | |
| 161. பிரணவநாதன் திரு. அ. .. | கடலாடி |
| 162. பிரேம்குமார் திரு. ஆ. .. | திண்டுக்கல் |
| 163. புருசோத்தமன் திரு. எஸ். .. | அரியலூர் |
| 164. புஷ்பராசு திரு. த. .. | திருமயம் |
| 165. பெரியசாமி திரு. அ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 166. பெரியசாமி திரு. ரா. .. | கொட்டியம் |
| 167. பெருமாள் திரு. தெ. .. | கடையநல்லூர் |
| 168. பெருமாள் பிள்ளை திரு. கோ. | கன்னியாகுமரி |
| 169. பொன் முத்துராமலிங்கம் திரு. | மதுரை (மேற்கு) |
| 170. பொன்னம்மாள் திருமதி ஏ.எஸ். | பழனி (செ.வ.) |
| 171. பொன்னுசாமி டாக்டர் அ. .. | பெருந்துறை |
| 172. பொன்னையன் திரு. சி. .. | திருச்செங்கோடு |
| **ம** | |
| 173. மணவாளன் திரு. எஸ்.பி. .. | திருப்பத்தூர் |
| 174. மணிமாறன் திரு. மா. .. | நன்னிலம் (செ. வ.) |
| 175. மலர்மன்னன் திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 176. மனோகரன் திரு. கி. .. | புரசைவாக்கம் |
| 177. மனோகரன் திரு. தி.நா.கோ.அ. | திருநாவலூர் |
| 178. மாசிலாமணி டாக்டர் ந. .. | ஜெயங்கொண்டான் |
| 179. மாதவன் திரு. செ. .. | திருப்பத்தூர் |
| 180. மாதையன் திரு. யு.பி. .. | அந்தியூர் (செ.வ.) |
| 181. மாரிமுத்து திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 182. மாரிமுத்து திரு. மு. .. | திருப்பரங்குன்றம் |
| 183. மீனாட்சிசுந்தரம் திரு. மா. .. | வேதாரண்யம் |
| 184. முகம்மது கனி திரு. ஜே. .. | புதுக்கோட்டை |
| 185. முகம்மது சலீம் டாக்டர் த. .. | பெரியகுளம் |
| 186. முசிறிபுத்தன் திரு. பி. .. | குளித்தலை |
| 187. முத்துசாமி திரு. சு. .. | ஈரோடு |
| 188. முத்துராமலிங்கம் திரு. பி.கே.எம். | உசிலம்பட்டி |
| 189. முத்துவேல் திரு. கே. .. | முதுகுளத்தூர் |
| 190. முத்தையா திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 191. முருகானந்தம் திரு. டி.என். .. | செஞ்சி |
| 192. முனிரத்தினம் திரு. இரா.சா. .. | கும்மிடிப்பூண்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ய | |
| 193. யசோதா திருமதி டி. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| | ர | |
| 194. ரகுமான்கான் திரு. அ. | .. | சேப்பாக்கம் |
| 195. ரமணி திரு. கு. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 196. ரவீந்திரன் திரு. ஏ.எஸ். | .. | திருவண்ணாமலை |
| 197. ராமன் திரு. கி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 198. ராமஜெயம் திரு. ம.நா. | .. | வானூர் (செ.வ.) |
| 199. ராஜாபாபு திரு. ஜெ. | .. | போளூர் |
| 200. ரெங்கசாமி திரு. ஆர். | .. | கோவில்பட்டி |
| 201. ரெத்தினராஜ் திரு. எஸ். | .. | நாகர்கோவில் |
| | ல | |
| 202. லட்சுமி திருமதி பி. | .. | அவினாசி (செ.வ.) |
| | வ | |
| 203. வடிவேல் திரு. கு. | .. | கரூர் |
| 204. வளர்மதி திருமதி பா. | .. | மயிலாப்பூர் |
| 205. விஜயபாலன் திரு. என். | .. | பூம்புகார் |
| 206. விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி | | வீரபாண்டி |
| 207. வீரப்பன் திரு. ஆர்.எம். | .. | திருநெல்வேலி |
| 208. வீரய்யன் திரு. கோ. | .. | நாகப்பட்டினம் |
| 209. வீராசாமி திரு. தா. | .. | ஒரத்தநாடு |
| 210. வீரானம்பலம் திரு. க.வெ. | .. | பேரூர் |
| 211. வெங்கடரெட்டி திரு. டி. | .. | ஓசூர் |
| 212. வெங்கடாசலம் திரு. அ. | .. | ஆலங்குடி |
| 213. வெங்கடாசலம் திரு. கி. | .. | லால்குடி |
| 214. வெங்கடாசலம் திரு. டி.எம். | .. | பரகூர் |
| 215. வேங்கடரமணன் திரு. டி.ஆர். | .. | தென்காசி |
| 216. வேணு கோபால் திரு. எஸ். | .. | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 217. வேணுகோபால் திரு. கே.வி. | .. | தல்லி |
| 218. வேலு திரு. கடலூர் இ.வி. | .. | தண்டராம்பட்டு |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| | ஜ | |
| 219. ஜான் வின்செண்ட் திரு. மு. | .. | நாங்குநேரி |
| 220. ஜெகதீசன் திரு. ஆனூர் பு.கோ. | | செங்கல்பட்டு |
| 221. ஜெகதீசன் திரு. சு. | .. | அரவக்குறிச்சி |
| 222. ஜெயச்சந்திரன் திரு. சா. | .. | காட்டுமன்னார் கோவில் (செ. வ.) |
| 223. ஜெயராமன் திரு. வே. இரா. | .. | தேனி |
| | ஹ | |
| 224. ஹேமச்சந்திரன் திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| | ப | |
| 225. பிரான்சிஸ் திரு. ஜி.கே. | .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

| | | |
|---|---|---|
| திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | .. | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, நவம்பர் 12, வியாழக்கிழமை

ஐப்பசி 26, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாம் தலை.''

மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாதிருத்தல், காப்பவர் செய்து கொள்ளும் காவல் எல்லாவற்றிலும் சிறந்தது.

1. வினாக்கள்—விடைகள்.

அ. உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனங்களில் ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கீடு.

*61—(*வினா எண் 12650)*—திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கும்பொழுது ஆதி திராவிட வகுப்பினருக்கு ஒதுக்கீட்டின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனத்தில் கடைப்பிடிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நியமிக்கும் பொழுது ஆதி திராவிடர் வகுப்பினரைச் சேர்ந்த அலுவலர்களை நியமிப்பதற்காக தனி ஒதுக்கீடு ஏதுமில்லை. ஆயினும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த அலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக நியமிக்கப்படுகின்றார்கள்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள மாவட்டங்களில் தற்போது பணியாற்றுகின்ற ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கை என்ன? மாவட்டங்களில் ஆதி திராவிட நலத் துறை அதிகாரிகளை நியமிக்கும் பொழுது ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா? அப்படி உத்தேசம் உள்ளது என்றால் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த ஆதி திராவிட நல அலுவலர்களை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தற்போது இருபது மாவட்டங்களில் நான்கு மாவட்டங்களிலே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தாழ்த்தப்பட்ட பிரிவையும் ஒரு மாவட்டத்திலே பழங்குடி வகுப்பையும் சார்ந்தவர்கள். தாழ்த்தப்பட்டோர் நலத் துறை சம்பந்தப்பட்ட பிற்பகுதி கேள்விக்குத் தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரிடமிருந்து பதிலைப் பெறுவதுதான் சிறந்தது.

திரு. இரா. தாமரைக்கனி : : பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பதவி கொடுக்கும்பொழுது ஒரு பிரிவினருக்கே கிடைக்காமல் அதில் பல பிரிவுகள் இருக்கின்றன. எல்லாப் பிரிவினருக்கும் கிடைக்கின்ற அளவில் அரசு பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத்தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்வாக நலனை உத்தேசித்து மாவட்டங்களுக்கு நியமிக்கப்படுகிறார்கள். அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் இடம் பெறுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் அவர்கள் என்ற காரணத்திற்காக மாவட்டங்களில் போடுவது இல்லை. ஆகையினாலே நிர்வாக நலனுக்கு ஏற்ப நாம் போடுகின்றபொழுது அதில் தாழ்த்தப்பட்டவர்களும் இடம் பெறுகிறார்கள். ஆகையினாலே அது பிரிவுவாரியாகவோ அல்லது பகுதிவாரியாகவோ நியமிப்பது சரியாகாது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர்கள், பிற்பட்டவர்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களாக நியமிப்பது வரவேற்கத் தக்க ஒன்று. காந்திஜி அவர்களுடைய கனவு நனவானது கண்டு மகிழ்ச்சி அடையக் கூடிய நிகழ்ச்சிதான். இருப்பினும் அப்படி நியமிக்கப்படுகின்றவர்கள் ஆதிதிராவிடர்கள், மற்றவர்கள் என்று பாரமட்சமற்ற முறையில் நடந்து கொள்கிறார்களா என்பதை அரசு கண்காணிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : : துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் சொல்ல விரும்புவது Recruitment is different from placement வேலைக்கு எடுக்கிற பொழுதுதான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு. Placement—எங்கே அவர்களை வேலையில் அமர்த்த வேண்டுமென்பது அந்தந்த வேலையினுடைய நிமித்தங்களைப் பொறுத்தும், நிர்வாக நலனை ஒட்டியும் வருகிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களாகத் தாழ்த்தப்பட்டவர்களோ. பிற்படுத்தப்பட்டவர்களோ நியமிக்கப்படுகிறார்கள் என்றால் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற காரணத்தினாலே அல்ல. நிர்வாக நலனை ஒட்டி நியமிக்கப்படுவதனால் இன்சிடென்டலாக அது வருகிறது. அப்படித்தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப் போடப்படுகிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது நன்மையோடுதான் நடந்து கொள்கிறார்கள்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குரூப்—1லேயிருந்து இந்திய ஆட்சிப் பணித் துறைக்கு சிபார்சு செய்கின்றபொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியாக ஒதுக்கீடு எதுவும் பரிசீலிக்கப்படுகிறதா? ஆம் என்றால் விவரம் சொல்ல அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

அரிசி குருணையை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லத் தடை.

62—(*வினா எண் 13351)—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலிருந்து அரிசி குருணையை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதை தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து அரிசி குருணையை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வது தற்சமயம் தடை செய்யப்படுவதில்லை. தேவை ஏற்படின் அரசு ஆவன செய்யும்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசி ஆலைகளில் செய்கின்ற குருணைகளை 3 மாதங்களுக்கு ஒரு முறை மண்டலங்களில் எல்லாம் டெண்டர் விடும்போது, பெரும்பாலான மண்டலங்களிலே வெளி மாநிலங்களிலே உள்ளவர்கள் அதிலே கலந்துகொண்டு, குருணைகளை டெண்டர்

மூலம் எடுக்கிறார்கள். அந்த டெண்டர் மூலம் எடுத்த குருணைகளை மிகவும் எளிதாக மாநிலத்திற்கு வெளியே கொண்டு சென்று விடுகிறார்கள். ஆனால், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அந்தக் குருணைகளை எடுத்துச் செல்வது என்றால், அவற்றை வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல முடிவது இல்லை. ஆகவே, அந்தக் குருணையை மிகக் குறைந்த விலையிலே தமிழகத்திலே விற்பனை செய்ய ஏதுவாக, குருணையை வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதைத் தடை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை மையமாகக் கொண்டு, இப்பொழுது அரிசியே எடுத்துக் செல்லக் கூடாது என்ற விதி இருக்கிறது. அதை மாற்றி—அரிசி என்றால் குருணையும் அதில் சேர்ந்து அடங்கும் என்கின்ற வகையில் திருத்தம் கொண்டு வந்து அரசு உடனடியாக உத்தரவு பிறப்பிக்கும்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போல மத்திய சர்க்காருக்குச் சொந்தமான உணவுக் கழகத்தின் அரிசி ஆலைகளிலிருந்து ஏலம் விடப்படும் நெல் மற்றும் குருணைகளைக் கூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பர்மிட் மூலம்தான் எடுத்துச் செல்ல முடியும். ஆனால், தமிழ் நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஆலைகளிலிருந்து குருணைகளை எவ்வித பர்மிட்டுமில்லாமல் வெளி மாநிலங்களுக்கு எளிதாகக் கொண்டு செல்ல முடிகிறது. ஆகவே, அதனையும் தடை செய்வதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் ஏற்கனவே குறிப்பிட்டேன். 1984ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையா வியாபாரப் பொருள்கள் ஆணை நெல், அரிசி சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு ஆணையாகும். இவ்வாணையின் கீழ் அரிசி என்ற சொல் வரையறை செய்யப்படவில்லை. அரிசி என்ற சொல் வரையறை செய்யப்பட்டு குருணையும் இவ்வரையறைக்குள் அடங்கும் என திருத்தம் செய்து, அரசு தற்போது திருத்தம் வெளியிட்டுள்ளது. எனவே, அரிசிக்கு என்ன என்ன விதிமுறைகள் பொருந்துமோ அது குருணைக்கும் இனி பொருந்தும்.

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி, குருணை அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப்படுவது பற்றிதான் மூலக்கேள்வி. ஆனால் குருணை என்ற பெயரால் முழு அரிசியையே அண்டை மாநிலங்களுக்குக் கடத்துகிறார்களே, அதை அரசு அறியுமா? ஆகவே, அரிசி குருணை என்றால், அரிசியைத்தான் கடத்துகிறார்கள்—குருணை என்ற பெயரால் அரிசியைத்தான் கடத்துகிறார்கள். ஆகவே, அதைத் தடை செய்ய அரசு உடனடியாக முன் வருமா என அறிய விரும்புகிறேன்



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அரசு அறிந்த காரணத்தால்தான் இந்த ஆணையில் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமை பெற்ற பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து தமிழ் நாட்டுக்கு அரிசியையோ அல்லது நெல்லையோ கொண்டு வருவதற்கு லெவி போடுகிறார்கள். அதை எடுப்பதற்கு அரசு முன் வருமா ? செஸ் போடுகிறார்கள். அதையும் எடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய வாய்ப்பு எதுவும் இல்லை. இருந்தாலும் தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

திரு. கே. பாலாஜி : : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தையும் சென்னை மாவட்டத்தையும் இணைத்து ஒரே மண்டலமாக்கி செங்கல்பட்டிலிருந்து அரிசியை சென்னைக்குக் கொண்டு வருவதைப் போல, அனைத்து மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்கிற ஒரு உத்தரவை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அறிவிக்காது.

திருச்சியில் பாதாள சாக்கடை, குடிநீர் திட்டம்.

63—(*வினா எண். 5144)— திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாநகரில் 13 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட பாதாள சாக்கடை, குடிநீர் திட்டம் தற்பொழுது என்ன நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டம் துவக்கப்பட்டபொழுது எவ்வளவு செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது?

(இ) திருத்திய மதிப்பீட்டின்படி செலவு எவ்வளவு ஆயிற்று?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :: துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சி பாதாள சாக்கடைத் திட்டம் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் நிலை ஆகியவை தற்பொழுது முடிவடையும் நிலையிலுள்ளது.

(ஆ) மற்றும், (இ): திருச்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் துவக்கப்பட்டபோது ரூ. 285.06 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. திருத்திய மதிப்பீட்டின்படி இத்திட்டத்திற்கு

ரூ. 664.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப் பட்
டுள்ளது. ஏப்ரல் 1987 முடிய இத்திட்டத்திற்கு ரூ. 616.30
இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. திருச்சி குடிநீர்த் திட்
டத்தின் இரண்டாம் நிலை ரூ. 161.30 இலட்சத்திற்கு மதிப்பிடப்
பட்டது. பிப்ரவரி 1987 முடிய இத்திட்டத்திற்கு ரூ. 177.49
இலட்சம் செலவாகியுள்ளது.

**திரு. அ. மலர்மன்னன்** : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அளித்த
விளக்கத்திலே இரண்டாவது நிலை என்று இங்கே குறிப்
பிட்டிருக்கிறார்கள். இரண்டாவது நிலை என்றால், இன்னும்
எத்தனை நிலையிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்** : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மூன்றாம் நிலை ஒன்று இருக்கிறது. அந்த
மூன்றாம் நிலையைப் பொறுத்த வரையில் ஆய்வுப் பணிகள்
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாலே மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன.

(முற்பகல் 10—10)

**திரு. அ. மலர்மன்னன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஏற்கனவே இந்தத் திட்டம், போட்ட நாளிலே இது
5 கட்ட வேலையாக பிரிக்கப்பட்டதாகப் பொறியியல் வல்லுநர்
களால் திருச்சியில் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு 13,
14 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் இரண்டாவது கட்ட வேலை
நடந்துகொண்டிருக்கிறது. ஆக மூன்றாவது கட்ட வேலை
4-வது கட்ட வேலை, 5-வது கட்ட வேலை ஆகியனவற்றை ஆரம்
பிக்க மேலும் 10, 15 ஆண்டுகள் ஆகிவிட்டால், அப்போது இன்
றைக்கு இருக்கிற திட்டத்தின் மதிப்பீடு மேலும் உயரும் என்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்வார்களா? ஆகவே அதை
உணர்ந்து வெகுவிரைவில் முடிக்க ஆவன செய்வார்களா? மேலும்
இன்றைய தினம் திருச்சி மாநகரம் வளர்ந்து வருகிற நகரமாக
இருக்கிறது. இன்றைக்குப் போடப்பட்ட திட்டங்களுக்குப் பின்
னால் திருச்சியிலே பல்வேறு பிரிவுகளில் நகர் அபிவிருத்தி அடைந்
திருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு இந்தத் திட்டம் மிக விரை
வில் பயன்பட ஏற்பாடு செய்யப்படுமா என்பதை நான் அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்** : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, திருச்சி சென்னையைப் போல ஒரு பெரிய
நகரமாகும். அது வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகரம்.
6 கட்டங்களிலேதான் அந்தத் திட்டத்தை முடிக்க முதலிலே திட்
டமிடப்பட்டு இருந்தது. இரண்டாவது கட்ட வேலை முடிந்து
இப்போது 3-வது கட்டத்திற்கு வந்திருக்கிறோம். அங்கே பெரிய
தெருக்களும் இருக்கின்றன. சின்ன தெருக்களும் இருக்கின்றன.
காந்தி மார்க்கெட் பகுதியில் தெருக்கள் மிகக்குறுகிய தெருக்களாக
இருக்கின்றன. அங்கே ஏற்கெனவே தொலைபேசித்துறை, மின்
சார இலாக்கா போன்றவற்றின் வயர்கள் எல்லாம் பதிக்கப்பட்டு
இருக்கின்றன. எனவே தபால் தந்தி இலாக்காவின் கம்பிகள் எல்



லாம் கெட்டுப்போகாமல் இருப்பதற்காக பகிர்மானக் குழாய்கள்
பதிப்பதில் நிறைய காலதாமதம் ஏற்பட்டது. ஆக எல்லாவற்றி
லும் காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும் தொடர்ச்சியாக இந்தத்
திட்டம் மேற்கொள்ளப்பட்டு திருச்சி நகர் முழுவதற்குமாக இந்த
பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நல்லபடியாக உருவாக்க ஏற்
பாடுகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. உச்ச
கட்டமாக 2001-ஆம் ஆண்டில் 6 இலட்சம் மக்கள் அங்கே இருப்
பார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கான மக்கள்
தொகைக்குப் பயன்படுகிற வகையில் இந்தத் திட்டம் நிறை
வேற்றப்பட்டுக்கொண்டு வருகிறது.

சிறுவாக்கம் கிராமத்தில் மேநிலை நீர்த்தேக்கத் தொட்டி.

*64—(*வினா எண். 9022)*—**திரு. க. நரசிம்மபல்லவன்** :
மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உத்தரமேரூர் தொகுதியில் வாலாஜாபாத் யூனியனில்
சிறுவாக்கம் என்ற கிராமத்திற்கு தன்னிறைவு திட்டத்தால் குடி
தண்ணீர் மேநிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் வேலை
கடந்த மூன்று வருடங்களாக கட்டப்படாமல் உள்ளதை அரசு
அறியுமா ?

(ஆ) மேநிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நட
வடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்** : துணைத் தலைவர்
அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இக்குடிநீர்த்தொட்டியின் கட்டுமானப்
பணிகள் அனைத்தும் 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில்
முடிக்கப்பெற்று குடிநீர்த்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு
வருகிறது.

**திரு. க. நரசிம்மபல்லவன்** : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்
தலைவர் அவர்களின் சீரிய உத்தரவின் அடிப்படையில் என்
னுடைய தொகுதியில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து
வைத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(பதில் இல்லை).

தஞ்சை மாவட்டத்தில் நிலக்கரி படிவங்கள்.

*65—(*வினா எண். 11979)*—**திரு. மா. மணிமாறன்** :
மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டத்தில் நிலக்கரி படிவங்கள் கிடைப்
பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை
என்ன ?

[1987 நவம்பர் 12

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறைக்கு அருகில் திரு மங்கலம் கிராமத்தில் பழுப்பு நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தரைமட்டத்திலிருந்து 300 மீ. ஆழத்தில் பழுப்பு நிலக்கரி 12 முதல் 16மீ. அளவிற்கு படிந்து காணப்படுகிறது. இப்பழுப்பு நிலக்கரி படிவம் 300 மீட்டர் ஆழத்தில் உள்ளதால் சுரங்கப் பணி செய்து வெட்டியெடுக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசை அணுகி, அங்கே ஒரு நிலக்கரி சுரங்கத்தை ஏற்படுத்துகிற வகையில் அதாவது அங்கே கிடைக்கிற நிலக்கரி நல்ல நிலக்கரியாக இருப்பதால் அதனைப் பயன்படுத்துவதற்கு உரிய வகையில் மத்திய அரசை வற்புறுத்த மாநில அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே காணப்படுவது பழுப்பு நிலக்கரிதான்; நல்ல நிலக்கரி என்று சொல்ல முடியாது. பௌதிக ஆய்வு செய்து முடிவெடுத்திருக்கிறார்கள். மேலும் அது ரொம்ப ஆழத்தில் இருக்கிறது. எனவே அங்கே சுரங்கம் அமைத்து வெட்டி எடுப்பது பொருளாதார அடிப்படையில் சரியாக இருக் குமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. பொருளாதார அடிப் படையில் கட்டுப்படியாகக்கூடிய நிலைமை இருந்தால்தான் அங்கே நிலக்கரி எடுப்பதைப் பற்றி முடிவு செய்ய முடியும். இது குறித்து புவியியல் துறை ஆய்ந்து அரசுக்கு முடிவினை அறி விக்கும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் கிடைக்கிற நிலக்கரியை விட உயர்ந்த ரகம் என்றும் நெய்வேலியை விட மேலேயே கிடைப்பதாகவும் நான் ஒரு கட்டுரையில் படித்தேன். 'இந்து' பத்திரிகையில் எழுதி இருந்தார்கள். எனவே அரசாங்கம் அதைப் பரிசீலித்து நல்ல நிலக்கரியாக இருப்பதாலும், நெய்வேலியை விட மேலேயே அதிகமாகக் கிடைப்பதாலும் அதனை எடுப்பதற்கு ஆவன செய்வார்களா ? அதனால் தஞ்சை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு ஏற்படுவதோடு துணைத் தொழில்களும் உருவாவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசை வற்புறுத்தி விரைவில் இந்தத் திட்டத்தைக் கொணர முயற்சி எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே கிடைக்கிற நிலக் கரியை விட ரொம்ப ஆழத்தில் இருக்கிறது. 300 மீட்டர்



1987 நவம்பர் 12]

ஆழத்தில் இருக்கிறது என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆகவே அவ்வளவு ஆழத்தில் உள்ளதை எடுப்பது என்றால் சுரங்கம்தான் தோண்ட வேண்டும். ஆனால் நெய்வேலியில் இருப்பது திறந்த வெளி சுரங்கம். அதை எடுப்பது சுலபம். இது கடினம், விலையும் கட்டுப்படியாக வேண்டும். மேலும் இந்தியாவிலே பல்வேறு பகுதிகளிலே நிலக்கரி கிடைக்கிறது. எனவே விலை கட்டுப் படியாகக்கூடிய நிலைமை இருந்தால் இதை எடுப்பது பற்றி மீண்டும் ஆலோசிக்கலாம். மத்திய அரசினிடத்திலே இப்போது எந்த உதவியும் கோருவது ஒன்றும் பயன்படாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : :மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப் பிடும் போது 300 மீட்டருக்கும் கீழே இருப்பதனால், அதிக ஆழத்தில் இருப்பதனால் அதிகமான செலவு பிடிக்கும் கட்டுப் படியாகாது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குறிப்பிட்ட கரியை எடுப்பதற்கு ஆகக் கூடிய செலவை மட்டும் வைத்து லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல், அந்தக் கரியினால் ஏற்படக் கூடிய மற்றைய விளைவுகளையும் சேர்த்து வைத்து ஒட்டு மொத்தமாகப் பார்த்து, தமிழ்நாட்டினுடைய நலன் கருதி அந்த திட்டத்தை மீண்டும் எடுத்துக் கொள்ள அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க். இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டிலே பூராவையும் நஷ்டத் திலே நடத்திக் கொண்டிருக்க முடியாது.

பைங்குளம் குடி தண்ணீர் திட்டம்.

66—(*வினா எண் 12391)—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா வில் உள்ள பைங்குளம் குடி தண்ணீர் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்காவில் உள்ள பைங்குளம் கிராமப் பேரூராட்சி மற்றும் வழியில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்க ரூ. 97 இலட்சங்கள் உத்தேச மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட திட்டம் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத் தின் பரிசீலனையில் உள்ளது.

[1987 நவம்பர் 12

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் பெரும்பான்மையான பகுதி தேங்காய் பட்டணம், இணையம், புத்தன் துறை, முள்ளூர் துறை, இராமன் துறை போன்ற மீனவ கிராமப் பகுதியைச் சார்ந்தது. அது மட்டும் அல்லாமல் அம்சி, கூட்டலாம் மேடு, வேட்டமங்கலம் போன்ற பகுதிகள் எல்லாம் குடி தண்ணீருக்கு மிக சிரமமான பகுதிகளாகும். ஆகவே அங்கே எந்தவிதமான முயற்சிகளை தமிழ்நாடு குடிதண்ணீர் வடிகால் வாரியம் மேற்கொண்டாலும் கூட நல்ல தண்ணீர் கிடைப்பது இல்லை. அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கிற காரணத்தாலே, அதிகக் காலதாமதம் ஆகாமல் இந்த ஆண்டே அந்த வேலையை எடுத்துக் கொள்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, திட்ட மதிப்பீட்டின் தலைமைப் பொறியாளர், தென் மண்டலம், மதுரை அவர்கள் இதைப் பரிந்துரைக்க ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அவர்களால் பரிந்துரைக்கப்பட்டதற்குப் பிறகு அந்தக் கோப்புகள் நம்மிடத்திலே வந்த பிறகு, அரசினுடைய ஒப்புதல் வழங்கப் பெற வேண்டும். வழங்கப்பட்டதற்குப் பிறகு அடுத்த ஆண்டிலே இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதைப் பற்றி அரசு முடிவு எடுக்கும்.

டாக்டர் கே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டிலே எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும், இப்போது எடுத்திருக்கிற குடி தண்ணீர் திட்டத்தில் இப்போது எடுத்திருக்கக் கூடிய ஏரியாக்களுக்கு சர்வே பண்ணி இருக்கக் கூடிய பகுதிகளை விட இன்னும் அதிகமான பகுதிகள் சர்வே பண்ண வேண்டியிருக்கின்றன. அவைகளையும் சேர்த்து இந்தத் திட்டத்தில் இணைத்து தருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. எல்லா இடங்களுக்கும் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதிலேதான் இந்த ஆட்சி மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் கூட மிகுந்த கவலையோடு, அக்கறையோடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஏதாவது இடம் விட்டு போயிருக்குமேயானால் அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள், குடிதண்ணீர் வடிகால் வாரியத்திடம் தகவல் தருவீர்களானால், அதையும் சேர்த்து திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.



1987 நவம்பர் 12]

## கண்டப்பங்குறிச்சி கிராமத்திற்கு குடிநீர் வசதி

67—(*வினா எண். 13209)—திரு. மு. ஆனந்தன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், நல்லூர் ஒன்றியம், கண்டப்பங்குறிச்சி கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க ஏதேனும் கருத்துரு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இவ்வாண்டு (1987) வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் கண்டப்பங்குறிச்சி கிராமத்தில் கையிறைப்பானுடன் கூடிய ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு போதுமான அளவிற்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. மு. ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்டப்பங்குறிச்சி கிராமத்திற்கு நீண்ட காலமாக தீராத பிரச்சினை, உப்பு நீர்தான் தற்போது வந்து கொண்டிருக்கிறது. அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் குடையூர், சித்தூர், சாந்தியம் போன்ற கிராமங்கள் பயன் பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கண்டப்பங்குறிச்சி கிராமத்திலே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல குடிநீர் உப்பு நீராகத் தான் அங்கே கிடைக்கிறது. அங்கே கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்றை நிறுவலாம் என்று சொன்னால், போதுமான குடிநீர் ஆதாரங்கள் அந்தப் பகுதியிலே இல்லை. ஆகவே இந்த வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 78 அடி மீட்டர் ஆழத்திற்கு ஒரு ஆழ் குழாய்க் கிணறு தோண்டப்பட்டு இருக்கிறது. அந்தக் கிணற்றிலே இருந்து 48 அடி மீட்டர் ஆழத்திற்கு குடி தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது. சிலவற்றிலே இந்தியா மார்க் கைப்பம்பு பொருத்தப்பட்டு, ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அங்கே மொத்தத்திலே 486 குடும்பங்கள்தான் இருக்கின்றன. அவர்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைத்துக் கொண்டு வருகிறது.

(முற்பகல் 10-20)

திரு. மு. ஆனந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கண்டப்பங்குறிச்சி கிராமத்தில் மட்டுமல்லாமல் அருகில் இருக்கிற 4, 5 கிராமங்களிலும் இதைப்போன்று உப்புத்

தண்ணீர்தான் கிடைக்கிறது. கண்டப்பங்குறிச்சி அருகில் மணிமுத்தாறு நதி ஓடுகிறது. அந்த மணிமுத்தாறு நதியிலிருந்து தண்ணீர் எடுத்தால், அந்தக் கிராம மக்களுக்கு நல்ல தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே மணிமுத்தாறு நதியிலிருந்து தண்ணீர் எடுத்து ஓவர் டாங்க் மூலமாகத் தண்ணீர் அவர்களுக்குக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, மணிமுத்தாறு நதியிலிருந்து சில இடங்களில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றிய விளக்கங்களைத் தருவார்களானால், அதையும் குடிநீர் வடிகால் வாரியத்தில் இருக்கிற பொறியாளர்களை வைத்துப் பரிசீலிக்கலாம்.

**கரும்பு பண்ணை கார்ப்பரேஷன்.**

68---(*வினா எண். 15570)---**திருமதி. பா. வளர்மதி :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ---

அரசு கரும்புப் பண்ணை கார்ப்பரேஷனைக் கலைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ''ஆம்'' என்று சொல்லி இருக்கிறார்கள். இந்தக் கரும்புப் பண்ணைக் கழகம் 70 இலட்சம் ரூபாய் நட்டத்தில் இருக்கிற போதே அதனைக் கலைத்து அந்த நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிக்க வேண்டுமென்று 4, 5 ஆண்டுகளுக்கு முன்பே நாங்கள் வற்புறுத்தினோம். காலம் நீடிக்க நீடிக்க ஒவ்வொரு ஆண்டும் அந்த நட்டத்தின் அளவு உயர்ந்து ஏறத்தாழ 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் அளவிற்குச் சென்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. முன்பு ஒரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்த போது தொழில்களை அரசு நட்டத்தில் நடத்த முடியாது என்று சொன்னார்கள். எனவே இந்தப் பண்ணையை தொடர்ந்து நட்டத்தில் நடத்திக் கொண்டிருப்பதை மாற்றி அதனை கலைத்து சீக்கிரமாக நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிப்பதற்கும், அதில் பணி புரிகிற பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பினை அளிப்பதற்கும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல 1986 ஆம் ஆண்டு வரையில் 176 இலட்சம் ரூபாய் அளவிற்கு இந்தப் பண்ணைக் கழகம் நட்டம் அடைந்திருக்கிறது.





முதலில் சொல்கிறபோது நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அந்த நிலத்தைக் கொடுக்கலாம் என்றும், இரண்டாவதாகச் சொல்கிறபோது அங்கே வேலை செய்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். இப்போது இருக்கிற பிரச்சினை என்னவென்றால் தமிழக அரசுக்குச் சொந்தமான பெரிய பண்ணை அது ஒன்றுதான் இருக்கிறது. 4,051 ஏக்கர் நிலம் அங்கே இருக்கிறது. அதைப் பிரித்துக் கொடுத்துவிட்டால் ஆளுக்கு 30, 30 சென்ட் அளவிற்குத்தான் வரும். அவ்வளவு தான் தேறும். அதைக் கொடுத்து விடுவதா அல்லது அதை வைத்துக் கொள்வதா என்றால் இப்போது நிறைய சர்க்கரை ஆலைகளுக்கு உரிமங்கள் கிடைத்திருக்கின்றன. வடபாதி மங்கலத்தாருக்குச் சொந்தமாக இருக்கிறபோது அங்கே ஏற்கனவே கரும்பு பயிரிட்டு இருக்கிறார்கள். அதையெல்லாம் நான் விசாரித்தேன். ஆகவே அதை எடுத்து ஒரு கரும்புப் பண்ணையாக மாற்றி ஒழுங்கு படுத்தலாமா என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அதை ஒழுங்குபடுத்துவதில்தான் தற்போது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

**திரு. பொ. உத்திராபதி :** தலைவர் அவர்களே, வடபாதி மங்கலத்தில் இருக்கிற இந்தக் கரும்புப் பண்ணை என்பது தமிழ்நாடு நிலச்சீர்திருத்தத்தின் மூலம் தியாகராஜ முதலியார் அவர்களிடமிருந்து அரசாங்கம் எடுத்த உபரி நிலமாகும். 4,100 ஏக்கர் நிலமிருக்கிறது. இன்றைக்கு வெளிநாடுகளுக்கெல்லாம் போய்ப் பார்க்கிறபோது இப்படி ஒரு பெரிய பண்ணை மொத்தமாக இருப்பதை அமைச்சர்கள் எல்லாம் வரவேற்றுப் பாராட்டி இருக்கிறார்கள். நான் தெரிவிப்பது என்னவென்றால் தமிழகத்தில் அடைத்தாற்போல ஒரே இடத்தில் நஞ்சை நிலம் 4,000 ஏக்கர் அளவிற்கு பண்ணையாக கிடைப்பது மிக மிக அரிதாகும். ஆகவே நல்ல நிலமிருக்கிறது. இன்றைக்கு கோயமுத்தூரில் இருக்கிற விவசாயப் பண்ணை மற்ற பண்ணைகளை எல்லாம் இதிலே ஈடுபடுத்தி பல்வேறு வகைகளில் இந்தப் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கும், மேலும் வலுப்படுத்துவதற்கும், அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்கும் முயற்சிக்க வேண்டும். இப்போது தண்ணீர் வந்து கொஞ்சம் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே பணம் கொடுத்து அந்த விவசாயத்தைப் பாதுகாப்பதற்கும், அந்தப் பண்ணையை மேலும் வலுப்படுத்தி தமிழக அரசுக்கு நல்ல பெயர் கிடைப்பதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலத்தில் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல விவசாயப் பல்கலைக் கழகத்திற்கு கூட இந்தப் பண்ணையை எடுத்து காரியங்கள் செய்யலாம் அல்லது ஆடுதுறை பண்ணை போல ஒரு விவசாய ஆராய்ச்சிப் பண்ணையாகக்கூட இதனை மாற்றலாம். பல்வேறு வசதிகள் இங்கே இருக்கின்றன. ஆகவே இதுபற்றி அதிகாரிகளிடத்தில்

ஏற்கெனவே கலந்து பேசிக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து பேசி அதன் மூலம் இந்த அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கிற காரியங்களைச் செய்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி.**

69—(*வினா எண். 7070)— திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில், வணிகவியல், வேதியியல், இரசாயனவியல் மற்றும் பல பிரிவுகளில் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அந்த இடங்கள் நிரப்பப் படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) இந்தக் கல்லூரியில் முதலில் வேதியியல் பேராசிரியர், இயற்பியல் மற்றும் வணிகவியல் ஆகிய பாடப் பிரிவுகளில் உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தன.

(ஆ) தற்போது வேதியியல் பணியிடங்கள் நிரப்பப்பட்டு இருக்கின்றன. மீதி இடங்களுக்கு எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலிருந்து நபர்கள் பெறப்பெற்று அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் கலைக் கல்லூரியில் படிக்கின்ற மாணவிகள் பேராசிரியர்கள் இல்லாத குறைபாட்டினால் தேர்வு எழுதுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். படித்துப் பட்டம் பெற்ற பேராசிரியர்கள் தமிழகத்திலே எத்தனையோ பேர்கள் இருக்கின்ற இந்த காலக் கட்டத்திலே உடனடியாக அந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேதியியல் பணியிடங்கள் நிரப்பப்பட்டு விட்டன. பிற பணியிடங்களுக்கு கல்லூரிக் கல்வி இயக்குநர் அவற்றை நிரப்புவதற்கு எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலிருந்து பெயர்களைப் பெற்று, நேர்வு நடத்தியிருக் கிறார்கள். அது தற்போது நிரப்பப்பட உள்ளன.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே இன்னொரு அரசு ஆண்கள் கலைக் கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியில் வேலை பார்க்கின்ற பேராசிரியர்கள் இந்த மகளிர்



கலைக் கல்லூரிக்கு வருகை தந்து, கூடுதலாக ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் பாடங்களைக் கற்பிப்பத நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த அடிப்படையில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் அந்த இடங்களை நிரப்ப ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துவிட்ட காரணத்தால் இந்தக் கோரிக்கை தேவையில்லை.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளுக்கு மட்டும் பேராசிரியர்கள் தட்டுப்பாடு இருப்பதாக நான் சொல்லவில்லை. இன்னும் சாதாரணமாக இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் கூட பல ஆண்டுக் காலமாக ஆசிரியர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றனவே, அவைகளை முறையாக நிரப்புவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 6 மாத காலத்தில் மட்டும் கிட்டத்தட்ட 4,500 ஆசிரியர்கள் புதிதாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட்டு இருக்கிறார்கள்.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கல்லூரி பேராசிரியர் பணியிடங்களை நிரப்பு வது குறித்த கேள்வியாக இருந்தாலும், தஞ்சையிலே நடக்கக் கூடிய பெண்கள் கலைக் கல்லூரியில் சேரும் மாணவிகளில் ஒட்டு மொத்தமாக பாதிப் பேர்கள் மரத்தடியில் அமர்ந்துதான் கல்லூரிப் பாடங்களை படிக்கின்ற ஒரு நிலைமை இருந்து கொண்டு வருகிறது. இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத் திலே கடிதம் மூலமாகவும், நேரிடையாகவும் 3 வருடமாக நாங்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறோம். மழைக்காலங்களில் ஒன்-செசன் என்ற முறையில் பாதிப் பேர்களை வீட்டுக்கு அனுப்பு வதுமான ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை தஞ்சை பெண்கள் கலைக்கல்லூரியில் இருந்து கொண்டு இருக்கிறது. எனவே இதற் கான நல்ல முடிவை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர் கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலைமை பல இடங் களில் இருக்கின்றது. நிதிப் பற்றாக்குறைதான் இதற்குக் காரணமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய கோரிக் கை குறித்து அரசு ஆய்ந்து விரைவில் ஒரு முடிவை எடுக்கும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத் தில் 4,000 சொச்சம் பேர்களுக்கு ஆசிரியர்கள் பதவி கொடுக்கப் பட்டது என்று சொன்னார்கள். இது புரட்சித் தலைவருடைய

[1987 நவம்பர் 12

ஆட்சியிலே எவ்வளவு சீக்கிரத்தில் அந்த ஆசிரியர்கள் நியமிக்கப்
பட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால் நான் மாண்புமிகு
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இப்போது
தமிழாசிரியர்களுடைய இன்டர்வியூ நடந்தது, அதிலே 150 பேர்
களை போட்டார்கள்— மீதமுள்ள ஆசிரியர்களை ராமநாதபுரத்
திலிருந்து தர்மபுரிக்கும், தர்மபுரியிலிருந்து கன்னியாகுமரிக்கும்
என்று போடப்பட்டு இருக்கிறது. இதை உடனடியாக மாற்றி,
புரட்சித் தலைவருடைய அரசுக்கு நல்ல ஒரு பெயரை உண்டாக்
கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழாசிரியர்களைப்
பொறுத்தவரைக்கும் இருந்த காலி இடங்கள் மிகக் குறைவாக
இருந்தன. எந்தெந்த மாவட்டங்களில் காலி இடங்கள் இருக்
கின்றனவோ, அங்கு தமிழாசிரியர்கள் நிரப்பப்பட்டார்கள்.
ஆனால், செகண்டரி கிரேட் டீச்சர் பதவிகள் பொறுத்தவரைக்
கும் அதற்கு போதிய ஆசிரியர்கள் தற்போது தமிழகத்தில்
பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால், தமிழாசிரியர்கள்
பட்டம் படித்தவர்கள் கிட்டத்தட்ட 1,500 பேர்களை தற்போது
தமிழகத்தில் எங்கெங்கே செகண்டரி கிரேட் டீச்சர் வேகன்சி
இருக்கிறதோ, அங்கெல்லாம் தமிழில் பட்டம் பெற்று தமிழாசிரி
யர்களாக இருப்பவர்களைப் போடலாம் என்று ஆணையிடப்பட்டு
இருக்கிறது. இந்த ஆணை இடப்படுகிறபோதே, முடிந்த
அளவிற்கு அந்தந்த மாவட்டத்திலேயே அவர்களுக்கு வேலை
வாய்ப்பு தரவேண்டும் என்று அரசு ஆணையிட்டு இருக்கிறது.

**வாழ்க்கைக் கல்வித் திட்டம்.**

70— (*வினா எண். 9555)— திரு. செ. செம்மலை : மாண்பு
மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் அவர்களின் திட்
டத்தின் தொடர்பாக 1— 12 வகுப்பு வரை பாட திட்டத்தில்
மாற்றம் செய்வதற்காக கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கல்வித் துறைக்கு அந்த கமிட்டி ஏதாவது
திட்டங்களைக் கொடுத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். 1984 பிப்ர
வரியில் வாழ்க்கைக் கல்விக்காக முதலமைச்சர் திட்டத்திற்கேற்ப
பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்பு வரை பாடத் திட்டங்களை
மாற்றி அமைக்க குழுக்கள் அமைக்கப்பட்டன.

(ஆ) அக்குழுக்கள் 1 முதல் 12 வகுப்பு பாடங்களுக்கு திருத்
திய பாடத் திட்ட வரைவை தயாரித்துள்ளன. வாழ்க்கைக் கல்விக்
கான முதலமைச்சர் திட்டத்திற்கேற்பவும், பள்ளிகளில் பாடத்
திட்டத்தை மாற்றி அமைக்க டாக்டர் மால்கம் ஆதி



1987 நவம்பர் 12]

சேஷைய்யா தலைமையில் அமைக்கப்பட்ட குழு வாழ்க்கை கல்வித்
திட்டத்தை 1-வது முதல் 12-வது வகுப்பு வரை கொண்டு வர
தற்போது பரிந்துரைத்து இருக்கிறது. அதை அரசு நடைமுறைப்
படுத்த இருக்கிறது.

(முற்பகல் 10—30)

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, எப்படிப்பட்ட பாடத் திட்டம் இருக்க
வேண்டும் என்று நம்முடைய அரசு விரும்புகிறது என்ற விவரத்தை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.
அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழு அரசுக்கு அளித்துள்ள பரிந்
துரையின் அடிப்படையில் புதியபாட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு
வருகின்றனவா? அப்படியானால் எந்த கல்வி ஆண்டிலிருந்து
அப்படிப்பட்ட புதிய பாடத் திட்டம் அமல் செய்யப்பட இருக்
கிறது என்ற அந்த விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய கல்விக் கொள்கையை
ஒட்டி தற்போது டாக்டர் மால்கம் ஆதிசேஷைய்யா அவர்கள்
தலைமையில் 17 உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு அறிக்கை
தயாரித்து அரசுக்கு தந்திருக்கிறது. அந்த அடிப்படையில் 1
முதல் 12.வது வகுப்பு வரைக்கும் அறிவியல், விஞ்ஞான அடிப்
படையில் பாடத் திட்டங்கள் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டு
இருக்கின்றன. அது மட்டும் அல்லாமல் ஒழுக்கப் பாடத்திற்கும்,
Environmental Science சுற்றுப்புற சூழலுக்கும் அதிலே
முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நடைமுறை
யில் இருந்து வருகிற பாடத் திட்டத்தில் குழந்தைகள் மனனம்
செய்து ஞாபகத்தில் வைத்து திருப்பி எழுதக் கூடிய முறையில்
பாடத் திட்டங்கள் இருந்தன. by hearting re‹ ntion
and ieprodi.c ion என்ற முறையில் இருந்தன. தற்போது
வந்து இருக்கிற புதிய பாடத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும்
குழந்தைகளுடைய சிந்தனா சக்தியை வெளிக் கொணரும் முகத்
தான்—To bring ab: ut c 'ative hinking on the chi d en அவர்களு
டைய சிந்தனா சக்தியை வெளிக் கொணரும் முகத்தான்—பாடத்
திட்டங்களை தற்போது மாற்றி அமைத்து இருக்கிறார்கள். இந்த
புதிய பாடத் திட்டங்களைப் பொறுத்தவரைக்கும் வருகின்ற
1988-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 1-வது, 3-வது, 6-வது
வகுப்புகளுக்கு புதிய பாடத் திட்டங்கள் நடைமுறைக்கு கொண்டு
வரப்பட இருக்கின்றன. மீதம் உள்ள அனைத்து வகுப்புகளுக்
கும் 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் நடைமுறைக்கு
கொண்டு வரப்பட உள்ளன.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்
இங்கே எடுத்துச் சொன்னதைப் போல தற்போதுள்ள அந்த
தேர்வு முறை மெமரிக்கு முக்கியம் கொடுப்பதாகவும், மாணவர்
களின் டேலண்ட் அதாவது முழு திறமையையும் வெளிக் கொண
ரும் முகத்தான் அமையவில்லை என்ற கருத்து இருக்கிறது.

[1987 நவம்பர் 12

எனவே அப்படிப்பட்ட தேர்வு முறையை மாற்ற வேண்டும் என்று
இந்த உயர் மட்டக் குழு ஏதேனும் பரிந்துரை அளித்துள்ளதா ?
அப்படி ஆனால் அந்த தேர்வுமுறை மாற்றம் எந்த ஆண்டிலிருந்து
அமல் செய்யப்படும் என்ற அந்த விவரத்தை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவுக்கு அளிக்கப்
பட்டு இருந்த ஒரு பெரும் பணியில் தேர்வு முறையில் மாற்றம்
செய்யும் பணியும் ஒன்றாகும். அந்த அடிப்படையில் தேர்வு
முறையில் அந்த மாற்றத்தை வருகிற 1989 ஆம் ஆண்டிலிருந்து
நடைமுறையில் எல்லா மட்டத்திலும் புதிய தேர்வு முறையை
நடைமுறைக்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்து
இருக்கிறது. காரணம் பாடத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும்
Text book will be self—explanatory and self-planning
என்ற முறையில் தற்போது கொண்டு வர இருக்கிறது. இதற்கு
முன்னால் ஒரு பாடத்திட்டம் என்றால் அந்தப் பாடப் புத்த
கத்தை குழந்தைகளுக்கு சொல்லித் தரக்கூடிய ஆசிரியர்களே
பஜாரில் இருக்கின்ற கைடை வாங்கிப் பார்த்து தான் சொல்லிக்
கொடுக்க முடியும் என்ற அந்த நிலை இருந்தது. தற்போது
அதை மாற்றி ஒரு குறிப்பிட்ட சப்ஜெக்ட் மேட்டர் எதுவாக
இருந்தாலும், அந்தப் பாடத் திட்டத்தைப் படிக்கிறபோது குழந்
தைகளே புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு எளிய முறையிலே,
புரியக்கூடிய முறையிலே அதை எழுதி அதை ஒரு செல்ப் எக்ஸ்பிள
னேட்டரி என்ற முறையில் அமைக்க வேண்டி இருக்கிறது
அதன் மூலமாகத்தான் குழந்தைகளுடைய சிந்தனா சக்தியை
வெளிக் கொணரும் முகத்தான் தேர்வு முறையும் அமையும் என்று
அந்தக் குழு பரிந்துரை செய்து இருக்கிறது. அது 1989-ஆம்
ஆண்டிலிருந்து நடைமுறைக்கு கொண்டு வர இருக்கிறோம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, புதிய பாடத் திட்டத்தை கொண்டு வருவது, மேலும்
மாணவர்களுடைய சிந்திக்கும் சக்தியை அதிகப்படுத்துவதற்கும்
அவர்களுக்கு வாழ்க்கை கல்வியாக அமைவதற்கும் நல்லது என்ற
முறையில் அது அமலுக்கு வரட்டும் அது நல்லது. அதே சமயத்
தில் இப்போது மேல்நிலைப் பள்ளிகளில் நாம் தொழிற் பயிற்சியை
ஒரு முக்கியமான ஏற்பாடாக கொண்டு வந்து அங்கே பாடங்கள்
கற்பிக்கப்படுகின்றன. நடை முறையில் அவர்களுக்கு பயிற்சி
கிடைப்பதற்கு முடியாத பெரும் நெருக்கடி இப்போது இருந்து
வருகிறது. அதன் விளைவாக அங்கே படித்து தேறுகின்ற மாண
வர்கள் அதை விட்டு அவர்கள் மேல் படிப்புக்கு போகாமல் ஒரு
தொழிலுக்குப் போகலாம் என்று போனால் தொழிற்சாலைகளில்
கூட அவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு கஷ்டமாக இருக்
கிறது. ஆகவே அரசு உடனடியாக 1, 2, 3 மேல் நிலைப் பள்ளி
களுக்கு ஒரு தொழிற் கூடம் என்ற முறையில் சிறிய தொழிற்
கூடங்களை அமைத்து அதற்கு வேண்டிய கருகளையும், இன்ஸ்டிரக்
டர்களையும் கொடுத்து, அந்தக் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த
அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற் கல்வியைப்
பொறுத்தவரைக்கும் இரண்டு வகையாகப் பிரித்து, புதிய
படிப்புத் திட்டத்தில் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து
இருக்கிறது. முதலாவதாக 1-ஆவதிலிருந்து 10-ஆவது வரை
அனைத்து குழந்தைகளும் Dignity ot labour உழைப்
பின் உயர்வுதனை உணரவேண்டுமுகத்தான் ஏதேனும் ஒரு
தொழிலை அவர்கள் கற்றாக வேண்டும். கையிலே அழுக்கு
பட்டால் அல்லது மண் பட்டால் கூடாது என்ற மனப்பாங்கு
கொண்டிருக்கின்ற நம் நாட்டில் அதை மாற்ற வேண்டுமென்ற
நோக்கோடு 1-ஆவதிலிருந்து 10-ஆவது வரை பாடத் திட்டத்
தை மாற்றி அமைக்கிறோம். 11-12-ஆவதிலிருந்து தற்
போது நடைமுறையில் இருக்கின்ற முறை ' Vocational
Education' என்ற தொழிற்படிப்பு இருக்கிறது. அதிலே
கிட்டத்தட்ட 75 பாடப் பிரிவுகள் இருக்கின்றன. ஆனால்
அந்தப் பாடப் பிரிவுகளைப் பொறுத்தவரைக்கும், அதில்
பலவற்றை முடித்துவிட்டு, குழந்தைகள் உடனடியாக சுய
வேலைக்கோ அல்லது மேல் படிப்புக்கோ, அல்லது வேறு இடங்
களுக்கு வேலைக்கோ செல்லக் கூடிய வாய்ப்புகளோ இல்லாத
சில குறைகள் இருக்கும் என்பது அரசினுடைய கவனத்திற்குக்
கொண்டுவரப்பட்டது. அதையொட்டி தற்போது மீண்டும்
ஒரு குழுவை அமைத்து' 'u'ility oriented படிப்பை முடித்துவிட்டு,
உடனடியாக வேலைக்கு Ei'her they shou'd go f'r s:lf-emp'oy-
ment or they should be able to get a j, b என்ற முறையிலே அவர்
களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவேண்டும் அல்லது சுய வேலை
வாய்ப்பில் ஈடுபடக் கூடிய 42 படிப்புகள் என்ன என்பதனைத்
தேர்ந்தெடுத்து, அவை தற்போது அனுப்பப்பட்டிருக்கின்றன.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல் ஆங்கே
தொழிற்கூடங்கள் இல்லாத ஒரு பிரச்சினை இருக்கின்ற
காரணத்தால் இப்போது ' Ag o—Oriented ', விவசாயத்தைத்
தொழிற் படிப்பாகக் கொண்டிருக்கின்ற ' M dels fo:ms
சிலவற்றை, அந்தப் பள்ளிக்கு அருகாமையில் எடுத்து, அது
விவசாயத் துறையோடு இணைந்து, அதில் மாணவர்களுக்கு
பயிற்சி முகாம் தர வேண்டுமென்று அரசு தற்போது நட
வடிக்கை எடுத்திருக்கிறது. தொழிற்சாலைகளிலே கட்டாய
மாக மாணவர்களுக்கு சில பயிற்சிகளைத் தரவேண்டுமென்று
ஆங்காங்கே உள்ள அந்தந்த சூழலுக்கேற்ற தொழிலைத்
தேர்ந்தெடுத்து, அந்தத் தொழிற்சாலைகள் கட்டாயமாக
அதற்கு ஒருங்கிணைப்பு தரவேண்டுமென்ற ஆணையும் இடப்
பட்டு, அதுவும் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டி
யிருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற
புதிய கல்வித் திட்டத்தில் உடல் பயிற்சிக் கல்விக்கும்,
விளையாட்டுக் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்
டிருக்கிறதா? அந்தக் கல்விக்கேற்ற மதிப்பெண் தனியாக

[1987 நவம்பர் 12

கொடுக்கப்பட்டு, மாணவர்களுடைய வகுப்பு உயர்விற்கு ஏற்றபடி மாற்றம் செய்யபட இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ' New eduction policy ' புதிய கல்விக் கொள்கையைப் பொறுத்தவரைக்கும் ' This is an integrated approach ' ஒருங்கிணைந்து எல்லாவற்றையும் கொண்டுவர, ' Moral education ' ஒழுக்கப் பண்பாட்டுக் கல்வி ' Physical education and Health education ' என்று சொல்லக் கூடிய சுகாதாரம் போன்றவற்றையும், Physical education ஆகியவற்றையும் பாடத் திட்டத்தோடு கொண்டுவர பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுகின்ற எண்ணமும் தற்போது டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் கூறியிருக்கின்ற ஆலோசனையில் இடம் பெற்றிருக்கிறது. அதை அரசு ஈடேற்றும்.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய கல்விக் கொள்கையினுடைய அடிப்படையில் கல்லூரிகளிலே 'Arts subjects' என்று சொல்லப்படுகின்ற கலைப் படிப்பு சம்பந்தப்பட்ட ஏதாவது, முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி முடிவு எடுக்கப்பட்டிருந்தால், அந்த மாற்றங்கள், முடிவுகள் எப்போதிலிருந்து நடைமுறைக்கு வரும் அல்லது தொடர்ந்து தற்போதைய முறையே நீடிக்கப்பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Higher Education-School Education ' என்று சொல்லக் கூடிய இந்தப் பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு ஆகிய இரண்டு படிப்புக்கும் 21 அணுகுமுறைகளை தனித்தனியாக மேற்கொள்ளாமல், ஒருங்கிணைந்த அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டுமென்பதுதான் புதிய கல்விக் கொள்கையின் திட்டம். தற்போது மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையிலான குழுவைப் பொறுத்தவரைக்கும், அறிவியல், விஞ்ஞான அடிப்படையிலான கல்வி முறையினை 1-லிருந்து 12-வரை கொண்டு வர இந்தியத் துணைக் கண்டத்திலே முதன்முதலாக நம்முடைய தமிழகம்தான் முடிவு எடுத்திருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து நடைமுறைக்கு கொண்டுவர இருக்கிறோம். அப்படி ஒரு படிப்பை கீழ் மட்டத்திலே உருவாக்கிவிட்டு, கல்லூரிப் படிப்பைப் பொறுத்தவரைக்கும், வெள்ளைக்காரன் காலத்திலிருந்து குமாஸ்தாக்களை மட்டும் உருவாக்கக் கூடிய Arts education மட்டுமே இருக்குமேயென்றால், தொடர்ந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை வெகுவாக உருவாக்கக் கூடிய வகையில், குறிப்பாக படித்த இளைஞர்கள்



1987 நவம்பர் 12]

மத்தியில் ஒரு அமைதியின்மையை உருவாக்கக் கூடிய சூழ்நிலைமை ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால் 'Higher education பொறுத்தவரைக்கும், அதைப்போலவே Utility oriented and need based education என்று சொல்லக் கூடிய சமுதாயத்திற்கு பலனை ஈட்டக்கூடிய கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காக டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களுடைய தலைமையில் 16 உறுப்பினர்கள் கொண்ட குழு எந்தெந்த கலைப் படிப்புகள் பலனற்ற கலைப் படிப்புகளாக இருக்கின்றன 'Which Arts education has outlived its utility என்பதனைக் கண்டு அறிவது எப்படி இந்தக் கலைப் படிப்புகளை ' revamp ' செய்யலாம் என்று ஆராய அமைக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு 'எகனாமிக்ஸ்' என்று இருக்குமானால், 'அப்ளைடு எக்கனாமிக்ஸ்' முறையில் அதை மாற்றி அமைக்கிறபோது சமுதாயத்திற்கும் பலனுள்ளதாக இருக்கும். மாணவர்களுக்கும் அது பலனைத் தரும், ஆசிரியர்களுக்கும் தொடர்ந்து வேலைவாய்ப்பு இருக்கும் ' B.Sc. Zoology B.Sc. Botany, என்று பாடங்கள் இருக்கின்றபோது, தற்போது வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகி வருகிறது. ஆனால் அதையே ' Applied Zoology and Applied Botany, Genetic Engineering போன்றவற்றையெல்லாம் கொண்டுவந்து நவீன வேலைக்கேற்ற பாடத் திட்டங்களாக மாற்றியமைக்கும் போது வேலைவாய்ப்பை உருவாக்கமுடியும். அதே நேரத்தில் ஆசிரியர்களுக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகும்.

(முற்பகல் 10-40)

இப்போது ஹிஸ்டரி இருக்கிறது. ஹிஸ்டரியை பொறுத்த வரைக்கும் நாட்டிலே பல கல்லூரிகளில் தி ஹ்யுமானிட்டி என்று சொல்லக்கூடிய அல்லது மற்ற கலை படிப்பு பட்டங்கள் பெற்ற பட்டதாரிகள் கிட்டத்தட்ட 70 சதவீதம் கல்லூரியிலிருந்து வெளி வருகிறவர்கள் வேலை இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தற்போது வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதியுறும் சூழ்நிலை இருக்கிறது. அதுவும் குறிப்பாக கிட்டத்தட்ட 90 சதவீதம் மாணவர்கள் நலிந்த பிரிவைச் சார்ந்த ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் இப்போது வேலை இல்லாத் திண்டாட்டத்தில் இருக்கின்ற காரணத்தால் இதை மாற்றியமைக்க ரீவாம்ப் செய்து, பலன் உள்ள கல்வியாக மாற்றியமைக்கவும் புதியதாக இனி மேல் இப்படி பலன் அற்ற கல்விக்கு முக்கியத்துவம் தந்து இந்த கோர்ஸ்களை ஆரம்பிக்காமல் இருக்கவும் ஒரு முடிவு எடுக்க அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கல்லூரி பள்ளிக் கூடங்களுடைய இடங்களை நிரப்புவதற்கும் பொதுமக்களு

கல்லூரி பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டித் தருவதற்கும் நிதி வசதி இல்லை என்கிற ஒரு மிகப் பெரிய பிரச்சினை இப்போது இருந்து கொண்டு வருவதை மனதிலே கருதி ஏதாவது பெரிய தொழிற்சாலைகளிலேயும், பல்வேறு நிறுவனங்களிலேயும் எஜுகேஷன் செஸ் என்று தனியாக ஒன்றை ஏற்படுத்தி அதிலிருந்து இந்த கல்வித் துறைக்கு நிதி திரட்டி அதன் மூலம் இதிலே ஏற்படுகின்ற அந்த குறைபாடுகளைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிகள் கல்லூரிகளுக்கு கட்டிடங்கள் கட்ட முன் வருகின்ற தனியார்களை ஊக்குவிக்கின்ற முகத்தான் அவர்கள் பெயரிலேயே அந்தக் கட்டிடங்கள் அல்லது அமைப்புகள் அமைக்கப்படலாம் என்ற ஒரு ஆணையிடப்பட்டு அது நடைமுறையில் இருந்து வருகிறது. அதைப் போலவே பொது மக்களை வெகுவாக அன்பளிப்பில் அதாவது கட்டிடங்களுக்கான உதவியில் ஈடுபடுத்த அதற்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து குறிப்பாக பள்ளிகளில் இதுகாறும் 2 கோடி ரூபாய் அளவிற்கு பொது மக்களிடமிருந்து நன்கொடை வரக்கூடிய அளவிற்கு— அந்த திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. பள்ளிக் கட்டிடங்கள், கல்லூரிக் கட்டிடங்கள் இன்னும் அதிகமாக தேவை என்பதை அரசு உணர்கிறது. எந்த விதத்தில் அதை போக்குவது என்பதை அரசு ஆயும். மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையையும் கருத்தில் கொள்ளும்.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, தி வொக்கேஷனல் கோர்ஸ் படித்தவர்களை பி.காம் கோர்ஸ்-லே சேர்த்துக்கொள்கிறார்கள். பி.ஏ., பி.எஸ்ஸி-யில் சேர்த்துக் கொள்வதில்லை. வாழ்க்கைக் கல்வி முறையை போதிக்கின்ற ஆசிரியர்களுக்கு அவர்கள் வாழ்க்கை நடத்துகின்ற அளவிற்குச் சம்பளம் மாதாமாதம் கொடுக்கப்படுவது இல்லை. தஞ்சை மாவட்டத்தில் கடந்த 10, 11 மாதங்களாக சம்பளம் பாக்கியாக இருப்பதால் ஆசிரியர்கள் அவதியுறுவதாக அறிகிறேன். அதைத் தவிர்க்க அரசு................ (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது கல்வித் திட்டம் பற்றியது. சம்பளம் பற்றி தனியாக பதில் தயார் பண்ண வேண்டும். திடீரென்று கேட்டால் அமைச்சர் எப்படி பதில் சொல்ல முடியும் ? கல்வித் திட்டம் சம்பந்தமாக ஆலோசனையைச் சொல்லுங்கள். திடீரென்று ஒரு ஸ்கூலைச் சொல்லி அங்கு சம்பளம் கொடுக்கவில்லை என்று சொன்னால் எப்படி விவரம் சொல்ல முடியும் ?

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, கேள்வியை முடித்து விடுகிறேன். ஆகவே அவர்களுக்குச சம்பளம் கொடுக்க அமைச்சர் அவர்கள் துரிதமாக ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே வொக்கேஷனல் ஸ்ட்ரீம்லைன் என்ற சப்ஜெக்ட்டில் 11, 12-ஆவதிலே காமர்ஸ் எடுக்கின்றபோது பி. காம் செல்ல முடியும். பி.ஏ., பி.எஸ்ஸி. சென்றால் அங்கு அவாகள் படிக்க முடியாது. எனவே அது நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்று. தற்போது வொக்கேஷனல் கோர்ஸில் புதியதாக 42 பாடத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. உதாரணமாக செரிகல்ச்சர் என்பதை கொண்டு வந்திருக்கிறோம். அந்த பாடத்தை முடித்தவுடன கல்லூரி படிப்பிலேயே செரிகல்ச்சர் பி.எஸ்ஸி. என்பதை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கல்லூரிக்குச் சென்றாலும் வொக்கேஷனல் படிப்பை முடிக்கக்கூடிய அளவிற்கு புதிய திட்டத்தை நடப்பு ஆண்டிலிருந்து நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கிறோம். வொக்கேஷனல் ஸ்ட்ரீம்லைன் கோர்ஸில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் இதுகாறும் தரவில்லை என்ற தகவல் அரசுக்கு வரவில்லை. அப்படி இருக்கவும் முடியாது. காரணம் சம்பளப் பிரச்சினை இல்லை. உறுப்பினர்கள் தனியாக இதைப் பற்றி கேட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இரா. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, புதிய பாட திட்டம் அமைக்கப்படுகின்றபோது தேர்வு முறையும் அவசியம் மாற்றி அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொது ஆரம்ப பாடசாலையில் 1 முதல் 3 வரை தேர்வு முறை நீக்கப்பட்டு மீண்டும் 1 முதல் 6 வரையிலும், வருகின்ற புதிய கல்விக் கொள்கையின் பிரகாரம் தேர்வு முறையை ஒழிப்போம் என்று ஆசிரியப் பெருமக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். 1 முதல் 3 வகுப்பு வரை தேர்வு இல்லாது இருக்கிறபோதே கல்வியின் தரம் மிகக் குறைவாக இருக்கின்ற இந்த நேரத்தில் 1 முதல் 6 வரை தேர்வு முறையை ஒழிப்போம் என்று சொல்வதை அரசு வன்மையாகக் கண்டித்து 1 முதல் தேர்வு முறையை அமுல் படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு சி. பொன்னையன் :** பேரவை துணைத் தலைவர் அவர்களே, புதிய கல்விக் கொள்கையில் தேர்வு முறையை ஒழிப்போம் என்பது தவறு. ஆனால் தேர்வு முறை மாற்றப்படுகிறது. உதாரணமாக ஏற்கனவே இருந்த தேர்வு முறை குழந்தைகளுடைய மனனம் செய்யும் திறமைக்கு ஏற்ப தேர்வு முறை அமைந்திருந்தது. தற்போது நடைமுறைக்கு வர இருக்கின்ற தேர்வு முறை இன்ட்டர்னல் அசெஸ்மெண்ட், குழந்தைகளுடைய அறிவைப் பொறுத்தவரைக்கும் பீரியாடிக்கல்லி, குவார்ட்டர்லி, ஹாஃப் இயர்லிலே இன்ட்டர்னல் அசெஸ்மெண்ட் என்று குழந்தைகளுடைய அறிவினை ஆயக்கூடிய முறையிலே தேர்வு முறை இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னது போல அவர்களுடைய சிந்தனா சக்தியை வெளிக்கொணரும் முகத்தான் இந்தக் கேள்வி முறைகள் அமைந்

திருக்கும். பாடத்திட்டங்களும் அந்த முறையில்தான் இருக்கும். அந்த முறையில் கொண்டு வரவிருக்கிறோம். ஆசிரியர்களும் கடந்த காலத்தில் இருந்ததைப் போலல்லாமல் அவர்கள் காலாண்டு, அரையாண்டு, முழு ஆண்டுத் தேர்வுகளுக்கு மாணவர்களுக்குக் கட்டாயம் போதிக்கும் முகத்தான் பெர்பார்மன்ஸ் அப்ரைசல், பொட்டன்ஷியல் அப்ரைசல், செல்ஃப் அசெஸ்மென்ட் ரிப்போர்ட் ஆகியவற்றை அந்த ஆசிரியர்கள் ஆங்காங்கே நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற முறை, புதிய கல்வி முறையில் வரவிருக்கிறது. இதனால் கடந்த காலப் பிரச்சினை முற்றிலும் மாற்றப்படும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்காலத்தில் மாணவர்களுடைய மன நிலை முற்றிலுமாக மாறுபட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களிலே படிக்கின்ற மாணவர்களும், கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களும், தற்காலத்தில் கஞ்சா போன்ற போதைப் பொருட்களை அருந்தி, அதனால் அவர்களுடைய மன நிலை முற்றிலுமாக மாறுபட்டிருக்கிறது. ஆகவே, அதை மனதிலே கொண்டு இந்தப் புதிய கல்வித் திட்டத்திலே அமைச்சரவர்கள், 1967-க்கு முன்பு காங்கிரஸ் ஆண்ட காலத்திலே மாரல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ், மாரல் சயன்ஸ் என்ற ஒரு சப்ஜெக்ட்டை வைத்திருந்த..................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒழுக்கக் கல்வியைப் பற்றி முன்பே அமைச்சரவர்கள் சேர்ந்து பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) போதும். மீண்டும் இதற்குப் பதில் சொல்லவேண்டியதில்லை. (குறுக்கீடு). சொல்லிவிட்ட ஒரு பொருளைப்பற்றியே திரும்பக் கேட்கக் கூடாது. (குறுக்கீடு).

திரு. க. சேர்லைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய பாடத் திட்டமும், தேர்வு முறையும் மாறும் என்பது ஒரு ஆரோக்கியமான அறிகுறி, வரவேற்கத்தக்கது. அதே சமயத்தில், மாறி வருகிற தேர்வு முறைக்கும், பாடத்திட்டத்திற்கும் தயார் செய்கிற அளவில் ஆசிரியர் பெருமக்களுக்கு மறு பயிற்சி அளிக்கப்படுமா என்பதையும், பிற துறைகளிலே இருக்கிற வல்லுநர்களை பகுதி நேர அடிப்படையிலே இங்கே பள்ளிக்கூடங்களுக்கு நியமிக்கிற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கிற ஆசிரியர்களுக்கு, புதிய கல்விக் கொள்கைக்கேற்ப பயிற்சி தந்து அவர்களை அந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. அந்த அடிப்படையில் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்களே, முதல் கூட்டத்தைத் துவக்கி, ஆசிரியர்களுக்கு பயிற்சி தரும் முகாமைப் பொறுத்தவரைக்கும் இரண்டு



மாதங்களுக்கு முன்பே துவக்கப்பட்டுவிட்டது. எல்லா மாவட்ட அளவிலும் இந்தத் திட்டம் ஏற்கனவே நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவதன் காரணமாக பட்டப் படிப்புகள் ஒழிக்கப்படும் என்ற முறையிலே ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எக்கனாமிக்ஸ், ஹிஸ்டரி போன்ற அந்தப் பாடங்களைப் பொறுத்த அளவில் பொருளாதாரத் திட்டங்களைத் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இன்றைக்கு இந்த நாட்டிலே மாணவர்களைப் பொறுத்த அளவில் ஏற்படுவதன் காரணத்தால் அந்தக் கோர்ஸ்களை ஒழித்துக்கட்டுவதனாலே மட்டும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக் கட்ட முடியாது என்பதையும் கருத்தில் கொண்டு எக்கனாமிக்ஸ் போன்றவற்றைப் படிக்க விரும்பும் மாணவர்களுக்கு அதற்கான வாய்ப்பைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதைப் போல், கலைப் படிப்புகளை ஒழித்துக் கட்டுவது அரசின் கொள்கை அல்ல. திட்டமும் அல்ல. ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருகிற கலைப் படிப்புகள் தேவைக்கு அதிகமாக இருந்து வருகின்றன. சுதந்திரம் அடைவதற்கு முன், வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் குமாஸ்தாக்கள் மட்டுமே தேவை என்ற காரணத்தால் அந்தப் படிப்பு மட்டுமே இருந்தது. அப்போது புரபஷனல் கோர்ஸ்கள் அல்லது வொக்கேஷனல் கோர்ஸ்கள், வேலை வாய்ப்பை உருவாக்கக் கூடிய பலனுள்ள கல்வித் திட்டம் அன்று அவர்களுக்கும் தேவையில்லை, கொண்டு வரவில்லை. ஆனால் தற்போது நம் சுதந்திரம் அடைந்த நாட்டைப் பொறுத்தவரைக்கும் நமக்கு இருக்கின்ற இயற்கை வளம், கனி வளத்தைப் பெருக்குவதற்கு அதற்கேற்ற பாடமுறையை நாம் கட்டாயம் கொண்டு வந்தாகவேண்டும். துரதிர்ஷ்டவசமாக, இன்னும் 70 சதவிகித படிப்பு முறை குமாஸ்தாக்களை உருவாக்குகிற படிப்பாகவே இருந்து வருகிறது. வசதி படைத்தவர்கள், பணம் படைத்தவர்கள் புரபஷனல் கோர்ஸ்களுக்குச் சென்று விடுகிறார்கள். ஏழைகள், நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்கள், கிராமப்புறத் தினைச் சேர்ந்த பிள்ளைகள் எல்லாம்தான், பி.வி.எஸ்சி., பி.எஸ்சி. (அக்ரி.), எம்.பி.பி.எஸ்., இன்ஜினியரிங் போன்ற படிப்புகளுக்குச் செல்லமுடியாமல், அப்படி ஆர்ட் எஜுகேஷன் என்று வந்தாலும்கூட, பி.எஸ்சி. (கெமிஸ்ட்ரி), பி.காம்., போன்ற படிப்புகளுக்குச் சென்று விட்டு, சைக்காலஜி போன்ற படிப்பிற்குச் செல்லக்கூடிய துரதிர்ஷ்டவசமான சூழ்நிலை இருந்து வருகிறது. ஏழ்மையில் ஏற்கனவே இருக்கின்ற பெற்றோர்

களுக்கு படித்துவிட்ட சிறுவன் பட்டதாரியாக, ஏழையாக இருக்கிறபோது மேலும் பாதிப்பு ஏற்படுகிற காரணத்தால் கட்டாயமாக அந்த முறையை மாற்றவேண்டியிருக்கிறது. அதற் காக, இருக்கிற பாடங்களை எல்லாம் ஒழித்து விடவேண்டும் என்பது அல்ல. The courses are going to be re-vamped. எக்கனாமிக்ஸ் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்சொன்னார் கள். தற்போது இருக்கிற எக்கனாமிக்ஸ்-கிட்டத்தட்ட இலட்சக் கணக்கான எக்கனாமிக்ஸ் பட்டதாரிகள் வேலையில்லாமல் சுற்றி வருகிறார்கள். 100 ரூபாய் சம்பளம்கூட கிடைக்காமல் இருக்கிறார்கள். ஆனால் அதே படிப்பை, ' அப்ளைட் எக்னா மிக்ஸ்' என்ற முறையில் நாம் மாற்றியமைப்போமானால் இன்டஸ்டிரியல் எக்கனாமிக்ஸ், அப்ளைட் எக்கனாமிக்ஸ், அக்ரோ எக்னாமிக்ஸ் என்று மாற்றியமைக்கிறபோது அது பலனுள்ள படிப்பாக ஆகும் என்ற முறையில் (The existing Arts Courses will be re-vamped and they will not be wound up).

நலிந்த எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் கவிஞர்கள் ஆகி யோருக்கு உதவிப் பணம்.

71—(*வினா எண். 11012)-- திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நலிந்து போன எழுத்தாளர்கள், பத்திரி கையாளர்கள், கவிஞர்கள் ஆகியோருக்கு உதவிப்பணம் வழங்கும் அடிப்படையில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது ? (1985முடிய).

(ஆ) புதியதாக விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(முற்பகல் 10–50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மாத ஊதியம் என்ற வகையில் எழுத்தாளருக்கென தனியாக உதவித் தொகை ஏதும் வழங்கப்படவில்லை. என்றாலும் இதுபற்றிய கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. (ஆ) கவிஞர்கள், எழுத்தாளர்கள் என்ற வகையில், பாவேந்தர் விருது, திரு.வி.க. விருது, திரு. வள்ளுவர் விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. நலிந்த கலைஞர்களைப் போலவே பெரிதும் நலிந்த எழுத்தாளர்களை யும் அப்பட்டியலில் சேர்த்து விண்ணப்பத்தின் அடிப்படையில் பதின்மருக்கு வழங்கலாம் என்ற முடிவை அரசு தற்போது எடுத்திருக்கிறது. (இ) வாழ்வில் நலிந்துபோன பத்திரிகையாளர்களுக்கு உதவி நிதி வழங்கும் திட்டம் செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் மூலமாக செயற்படுத்தப்பட வுள்ளது.



திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நலிந்த எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் கவிஞர்களுக்கெல்லாம் மாத ஊதியம் கொடுப்பதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனையோ நலிந்து போனவர்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியாமல் பாடு படுகிறார்கள். அவர் களுக்கு மாத ஊதியம் தரும் அளவிற்கு அரசு தன்னுடைய கொள்கையை மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு திட்டம் இல்லை என்று நான் சொல்லவில்லை. வாழ்வில் நலிந்து போன பத்திரி கையாளர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தவிருக்கிறது என்று சொன்னேன். 1986 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. 22 விண்ணப்பங் கள் மட்டுமே பெறப்பட்டிருக்கின்றன. 3 பேர் மட்டுமே விண் ணப்பங்களை சரியாகப் பூர்த்தி செய்திருக்கிறார்கள். எனவே, வரும் ஆண்டிலிருந்து நலிந்து போன பத்திரிகையாளர்களுக்கு உதவிப் பணம் தரும் திட்டத்தை அரசு நடைமுறைக்குக் கொண்டு வர இருக்கிறது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி நலிந்துபோன எழுத் தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் உதவித் தொகைவழங் கப்படும்போது, அவர்களில் சிலர் பிரிவினைக் கருத்துக்களையும், தீவிரவாதத்தையும் பரப்பியும், பாரதத் திருநாட்டின் ஆண்மை மிக்க இராணுவத்தைக் கொச்சைப படுத்தியும், இழிவு படுத்தி யும் எழுதி இருப்பார்களேயானால் அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படாமல் நிறுத்தப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுத்தாளர்களுடைய எண்ணம், அவர்களுடைய கொள்கைக்கு அது சரியாக இருக்கும் என்ற ஒரு வாதத்தை அவர்கள் எழுப்புகிறபோது அது சரியாகவே இருந்துவிட்டால் என்ன செய்வது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ண வேண்டும்.

திரு. பொன்முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை வழங்கு வதில், தேசியம் என்கிற பெயரில் ஒரு இனத்தைத் தூற்றியும், ஒரு இனத்தைப் பழித்தும் எழுதுகிற எழுத்தாளர்கள் இதிலே யிருந்து விலக்கப்படுவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினைக்குரிய வினா இது. தனித்தனியாக, அந்தந்தப் பொருளினுடைய தன்மைக்கு ஏற்ப ஒவ்வொன்றும் ஆயப்பட வேண்டும்.

[1987 நவம்பர் 12

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுத்து என்பது மனித குலத்தை ஒன்று படுத்துவதற்காகத்தான் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர, அவர்களைப் பிளப்பதற்கு ஒருபோதும் பயன்படுத்தப்படலா காது. ஆகவே, எழுதுகிறவர்களை ஊக்குவிப்பது என்ற நிலையை மேற்கொள்கிற அரசு, தேசிய ஒற்றுமைக்குத் துணை நிற்கின்றவர்களுக்கு மட்டுமே இது வழங்கப்படும் என்பதை உறுதியாகக் கடைப்பிடிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய ஒற்றுமை என்பதை மாநில ஒற்றுமையைக் கொண்டுதான் கொண்டு வர முடியும். எனவே, தமிழ் மொழிக்காக, தமிழ் இனத்திற்காகப் பாடு படுபவர்களுக்கும் சேர்த்து நாம் ஒதுக்கி, இதை நடைமுறைக்குக் கொண்டு வருவதுதான் சாலப் பொருத்தமாக இருக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நலிந்த பத்திரிகைகள் எது எது என்று கணக்கு இருக்கிறதா? அதுமட்டுமல்லாமல், கணக்குக் காட்டு வதற்காகவே நலிந்த பத்திரிகை என்று சொல்கிறார்கள். இதைப் போக்குகிற அளவில் நல்ல முறையில் பரிசோதனை செய்து அவர்களுக்கு உதவிப் பணம் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நலிந்த பத்திரிகை என்ற பொருள்பற்றி தற்போது வினா இல்லை. நலிந்த பத்திரிகை யாளர்களைப் பற்றித்தான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். நலிந்த பத்திரிகையாளர்களுக்கு "that means Reporters" உதவுகிற கொள்கைதான் அரசினுடைய கருத்தில் உள்ளது.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலை நாயகர் அவர்களே, நலிந்த பத்திரிகையாளர் களுக்கும், செய்தியாளர்களுக்கும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தப் பத்திரிகையாளர்கள் எந் தெந்த முறையில் இருந்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்? சர்க்குலேஷனே ஆகாத சில பத்திரிகைகள் இருந்தால் அவர் களுக்கும் கொடுப்பீர்களா? அதிகமான சர்க்குலேஷனைப் பெற் றிருக்கின்ற பத்திரிகைகளுக்குக் கொடுப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், கவிஞர்கள், பெருந்தகையாளர்கள், கவிதை எழுதுகின்றபோது எந்தத் துறையிலே கவிதை எழுதி யிருக்கிறார் என்று ஆராய்ச்சி செய்து கொடுப்பீர்களா அல்லது எழுத்தாளர்கள் என்பது தேசிய சிந்தனையை சொல்லுகின்ற எழுத்துச் சிந்தனைகளா, தமிழ்ப் பெருமையை எடுத்துச் சொல் லுகின்ற எழுத்துச் சிந்தனைகளா? இந்தக் கருத்து வேறுபாடு கள் இருக்கின்ற சூழ்நிலையில், எப்படியெல்லாம் நீங்கள் அந்தத் தேர்வை, அளவுகோலை வைக்கப் போகிறீர்கள் என்பதை அமைச்சர் பெருந்தகை அறிவிப்பீர்களா?



1987 நவம்பர் 12]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கேட்ட வினாவிற்குப் பதில் அளித்தேன், பத்திரிகை என்பதல்ல, பத்திரிகையாளர் களுக்கென்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அடிப் படையில் கவிஞர்களுக்கு இந்த விருது வழங்கப்படும் என்று கேட்டார்கள். குறிப்பாக, தமிழ்ச் சமுதாயம், தமிழ்ப் பண் பாடு, ஆகியவற்றிற்கு ஒழுக்க ரீதியான முறையில் உயர்வான சமுதாயத்தை உருவாக்கும் நோக்கோடு வருகிற கவிதைகள் எல்லாம் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்டு முன்னுரிமை தரப்படுகிறது. நான் ஏற்கெனவே சொன்னபடி மாநிலத்திற்கு செம்மை, வளமை ஏற்படுகிறபோதுதான் தேசியமும் செம்மையுறும் என்கிற வகையில் மாநிலச் செம்மைக்கும் கட் டாயமாக முன்னுரிமை தரப்படும்.

**திரு. சு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார், தியாகிகளுக்குப் பென் ஷன் வழங்கும் அடிப்படையில் விண்ணப்பங்கள் இல்லையென் றாலும் கூட, திரு. மொரார்ஜி தேசாய், திரு. சஞ்சீவி ரெட்டி, திரு. ஹெக்டே, திரு. நம்பூதிரிபாத் போன்றவர்களுக்கு கௌரவ முறையில் தியாகிகள் பென்ஷன் வழங்கியிருக்கிறது. அதைப் போல் விண்ணப்பம் இல்லையென்றாலும் சிறந்த எழுத்தாளர் கள், பத்திரிகையாளர்கள், கவிஞர்கள் ஆகியோருக்கும் அரசு உதவி வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஆயப்படும்.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கட்டுப்பாடுள்ள சுதந்திரம்தான் நாட்டுக்குத் தேவை என்று சாந்தியடிகள் சொல்லியிருக்கிறார்கள். சுதந்திர நாட்டில் மொழிக்கு, இனத்திற்கு, ஒற்றுமைக்கு விரோதமாக நடந்து கொள்கிற பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறினால், ஜனநாயகம் பாழடைந்து போய் விடாதா? எனவே அப்படிப்பட்ட பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா பத்திரிகை யாளர்களைப் பொறுத்தது.

**புன்செய் புளியம்பட்டி, நம்பியூர், பவானிசாகர் ஆகிய நகரங்களில் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள் கட்டுதல்**

15—(*வினா எண். 9531)—திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதிக்குட் பட்ட புன்செய் புளியம்பட்டி, நம்பியூர், பவானிசாகர் ஆகிய நகரங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1987 நவம்பர் 12

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நிலம் கையகப்படுத்தப்படும் பணிகள் முடிவடைந்து
நிலம் கையகப்படுத்தியபின்னர், வீடுகள் கட்ட திட்டங்கள் தீட்
டப்படும்.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பதில் சொல்லும் நேரத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்பு
இதுபற்றி முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். கடந்த
ஓராண்டுக் காலமாக வீட்டு வசதி வாரியத் துறை அதிகாரிகளிட
மிருந்து கிடைத்த தகவலின்படி, அதற்கு என்று தனியாக வட்
டாட்சியர்களும், வருவாய்த்துறை அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு
நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்து, இதன்
காரணமாகத்தான் கால தாமதம் ஆகிறது என்று தெரிகிறது.
ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து நட
வடிக்கை எடுத்து அவர்களை நியமிக்க ஆவன செய்வார்களா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடவடிக்கை
எடுக்கப்பட்டு 4(1) அறிக்கை வரை வந்திருக்கிறது. மேலும்,
துரிதப்படுத்தப்பட்டு, நில ஆர்ஜிதம் பண்ணி முடித்த பிறகு
வீடு கட்டுகிற பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, பவானிசாகர் தொகுதியிலுள்ள புன்செய்
புளியம்பட்டி, நம்பியூர், பவானிசாகர் ஆகிய இடங்களில் கையகப்
படுத்தப்பட்ட நிலங்கள் எவ்வளவு? அதற்கு மதிப்பீடு எவ்
வளவு என்பதை அறிய விரும்புவதோடு, பவானிசாகரில் இருக்கிற
நிலங்கள் அத்தனையும் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான
இடங்கள் என்றும், வீட்டு வசதி வாரியம் அந்த நிலங்களைக்
கேட்கிறபோது பொதுப்பணித் துறையைச் சார்ந்த அதிகாரிகள்
அவைகள் நீண்ட கால குத்தகைக்குத்தான் விடப்படும் என்று
தெரிவித்திருக்கிறார்கள். வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த
வரையில் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் நிலம் வாங்கி
னால் அதற்கு ரிசர்வ் வங்கி கடன் கொடுக்க மறுக்கிறது. ஆகவே
அந்த நிலங்களின் உரிமை அத்தனையையும் வீட்டு வசதி வாரி
யத்திற்கே பெற்றுத் தருகிற நிலையை மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் உருவாக்குவதற்கு முன்வருவாரா? நிலம் அவர்களுக்கு
ஒப்படைக்கப்பட்டால்தான் வீடு கட்டப்படும் என்கிற நிலைமை
இருப்பதால் பவானிசாகரில் உள்ள பொதுப்பணித் துறைக்குச்
சொந்தமான நிலத்தை வீட்டு வசதி வாரியத்திற்கு உடனடி
யாக ஒப்படைக்க அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று
அறிய விரும்புகிறேன்.



1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பவானிசாகர் மற்
றும் புன்செய் புளியம்பட்டியைப் பொறுத்த வரையில் பொரு
ளாதாரத்தில்நலிவுற்ற பிரிவினருக்காக மற்றும் குறைந்த வருவாய்
பிரிவினருக்காக ஏறக்குறைய ரூ. 16½ இலட்சம் ஒதுக்கீட்டில்
200 மேம்படுத்தப்பட்ட மனைகளும், ரூ. 24.20 இலட்சம் மதிப்
பீட்டில் 110 குடியிருப்புகளும் நடுத்தர மற்றும் உயர் வகுப்பின
ருக்காக ரூ. 12 இலட்சம் மதிப்பீட்டில் 75 அபிவிருத்தி செய்
யப்பட்ட மனைகளும், ரூ. 55.12 இலட்சம் மதிப்பீட்டில் 53
குடியிருப்புகளும், ஆக மொத்தம் ரூ. 108.18 மதிப்பீட்டில்
வீடு கட்டித் தரப்பட இருக்கிறது.

(முற்பகல் 11—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி
யுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அதைப் போல
நம்பியூரில் மொத்தம் ஒரு கோடியே 47 இலட்சத்து 54 ஆயிரம்
மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட இருக்கின்றன.

சத்தியமங்கலத்தைப் பொறுத்த வரை மொத்தம் ஏறக்
குறைய 40 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட இருக்கின்
றன.

அதைப் போலவே பவானிசாகரிலும் ஏறக்குறைய நாலாயிரம்
ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அந்தப் பகுதியில் வீடுகள்
கட்டித்தரப்படவிருக்கின்றன.

பி.டபிள்யூ.டி. இடத்தைப் பொறுத்த வரைக்கும், அந்த
இடத்தைப் பொதுப் பணித் துறையிலிருந்து வீட்டு வசதி வாரி
யத்திற்கு மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.
துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வீட்டு வசதி வாரியத்தால்
பெறப்பட்டு பணிகள் தொடங்கப்படும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லை என்
றாலும் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். எங்களுடைய
தர்மபுரி மாவட்டத்தில் ஹரூர் தாலுக்காவில் வீடுகள் கட்டும்
திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, அந்த திட்டத்திற்கு
ஹரூர் நகரையொட்டி காட்டு இலாக்கா நிலம் வீட்டு வசதி
வாரியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். மேற்படி
திட்டம் சம்பந்தமாக ஏற்கெனவே நான் இந்த அவையிலே
கேள்வி எழுப்பியபோது அமைச்சர் அவர்கள், அது சம்பந்தமாக
வரும் நிதியாண்டில் கவனிக்கப்படும் என்று பதில் அளித்தார்
கள். வரும் நிதியாண்டில் அந்தத் திட்டத்தை அமலாக்க அரசு
நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 12

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, பெரியார் மாவட்டம் பவானிசாகரில் கட்டப்படும் வீடுகளைப் பற்றியது. தர்மபுரி மாவட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியைப் பற்றி கேட்கும் விவரங்கள் இந்தக் கோப்பில் இல்லை. ஆகவே, தனியாக கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

**பைக்காரா முத்துராமலிங்கபுரம் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள்**

16—*வினா எண். 9712)—திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பைக்காரா முத்துராமலிங்கபுரம் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு அங்கு குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பைக்காரா முத்துராமலிங்கபுரம் போன்ற தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பொதுத் துறையில் கட்டப்பட்ட வீடுகளை அங்கு குடியிருக்கும் தொழிலாளர்களுக்கே விலைக்கு விற்று விட அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்திருக்கிறது.

அரசாணை எம்.எஸ்.எண். 971, வீட்டு வசதித் துறை, நாள் 15—7—1987-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைக்கு விற்றுவிட இருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த விலை உத்தேச விலையாக, அதாவது நாமினல் ரேட்டாக இருக்குமா? வசூலிக்கப்படும் தொகை தவணை முறையில் வசூலிக்கப்படுமா? வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு, திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் சுமார் 440 வீடுகள் கட்டித்தர திட்ட மதிப்பீடு ரூ. 47 இலட்சத்து 50 ஆயிரம். கட்டப்பட்ட அந்த விலையில் 20 சதவீதம் தள்ளுபடி செய்து கொடுக்கப்படும். தவணை முறையிலும் கொடுக்கப்படும்.

**திருவையாறு, பூதலூர் பகுதிகளில் வீட்டு வசதி வாரிய குடியிருப்புகல**

17—(*வினா எண். 12254)—திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவையாறு, பூதலூர் ஆகிய ஊர்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இல்லை.



1987 நவம்பர் 12]

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவருடைய முன்னோடித் திட்டமான கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் பஞ்சாயத்து ஒன்றிய தலைநகரங்கள், வட்டத் தலைநகரங்கள் இருக்கின்ற பகுதியில் கிராமத்திலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், அரசு பணியாளர்கள் நிரம்ப இருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி தேவை என்ற காரணத்தால் அதை மனதிலே கொண்டு ஆங்காங்குள்ள ஒன்றிய, வட்டாரத் தலைநகர் பகுதியில், பேரூராட்சிப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் புதிய திட்டங்கள் தீட்டி வீடுகளை கட்டித் தர அரசு முன்வருமா? அதைப் பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள அரசு ஆணையின்படி அரசு அலுவலர்கள் குடியிருப்புகள், மாவடடத் தலைநகர் மற்றும் டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆகியவற்றில் மட்டும் கட்டப்பட்டு வருகிறது. தாலுக்கா, ஒன்றிய அளவிலே அரசு அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டித்தருவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் நல்ல யோசனையை சொல்லியிருக்கிறார். இதை நிதி நிலைக்கேற்ப யோசிக்கலாம்.

**ஆத்தூர் நகரத்தில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டுதல்**

18—*(வினாஎண் 12873)—திரு.சி.பழனிமுத்து: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் நகரத்தில் வீட்டுவசதி வாரியத்தால் வீடுகள் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஏறக்குறைய 200 குடியிருப்புகள்.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆத்தூரில் வீட்டுவசதி வாரியத்தால் 200 வீடுகள் கட்டப்படுமென்று சொன்னார்கள். அதிலே அதிக வருமானம் உள்ளவர்களுக்கு எத்தனை வீடுகள், நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு எத்தனை வீடுகள், மிகக் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு எத்தனை வீடுகள் என்று அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 12

ஆத்தூரிலேயே வீட்டுவசதி வாரிய அலுவலகம் இருந்தால்தான் விவரங்கள் ஏழை மக்களுக்குத் தெரியும். வீட்டுவசதி வாரியத்தால் விண்ணப்பம் வெளியிடப்பட்டு, அதிக வருமானம் உள்ளவர்கள் 10,000 ரூபாயும், நடுத்தர வருமானம் உள்ளவர்கள் 5,000 ரூபாயும், குறைந்த வருமானம் உள்ளவர்கள் 3,000 ரூபாயும் கட்ட வேண்டுமென்று கூறியுள்ளார்கள். அந்த விண்ணப்பங்களை எங்கே வாங்குவது என்று தெரியவில்லை. சேலத்திலேயே வாங்குவதா என்று தெரியவில்லை. ஆத்தூரிலேயே அலுவலகம் ஏற்படுத்தி ஏழை எளிய மக்களிடமிருந்தும் விண்ணப்பங்களைப் பெற்று, அவர்களுக்கும் வீடுகள் கட்டித்தர வேண்டும். மேலும் எப்போது வீடுகள் கட்டப்பட்டு ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூரில் ஏறக்குறைய 27.10 ஏக்கர் நிலமும், நரசிங்கபுரம் கிராமத்தில் 55·38 ஏக்கர் நிலமும் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் நரசிங்கபுரம் கிராமத்தில் 148.44 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ. 18 இலட்சம் மதிப்பீட்டில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் முதல் உயர் வருமானம் பிரிவினர்வரை பயன்பெறும் பொருட்டு சுமார் 15 ஏக்கர் நிலப் பரப்பில் 237 மனைகள் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டு தற்பொழுது முடியும் தருவாயிலுள்ளது. குறைந்த வருவாயினருக்காக ரூ. 56.18 இலட்சம் மதிப்பீட்டில் 162 குடியிருப்புகளும், நடுத்தர வருவாயினருக்காக 36 குடியிருப்புகளும் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும், ஆத்தூர் புறநகர் பகுதியில் 12.24 இலட்சம் மதிப்பீட்டில் நலிந்த பிரிவினருக்காக 300 மனைகளும் குறைந்த வருவாயினருக்காக ரூ. 13.52 இலட்சம் மதிப்பீட்டில் 228 மனைகளும், ரூ. 18.33 இலட்சம் மதிப்பீட்டில் நடுத்தர வருவாயினருக்காக 149 குடியிருப்புகளும். உயர் வருவாயினருக்காக 35 மனைகளும்நில ஆர்ஜிதம் செய்து, அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மனுக்கள் பெறுவதுபற்றிச் சொன்னார்கள். அலுவலகம் இப்போது எங்கே வைத்திருக்கிறார்கள் என்பது கோப்பில் இல்லை. வீட்டு வசதி வாரியத்தோடு கலந்தாலோசித்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

### ஆரணியில் ஜரிகை தொழிற்சாலை.

19—*(வினா எண் 13974)—**திரு. மு. சின்னக்குழந்தை:** மாண்புமிகுவீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணியில் ஜரிகை தொழிற்சாலை அமைக்கும் பணி காலதாமதம் ஆகக் காரணம் என்ன?



1987 நவம்பர் 12]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சீபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஜரிகை ஆலையை மேலும் விஸ்தரிப்பு செய்வதா, அல்லது ஆரணி மற்றும் கும்பகோணத்தில் புதியதாக ஜரிகை ஆலைகள் அமைப்பதா, அல்லது தற்போது உள்ள ஜரிகை ஆலையின் கிளையாக அமைப்பதா, என்பது பற்றிய கருத்துரு கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. மு. சின்னக்குழந்தை:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே கைத்தறித் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆரணியில் ஜரிகைத் தொழிற்சாலை அமைக்கப் போவதாக அறிவித்து, அதற்குண்டான இடங்களைப் பார்த்து, அது அப்படியே இருக்கிறது. இப்போது அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த நடப்பு ஆண்டிலேயே ஆரணியிலே ஜரிகைத் தொழிற்சாலையை ஆரம்பிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரணி, கும்பகோணம் ஆகிய இடங்களில் இடம் பார்க்கப்பட்டுள்ளது. இதற்கு அத்தியாவசியமான மூலப் பொருள் தங்கமாகும். பம்பாயில் உள்ள தங்கக் கட்டுப்பாட்டு அலுவலரின் அனுமதி பெற்று நாம் அதைக் கொள்முதல் செய்யவேண்டும். பம்பாயில் உள்ள தங்கக் கட்டுப்பாட்டு அலுவரிடம் அனுமதி கேட்டிருக்கிறோம். அங்கேயிருந்து அனுமதி கிடைத்தவுடன் புதியதாக தொழிற்சாலை ஆரம்பிப்பதா அல்லது காஞ்சீபுரத்திலுள்ள ஜரிகை ஆலையின் கிளையாக ஆரம்பிப்பதா என்று அரசு முடிவெடுக்கும்.

### குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியிருப்புகளுக்கு வீட்டை உரிமையாக்கும் திட்டம்.

20—*(வினா எண் 13011)—**திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டை உரிமையாக்கும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிசைமாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டை உரிமையாக்கும் திட்டம் உள்ளதா என்பதற்கு

[1987 நவம்பர் 12

"ஆம்" என்று பதில் கொடுத்தார்கள். நன்றி. இப்போது குடிசைகளில் இருக்கிறவர்கள் அதிகமாக இருப்பதால் புதிதாக வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீடுகள் தொடர்ந்து கட்டிக் கொண்டுதான் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 13 கேள்விகள் இருக்கின்றன. எதையும் நிறுத்த வேண்டாம் என்பதற்காக ஒவ்வொருவருக்கும் ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கிறேன்.

### உடல் ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க தொழில் பயிற்சி நிலையம்.

72— *(வினா எண். 6690)— மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க தனித் தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உடல் ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க தனி தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண் பார்வை அற்றவர்கள் போன்றவர்கள் மற்ற மாணவர்களுடன் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. எனவே தற்போது பரிசீலனையில் இல்லாமல் இருந்தாலும் கூட இப்படி உடல் ஊனமுற்றவர்கள், கண்பார்வை யற்றவர்கள் போன்றவர்களுக்கு என்று அவர்கள் செய்கின்ற தொழிலிலே பயிற்சி பெறுவதற்கான ஒரு பயிற்சி நிலையத்தை உருவாக்க இனிமேலாவது அரசு பரிசீலிக்குமா?



1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிண்டியில் பார்வை அற்றவர்களுக்காக இயங்கி வந்த எளிய பொறியியல் பயிற்சி திட்டம் 1982-லிருந்து பார்வை அற்றோர் தொழிற்பயிற்சி நிலையமாக உயர்த்தப்பட்டு கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன. அதிலே, பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திர இயக்குநர், ஓராண்டு காலப்பயிற்சி, புத்தகம் கட்டுபவர் ஓராண்டு காலப் பயிற்சி, மின்கம்பி சுற்றுபவர் 6 மாத காலப் பயிற்சி என்று வழங்கப்பட்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல், தற்போது கிண்டி தொழில் பயிற்சி நிலையத்தில் 1984 ஆம் ஆண்டு முதல் காது கேளாத 16 நபர்களுக்கு 2 ஆண்டுகள் பொருத்துநர் பிரிவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கிண்டி தொழில் பயிற்சி நிலையத்தில் இணைநிலைப் பிரிவு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### தா. பழூர் ஒன்றியத்தில் புதிதாக சத்துணவு மையம்

73— *(வினா எண்.11274)— டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும்கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி, தா. பழூர் ஒன்றியத்தில் அம்பலவர் கட்டளை, ஆலவாய், கார்குடி, அமிர்தராசன் கோட்டை, படுக்கல், அண்ணங்கான் பேட்டை ஆகிய கிராமங்களுக்கு புதியாக சத்துணவு மையம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

### கரந்தமலையூரில் சத்துணவு திட்ட மையம்.

74— *(வினா எண் 11821)— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம், மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அண்ணா மாவட்டம், நத்தம் தொகுதி, குட்டுப்பட்டி பஞ்சாயத்து கரந்தமலையூரில் சத்துணவு திட்ட மையம் அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு மலையூர், புதூர், வலசை ஆகிய 3 ஊர்களும் மலை உச்சியில் இருக்கின்றன. நூறு குழந்தைகளுக்கு

மேலே மலைக்கிழங்குகளை கெள்ளி சாப்பிட்டுவிட்டுப் போகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு உடனே அந்த சத்துணவுக் கூடத்தை திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். : சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடம் குழந்தைகளுக்காக ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்கின்றபோது, அங்கே 70-லிருந்து 150 குழந்தைகள் வரையில் இருக்க வேண்டும். சத்துணவுக் கூடம் புதியதாக வேண்டுமென்று வருகிறபோது அந்த குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப் படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதை ஆய்வு செய்து, அங்கே எவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதை அறிவித்த பிறகு அத்தகைய சத்துணவுக கூடங்கள் தொடங்கப் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து எந்தவிதமான அறிக்கையும் வரப்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உடல் ஊனமுற்றோர்கள் கழக பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ்

75—*(வினா எண் 13413)—திரு. சைதை சா. துரைசாமி மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : திரு. கே. உசசி மற்றும் திரு. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றவர்கள் தமிழ்நாடு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை ஒன்று தனியாக வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை.

தமிழ்நாட்டிலுள்ள கண் பார்வையற்றவர்கள், வயது வரம்பின்றி, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளிலும் சிகிச்சை பெற மருத்துவ மனைக்கும், பள்ளிக்கும் பிற பயணங்கள் மேற் கொள்வதற்கும் இலவச பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகின்றது.



2. உடல் ஊனமுற்ற குழந்தைகள் (அதாவது உடல் ஊனம் 50 விழுக்காடுகளுக்கும் கூடுதலாயிருந்தால்) தமது இருப்பிடத்திலிருந்து பள்ளிக்கு அல்லது சிகிச்சை பெற மருத்துவமனைக்கு சென்று வர இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகின்றது. மேற்படி குழந்தைகள் கல்வி பயிலும் நிறுவனம் அல்லது மருத்துவ அலுவலரிடமிருந்து சான்றிதழ் பெற்று இச்சலுகையை பெறலாம்.

3. உடல் ஊனமுற்றவர்கள் தமது இருப்பிடத்திலிருந்து கல்லூரி/பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இருப்பிடத்திலிருந்து, வேலை செய்யும் நிறுவனம்/தொழிற்பட்டறைக்கு சென்று வர சாதாரண மாணவ மாணவியர்க்கு வழங்கும் சலுகைப் பயணச் சீட்டில் 50 சத விகிதம் சலுகை வழங்கும் செயற்குறிப்பு சமூக நல இயக்குநரிடமிருந்து தற்போது பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல முழுமையாக கண்பார்வை அற்றவர்களுக்கு முழு சலுகையும், 50 சதவிகித விழுக்காட்டுக்கு மேலுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு, குழந்தைகளுக்கு சலுகையும், உடல் ஊனமுற்றவர்களுக்கு 50 சதவிகிதம் வழங்கப்படுகின்ற கொள்கை குறிப்பும் அரசின் பரிசிலனையில் இருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அந்த 50 சதவிகிதம் சலுகையையும் முழுக்க 100 சதவீதமாக மாற்றி விரைவில் இலவச பாஸ் வழங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து போக்குவரத்துத் துறையோடு கலந்து பேசி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

### அநாதை விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்தல்.

76—*(வினா எண் 14093)—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு சத்துணவு சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனாதை விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகையினை அதிகப்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) அந்தந்த மாதத்து உதவித்தொகை அநாதை இல்லங்களுக்கு உடனடியாக வழங்கப்பட்டு வருகிறதா ?

[1987 நவம்பர் 12

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தொண்டு நிறுவனங்களுக்கான பராமரிப்பு மானியம் அரையாண்டிற்கொருமுறை அந்தந்த அரையாண்டு முடிவதற்குள் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அநாதை விடுதிகளில் உள்ள மாணவர்களுக்காக அளிக்கின்ற தொகை எவ்வளவு? மாநில அரசு அதற்கு ஈட்டுத் தொகையாக அளிப்பது எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். மத்திய அரசு அளிக்கின்ற தொகை அளவுக்கு மாநில அரசும் தந்தால் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும். அந்தந்த மாதம் உதவித் தொகை கொடுப்பது என்று இருக்கிறது. அப்படி அந்தந்த மாதமே கொடுக்காவிட்டாலும், மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது அநாதை இல்லங்களுக்கு உதவி செய்ய தொகை வழங்கினால் நன்றாக இருக்கும். அவர்கள் 'ஓவர் டிராப்ட்' வாங்கி வட்டிக் கட்டிக்கொண்டு கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. பல அநாதை இல்லங்களிலே. ஆகவே அரசு அதை கவனித்து அவர்களுக்கு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநாதை இல்லங்களில் 12,955 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். 31–3–1984 வரை மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூபாய் 76.50 வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்பட்டது. 1–4–1984 முதல் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள திருத்திய திட்டப்படி தொண்டு நிறுவனங்களுக்கு கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது. உணவு, உடை, சோப்பு, எண்ணெய் போன்றவை வாங்க மாதத்திற்கு, ஒரு குழந்தைக்கு ரூபாய் 150 வீதம் அதிகபட்சமாக வழங்கப் படுகிறது. அதுபோல வாடகை ரூபாய் 40 வீதம் குழந்தை ஒன் றுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் கட்டிட மானியம் (ரூபாய் 150) வழங்கப்படுகிறபோது (கட்டட) வாடகை மானியம் (மட்டும்) நிறுத்தப்படுகிறது.

## சத்துணவு திட்டத்திற்கு வாங்கப்படும் காய்கறிகள்.

77—*(வினா எண் 14985)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்திற்கு வாங்கப்படும் காய்கறிகள் கூட்டுறவு சங்கம் மூலமாகத்தான் வாங்க வேண்டுமென்று அரசு ஆணை யிட்டுள்ளதா ?



1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல காய்கறியும், பசுமையான காய்கறியும் சத்துணவுக் கூடங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக கூட்டுறவுச் சங்கம் மூலமாக காய்கறிகள் வாங்க வேண்டுமென்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## சினிமா தியேட்டர் டிக்கெட்டுகள்.

78—(*வினா எண். 14008) திரு. த. பழனி : மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சினிமா தியேட்டர்களில் கொடுக்கும் டிக்கெட்டுகளை துறையே அச்சிட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டுகளை துறையே அச்சிட்டுக் கொடுக்கும் செயற் குறிப்பு எதுவும் அரசிடமில்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, திரையரங்குகளில் கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டுகளை துறையே அச்சிட்டுக் கொடுக்கும் செயற்குறிப்பு எதுவும் அர சிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இருந்தாலும் திரையரங்குகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஒவ்வொரு திரையரங்கிலும் 5 ரூபாய், 10 ரூபாய் என்று ஒவ்வொரு டிக்கெட்டுக்கும் டோட்டலாக பெற்றுக்கொண்டு, அங்கே போகிறவர்கள் எங்கே வேண்டு மானாலும் போய் அமரலாம் என்கிற முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய முறை நகர்ப்புறங்களில் அதிக அளவில் இருக்கிறது. அதைத் தடுக்கின்ற திட்டங்கள் அரசிடம் உண்டா ? அப்படியானால் இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்தம் 2,249 திரை யரங்குகள் இருக்கின்றன. இவைகளில் குறிப்பாக நாள் ஒன்றுக்கு 3 காட்சிகள் என்று வைத்துக் கொண்டாலும் கூட, ஒரு காட் சிக்கு 500 பேர் வந்து படம் பார்க்கிறார்கள் என்று கணக்கிட்டால் தினசரி 33,73,200 டிக்கெட்டுகளை அச்சடித்து தமிழகத்திலே, சென்னையிலேயிருந்து கன்னியாகுமரி வரையுள்ள திரை அரங்குகளுக்கு கொடுக்க வேண்டும். இது அரசினால் சாத்திய மான காரியமல்ல. அதோடு மாத்திரமல்லாமல் அரசுக்கு ஏராளமாக செலவு ஏற்படும். தவிரவும் அரசுக்கு இது பயன் தராது என்கிற காரணத்தால் தான் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்று குறிப்பிட்டேன். அதோடு மட்டுமல்லாமல் இன்றைய தினம் சிறப்பு நகராட்சி, மாநகராட்சி போன்ற இடங் களைத் தவிர்த்து மற்ற இடங்களில் எல்லாம் இணக்க வரி முறையை அமல்படுத்தி வருகிறோம். அங்கே போலி டிக்கெ

கள் நுழைய வழியில்லை. அப்படியும் எங்கேயாவது இது சம்பந் மாக புகார் வருகிறதென்றால் உடனடியாக அதிகாரிகள் சோதனையிட்டு, குற்றங்களைத் தடுத்து நடவடிக்கை மே கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

வணிக வரித் துறைக்கு ஆலோசனை குழுக்கள் :

79—(*வினா எண் 14022)—திரு. பி. எள். இராமச்சந்திரன்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரித்துறைக்கு ஆலோசனை வழங்கிட வட்ட அளவில் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனை குழுக்கள் நியமிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை சொல்லும் போது 'இல்லை' என்று சொன்னார்கள், சில தொழில்கள் சில பகுதிகளில் மட்டும் நடைபெறுகின்றன. அப் படி இருக்கின்ற நேரத்தில் எங்கோ மாநில அளவில் ஓரிடத்தில் மட்டும் ஆலோசனைக்குழு இருந்து ஆலோசனை வழங்குவதால் அதனால் பயனில்லை. ஆங்காங்கே வட்ட அளவில் ஆலோ சனைக் குழுக்கள் இருந்தால் பொது மக்களிடமிருந்து, அரசியல் வாதிகளிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று அதன் அடிப் படையில் வட்ட அளவில் சில சலுகைகளை, வசதிகளை பெற ஏதுவாக இருக்கும். அதற்கு ஆவன செய்ய வேண்டும். மாநில அளவில் இருக்கின்ற ஆலோசனைக் குழு ஆண்டு ஒன்றுக்கு எத்தனை முறை கூடுகின்றது ? இதுவரையில் என்ன பயன் தரும் ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20).

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவகளே, இன்றைய தினம் தமிழகத்திலே புதிதாக பிரிக்கப்பட்ட சிதம்பரனார் மாவட்டம் தவிர மற்ற 19 மாவட் டங்களில் மாவட்ட அளவிலே உள்ள வணிகர்கள் குழு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் கூடி விவாதிக்கின்றார்கள். அங்கே கூடி விவாதிக்கின்ற பொருட்களின் மீது ஆட்சித் தலைவர்களே ஒரு முடிவெடுத்து வருகிறார்கள். அவர்களாலே முடியாத காரியங்கள் அரசுக்கு அனுப்பப்படுகின்றன. அரசு





அவற்றின் மேல் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆக மாவட்டந்தோறும் நடைபெறுகிற இந்தக் குழுக்கள் உடனுக்குடன் கூடி அதற்கான முடிவுகளை மேற் கொண்டு வணிகர்களுக்கு ஏற்படுகிற இடர்ப்பாடுகளைப் பற்றி யும், வணிகவரிச் சட்டங்கள் அமல்படுத்துகிற முறைகள் பற்றி யும் விவாதிக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன். அதோடு மட்டுமல்லாமல் மாநில அளவில் ஒரு குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழுவும் பலமுறை கூடி விவாதித்து இருக்கிறது. அந்தக் குழுவினுடைய உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைந்து விட்ட காரணத்தால் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு விரைவில் அந்த மாநில அளவில் உள்ள குழு கூட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வர்த்தக சபை, வணிகர்கள் சங்கம் கூட்டுறவுத் துறை, உழவுத் தொழில் சார்புடைய அமைப்புக்கள் ஆகியவற்றின் சார்புடைய பிரதிநிதிகள் எல்லாம் இந்தக் குழுவிலே அங்கம் வகிக்கிறார்கள். மாநில அளவிலே உள்ள அந்தக் குழுவில் மக்கள் பிரதிநிதி களும், வணிகர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்து, வணிகர்களுடைய நலம் குறித்து விவாதிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோதனைச் சாவடிகள்

80—(*வினா எண் 14767)—திரு. டி. எம். வெங்கடாசலம் : மற்றும் திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்தம் உள்ள சோதனைச் சாவடி கள் எத்தனை ?

(ஆ) இதன் மூலம் 1986-87—ல் அரசுக்கு கிடைத்த வரு மானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த வணிக வரி சோதனைச் சாவடிகள் 65 (அறுபத்தைந்து).

(ஆ) சோதனைச் சாவடிகளின் மூலம் 1986-87ல் அரசுக்கு கிடைத்த நேரடி வருமானம் ரூ. 274.05 இலட்சங்கள்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மேலும் புதிதாக சோதனைச் சாவடிகளைத் துவக்குகிற எண்ணம் அரசுக்கு உள்ளதா ? சோதனைச் சாவடிகளில் அவர்களுக்குத் தகுந்த போக்குவரத்து வசதிகளைச் செய்து தர வேண்டும். வரிகள் கட்டாமல் சட்டத் திற்குப் புறம்பாக பொருட்களை எடுத்துச் செல்கிற வாகனங் களை வழிமறித்துப் பிடிக்கிற வகையில் ஜீப் போன்ற வாகன வசதிகளையும், பக்கத்தில் இருக்கின்ற காவல் நிலையங்களுக்கு

உடனடியாகத் தகவல் தெரிவிக்க வசதியாக வயர்லெஸ் போன்ற வசதிகளையும் செய்து தர இயலுமா என்பதை நான் உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைச் சாவடிகள் இன்றைய தினம் சிறப்பாக பணிகளை மேற்கொண்டிருப்பதால்தான் நாம் சொல்லிய அந்தத் தொகை 1986-87-லே நம்முடைய அரசுக்குக் கிடைத்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் சோதனைச் சாவடியிலே பணிபுரிகிற அதிகாரிகளுக்கு வேறு வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் அவர்களுடைய பணியைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதுவும் அரசின் கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏரிக்கு தண்ணீரை திருப்பி விடுதல்.

81—(*வினா எண் 5229)—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், காளப்பநாய்க் கன்பட்டி கிராமத்தின் அருகேயுள்ள கருமலைக் காட்டின் அருகே கட்டியுள்ள ஏரிக்கு தண்ணீரை திருப்பிவிட அரசு எடுத் துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டம் காளப்பநாயக்கன்பட்டி கிராமத்தின் அருகே யுள்ள கருமலைக்காட்டின் அருகில் கட்டியுள்ள ஏரியின் அருகே, இடதுபுற கரையின் கிழக்கே ஓடும் ஓடையிலிருந்து தண்ணீரை திருப்பி விடுவது சாத்தியமென்றாலும் இத்திட்டத் தின்படிதிருப்பி விடப்படும் பகுதி பாதுகாக்கப்பட்ட வனத்திற்குள் வருகின்றது என்பதாலும் இந்த திட்டத்தினால் கூடுதல் உணவு உற்பத்தியில் எந்த மாறுதலும் இல்லாமல் உள்ளது என்ற காரணத்தினாலும் பொதுப்பணித்துறையினால் இத்திட்டத்தை எடுத்துக் கொள்ள இயலவில்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதியில் உள்ள காளப்ப நாயக்கன்பட்டி கிராமத்தின் அருகேயுள்ள கருமலைக்காட்டின் அருகில் கட்டியுள்ள குட்டையின் கரை அங்கே நாங்கள் இருக்கிற பகுதிக்கு அருகில் இருக்கிறது என்பதாலும், அங்கே இதுபோன்ற பிரச்சினைகள் இல்லாத காரணத்தாலும், அதற்குத் தண்ணீர் வரத்து வருகின்ற பகுதி புறம்போக்கு பகுதியாகவும் பட்டா நிலமாகவும் இருப்பதாலும், இதனை மீண்டும் மறு ஆய்வு செய்து இந்தத் திட்டத்திற்கு தண்ணீர் வரத்தை ஏற்படுத்தி





அதற்குப் பக்கத்தில் உள்ள 500 கிணறுகளுக்குப் பாசன வசதி கிடைக்கிற வகையில் ஏற்பாடு செய்ய அரசு மீண்டும் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப் பினர் அவர்களுடைய உணர்வைப் புரித்து இருக்கிறோம். அவர் களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மறு ஆய்வு செய்து வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வசதி இல்லாத சிறிய மசூதிகளுக்கு மானியம்:

82—(*வினா எண். 9098)—டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வசதி இல்லாத சிறிய மசூதிகளுக்கு அரசு எவ்வளவு மானிய பணம் கொடுக்கிறது ?

(ஆ) இதுவரை எத்தனை மசூதிகளுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டு உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் வசதி இல்லாத சிறிய மசூதிகளைப் புதுப்பிக்கவும், புனரமைக்கவும் ஒவ்வொரு மசூதிக்கும் ரூ. 15,000 வரை அரசு மானியம் வழங்கப்படுகிறது.

(ஆ) இதுவரை ரூ. 1,35,00,000 மானியம் கொடுக்கப் பட்டுள்ளது. இதனால் 2,362 மசூதிகள் செப்டம்பர் 1987 முடிய பயனடைந்துள்ளன.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழங்கப்படுகிற பணமானது போதுமானதாக இல்லாத காரணத்தினால், மேலும் இப் பணத்தை அதிகரித்து தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் அதிகமாக கொடுக்கிற நேரத்தில் பயன்படுகின்ற மசூதிகளின் எண்ணிக்கை குறைவாகும் என்ற உணர்வின் அடிப்படையில், பரவலாக எல்லா மசூதிகளும் இதனால் பயன் அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் ரூ. 10,000லிருந்து ரூ. 15,000க்கு ஓரளவிற்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்

[1987 நவம்பர் 12

பேச்சிப்பாறை அணை.

83—(*வினா எண் 12428)—திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவு சரி செய்யும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் இத்திட்டம் நிறைவேறுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேச்சிப் பாறை அணையை நம்பித் தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக் கூடிய விவசாய மக்கள் இருந்து வருகிறார்கள். அணையின் அடி மட்ட அளவிற்குக் கீழே சுமார் 42 அடி தண்ணீர் எப்போதும் தேங்கி இருக்க வேண்டும். ஆனால் தற்போது மணலும் சேரும் சகதியும் தான் நிரம்பி இருக்கிற காரணத்தால் அணையின் கொள்ளளவு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இதன் மீது தனிக் கவனம் செலுத்தி பேச்சிப் பாறை அணையினுடைய கொள்ளளவை அதிகரிக்கின்ற வகையில் கோடை காலத்திலாவது பொது மக்களே தூர் எடுத்துக் கொள்ளலாம் என்று, அரசினுடைய நிதிநிலை பாதிக்காமல், உத்தரவிட அமைச்சர் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பேச்சிப்பாறை அணையினுடைய கொள்ளளவு 1963 ஆம் ஆண்டு, நீர் மட்டத்தில் 6 அடி உயரத்தில் 3,509 மில்லியன் கன அடியாக இருந்தது. 4350 மில்லியன் கன அடியாக தற்போது அதிகரித்து உள்ளது. இந்த அணையைப் பொறுத்த அளவில் கீழ்ப்பகுதியில் தொடர்ந்து தண்ணீர் நின்று கொண்டிருக்க வேண்டும். அந்த தண்ணீரை வெளியேற்ற வேண்டும். வெளியேற்றியதற்குப் பிறகுதான் தூர் வார முடியும். ஆகவே அரசு கொள்கை ரீதியில் ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கும்.



1987 நவம்பர் 12]

அணைப்பட்டியல் பேரணைக்கட்டில் பாலம்.

84—(*வினா எண். 14968)—திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், அணைப்பட்டியில் பேரணைக்கட்டில் தற்போது உள்ள பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் உதவியுடன் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பேரணை சீரமைப்பு வேலைகள் செய்யும்போது, இப்பணி மேற்கொள்ளப்படும்.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பகுதி மக்களின் பல ஆண்டுக்காலம் குறை தெரிந்து, அதைப் போக்குவதற்கு, பாலம் கட்டுவதற்காக ஆம் என்று விடை அளித்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் அந்த பேரணைக் கட்டு அமைந்த காலத்திலேயே அமைந்த பாலம் தற்போது உள்ள பாலம். அதில் போக்குவரத்து ஏற்படும் வகையில் அது அமைந்திடாத காரணத்தால் அங்கே போக்குவரத்தில் மிகுந்த தடை இருக்கிறது. அப்பகுதி மக்களின் வேண்டுகோளை ஏற்று அப்பாலம் அமைக்கின்ற காலத்தில் பஸ் போக்குவரத்திற்கு வசதி செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இதற்கு முன்னாலே இந்தக் கோரிக்கையை என்னிடத்திலே நேரிடையாகவும் சொல்லியிருக்கிறார்கள். நான் பேரணையை பார்வையிட்ட நேரத்தில் சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை நியாயமா என்பதைப் புரிந்துக் கொண்டு, அந்த இடத்திலேயே வேண்டிய உத்தரவை செய்திருக்கிறோம். பஸ் போய்வருகிற அளவுக்கு விரைவாக சீரமைப்புச் செய்ய வேண்டும் என்று சொல்லி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

பத்மநாபபுரம் அரசு மருத்துவ மனையிலுள்ள மின் விளக்குகள்.

1—

வினா 1259—திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் அரசு மருத்துவ மனையில் எரியாது இருக்கும் மின் விளக்குகளை எரிய வைக்க அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இப்பணி எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) உள்ளூர் பொதுப்பணித் துறையினரால் இப்பணி ஏற்று முடிக்கப்பட்டு அரசு மருத்துவமனையிலுள்ள மின் விளக்குகள் தற்போது நல்ல நிலைமையில் நன்றாக செயல் படுகின்றன.

2—

எம். பண்ணைப்பட்டியலில் உயர் ஆரம்பப்பள்ளி கட்டிடம்

வினா 1815— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், எம். பண்ணைப் பட்டியில் உயர் ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித் தர அரசு முன்வருமா ?

விடை—

ஆம், 1986-87 நடப்பு நிதி ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எம். பண்ணைப்பட்டி உயர் ஆரம்ப பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டி தர திட்டமிடப்பட்டுள்ளது.

3—

முத்து நகருக்கு சாலை வசதி.

வினா 1676— திரு மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம், மார்க்கம் பட்டிக்கு அருகில் இருக்கும் முத்து நகர் சாலை வசதியின்றி இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மார்க்கம்பட்டியிலிருந்து முத்து நகருக்கு சாலை வசதி செய்துதர அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) சானார்பட்டி ஊராட்சி ஒன்றியம், மார்க்கம்பட்டியி லிருந்து முத்து நகர் வரை சாலை அமைப்பதற்குரிய இடங்கள் பட்டா நிலங்களாக உள்ளன. நிலச் சொந்தக்காரர்கள் இனாமாக நிலத்தை வழங்க மறுத்துவிட்டபடியால், மேற்படி பாதை அமைப்பதற்குரிய இடங்களை கட்டாய கையகப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எமக்கலாபுரம்—விராலிப்பட்டி பாதையைச் செப்பனிடல்.

4— வினா எண் 1678—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், எமக்கலா புரம்-விராலிப்பட்டி செல்லும் பாதை சரியில்லாமல் இருப்பதால் அச்சாலைகளை செப்பனிட அரசு திட்டமிட்டுள்ளதா ?

விடை—

நத்தம் தொகுதி, சானார்பட்டி ஊராட்சி ஒன்றியம், எமக்க லாபுரம்-விராலிப்பட்டி செல்லும் பாதையில் பட்டாதாரர்களின் ஆக்கிரமிப்புக்களைக் காலி செய்ய சானார்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டவுடன், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் மேற்படி சாலை செப்பனிடும் பணி மேற் கொள்ளப்படும்.

எம். பண்ணைப்பட்டியில் பால்வாடிக் கட்டிடம் கட்டுதல்.

5— வினா எண் 1684— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன்-எம். பண்ணைப்பட்டியில் பால்வாடிக் கட்டிடம் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பால்வாடிக் கட்டிடம் கட்டித்தர அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1985-86-ம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்பு கூடுதல் திட்டத்தின்கீழ், சானார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த எம். பண்ணைப்பட்டியில் பால்வாடி கட்டிடம் கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது. மேலும் கட்டிட வேலை துரிதமாக முடிய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செந்துறையிலிருந்து தட்டைமடைப்பட்டிக்கு பாதை அமைத்தல்.

6—வினா எண் 2244—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, செந்துறையிலிருந்து தட்டைமடைப்பட்டிக்கு பாதை போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

நத்தம் தொகுதி, செந்துறையிலிருந்து தட்டைமடைப்பட்டிக்கு சாலை அமைக்கும் பணியினை எடுத்துச் செய்ய ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லாததால் இவ்வேலையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை) கிராமச் சாலைகள் மூலமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசலாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்.

7—வினா எண் 2339—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதியில் உள்ள துக்காச்சி-ஏரவாஞ்சேரி சாலையை இணைக்க அரசலாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அவ்வேலை எப்போது தொடங்கும்?

விடை—

(அ) ஆம்.



(ஆ) திருவிடைமருதூரில் உள்ள துக்காச்சி-ஏரவாஞ்சேரி சாலையை இணைக்க அரசலாற்றின் குறுக்கே பாலம் அமைப்பதற்கான மதிப்பீடு விழுப்புரம் புலனாய்வுக் கோட்டத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு அனுமதிக்கப்பட்டவுடன், ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு வேலை தொடங்கப்படும்.

குடந்தை நகரில் தனி காவல் கட்டுப்பாட்டு அறை அமைக்கும் திட்டம்.

8—வினா எண் 2361—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை நகரத்தில் ஒரு தனி காவல் கட்டுப்பாட்டு அறை (Control Room) அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது எப்பொழுது செயலுக்கு வரும்?

விடை—

(அ) தஞ்சை (மேற்கு) காவல் மாவட்டம் கும்பகோணம் நகரில் ஒரு தனி காவல் கட்டுப்பாட்டு அறை அமைக்கும் கருத்துரு அந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்டு தற்போது காவல் துறை இயக்குநரின் ஆய்வில் உள்ளது.

(ஆ) இக்கருத்துரு பரிசீலனை செய்யப்பட்ட பின் காவல் துறை இயக்குநர் இச்செயற்குறிப்பை அரசுக்கு அனுப்புவார். இச்செயற்குறிப்பு பெறப்பட்ட பின் நிதி நிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு சாலைகள் அமைத்தல்.

9—வினா எண் 2618—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களுக்கும் புதிய ரோடு போடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் செலவில் எந்தெந்த ரோடுகள் போடப்படும்?

[1987 நவம்பர் 12]

விடை—

(அ) மற்றும் (ஆ) புதிய ரோடு போடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. ஆயினும் சென்னை மாநகராட்சி 1982-83 ஆம் ஆண்டு முதல் இச்சாலைகளைப் பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் சென்னை வடக்கு மாவட்டத்தில் 135 சாலைகளை ரூ. 29 இலட்சம் செலவில் பழுது பார்க்கவும், தெற்கு மாவட்டத்தில் 237 சாலைகளை சுமார் ரூ. 119 இலட்சம் செலவில் பழுது பார்க்கவும் மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

### திருவில்லிபுத்தூர் மற்றும் வத்திராயிருப்பு பகுதிகளில் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம்.

10—வினா எண் 3134—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் திருவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு பகுதிகளில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருவில்லிபுத்தூர் மற்றும் வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் எடுத்து முடிக்கப்பட்டு செயல்படுத்தி வரும் பணிகளின் தொகுப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

திருவில்லிபுத்தூர்—

| எடுக்கப்பட்ட பணிகள். | எண்ணிக்கை. | மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1. கசிவு நீர் குட்டைகள் .. | 8 | 6,74,058 |
| 2. தடுப்பு அணைகள் | 6 | 1,07,870 |



[1987 நவம்பர் 12]

| எடுக்கப்பட்ட பணிகள் | எண்ணிக்கை. | மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 3. சிறுபாசன வேலைகள் .. | 3 | 45,600 |
| எடுத்துக்கொள்ள இருக்கும் சிறு பாசன வேலைகள். | 2 | 20,47,000 |
| 4. சாலைப் பணிகள் .. | 3 | 4,87,000 |
| 5. ஆதி திராவிடர்களுக்கான வீடுகள். | 26 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. | 2,34,000 |
| 6. சமூகக் காடுகள் .. .. | 5 லட்சம் கன்றுகள் நடுவதற்கு உள்ளன. | 2,57,000 |

வத்திராயிருப்பு—

| எடுக்கப்பட்ட பணிகள். | எண்ணிக்கை. | மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கசிவு நீர்குட்டைகள் .. .. | 6 | 6,39,538 |
| 2. தடுப்பு அணைகள் .. .. | 11 | 3,14,636 |
| 3. சிறுபாசன வேலைகள் .. | 7 | 3,15,000 |
| 4. சாலைப்பணிகள் .. .. | 4 | 15,30,000 |
| 5. ஆதி திராவிடர்களுக்கான வீடுகள். | 49 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. | 5,29,000 |
| 6. சமூகக் காடுகள் .. .. | 5 லட்சம் கன்றுகள் நடுவதற்கு உள்ளன. | 2,57,000 |

அன்னவாசல் ஒன்றிய கிராமங்களில் வானொலி மன்றம் அமைத்தல்.

11— வினா எண் 3395.—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி அன்னவாசல் ஒன்றியம், மருந்தாந்தளை, பனம்பட்டி, மாணிக்கம்பட்டி, வாசல்பட்டி, கள்ளம்பட்டி, கரையாம்பட்டி கிராமங்களில் வானொலி மன்றம் அமைக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) இல்லையெனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

(அ) குளத்தூர் தொகுதி அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மருந்தாந்தளை, பனம்பட்டி, கள்ளம்பட்டி கிராமங்களில் வானொலி மன்றம் அமைக்கப்பட்டுவிட்டது.

(ஆ) மாணிக்கம்பட்டி, வாசல்பட்டி, கரையாம்பட்டி ஆகிய கிராமங்களில் விரைவில் அமைக்கப்படும்.

திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வேன் அளிக்கும் திட்டம்.

12—வினா எண் 4040—திரு. சு. [illegible] மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் நகரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு "ஆம்புலன்ஸ் வேன்" அளிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.



1987 நவம்பர் 12]

கிராமக் கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் வீடு கட்டுதல்.

13— வினா எண் 4043— திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் ஆகிய மூன்று வட்டங்களிலும் கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்தின்கீழ் சுமார் 800 பேர்களுக்கு வீடுகட்ட அனுமதி வழங்கி, முன் தவணையாக பணம் வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுக் காலமாக வேலையை முழுமையாக நிறைவேற்றாமல் தடைப்பட்டு வருவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) [illegible]

(ஆ) [illegible]ரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் அரூர் ஆகிய மூன்று வட்டங்களிலும் கிராமீய கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் சுமார் 800 உறுப்பினர்கள் கடன் வழங்க கோரி மனு போட்டனர். அவர்களில் ஆதி திராவிட வகுப்பைச் சாராதவர்கள் 255 உறுப்பினர்கள். இந்த 255 உறுப்பினர்களில், 55 உறுப்பினர்களுக்கு கடன் 1985—86-ல் வழங்கப்பட்டது. மீதமுள்ள 200 நபர்களுக்கு நடப்பு ஆண்டில் கடன் வழங்கப்படும். எஞ்சியுள்ள ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த 545 உறுப்பினர்களுக்கு தாட்கோ, மற்றும் கிராமீய வீட்டுவசதி திட்டத்தின்கீழ் கடன் வழங்கும்படி அரசு அறிவுரைகளை வழங்கியுள்ளது.

வெள்ளளூர்-சிங்காநல்லூர் பாதையை செப்பனிடல்.

14— வினா எண் 45[illegible]— திரு. ஆர். நடராஜன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் வெள்ளளூர் கிராமத்திலிருந்து சிங்காநல்லூர் செல்லுகிற பாதை பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை செப்பனிட அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆம். சிங்காநல்லூரிலிருந்து வெள்ளலூர் செல்லும் சாலை (சுமார் 1 கி.மீ. தூரம்) மாநகராட்சிக்குட்பட்ட சாலை ஆகும். மேற்படி சாலை பிப்ரவரி 1984-ல் தார் தளமிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சாலையில் உள்ள நொய்யல் ஆற்றுப்பாலம் பழுது அடைந்ததை, சமீபத்தில் பராமரிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலூர் அரசு மருத்துவமனையிலுள்ள தொழுநோய் பிரிவுக்குத் தனி கட்டிடம் கட்டுதல்.

15— வினா எண் 4367— திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் அரசு மருத்துவமனையில் இயங்கிவரும் தொழுநோய் பிரிவுக்குத் தனியாக கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மேலூர் அரசு மருத்துவமனையின் வளாகத்தில் தனியாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் தொழுநோய் கட்டுப்பாட்டு நிலையம் இயங்கி வருகிறது. அம்மருத்துவமனையில் தற்காலிக மருத்துவச் சிகிச்சைக்கான கட்டிடம் கட்ட திட்டம் ஏதும் இல்லை.

ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி.

16— வினா எண் 4413— திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

(ஆ) கடையநல்லூர் நகராட்சிக்கு இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்பட்டுள்ளதா ?



விடை—

(அ) ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டில், வரவு-செலவுத் திட்டத்தில், மத்திய அரசின் நிதி ஒதுக்கீடாக ரூ. 350.00 இலட்சமும், அதே அளவு தொகை மாநில அரசின் பங்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 1985–86ஆம் ஆண்டில், உள்ளபடியே செலவிடப்பட்ட தொகை ரூ. 313.44 இலட்சமாகும்.

இதல்லாமல், மாநில அரசே நிதி ஒதுக்கீடு செய்து இயங்கும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டமொன்றும் உள்ளது. 1985–86 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்தப்பட்ட ஒதுக்கீட்டில் ரூ. 203.29 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

(ஆ) 1985–86 ஆம் ஆண்டில் மேற்கூறிய இரு திட்டங்களின் கீழும் கடையநல்லூர் நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

அளக்கரை வழியாக கோத்தகிரி செல்லும் சாலையைப் பழுது பார்த்தல்.

17—வினா எண் 4483— திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் பகுதியைச் சேர்ந்த அளக்கரை வழியாக கோத்தகிரி செல்லும் சாலை பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது அரவேணு முதல் நீராடா வழியாக அளக்கரை செல்லும் 5.8 கி.மீ. நீளமுள்ள இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையை மேம்படுத்த ரூ. 16 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு 1984-ல் ரூ. 8.60 இலட்சமும், 1985-86-ல் ரூ. 2 இலட்சமும் செலவழிக்கப்பட்டுள்ளது.

[1987 நவம்பர் 12

திருச்சி மாவட்டத்தில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் கடன் வழங்கப்பெற்றோர்.

18—வினா எண் 4491—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1984–85-ல் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் எத்தனை பேர் கடன் பெற்றுள்ளனர் ?

(ஆ) இதில் பிற்பட்ட, ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1984–85-ல் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் 1293 நபர்கள் கடன் பெற்றுள்ளனர்.

(ஆ) இதில் பிற்பட்ட ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் 43 நபர்கள்.

பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையிலுள்ள நீர் இறைக்கும் இயந்திரம்.

19—வினா எண் 4511—திரு. வை. பாலசந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையிலுள்ள இணற்றிலிருந்து நீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் வேறு இயந்திரம் பொருத்த அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது பொருத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : நீர் இறைக்கும் இயந்திரம் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் ஜனவரித் திங்களிலிருந்து நல்ல முறையில் இயங்கி வருகிறது.



1987 நவம்பர் 12]

போக்குவரத்துக் கழகங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்ட உபயோகிக்கப்பட்ட பழைய உதிரிப் பாகங்கள்.

20—வினா எண் 4587—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–82, 1982–83, 1983–84 மற்றும் 1984–85 ஆகிய ஆண்டுகளில் உபயோகப்படுத்தப்பட்ட பழைய சாமான்கள் (Scraps) போக்குவரத்துக் கழகங்களில் விற்பனை செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உபயோகப்படுத்தப்பட்ட பழைய மோட்டார் சம்பந்தமான உதிரிப்பாகங்கள் (Scraps) போக்குவரத்துக் கழகங்களினால் முக்கிய தினப்பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு பின்னர் டெண்டர் மற்றும் பொது ஏலம் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சலவைத் துறைகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சலவைத் துறைகள்.

21—வினா எண் 4919—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சலவையாளர்களுக்கு ஒவ்வொரு நகரத்திலும், பேரூராட்சிப் பகுதிகளிலும் சலவைத் துறைகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை எத்தனை சலவைத் துறைகள் எந்தெந்த நகரங்களில் கட்டப்பட்டுள்ளன ?

விடை—

சலவைத் துறைகள் கட்டப்பட்டுள்ள விவரத்திற்கு சட்டமன்றப் பேரவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

(50 சதவீதம் மானியம், 50 சதவீதம் கடன் விதம்)

| மாவட்டம். | சலவைத் துறை வரிசை எண். | உள்ளாட்சி மன்றத்தின் பெயர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. மதுரை .. | 1. சின்னாளப்பட்டி .. | பேரூராட்சி. |
| | 2. தேவதானப்பட்டி .. | ஷை |
| | 3. சித்தையன்கோட்டை | ஷை |
| | 4. கூடலூர் | ஷை |
| | 5. கோம்பை .. | ஷை |
| | 6. அலங்காநல்லூர் .. | ஷை |
| | 7. தேவாரம் .. | ஷை |
| | 8. வத்தலகுண்டு .. | ஷை |
| | 9. அவனியாபுரம் .. | ஷை |
| 2. அண்ணா .. | 10. திண்டுக்கல் .. | ஷை. |
| 3. திருநெல்வேலி. | 11. ஸ்ரீவைகுண்டம் .. | ஷை |
| | 12. பழமுத்தாறு .. | ஷை |
| | 13. வடகரைகீழ்படுகை | ஷை |
| | 14. கீழ்பாவூர் .. | ஷை |
| | 15. நாராயணம்மாள்புரம் | ஷை |
| | 16. பாளையங்கோட்டை (சர்வே எண் 70) | நகராட்சி |
| | 17. பாளையங்கோட்டை (சர்வே எண் 80) | |
| | 18. பாளையங்கோட்டை (சர்வே எண் 99–1) | |
| | 19. பாளையங்கோட்டை (சர்வே எண் 79–1) | |
| | 20. பாளையங்கோட்டை | |
| | 21. நாங்குநேரி .. | பேரூராட்சி. |
| 4. இராமநாதபுரம் | 22. சிங்கம்புனேரி .. | ஷை |
| | 23. சிவகங்கா .. | ஷை. |
| 5. திருச்சிராப்பள்ளி | 24. அரியலூர் .. | ஷை |
| | 25. புஞ்சை புகளூர் .. | ஷை. |
| | 26. லால்குடி .. | ஷை. |



| மாவட்டம். | சலவைத்துறை வரிசை எண். | உள்ளாட்சி மன்றத்தின் பெயர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 6. புதுக்கோட்டை | 27. அன்னவாசல் .. | பேரூராட்சி. |
| | 28. கீரமங்கலம் .. | ஷை. |
| 7. தஞ்சாவூர் .. | 29. மன்னார்குடி .. | நகராட்சி |
| | 30 வைத்தீஸ்வரன்கோவில் | பேரூராட்சி. |
| 8. கோயம்புத்தூர் | 31. திருப்பூர் .. | நகராட்சி |
| | 32. மடத்துக்குளம் .. | பேரூராட்சி. |
| | 33. வேட்டைக்காரன்புதூர் | ஷை |
| | 34. கோட்டூர் .. | ஷை |
| | 35. ஆனைமலை .. | ஷை |
| | 36. குனூர் .. | ஷை |
| | 37. பெரியநாயக்கன் பாளையம். | ஷை. |
| | 38. உடுமலைப்பேட்டை | நகராட்சி |
| | 39. கனியூர் .. | பேரூராட்சி. |
| 9. சேலம் .. | 40. சேலம் .. | நகராட்சி |
| | 41. மோகனூர் .. | பேரூராட்சி. |
| 10. வடாற்காடு | 42. குடியாத்தம் .. | ஷை |
| | 43. போளூர் .. | ஷை |
| 11. தென்னாற்காடு | 44. விருத்தாசலம் .. | நகராட்சி |

## கைத்தறித் துறையில் பார்வையற்றவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு அளித்தல்.

22—வினா எண் 5323 — திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கைத்தறித் துறையில் பார்வையற்றவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு வழங்கப்படுமா ?

விடை—

பார்வையற்றவர்களுக்கும் கைத்தறித் துறையில் வேலை வாய்ப்பு அளிக்க சாத்தியக் கூறுகள் உள்ளன. அவர்கள் அந்தந்தப் பகுதிகளில் ஒருங்கிணைந்த கைத்தறி நெசவு மேற்கொள்ள முன் வந்தால் அவர்களுக்கு அதற்கான பயிற்சி அளித்து அவர்களுக்கென பிரத்தியேகமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தோ அல்லது அப்பகுதியில் இயங்கிவரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்தோ வேலை வாய்ப்பு அளிக்க வாய்ப்புள்ளது.

### எல்லா மாநகராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றில் நவீனக் கழிப்பிடங்கள் அமைக்கும் திட்டம்.

23—வினா எண் 5467—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநில அளவில் எல்லா மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் நவீனக் கழிப்பிடங்கள் அமைப்பது குறித்த சிறப்புத் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

சென்னை மாநகராட்சியில் சுமார் 50 நவீனக் கட்டணக் கழிப்பிடங்களும், கோவை மாநகராட்சியில் மூன்று நவீனக் கட்டணக் கழிப்பிடங்களும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, மாநில அளவில் கீழ்க்கண்ட 23 நகராட்சிகளில் நவீனக் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் உள்ளது:—

1. ஆம்பூர்
2. அறந்தாங்கி
3. கூனூர்
4. கொடைக்கானல் நகரியம்
5. சீர்காழி
6. பட்டுக்கோட்டை
7. தென்காசி
8. ஆத்தூர்
9. செங்கல்பட்டு
10. கோபிசெட்டிப்பாளையம்.





11. பண்ருட்டி
12. பொள்ளாச்சி
13. தேனி - அல்லிநகரம்
14. துறையூர்
15. அம்பத்தூர் நகரியம்
16. விழுப்புரம்
17. நாகர்கோயில்
18. ஆரணி
19. அரக்கோணம்
20. மன்னார்குடி
21. சிவகங்கை
22. காரைக்குடி
23. மேட்டுப்பாளையம்.

### சென்னை மாநகராட்சி தாய்-சேய் நல விடுதிகளில் நவீன சிகிச்சைக் கருவிகள் அமைத்தல்.

24—வினா எண் 5490—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியின் கீழ் உள்ள தாய்-சேய் நல விடுதிகளில் நவீன சிகிச்சைக் கருவிகள் பொருத்தி பொது மக்களுக்கு சிகிச்சை அளிக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

சென்னை மாநகராட்சியில் உள்ள நான்கு தாய்-சேய் நல விடுதிகளில் பேறுகால பின் பணித் திட்ட நிலையங்கள் இயங்குகின்றன. இந்த நான்கு நிலையங்களிலும், நவீன கருவிகள் உபயோகபடுத்தப்படுகின்றன. இங்கு பெண்களுக்கும் ஆண்களுக்கும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்ய கீழே குறிப்பிட்டுள்ள கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன:—

1. லாப்ராஸ்கோப்: இதன் விலை சுமார் ரூ. 33,000.

2. மயக்கம் கொடுக்க உதவும் கருவி.

3. கருச்சிதைவு செய்ய உதவும் கருவி: இதன் விலை ரூ. 3,750.

4. அறுவை சிகிச்சைக்கு உதவும் கருவிகளைத் தூய்மை செய்யும் கருவி பெரியது: ரூ. 1,284. சிறியது: ரூ. 570.

5. நிழலற்ற அறுவை சிகிச்சை விளக்கு: ரூ. 5,470.

6. நிழலற்ற நிலை மின் விளக்கு: ரூ. 1,210.

[1987 நவம்பர் 12

### 1984-85 ஆம் ஆண்டு மாநில விருதுகள் பெற்ற பள்ளி ஆசிரியர்கள்.

25—வினா எண் 8677—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளியாசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1984–85 ஆம் ஆண்டு எத்தனை ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன ?

(ஆ) அதற்கான செலவு எவ்வளவு ?

விடை—

(அ) 216 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்பட்டன.

(ஆ) ரூ. 2,02,900.

### சென்னை மனநோய் மருத்துவமனை.

26—வினா எண் 5784—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மனநோய் மருத்துவமனையில் 1984–85-ல் சிகிச்சை பெற்ற வெளிப்புற நோயாளிகள் எத்தனை பேர் ?

(ஆ) உள்புற நோயாளிகள் எத்தனை பேர் ?

விடை—

(அ) 73,991 (தினமும் சராசரி 203).

(ஆ) 4,76,253 (தினமும் சராசரி 1,305).

### திருவாடானை அரசு மருத்துவமனை.

27—வினா எண் 6021—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அரசு மருத்துவமனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(ஆ) படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசிடம் ஏதும் குறிப்பு உள்ளதா ?



1987 நவம்பர் 12]

விடை—

(அ) இருபத்தெட்டு.

(ஆ) இல்லை.

### மேல்செம்பேடு கிராமத்திலுள்ள பள்ளிக்கூடத்திற்குக் கட்டிட வசதி செய்து தரும் திட்டம்.

28—வினா எண் 6022—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு கல்விமற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மேல் செம்பேடு கிராமத்தில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு கட்டிட வசதி செய்து தர திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

எல்லாபுரம் ஒன்றியம் மேல் செம்பேடு கிராமப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுவதற்கான பணி மேற்கொள்ளப்பட்டு முழுமை பெறாத நிலையில் இருந்தது. 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 13,000-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இக்கட்டிடம் 31–5–1985 அன்று கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

### நீலகிரி மாவட்டத்தில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் பெற்றோர் எண்ணிக்கை.

29—வினா எண் 6213—திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85-ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் கடன் பெற்றுள்ளவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இதில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் முறையே எத்தனை பேர் ?

விடை—

(அ) 1984—85 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் 495 நபர்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டது.

(ஆ) இதில் 30 ஆதி திராவிடர்களுக்கும், 5 பழங்குடியினருக்கும் கடன்கள் வழங்கப்பட்டன.

பந்தலூரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம்.

30—வினா என் 6219 திரு. கே. உக்கி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி பந்தலூரில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

(ஆ) அந்த சுகாதார நிலையத்தில் ஒதுக்கப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை என்ன ?

(இ) தண்ணீர் வசதி செய்து தரப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி, பந்தலூரில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலைய மதிப்பீடு :

மருத்துவமனை கட்டிடம் : ரூ. 5.89 இலட்சம்.

ஊடுருவி கதிர் கட்டிடம் : ரூ. 1.77 லட்சம்.

(ஆ) படுக்கைகளின் எண்ணிக்கை 30.

(இ) இங்கு தண்ணீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.



புதிதாக தொடங்கப்பட்ட மாவட்டங்களின் தனி தொழில் மையங்கள் தொடங்குதல்.

31—வினா என் 6435—திரு. இரா, தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக தொடங்கப்பட்ட மாவட்டங்களில் தனித் தனி தொழில் மையங்களைத் தொடங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்.

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாவட்டத் தொழில் மையம் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்பட வேண்டும் என்பதே அரசின் நோக்கம். இராம நாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களைப் பிரிப்பதற்கு முன்னால், தமிழகத்தில் 16 மாவட்டங்கள் இருந்தன. மாவட்டத் தொழில் மையத்திற்காகும் செலவில் 50 சதவீதம் மைய அரசு ஏற்றுக் கொள்வதால், மாவட்டத் தொழில் மையம் அமைப்பதற்கு மைய அரசின் அனுமதி தேவைப்படுகிறது. முன்னராக மைய அரசு சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்களைத் தவிர்த்து மற்ற 14 மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்கள் அமைப்பதற்கு அனுமதி அளித்தது. சென்னை மாவட்டம் நகரப் பகுதியாக இருப்பதால் அதற்கு தனி மாவட்ட தொழில் மையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. சென்னை மாவட்டத்தின் தொழில் தேவைகளை துணை தொழில் வணிக இயக்குநர் கவனித்துக் கொள்கிறார். நீலகிரி மாவட்டத்தின் தொழில் தேவைகளை கோயம்புத்தூர் மாவட்ட தொழில் மையம் கவனித்துக் கொள்கிறது. இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்கள் பிரிக்கப்பட்ட பிறகு, சென்னையைச் சேர்த்து 19 மாவட்டங்கள் தற்பொழுது இருக்கின்றன. அண்மையில் மைய அரசு நீலகிரி, அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் காமராஜர் ஆகிய 4 மாவட்டங்களில் தனித் தனி தொழில் மையங்களுக்கு அனுமதி வழங்கியது. அவைகளில் பசும்பொன் முத்து இராமலிங்கம் மற்றும் காமராஜர் ஆகிய மாவட்டங்களில் புது மாவட்ட தொழில் மையங்கள் அமைப்பதற்கு 21—4—1986 அன்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நீலகிரி மற்றும் அண்ணா மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்கள் அமைப்பதற்கான ஆணை விரைவில் வெளியிடப்படும்.

[1987 நவம்பர் 12

குமரி மாவட்டத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு புதியக் கட்டிடங்கள்.

32— வினா 6522—டாக்டர் தே. குமாரதாஸ் : : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

குமரி மாவட்டத்தில் கருங்கல் அரசு மேல்நிலைப்பள்ளி, மத்தியோடு அரசு மேல்நிலைப்பள்ளி, நட்டாலம் அரசு மேல் நிலைப்பள்ளி ஆகியவைகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

கோபால்பட்டிக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடல்

33—வினா எண் 6906—திரு. மெ. ஆண்டி அம்பலம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி (வழி) ராமன்செட்டி பட்டி, கோணப்பட்டி, அஞ்சுகுழிபட்டி, கண்ணியாபுரம், கோபால்பட்டிக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழக பேருந்தினை விட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இவ் வழித்தடத்தில் அடங்கியுள்ள கோணப்பட்டிக்கும், அஞ்சுகுழிப்பட்டிக்கும் இடையேயுள்ள 2 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலை பேருந்து போக்கு வரத்திற்கு ஏற்ற நிலைமையில் இல்லாததால், இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கும் சாத்தியக் கூறு தற்சமயம் இல்லை.

திறந்தவெளிக் கல்வித் திட்டம்

34— வினா 7277—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் திறந்த வெளிக் கல்வித் திட்டத்தின் மூலம் பயன் பெற்று வருபவர்கள் எத்தனை பேர் ?



1987 நவம்பர் 12]

விடை—

1985-86-ஆம் ஆண்டில் இதுவரை 812 மாணவர்கள் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

தாரமங்கலம் பஞ்சாயத்தில் நிரந்தரக் கடைகள் கட்டி வாடகைக்கு விடுதல்.

35—வினா எண் 7500—திரு. செ. செம்மலை : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

[redacted] சேலம் மாவட்டம், தாரமங்கலம் நகர பஞ்சாயத்தில் தின சரி மார்க்கெட்டிலும், வாரச் சந்தையிலும் நிரந்தரக் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

செலவடை கிராமத்தில் ஏரி அமைக்கும் திட்டம்

36—வினா எண் 7501—திரு. செ. செம்மலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் யூனியன் செலவடை கிராமத்தில் ஏரி அமைக்கும் திட்டம் பற்றி ஆய்வு செய்யப்பட்டு உள்ளதா ?

(ஆ) அந்தப் பணி எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

விடை—

(அ) செலவடை கிராமத்தில் ஏரி அமைக்க இடம் பொருத்தமில்லாததால் ஒரு குட்டை அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) மதிப்பீடு இறுதியாக்கப்பட்டு பரிசீலனைக்குப் பின் ஏற்கத்தக்கதாவென தெரியவரும். ஒப்புதலுக்குப் பின்னர் தான் பணி செயல்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**பங்கானியூர் செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றும் திட்டம்**

37—வினா எண் 7504—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம், ஜலகண்டாபுரம் சாலையில் இருந்து பிரிந்து எவுண்டம்பட்டி, நந்தக்காட்டனூர் வழியாக பங்கானியூர் வரை செல்லும் சாலையை ஆர். ஆர். திட்டத்தின் கீழ் எடுத்து தார் சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கென சேவைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.**

38—வினா எண் 7565—திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு உதவும் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மொத்தம் எத்தனை பதிவு செய்யப்பட்டன ?

(ஆ) அவற்றில் எத்தனை சங்கங்கள் தற்போது செயல்படுகின்றன ?

(இ) எத்தனை சங்கங்கள் செயல்படாமல் இருக்கின்றன ?

(ஈ) இயங்குகின்ற சங்கங்களில் இலாபத்தில் இருக்கும் சங்கங்கள் எவை ?



விடை—

(அ) தமிழகத்தில் இதுவரை 107 சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 31—12—1985 நிலவரப்படி, 26 சங்கங்கள் கலைக்கப்பட்டுவிட்டன.

(ஆ) 66 சங்கங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

(இ) 15 சங்கங்கள் செயல்படாமல் இருக்கின்றன.

(ஈ) இயங்குபவைகளில், 14 சங்கங்கள் இலாபத்தில் செயல்படுகின்றன. அவற்றின் பெயர்கள் பின்வருமாறு:—

1. சாத்தூர் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், சாத்தூர்.

2. வென்சீர் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், சாத்தூர்.

3. ராமலிங்காபுரம் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், சிவகாசி, சாத்தூர்.

4. சனதா சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், சிவகாசி.

5. அண்ணா சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், கோவில்பட்டி.

6. இளையரசனேந்தல் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், கோவில்பட்டி.

7. பாண்டவர்மங்கலம் கலைவாணர் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், கோவில் பட்டி.

8. திட்டக்குளம் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், கோவில்பட்டி.

9. பாண்டியன் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், கடயநல்லூர்.

10. பாரதி சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், எட்டயபுரம்.

11. கன்னியாகுமரி சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், தக்கலை.

[1987 நவம்பர் 12

12. மதுரை சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், மதுரை.

13. தருமபுரி சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், தருமபுரி.

14. அதியமான் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், தருமபுரி.

### ஆலஞ்சோலை-ஆறுகாணி சாலைச் சீரமைப்புப்பணி

39—வினா எண் 7600—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தாலுக்காவில் களியல் கிராமத்தில் ஆலஞ்சோலை—ஆறுகாணி சாலையில் சீரமைப்புப் பணி எப்போது முடிவடையும் ?

விடை—

வினாவில் குறிப்பிடப்பெறும் சாலைப் பணியை செயல்படுத்தும் தருணத்தில் ஆட்சேபணைகள் எழுப்பப்பட்டன. சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் சாலையை மேம்படுத்துமாறு கேட்டுக் கொண்டதின் பேரில் மறுவழித்தடத்தில் சாலை அமைக்க ஒப்புதல்வழங்கப்பட்டுள்ளது. மிகவிரைவில் பணியை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1984-85இல் ஏற்பட்ட சாலை விபத்துக்கள்

40—வினா எண் 7668—திரு. கே. உக்சி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1984-85 ஜூன் வரை ஏற்பட்ட சாலை விபத்துக்கள் எத்தனை ?

(ஆ) உயிரிழந்தோர் எத்தனை பேர் ?

(இ) காயமடைந்தோர் எத்தனை பேர் ?

(ஈ) விபத்துக்களை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



1987 நவம்பர் 12]

விடை—

| | |
|---|---|
| (அ) 1984 ஆம் ஆண்டு ஏற்பட்ட சாலை விபத்துக்களின் எண்ணிக்கை .. .. .. | 17,838 |
| 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை ஏற்பட்ட சாலை விபத்துக்களின் எண்ணிக்கை .. .. .. | 12,325 |
| (ஆ) 1984-ஆம் ஆண்டு இறந்தவர்கள் .. .. | 4,130 |
| 1985-ல் ஜூன் முடிய இறந்தவர்கள் .. | 2,525 |
| (இ) 1984-ஆம் ஆண்டு காயமடைந்தோர் .. | 17,018 |
| 1985-ல் ஜூன் முடிய காயமடைந்தோர் | 11,628 |

(ஈ) சாலை விதிகளை மீறி மோட்டார் வாகனங்கள் ஓட்டும் ஓட்டுநர்கள், மோட்டார் வாகன சட்ட விதிமுறைகளின் கீழ் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டு வருகின்றன. சாலை விதிகளை மீறுபவர்கள் மீதும் வழக்குகள் தொடரப்பட்டு துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் அதிகமான காவலர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். போக்குவரத்தைச் சமாளித்து ஒழுங்குபடுத்தும் வண்ணம் காவலர்களுக்கு சரியான பயிற்சி அளிக்கப்படுகின்றன.

### நெடுஞ்சாலை இலாகா சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகங்கள் மற்றும் உதவிக்கோட்ட அலுவலகங்கள்.

41—வினா எண் 7671—திரு. கே. உக்சி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலை இலாக்காவில் (Mechanical Engineering) சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகங்கள் (Section) உதவிக் கோட்ட அலுவலகங்கள் (Sub-Division Office) எவ்வளவு ?

விடை—

(1) இயந்திரப் பிரிவு அலுவலகங்கள்—48.

(2) இயந்திர உதவி கோட்ட அலுவலகங்கள்—12.

[1987 நவம்பர் 12

42—

சென்னை லஸ் கார்னர் பகுதியில் சிக்னல் விளக்கு அமைத்தல்

42—வினா எண் 9451—திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை லஸ் கார்னர் பகுதியில் சிக்னல் விளக்கு போடப்பட்டு சாலை விபத்துக்களை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

சென்னை லஸ் கார்னர் பகுதியில் சாலை விபத்துக்களைத் தடுக்க சிக்னல் விளக்கு அமைக்கும் '' செயற் குறிப்பு '' காவல் துறையில் உள்ளது. இதற்கான திட்டம் மற்றும் மதிப்பீடு பெறுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மசினகுடி உண்டிமாயார் பகுதி ஆதிவாசிகளுக்கு பட்டா வழங்குதல்.

43—வினா எண் 9850—திரு. கே. உச்சி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், மசினகுடி உண்டிமாயார் பகுதி ஆதிவாசிகளுக்கு நீண்ட காலமாக பட்டா வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பகுதி மக்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) :

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், மசினகுடி கிராமம், உண்டிமாயார் பகுதியில் சர்வே எண் 10/2 மற்றும் 10/4 ஆகிய பகுதிகள் நத்தமாக உள்ளன. இதில் ஏற்கனவே சிலருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதில் வீட்டு மனைப் பட்டா பெறாமல் வீடுகள் கட்டியுள்ள ஆதிவாசிகள் மற்றும் ஆதிவாசியில்லாதவர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப் பகுதியில் உள்ள சர்வே எண் 246/1 பகுதியில் அங்குமிங்குமாக விவசாயம் செய்து வருகிறார்கள். இப்பகுதி 'சர்க்கார் ரிசர்வ் பாரஸ்ட் தரிசு' எனப் பதிவாகியுள்ளது. இவர்களது ஆக்கிரமிப்பு பதிவு செய்து, தண்டத் தீர்வையும் வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது இம்மாவட்டத்தில் விவசாய நிலங்களுக்கு பட்டா வழங்க தடை ஆணை உள்ளதால் இவர்களுக்கு பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.



1987 நவம்பர் 12]

நீலகிரி மாவட்டத்தில் வானொலிப்பெட்டிகள் வழங்கப்பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை.

44—வினா எண் 9890—திரு. கே. உச்சி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரகத் தகவல் தொடர்பு, மேம்பாடு திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு, எத்தனை கிராமங்களுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டன ?

(ஆ) எத்தனை கிராமங்களுக்கு டெலிவிஷன் பெட்டிகள் வழங்கப்பட்டன ?

விடை—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள 7 ஊராட்சிகளுக்கும் 7 பேரூராட்சிகளுக்கும் 1985-86-ஆம் ஆண்டில் 53 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

(ஆ) இதுவரை தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவில்லை.

தென்காசி, செங்கோட்டை நகரங்களில் பிளாஸ்டிக் பைகளில் பால் வழங்கும் திட்டம்.

45—வினா எண் 8957—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்காசி, செங்கோட்டை நகரங்களுக்கு பிளாஸ்டிக் பையில் பால் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படத் துவங்கும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 21-6-86 முதல் பிளாஸ்டிக் பையில் பால் வழங்கப்படுகிறது.

[1987 நவம்பர் 12

விதை நெல் விற்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சிறப்பூதியம்

46—வினா எண் 7733—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதை நெல் விற்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சிறப்பூதியம் கிலோவிற்கு 0.75 பைசாவை உயர்த்த கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1985-86—ஆம் ஆண்டிற்கான விதை விலைக் கொள்கை 30-6-1986 வரை நடைமுறையில் உள்ளதால் 1986-87—ஆம் ஆண்டிற்கான புதிய விதை விலைக் கொள்கை நிர்ணயம் செய்யும் பொழுது ஊக்கத் தொகை உயர்த்துவதைப் பற்றி பரிசீலிக்கப் படும்.

நெல்லை மாவட்ட கிராமப் பகுதிகளில் தொலைக்காட்சிப் பெட்டி அமைக்கும் திட்டம்.

47—வினா எண் 7739—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் கிராமப் பகுதிகளில் தொலைக்காட்சிப் பெட்டி அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தாலுகா வாரியாக விபரம் என்ன ?



1987 நவம்பர் 12]

விடை—

(அ) ஆம். இதுவரை 225 தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

(ஆ)

| | | |
|---|---|---|
| திருநெல்வேலி | .. | 30 |
| தென்காசி | .. | 51 |
| செங்கோட்டை | .. | 6 |
| கோவில்பட்டி | .. | 45 |
| விளாத்திகுளம் | .. | 22 |
| ஒட்டப்பிடாரம் | .. | 10 |
| சிவகிரி | .. | 9 |
| சங்கரன்கோவில் | .. | 52 |
| மொத்தம் | .. | 225 |

தமிழ்நாட்டிலுள்ள பட்டுநூற்பு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்.

48—வினா எண் 7786—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் எவ்வளவு ?

(ஆ) அவைகளில் எத்தனை சங்கங்கள் நஷ்டத்தில் உள்ளன?

விடை—

(அ) தமிழ்நாட்டில் தமிழ்நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு விற்பனை இணையம் காஞ்சிபுரம் உட்பட 73 பட்டு நூற்பு தொழில் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

[1987 நவம்பர் 12

(ஆ) அவைகளில் 20 பட்டு தொழிற் கூட்டுறவு சங்கங்கள்
இலாபத்தில் இயங்குகின்றன. 10 சங்கங்கள் முன் நட்டத்
தைத் தற்போது குறைத்துள்ளன. 43 சங்கங்கள் நட்டத்தில்
உள்ளன. இச்சங்கங்கள் நட்டத்தில் செயல்படுவதற்கான கார
ணங்களை ஆராய்ந்து, அவைகளைக் களைந்து நன்கு இலாபத்தில்
செயல்பட மண்டல பட்டு சேவைச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு
இச்சங்கங்கள் மூலம் பட்டு நூற்பு சங்கங்களுக்கு உற்பத்திக்கு,
பட்டு வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தும் செய்திட ஆவன
செய்யப்பட்டுள்ளது. இதனால், பட்டு நூற்பு சங்கங்கள்
தேவையான பட்டுக்கூடுகளை சிரமம் இல்லாமல் பெறுவதோடு,
பட்டு வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துக் கருவிகளையும்,
தரமானதாக, மலிவான விலையில் உடனுக்குடன் பெறுகின்றன.
இதனால், பட்டு உற்பத்தியும், பட்டு வளர்ச்சியும் அதிகரிக்க
வாய்ப்புகள் உள்ளன. பட்டு தொழிற் கூட்டுறவு சங்கங்கள்
இனி நன்கு இலாபத்தில் இயங்கி வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

**சென்னை மற்றும் ஊட்டியில் நடந்த குதிரைப்பந்தயங்கள் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம்.**

49—வினா எண் 7791—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு
வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்
பாரா—

1985–ஆம் ஆண்டு சென்னை, ஊட்டி முதலிய இடங்களில்
நடந்த குதிரைப் பந்தயங்களினால் அரசுக்குக் கிடைத்த வரு
மானம் எவ்வளவு ?

விடை—

| | | சென்னை. (1) | உதகமண்டலம். (2) | மொத்தம். (3) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சங்களில்) | | |
| 1984–85 | .. | 356.11 | 35.57 | 391.68 |
| 1985–86 | .. | 407.78 | 47.06 | 454.84 |

**திருவாடானை ஒன்றியத்திலுள்ள அரசு மருத்துவமனைக்கு பெண் மருத்துவர் நியமனம்.**

50—வினா எண் 7795—திரு. கா. சொர்ணலிங்கம் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானை ஒன்றியத்தில் உள்ள தொண்டி அரசு
மருத்துவ மனையில் பெண் மருத்துவர் இல்லை என்பதை அரசு
அறியுமா ?

(ஆ) ஆம் எனில் பெண் டாக்டர் நியமிக்க ஆவன செய்
யுமா ?



1987 நவம்பர் 12]

விடை—

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவா
டானை ஒன்றியத்திலுள்ள தொண்டி அரசு மருத்துவமனையில்
இரண்டு ஆண் மருத்துவர்கள் பணி புரிகிறார்கள். உதவி மருத்து
வர்களின் பொது மாற்றுதலின் போது ஓர் ஆண் மருத்துவரை
மாற்றி அவருக்குப் பதிலாக ஒரு பெண் மருததுவர் நியமனம்
செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**தேவக்கோட்டை நகர் அரசு பெண்கள் மெல்நிலைப்பள்ளிக்கட்டிடம்.**

51—வினா எண் 7797—திரு. கா. சொர்ணலிங்கம் :
மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா—

தேவக்கோட்டை நகரில் அரசு பெண்கள் மேல்நிலைப்
பள்ளிக்குக் கட்டிடம் கட்டித் தர அரசு முன்வருமா ?

விடை—

தேவக்கோட்டை நகரில் அரசு பெண்கள் மேல் நிலைப்
பள்ளி ஏதுமில்லை.

**ஜெயங்கொண்டத்திலிருந்து வாழைக்குறிச்சி வரை நகரப்பேருந்து விடும் திட்டம்.**

52—வினா எண் 7823—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு
போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் ஜெயங்கொண்டத்
திலிருந்து வாழைக்குறிச்சி என்ற ஊர் வரை வானதிரையன்
பட்டினம், நாயகனைப் பிரியாள் கிராமங்கள் வழியாக நகரப்
பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நகரப் பேருந்து துவங்கும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருவாளர்கள் தீரன் சின்னமலை
போக்குவரத்துக் கழகத்திடமிருந்து 62(1) (சி) பிரிவில்
ஜெயங்கொண்டத்திலிருந்து வாழைக்குறிச்சிக்கு நாயகனைப்
பிரியாள் மற்றும் வானதிரையன்பட்டினம் ஆகிய கிராமங்களை
இணைத்து பேருந்து விட மனு பெறப்பட்டு 30-12-1985
அன்று முறையாக கால நிர்ணயம் செய்யப்பட்டு நகரப் பேருந்து
ஒன்று இயக்கப்பட்டு வருகிறது.

**தத்தனூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் துவங்கும் திட்டம்**

53—வினா எண் 7810—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில், தத்தனூர் கிராமத்தில் கால் நடை கிளை நிலையம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கால் நடை கிளை நிலையம் எப்போது துவக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதி தத்தனூர் கிராமத்தில் கால் நடை கிளை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்ட மருந்துகள்**

54—வினா எண் 9425—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு 1985-86 நிதி ஆண்டில் வழங்கப்பட வேண்டிய மருந்துகள் வழங்கப்பட்டதா ?

(ஆ) மருந்துகளின் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) ஆம். ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைகளுக்கு 1985-86 நிதியாண்டில் தேவையான மருந்துகள் வழங்கப்பட்டன.

(ஆ) மருந்துகளின் மொத்த மதிப்பீடு ரூ. 2,05,689.90 ஆகும்.



**குத்தாலம் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்**

55—வினா எண் 7946—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, திருவீழிமிழலை கிராமத்தில் தனியார் டிரஸ்ட் மூலம் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் (I.T.I.) அனுமதியளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை. இது குறித்து விண்ணப்பம் ஏதும் அரசுக்கு வரவில்லை.

**சாய்க்கா பள்ளம் வாய்க்கால் தலைப்பில் தடுப்புச் சுவர் அமைத்தல்.**

56—வினா எண். 7949—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், வழுவூர் கிராமத்தில் கடலாழி ஆற்றில் சாய்க்கா பள்ளம் வாய்க்கால் தலைப்பில் ஒரு தடுப்புச் சுவர் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

**முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே படுக்கை அணை கட்டுதல்**

57—வினா எண் 7961—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், விக்ரபாண்டியம் வாய்க்கால் தலைப்பில் முடி கொண்டான் ஆற்றின் குறுக்கே, ஒரு படுக்கை அணை கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

## குடவாசல்-பேரளம் வரை நகரப் பேருந்து விடும் திட்டம்.

58— வினா எண் 7968—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசலில் இருந்து கடலங்குடி எரமாஞ்சேரி வழியாக பேரளம் வரை நகரப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை. எனினும் குடவாசலை நகரமாக அறிவித்திருப் பதை யொட்டி, மேற்படி தடத்தில் நகரப் பேருந்து விட விண்ணப்பிக்குமாறு சோழன் போக்குவரத்துக் கழகத்தை அறிவுறுத்தியுள்ளதாக நாகப்பட்டினம் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தெரிவித்துள்ளார்.

## குடவாசலை மையமாகக் கொண்டு வடமட்டம் வரை நகரப்பேருந்து விடும் திட்டம்.

59— வினா எண் 7969—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசலை மையமாக வைத்து வட மட்டம் வரைக்கும் நகரப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை. எனினும், சென்னை போக்குவரத்து ஆணையர் குடவாசலை நகரப் பேருந்து விடுவதற்காக நகரமென அறிவித் திருப்பதையொட்டி மேற்குறித்த தடத்தில் நகரப் பேருந்து விட விண்ணப்பங்கள் அனுப்புமாறு சோழன் போக்குவரத்துக்கழகம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.





## அரையபுரம் வாய்க்கால் தலைப்பை மாற்றியமைத்தல்

60— வினா எண். 7970—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, அரையபுரம் வாய்க்கால் தலைப்பை, குத்தாலத்திலிருந்து அரையபுரத்திற்கு மாற்றியமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள் ளதா ?

விடை—

இல்லை.

## கீர்த்திமான் ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் அமைத்தல்

61— வினா எண். 7972—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், செம்மங்குடி வாய்க்கால் தலைப்பில் கீர்த்திமான் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப் புச்சுவர் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இந்த ஆற்றின் குறுக்கே தடுப்புச்சுவர் அமைத்துத்தரும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

## கடியப்பட்டினம் கடற்கரையோரம் தடுப்புச் சுவர் கட்டுதல்

62— வினா எண். 8008—திரு. எப்.எம்.ராசரத்தினம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

கடல் நீர் வள்ளியாற்றில் வருடத்திற்கு நான்கு மாதம் நீரேற்றம் செய்வதன் மூலம் கடியப்பட்டிணம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் தண்ணி ருக்காக அவதிப்படுவதை முன்னிட்டு கடியப்பட்டிணம் கடற் கரையோரம் தடுப்புச்சுவர் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

[1987 நவம்பர் 12

### அழகப்பபுரம் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடம்

63—வினா எண். 8028—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியம், அழகப்பபுரம் ஊராட்சி மன்ற அலுவலகம் புதியதாகக் கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதா ?

விடை—

இல்லை.

### செப்டிவிளையிலுள்ள மேல்நிலைத் தொட்டி.

64—வினா எண். 8031—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியம், செப்டிவிளை மேல்நிலைத்தொட்டி இயங்குவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் செப்டிவிளை மேல்நிலைத் தொட்டி இயங்குவதில்லை. காரணம் மேற்படி ஆழ்குழாய் கிணறு தூர்ந்துபோய்விட்டது. தூர் எடுப்பதற்கு திருச்சி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இயந்திரவியல் நிர்வாகப் பொறியாளருக்கு சம்மந்தப்பட்ட ஊராட்சியிலிருந்து ரூ. 1,000 முன்பணம் 3–9–1985 இல் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சித் தலைவருக்கு ஆலோசனை கூறி மேற்படி ஆழ்குழாய் சரிசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 12]

### வெள்ளியங்கால் ஓடையைச் சீரமைத்தல்

65—வினா எண். 8055—திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோவில் தொகுதியைச் சேர்ந்த வெள்ளியங்கால் ஓடையில் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி ஓடையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இத்திட்டம் குறித்து தேவையான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது.

### கரம்பக்குடி அரசு மருத்துவ மனைக்கு துணைக் கட்டிடம் கட்டுதல்

66—வினா எண். 8143—திரு அ. வெங்கடாசலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடியின் அரசு மருத்துவமனைக்கு துணைக்கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) திட்ட மதிப்பு எவ்வளவு ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### மத்தூர் ஒன்றியத்திற்கு வாகன வசதி

67—வினா எண். 8163—திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மத்தூர் ஒன்றியத்திற்கு வாகன (ஜீப்) வசதி எப்போது செய்து தரப்படும் ?

விடை —

மத்தூர் ஒன்றியத்திற்கு ஜீப் வழங்குவதற்கான ஆணை
ஏற்கெனவே அரசால் 28-1-1986 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தூர் கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம்

68—வினா எண். 8165—திரு. டி.எம். வெங்கடாசலம்: மாண்பு
மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா
விற்கு விடையளிப்பாரா —

பர்கூர் தொகுதி, சந்தூர் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்
டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் எப்போது
கட்டப்படும் ?

விடை —

பர்கூர் தொகுதி, சந்தூர் கிராமத்தில் 1983-ல் ஆரம்பிக்கப்
பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் தற்பொழுது ஊராட்சி ஒன்றி
யத்தை சார்ந்த கட்டிடத்தில் வாடகை இல்லாமல் இயங்கி வரு
கிறது. அக்கிராமத்தில் 5.14 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது. அந்நிலத்தை பொது சுகாதாரத் துறைக்கு மாற்ற
நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூ. 1,00,000 நன்கொடை
யும் செலுத்தப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலைமைக்கேற்ப
சந்தூரில் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

மானாமதுரை தொகுதியிலுள்ள அரிசன காலனிகளுக்கு தெரு மின்
விளக்கு வசதி.

69—வினா எண். 8180—திரு. க. பாரமலை: மாண்புமிகு சுற்
றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியில் திருப்புவனம் ஊராட்சி ஒன்
றியப் பகுதியில் சொட்டதட்டி கிராமத்தில் புதிதாக கட்டப்பட்
டுள்ள அரிசன காலனிக்கு தெரு மின் விளக்கு வசதி செய்ய
நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

விடை—

ஆம், வேலை [illegible]
பட இருக்கிறது.



79-வினா எண் 8181—திரு. க. பாரமலை: மாண்புமிகு சுற்றுலா
மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் மானாமதுரைக்கு அருகி
லுள்ள மூங்கில் ஊரணி கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள
அரிசன காலனியின் மின் விளக்கு வசதி செய்து கொடுக்க வேண்டு
மென பொது மக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை
என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திருவிடைமருதூர் ஒன்றிய அலுவலக வளாகத்திலுள்ள கால்நடை கிளை
மருத்துவ நிலையம்.

71—வினா எண். 8335—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு
சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் ஒன்றிய அலுவலக வளாகத்தில் இருக்
கும் கால் நடை கிளை மருத்துவ நிலையத்னை மாற்று
இடத்தில் கட்டிடம் கட்டி மருந்து வசதிகள் செய்து
கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றிய அலுவலக
வளாகத்தில் செயல்படும் கால்நடை கிளை நிலையத்திற்கு
மாற்றுக் கட்டிடம் கட்ட பிரேரணை ஏதும் தற்போது
அரசின் பரிசீலனையில் இல்லை. கால் நடை கிளை மருத்துவ
நிலையங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2,000 மதிப்புள்ள
மருந்துகள் அளவு குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, கிளை மருத்துவ
நிலையங்களின் தேவைக்கேற்ப மருந்துகள் வழங்கப்படுகின்றன.

**திருப்பனந்தாளில் பேருந்து நிலையம் அமைத்தல் :**

72—வினா எண். 8341—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பனந்தாள் ஒன்றியம், திருப்பனந்தாளில் பேருந்து நிலையம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயலுக்கு வரும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**கிராமங்களில் வைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி பெட்டிகளை பழுது பார்க்க தொழில் நுட்பப் பணியாளர்களை நியமித்தல்.**

73—வினா எண். 8361—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கிராமங்களில் வைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி பெட்டிகளை பழுதுபார்க்க தொழில் நுட்பப் பணியாளர்களை நியமிக்க அரசு முன் வருமா?

விடை—

கிராமங்களிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பழுதுபார்க்க ஏற்கெனவே தொழில்நுட்பப் பணியாளர்கள் உள்ளனர். மேலும் பணியாளர்களை நியமிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது.

**மண்ணியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்புச் சுவர்.**

74—வினா எண். 9681—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் ஒன்றியம் சிக்கல் நாயக்கன்பேட்டை காட்டூர் பகுதியில் உள்ள மண்ணியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பு சுவர் ரிவிட்மெண்டுகள் உடைந்துள்ளதை கட்டுவதற்கு அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?





விடை—

(அ) மற்றும் (ஆ): மண்ணியாற்றின் குறுக்கே 69/4-66-ல் ஆற்றில் ஏற்படும் அரிப்பை தடுக்க சோதனை முறையில் தடுப்பு சுவர் கட்டப்பட்டது. இது 1983-ல் அசாதாரண வெள்ளத்தின் போது சேதமடைந்தது. இதன் அருகாமையில் உள்ள வாய்க்கால்களுக்கு பாசனம் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன. அத்துடன் இப்பகுதியின் தேவைக்கேற்ப பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**கொண்டசமுத்திரம் வாய்க்கால் தலைப்பை கட்டும் பணி.**

75—வினா எண். 9683—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் ஒன்றியம் மண்ணியார் பிரிவு கொண்டசமுத்திரம் வாய்க்கால் தலைப்பு இடிந்துள்ளதை கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

காவிரியின் பிரிவான மண்ணியாற்றின் கிளை வாய்க்காலான கொண்டசமுத்திரம் தலைப்பு மதகு பழுதுபார்க்க தக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. விரைவில் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

**மதுரை சிவகங்கை சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் திட்டம்.**

76—வினா எண். 6055—திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து வரிச்சியூர் மார்க்கமாக சிவகங்கை செல்லும் சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): மதுரை—பூவந்தி (வழி) வரிச்சியூர் சாலை கி.மீ. 3/6 முதல் 23,856 வரையில் உள்ள சாலையும் மதுரை—தொண்டி கி.மீ. 17/8 முதல் 42/0 வரையுள்ள சாலையும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறை பராமரிப்பில் உள்ளன. இச்சாலையை மேம்பாடு செய்ய உத்தேசமாக ரூ. 67 இலட்சம் தேவைப்படும். இப்பணி இதுவரை அரசின் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இடம்பெறவில்லை. இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதிவளம், பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பகுதி 2 திட்டத்தில் மாநிலச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

மதுரை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள மதுரை—பூவந்தி சாலை (வழி) வரிச்சியூர் கி.மீ. 0/0 முதல் 3/6 வரையிலான பகுதிக்கு மேற்கொண்டு அபிவிருத்தி ஏதும் தேவையில்லை.

### திருப்புவனம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம்.

77—வினா எண். 6161—திரு. க. பாரமலை: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி திருப்புவனம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

78—வினா எண். 6162—திரு. க. பாரமலை: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி திருப்புவனம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இடிந்துபோன கூரைக் கட்டடத்திற்குப் பதிலாகப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

விடை—

இப்பள்ளிக்கு புதிதாக வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட இவ்வாண்டு போதிய நிதிவசதி இல்லாததால், அடுத்துவரும் ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப இது குறித்து பரிசீலிக்கப்படும்.



### இருமுனை கோணுலாம் பள்ளத்திற்கு புதிய வாய்க்கால் வெட்டும் திட்டம்.

79—வினா எண். 8351—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பனந்தாள் ஒன்றியம், குமுக்கு மண்ணியாற்றிலிருந்து திட்டச்சேரி, இருமுனை கோணுலாம் பள்ளத்திற்குப் புதிய வாய்க்கால் வெட்டுகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### பந்தநல்லூரில் கிளை நூல்நிலையம் அமைக்கும் திட்டம்.

80—வினா எண். 8360—திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பனந்தாள் ஒன்றியம் பந்தநல்லூரில் ஒரு கிளை நூல்நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

### தாம்பரத்திலிருந்து நகரப் பேருந்து விடல்.

81—வினா எண். 8396—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்திலிருந்து சித்தாலப்பாக்கம், மதுராப்பாக்கம் போன்ற கிராமங்களுக்கு கூடுதலாக நகரப் பேருந்து விட பொது மக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்

[1987 நவம்பர் 12

(ஆ) தற்போது சித்தாலப்பாக்கம், மதுராப்பாக்கம் கிராமங்கள் வழியாக இயக்கப்படுகிற பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளே போதுமானதாக இருப்பதாலும் மேலும் அதிகரிக்கும் அளவிற்கு பேருந்துகள் போதுமானதாக இல்லாததாலும் பேருந்துகளை விட தற்சமயம் உத்தேசமில்லை.

82—

### தாம்பரம் நகரைச் சுற்றியுள்ள சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகள் போடும் திட்டம்.

வினா எண் 8407—திரு. எல்ல. ராசமாணிக்கம் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகரைச் சுற்றி போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள சாலைகளிலும் சாலை சந்திப்புகளிலும் சோடியம் ஆவி விளக்குகள் போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்போது துவக்கப்படும்?

விடை —

(அ) மற்றும் (ஆ): தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் போக்குவரத்து அதிகமாகவும் வெளிநாட்டு வணிகத்தினர் அடிக்கடி வந்துபோகும் தாம்பரம் ஜி.எஸ்.டி. சாலையில் வெளிச்சம் பிரகாசமாக இருக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து நிதி உதவி பெற்று 102 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் திட்டம் தாம்பரம் நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

### அகர தென் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

83—வினா எண். 9006—திரு. எல்ல இராசமாணிக்கம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அகரம் தென் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1987 நவம்பர் 12]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### மூங்கில்குடி ஊராட்சியில் உயர் அழுத்த மின் கம்பி அறுந்து விழுந்ததால் பாதிக்கப்பட்டோர்.

84—வினா எண் 11122—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், மூங்கில்குடி ஊராட்சியில் உயர் அழுத்த மின் கம்பி அறுந்து விழுந்ததால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு மின்வாரியம் வழங்கிய உதவிகள் என்ன?

விடை—

(அ) இரண்டு பேர்.

(ஆ) அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று திரும்பியுள்ளனர். உதவி கேட்டு வாரியத்திற்கு மனுக்கள் வரவில்லை. மனுக்கள் வந்தால் வாரிய விதிமுறைகள்படி பரிசீலிக்கப்படும்.

### தஞ்சை மாவட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு செய்து உயிர் இழந்தோர் எண்ணிக்கை.

85—வினா எண் 8465—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1985–86-ல் தஞ்சை மாவட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு செய்ததன் காரணமாக மருத்துவமனைகளில் உயிர் நீத்தவர்களின் எண்ணிக்கை என்ன?

விடை—

1985–86-ல் தஞ்சை மாவட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு செய்ததன் காரணமாக மருத்துவமனைகளில் உயிர் நீத்தவர்களின் எண்ணிக்கை ஆறு ஆகும்.

## 1985–86-ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செலவு செய்த தொகை.

86—வினா எண் 8470—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985–86-ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செலவு செய்த தொகை எவ்வளவு ?

(ஆ) அதில் மைய அரசின் நிதி எவ்வளவு?

விடை—

(அ) 1985–86-ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை கீழ் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) விநியோகிக்கப்பட்ட அரிசியின் மதிப்பு. . | 556.72 |
| (2) விநியோகிக்கப்பட்ட கோதுமையின் மதிப்பு. | 370.29 |
| (3) பணம் .. .. .. .. | 3,478.28 |
| மொத்தம் .. .. | 4,405.29 |

(ஆ) இதில் மைய அரசின் நிதி உதவி பின்வருமாறு :—

| | |
|---|---|
| (1) வழங்கப்பட்ட கோதுமையின் மதிப்பு | 672.00 |
| (2) பணம் .. .. .. .. | 1,934.95 |
| மொத்தம் .. .. | 2,606.95 |



## செருகளத்தூர் சித்த மருத்துவமனை.

87—வினா எண் 8541—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், செருகளத்தூர் (ஒன்றியம்) சித்த மருத்துவமனையை, அரசினர் சித்த மருத்துவமனையாக மாற்றும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

## சிறு தொழில் துவங்க வழங்கப்பட்ட உரிமங்கள்.

88—வினா எண் 8552—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977 முதல் 1985 வரை தமிழ் நாட்டில் சிறு தொழில் துவங்குவதற்கு வழங்கப்பட்ட உரிமங்கள் எவ்வளவு?

விடை—

1977 முதல் 1985 வரை சிறு தொழில் துவங்குவதற்கு வழங்கப்பட்ட தற்காலிக சான்றிதழ்கள் மற்றும் இதே காலத்தில் உற்பத்தி துவங்கி இயங்கி வரும் சிறுதொழில்களுக்கு வழங்கப்பட்ட நிரந்தரச் சான்றிதழ்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் வருட வாரியாக கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

| வருடம். (1) | சிறுதொழில் துவங்க வழங்கப்பட்ட தற்காலிக சான்றிதழ்கள். (2) | இயங்கிவரும் சிறுதொழில்களுக்கு வழங்கப்பட்ட நிரந்தரச் சான்றிதழ்கள். (3) |
|---|---|---|
| 1977 .. .. | 6,968 | 5,394 |
| 1978 .. .. | 7,549 | 4,100 |
| 1979 .. .. | 11,603 | 6,126 |
| 1980 .. .. | 16,324 | 7,348 |
| 1981 .. .. | 19,730 | 7,514 |
| 1982 .. .. | 16,857 | 5,351 |
| 1983 .. .. | 17,584 | 4,765 |
| 1984 .. .. | 29,187 | 7,648 |
| 1985 .. .. | 34,914 | 13,666 |
| மொத்தம் .. | 1,60,716 | 61,912 |

## 1984–85 ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடுமாடுகளின் முடிகள்.

89—வினா எண் 6677—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் கிடைத்த ஆடு மாடுகளின் முடிகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதா?

(ஆ) அதன் மூலம் அரசுக்கு கிடைத்த அந்நிய செலாவணி எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விண்ணமங்களம், டான்சி உரோம சுத்திகரிப்பு தொழிற்சாலையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட உரோமத்தின் மூலம் கிடைத்த அந்நிய செலாவணி ரூ. 10,66,574.05. தனியார் தொழிற்சாலையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் கிடைத்த அந்நிய செலாவணி பற்றித் தமிழ்நாட்டிற்கு மட்டும் தனியாக விபரம் இல்லை.

## திருக்குறளை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்ப்போருக்கு ஊக்கத் திட்டம்.

90—வினா எண் 8554—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்குறளை பல்வேறு மொழிகளில் மொழி பெயர்ப்பவர்களுக்கு ஊக்கத் திட்டம் ஏதாவது அரசு தயாரித்துள்ளதா?

விடை—

தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளிலமைந்த இலக்கியங்களைத் தமிழிலும் மொழி பெயர்த்து வெளியிடும் திட்டம் ஒன்றை 8–5–1976 ஆம் நாளிட்ட அரசுக் கல்வித்துறை நிலையாணை எண். 830-இன் மூலம் அரசு தோற்றுவித்துள்ளது. அதன்படி திருக்குறளை பல்வேறு மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.





## 1984–85 ஆம் ஆண்டு சின்கோனாத் துறை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பல்பொடியின் மதிப்பு.

91—வினா எண் 8681—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85 ஆம் ஆண்டு சின்கோனாத்துறை உற்பத்தி செய்த பல்பொடியின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) எந்தெந்த மாவட்டங்களுக்கு அந்த பல்பொடி இலவசமாக வழங்கப்பட்டது?

விடை—

(அ) ரூ. 48.73 இலட்சம்.

(ஆ) நீலகிரி மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், பெரியார் மாவட்டம், சேலம் மாவட்டம் மற்றும் தர்மபுரி மாவட்டம்.

## நாகர்மேடு கொண்டம் கட்டும் பணிகள்.

92—வினா எண் 8620—திரு. அ. ஆறுமுகம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசி வட்டம், நாகர் மேடு கொண்டம் கட்டும் பணிகள் முற்றுப்பெற்றுவிட்டனவா?

(ஆ) ஆம் எனில், எப்போது தண்ணீர் விடப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1984 ஆம் ஆண்டு போதிய மழையின்மையின் காரணமாக ஆற்றில் சொற்ப அளவு தண்ணீர் வரத்துத்தான் இருந்தது. அதற்குத் தகுந்தாற்போல் ஓரளவு ஆயக்கட்டு நிலங்கள் பயனடைந்தன. இந்தப் பகுதியில் கடந்த நவம்பர் (11/85) 1985-ல் பெய்த பலத்த மழையினாலும் அதனால் ஏற்பட்ட அபரிமிதமான வெள்ளத்தின் காரணமாகவும் அணைக்கட்டில் இருந்து கால்வாய் மூலம் அதன் நீர்ப்பாசன நிலங்களுக்குத் தண்ணீர் தேவைப்படவில்லை.

இந்த ஆண்டு (11/86-ல்) 1986 நவம்பர் மாதத்தில் நல்ல பருவமழை பெய்து நீர்வரத்து ஆற்றில் இருப்பின் தேவையான தண்ணீரை முறைப்படி கால்வாய் மூலம் விடப்படும்.

[1987 நவம்பர் 12

**1985–86 ஆம் ஊரக ஆண்டுக்கு வேலைவாய்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு அளித்துள்ள தொகை.**

93—வினா எண் 8625—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1985–86 ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு அளித்துள்ள தொகை எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் '''னடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

(அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக 1985–86 ஆம் ஆண்டுக்கு மைய அரசு அளித்த தொகை ரூ. 1,934.95 இலட்சம்.

(ஆ) இத்திட்டத்தால் கடந்த ஆண்டு (1985–86) 43.27 இலட்சம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் பயனடைந் தனர். 298 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட் டுள்ளன.

**சட்டக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்குப் புதியக் கட்டடம் கட்டும் திட்டம்.**

94—வினா எண் 8672—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்டக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு புதிதாக கட்ட டம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

**தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாடநூல்கள்.**

95—வினா எண் 8676—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாட நூல்கள் மாவட்டங்களுக்கு எவ்வாறு விநியோகம் செய்யப் படுகின்றன?



1987 நவம்பர் 12]

(ஆ) சென்னை நகரில் இந்த விநியோகம் எப்படி நடை பெறுகிறது?

விடை—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 58 தாலுகா கூட்டுறவு சங்க விற்பனையாளர்கள் உள்ளனர். இந்நிறுவன புத்தகங்கள் அடையாறு கிடங்கிலிருந்தும் சிவகாசியிலிருந்தும் தாலுகா வியாபாரிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி திங்கள் முதலில் அனுப்பி வைக்கப்படுகின்றன. தாலுகா வியாபாரிகள் இப்புத்தகங்களை நிறுவனத்தின் விற்பனை உரிமம் பெற்ற சில்லரை வியாபாரிகளுக்கும், மாணவ கூட்டுறவுச் சங்கங் களுக்கும் விநியோகம் செய்கின்றனர். இவர்களிடமிருந்து மாண வர்கள் புத்தகங்களை வாங்குகின்றனர்.

(ஆ) சென்னையில் மட்டும் மொத்தம் 92 தனியார் சில்லரை வியாபாரிகள் உள்ளனர். அடையாறிலுள்ள இந் நிறுவன கிடங்கில் இச் சில்லரை வியாபாரிகளுக்கு பாட நூல் நிறுவனம் நேரிடையாக புத்தகங்களை வழங்குகின்றன. மே மாதத்திய புத்தக விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த காலத்தில், மாணவர்களுக்கு நூல்கள் கிடைத்து வருகின்றன.

**சுயாட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள்.**

96—வினா எண் 8678—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுய ஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் மொத்தம் எவ்வளவு?

விடை—

சுய ஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் மொத்தம் 17 ஆகும். அவைகள் வருமாறு :—

1. இலயோலா கல்லூரி, சென்னை.
2. சென்னை கிருஸ்தவக் கல்லூரி, தாம்பரம்.
3. இராமகிருஷ்ணா மிஷன் விவேகானந்தா கல்லூரி, சென்னை (பட்ட மேற்படிப்பு வேதியல் மற்றும் பொருளாதாரங்கள் மட்டும்).
4. மகளிர் கிருஸ்தவக் கல்லூரி, சென்னை.
5. ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை.
6. மண்டல பொறியியல் கல்லூரி, திருச்சி.
7. செயின்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி.
8. அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

[1987 நவம்பர் 12

9. லேடி டோக் கல்லூரி, மதுரை.

10. மதுரா கல்லூரி, மதுரை.

11. ஸ்ரீ பராசக்தி கல்லூரி (பெண்கள்), குற்றாலம்.

12. பூ. சா. கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

13. திரு. அவிநாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரி கோயம்புத்தூர்.

14. திரு. இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்வியியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

15. திரு. இ. மி. வி. கலைக் கல்லூரி, கோயம்புத்தூர்.

16. பூ. சா. கோ. தொழில் நுட்பவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

17. அரசு தொழில் நுட்பவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வசதி ஏற்படுத்தல்.

97—வினா எண் 8793—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் கடலூரில் அமைந்துள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு வசதி மிக்க அலுவலகம் அரசு அமைத்துத் தருமா ?

விடை—

இம்மாநிலத்தில் மண்டபம் மற்றும் மேட்டூர் துணை வேலை வாய்ப்பகங்கள் இரண்டைத் தவிர மற்ற வேலை வாய்ப்பகங்கள் வாடகைக் கட்டடங்களிலேயே தற்போது இயங்குகின்றன. வேலைவாய்ப்பகங்கள் தங்கள் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்க வேண்டுமென்ற அடிப்படையிலும் அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டும் முதற்கண் சென்னை நகரிலுள்ள வேலை வாய்ப்பகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் ஏனைய வேலை வாய்ப்பகங்களுக்கு படிப்படியாக விஸ்தரிக்கப்பட வேண்டும்.



136537

1987 நவம்பர் 12]

கடலூரில் தற்போது இயங்கி வரும் வேலை வாய்ப்பகத்தை பிறிதொரு வசதியான கட்டடத்திற்கு மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. தகுந்த கட்டடம் ஒன்று வாடகைக்கு கிடைக்கப் பெறின், அப்படிப்பட்ட வசதியான ஒரு கட்டடத்திற்கு கடலூர் வேலை வாய்ப்பகத்தை மாற்ற உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

நேசமணி மற்றும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்களில் பணி புரியும் தினசரிக் கூலித் தொழிலாளர்கள்.

98—வினா எண் 8850—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களில் (நேசமணி போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்) C.L.R. தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இவர்கள் நியமனத்திற்கு சட்டத்தில் இடம் உண்டா ?

(இ) இவர்களை நிரந்தரம் ஆக்குவது எப்படி ?

விடை—

(அ) எவரும் இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இவ்வினாக்களுக்கு இடம் இல்லை.

குற்றாலம் சிற்றருவிகளில் குளிக்க கட்டணம் வசூலிக்கும் திட்டம்.

99—வினா எண் 8952—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குற்றாலம் சிற்றருவியில் குளிக்க கட்டணம் வசூலிக்கும் திட்டம் கைவிடப்பட்டு விட்டதா ?

விடை—

இல்லை.

[1987 நவம்பர் 12

நெல்லை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்.

100—வினா எண் 8955—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் நகரின் மையப் பகுதியை விட்டு தொலை தூரத்தில் உள்ளதால் அதனை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு மாற்ற அரசு முன்வருமா ?

விடை—

நெல்லை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வரும் கட்டடத்திலிருந்து அதனை மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திற்கு மாற்றுவதற்கான உத்தேசம் தற்போது ஏதுமில்லை.

ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன் பிராவிடண்ட் நிதி வழங்குவதில் தாமதம்.

101—வினா எண் 5703—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் பென்ஷன், பிராவிடண்ட் நிதி போன்றவைகள் மிகவும் தாமதமாக வழங்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மாநில அரசே இந்த அலுவலை மேற்கொள்ளும் திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

(அ) ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி முதலியன வழங்குவதில் பொதுவாகத் தாமதம் ஏற்படுவதில்லை. தாமதத்தைத் தவிர்க்க, குறிப்புரைகள் வெளியிடப்படுகின்றன.

(ஆ) இல்லை.



1987 நவம்பர் 12]

மதுரை வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்தில் உல்லாசப் படகு விடும் திட்டம்.

102—வினா எண் 5708—திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்தில் மதுரை மாநகராட்சியால் வைகை ஆற்றுத்தண்ணீர் நிரப்பப்பட்டு உல்லாசப் படகு விடுகின்ற திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Policy of Declaring tourism as an 'Industry'*

103—Q. No. 5711 : Thiru S. Semmalai : Will the Hon. Minister for Tourism, Prohibition and Electricity be pleased to state;

In pursuance of the Government of India policy of declaring tourism as an Industry the action taken by the Government of Tamil Nadu in this regard ?

விடை —

இப்பொருள் அரசின் விரிவான பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு கொடுத்தக் கடன்.

104—வினா எண். 5738 : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1985 மார்ச் முடிய தமிழ் நாட்டிற்கு மத்திய அரசு கொடுத்த கடன் எவ்வளவு ?

(ஆ) எவ்வளவு திருப்பி செலுத்தப்பட்டது ?

(இ) இன்னும எவ்வளவு செலுத்த வேண்டியுள்ளது ?

[1987 நவம்பர் 12

விடை—

| | | |
|---|---|---|
| (அ) 1984 மார்ச் 31 ஆம் நாள் நிலுவை யாக உள்ளவை. | .. | 1405,49,59,392 |
| 1984–85-ல் பெற்ற கடன்கள் | .. | 257,42,35,055 |
| மொத்தம் | .. | 1662,91,94,447 |
| (ஆ) 1984–85-ல் திருப்பிச் செலுத்தியது | | 89,11,97,397 |
| (இ) 1985 மார்ச் 31-ஆம் நாள் நிலுவை யாக உள்ளவை | .. | 1573,79,97,050 |

கோவை மாநகரத்தில் நவீன இறைச்சிக் கூடம்.

105—வினா எண் 5740—திரு. கு. ரமணி: மாண்புமிகு சுற்றுலா. மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்தில் நவீன இறைச்சிக் கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோவையில் ஒரு நவீன இறைச்சிக் கூடம் அமைப்பது பற்றிய கருத்துரு தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. இது சம்பந்தமாக மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழில் கல்லூரிகளுக்கு நடைபெறும் நுழைவுத் தேர்வு.

106—வினா எண் 5763—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற தொழில் கல்லூரிகளுக்கு நடைபெறும் நுழைவுத் தேர்வினை ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் அதாவது பிளஸ் 2 தேர்வு முடிவு வெளியிடு முன் நடத்தினால் கலைக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் பொழுது எந்தப் பிரச்னைகளும் எழாது என்ற அடிப்படையில் கல்லூரி முதல்வர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

விடை—

இல்லை.



1987 நவம்பர் 12]

அரூர் வட்டம் கல்லாத்துப்பட்டி அணை.

107—வினா எண் 5770—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டம் மஞ்சவாடியைச் சேர்ந்த கல்லாத்துப்பட்டி அணை 1973 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் உடைந்து இதுநாள்வரை கட்டப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நிலக்கரியை சுத்தப்படுத்த நவீன சுத்திகரிப்பு ஆலைகள்.

108—வினா எண் 5790—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனல் மின் நிலையங்களுக்கு கொண்டு வரப்படும் நிலக்கரியை சுத்தப்படுத்தி பயன்படுத்தும் வகையில் நவீன சுத்திகரிப்பாலைகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

Non-Conventional Sources of Energy பற்றி ஆராய தனி பிரிவு.

109—வினா எண் 5798—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Non–Conventional Sources of Energy பற்றி ஆராயவும், ஊக்குவிக்கவும் மின்வாரியத்தில் தனி பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## நெல்லை மாவட்டம் கரையாறு நீர்த்தேக்கத்தில் உள்ள முதலைகள்.

110—வினா எண் 5833—திரு. க. சோலைராசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம் காரையாறு நீர்த்தேக்கத்தில் இருக்கிற முதலைகளை வெளியேற்றி மீன் வளர்க்கின்ற திட்டத்தை ஊக்குவிக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

## கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் பணியாற்றும் ஊழியர்கள்.

111—வினா எண் 5868—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளத்தை மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

## திண்டுக்கல் தொகுதி சிறுமலையில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி.

112—வினா எண் 5939—திரு ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதியில் உள்ள சிறுமலையில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு உத்தரவிட்டுள்ளதா ?

(ஆ) அம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும் ?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## திண்டுக்கல் நகரில் பாலித்தீன் பைகள் மூலம் பால் விநியோகம்

113—வினா எண் 5944—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திண்டுக்கல் நகரில் பாலித்தீன் பைகள் மூலம் பால் விநியோகிக்கப்படுமா ?

விடை—

ஆம்.

## நீலகிரி மாவட்டம் சிரியூரில் உள்ள ஆதிவாசிகளுக்கு குடிநீர்.

114—வினா எண் 5976—திரு. கே. உச்சி : மாண்புமிகு தொழில்மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், ஊட்டி ஒன்றியம், சிரியூர் என்ற இடத்தில் உள்ள ஆதிவாசிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு தொகை எவ்வளவு?

(இ) இப்பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) ஆம்,

(ஆ) இத்திட்ட மதிப்பீடு ரூ. 3.60 இலட்சம்.

(இ) இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் துவங்கப்படும்.

வால்பாறையில் உள்ள குரங்கு அருவியை சுற்றுலா தலமாக்கல்

115—வினா எண் 5983—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள குரங்கு அருவியை சுற்றுலா தலமாக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 4.00 இலட்சம் செலவில் குரங்கு அருவியை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கீழப்பாவூர் நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

116—வினா எண் 6041—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழப்பாவூர் நகருக்கு உலக வங்கி உதவியுடன் குடிநீர் வழங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம் கீழப்பாவூர் பேரூராட்சி குடிநீர்த் துணைத் திட்டத்திற்கு உலக வங்கி கடனுதவி அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. அதனை உள்ளடக்கிய 10 கிராமங்களும், 12 வழியோரக் கிராமங்களும் பயன்பெறும். இத் துணைத் திட்டத்தின் மதிப்பீட்டுத்தொகை ரூ. 87.74 இலட்சங்கள் ஆகும்.



தென்காசி-மதுரை சாலையில் மோட்டல்.

117—வினா எண் 6043—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி-மதுரை சாலையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் மோட்டல் அமைக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தென்காசி-மதுரை சாலையில் மூவரை வென்றான் என்ற இடத்தில் மோட்டல் அமைக்கப்பட்டு 15-9-1985 முதல் இயங்கி வருகிறது. இந்த மோட்டலில் பயணிகள் வசதியாக உணவு அருந்த சிற்றுண்டி விடுதியும், கழிப்பிட வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பரளியாறு புனல் மின் திட்டம்.

118—வினா எண் 6082—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பரளியாறு புனல் மின் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் மத்திய மின் அதிகார மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

[1987 நவம்பர் 12

### மதுக்கரை ஒன்றியத்தில் ஒன்றிய பாதையை நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளும் திட்டம்.

119—வினா எண் 6086—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி மதுக்கரை ஒன்றியத்தில் மதுக்கரை பாலக்காடு பாதை முதல் போத்தனூர் செட்டிபாளையம் வரை உள்ள ஒன்றிய பாதையை நெடுஞ்சாலைத்துறை மேற்கொள்ளும் திட்டம் உள்ளதா?

விடை—

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளும் திட்டம் எதுவுமில்லை.

### மீனவர் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவர்களின் உதவித் தொகையை உயர்த்தும் திட்டம்.

120—வினா எண் 6096—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள மீனவர் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவர்களின் உதவித் தொகையை உயர்த்துவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

ஆம். இம்மாநிலத்தில் உள்ள மீனவர் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களின் உதவித்தொகையை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### கம்பம் பள்ளத்தாக்கில் காற்றாடி மின்விசைத் திட்டம்.

121—வினா எண் 6125—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பம் பள்ளத்தாக்கில் 1 கோடி செலவில் அமைய இருக்கும் காற்றாடி மின்விசைத் திட்டம் (Wind Mill) எப்போது செயல்படத் துவங்கும்?



1987 நவம்பர் 12]

விடை—

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில், தற்போது காற்றாடி மின்விசைத் திட்டம் எதுவும் இல்லை.

### 1984–85 ஆம் ஆண்டில் மிளகு உற்பத்தியின் அளவு.

122—வினா எண் 6145—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85 ஆம் ஆண்டில் மாநிலத்தில் மிளகு உற்பத்தியின் அளவு எவ்வளவு?

(ஆ) மிளகு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

விடை—

(அ) 590 மெட்ரிக் டன் (மதிப்பீடு).

(ஆ) ஆம்.

### அமராவதி ஆற்றில் மைல்ரங்கம் அருகே அணை கட்டும் திட்டம்.

123—வினா எண் 6152—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி ஆற்றில் மைல்ரங்கம் அருகே சுமார் ரூ. 5 கோடி செலவில் அணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

(இ) பணி எப்போது துவங்கப்பெறும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

[1987 நவம்பர் 12

அரசு மருத்துவமனைகளில் இலவச உடல் பரிசோதனை செய்யும் தனிப் பிரிவு.

124—வினா எண் 6167—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் பொது மக்களுக்கு இலவச உடல் பரிசோதனை செய்வதற்கு தனிப்பிரிவு தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) அத்தகைய செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

சென்னை அண்ணா சாலையில் வெலிங்டன் திரையரங்கு அருகே சுரங்கப்பாதை கட்டும் திட்டம்

125—வினா எண் 6172—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணாசாலையில் வெலிங்டன் திரையரங்கு அருகே சுரங்கப்பாதை கட்ட அரசிடம் திட்டமுள்ளதா?

விடை—

இல்லை.

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் குழந்தை வைத்திய நிபுணர்களை நியமித்தல்.

126—வினா எண் 6188—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பச் சுகாதார நிலையங்களில் குழந்தை வைத்திய நிபுணர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 நவம்பர் 12]

பஸ்களில் சில்லரை தட்டுப்பாட்டைப் போக்க கூப்பன்கள் வழங்கும் திட்டம்.

127—வினா எண். 6190—திரு. இரா.தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஸ்களில் சில்லரை தட்டுப்பாட்டை போக்க கூப்பன்கள் வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கூடலூர், கோத்தகிரி வட்டங்களை தொழிலில் பின்தங்கிய வட்டங்களாக அறிவித்தல்.

128—வினா எண். 6217—திரு. கே. உச்சி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கூடலூர், கோத்தகிரி வட்டங்களை தொழிலில் பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

இல்லை.

தலைஞாயிறு-வண்டல்-வேதாரண்யம் சாலையை மேம்படுத்தி தார் சாலையாக மாற்றி பேருந்து விடுதல்.

129—வினா எண். 6302—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு-வண்டல்-வேதாரண்யம் சாலையை மேம்படுத்தி தார்ச்சாலையாக மாற்றி பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

தலைஞாயிறு-கொக்காலடி சாலைகளை தார்ச்சாலையாக்கி பேருந்து விடுதல்.

130—வினா எண். 6307—திரு. மா. மீனாட்சி சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு-கொக்காலடி சாலையை தார்ச்சாலையாக்கி பேருந்து விடும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இதுபற்றி அரசிடம் செயற்குறிப்பேதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

நாகை, தலைஞாயிறு, வேதாரண்யம் புதிய இருப்புப்பாதை போடும் திட்டம்.

131—வினா எண். 6312—திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை காவிரி கரையோரத்தில் நிறைய அளவில் பெட்ரோலியம் கிடைப்பதற்கு வாய்ப்புகளிருப்பதால் நாகை, தலைஞாயிறு, வேதாரண்யம் புதிய இருப்புப்பாதை (இரயில்) போடவேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



கைத்தறி-துணிகளுக்கு ஏற்ற புதிய டிசைன்களை உருவாக்க வெளிநாடுகளிலிருந்து நிபுணர்கள்.

132—வினா எண். 6410—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி துணிகளுக்கு ஏற்ற புதிய டிசைன்களை உருவாக்க வெளி நாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைக்க அரசு கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

துறையூரில் சர்க்கரை ஆலை.

133—வினா எண். 6417—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், துரையூரில் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

உள்ளாட்சி அமைப்புகளில் வருமானத்தைப் பெருக்க விசேஷ நிதிக் கமிஷன் அமைத்தல்.

134—வினா எண். 6423—திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சி அமைப்புகளின் வருமானத்தைப் பெருக்க விசேஷ நிதிக் கமிஷன் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) உள்ளாட்சி அமைப்புக்களின் வருமானத்தைப் பெருக்க விசேஷ நிதிக் கமிஷன் இதுவரை அரசினரால் அமைக்கப்பட வில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சென்னை தீவுத்திடலில் நவீன விளையாட்டு அரங்கம் கட்டுதல்.

135—வினா எண். 6438—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை தீவுத்திடலில் நவீன விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திண்டுக்கல் பால்வழங்கு ஒன்றியத்தை பால் உற்பத்தியாளர் ஒன்றியமாக மாற்றுதல்.

136—வினா எண். 6444—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் உள்ள பால் வழங்கு ஒன்றியத்தை பால் உற்பத்தியாளர் ஒன்றியமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவு நீரை சுத்தம் செய்தல்.

137—வினா எண். 6446—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (மாண்புமிகு பேரவைத் தலைவர்) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரைச் சுற்றி அமைந்துள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்கு அரசு நிதி உதவி வழங்கவேண்டும் என்று அதன் உரிமையாளர்கள் அரசிடம் கோரியுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

தரமணியில் உள்ள தோட்டக்கலைப் பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்துதல்.

138—வினா எண். 6448—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரமணியில் உள்ள தோட்டக் கலைப் பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) மாணவர் சேர்க்கையை நுழைவுத் தேர்வு மூலம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூபாய் 200 தர விவசாயிகள் கோரிக்கை.

139—வினா எண். 6483—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூபாய் 200 வேண்டும் என்று சங்கங்கள் மூலமாக கோரிக்கை மனு தந்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

பனியன் தொழிலாளர் பணிக்காலத்தில் மரணம் அடைந்தால் ரூ. 10,000 வழங்கும் திட்டம்.

140—வினா எண். 6554—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பனியன் தொழிலாளர் பணிக்காலத்தில் மரணம் அடைந்தால் ரூ. 10,000 வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

கொடைரோட்டில் தங்கும் விடுதியும் உணவு விடுதியும் அமைத்தல்.

141—வினா எண் 6627—திரு. அ. பாலுசாமி: சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் மாண்புமிகு கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, கொடைரோட்டில் சுற்றுலாத் துறை மூலம் தங்கும் விடுதியும், உணவு விடுதியும் அமைக்கும் செயற்குறிப்பு உண்டா?

விடை—

தற்சமயம் இல்லை.



சென்னை மாநகர தாலுக்காக்களைப் பிரித்தமைத்தல்.

142—வினா எண். 6632—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகர தாலுகாக்களை பிரிக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை — ஆம்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்தல்.

143—வினா எண். 6659—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய சாலைகள் பல Rural Roads திட்டத்தின் கீழ் தார்ச்சாலையாக மாற்றப்பட்டு அவைகள் இதுவரை நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பின் கீழ் ஒப்படைக்கப்படவில்லை என்பது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அவைகள் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருவில்லிப்புத்தூர் தொகுதி தலைமலார் என்னுமிடத்தில் அணை கட்டும் திட்டம்.

144 – வினா எண். 6667—திரு. இரா. தாமரைக்கனி: : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயப்பு ஒன்றியம், இலந்தக்குளம் அருகில் தலைமலார் என்னுமிடத்தில் அணைக்கட்டு கட்டும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை –

(அ) ஆம்.

(ஆ) திட்டம் முதன்மை ஆய்வில் உள்ளது.

[1987 நவம்பர் 12

## பழனி வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

145—வினா எண். 6691—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம், பழனி வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## குடிசைகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்தை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்தல்.

146—வினா எண். 6723: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசைகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்தை இணைப்பு (அடாப்டர்) வைத்து டி. வி., ரேடியோ, விசிறி போன்றவைகளுக்காக துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

விடை—

குடிசைகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்தை தவறாகப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதியதாக குடிசைகளை போடுவதைத் தடுத்தல்

147—வினா எண். 6738—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதியதாக குடிசைகளைப் போடுவதைத் தடுக்க அரசு ஆவனச் செய்யுமா?

விடை—ஆம்.



1987 நவம்பர் 12]

## சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பால்வள ஆய்வு.

148—வினா எண். 6760: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பால்வள ஆய்வு நிலையம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு செலவில் அது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## அரசு வேலைகளில் ஊனமுற்றோருக்கு இட ஒதுக்கீடு.

149—வினா எண். 6774—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு வேலையில் ஊனமுற்றோருக்கு 3 சதவீத இடம் ஒதுக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

விடை—

ஊனமுற்றோருக்கு 3 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து, 14—8—1981 நாளிட்ட சமூகநல அரசு நிலை எண். 602-இல் ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ளது.

## மணலியில் அரசு மருத்துவமனை அமைத்தல்.

150—வினா எண் 6784: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மணலியில் அரசு பொது மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில்* உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிக்கைகள் குறித்து

(திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம், திரு. கு. ரமணி,
திரு. பொ. உத்திராபதி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடத்திலே என்ன பேசப் போகிறீர்கள் என்று கூறி முன் அனுமதி வாங்கவில்லை. ஆகவே அனுமதிக்க முடியாது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: அனுமதி வாங்கிவிட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி வாங்கவில்லை. கேட்டீர்கள், ஆனால் அவை தேவையில்லை என்று சொன்னதாகத் துணைத் தலைவர் சொன்னார். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்): பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே அறையிலே கேட்டபோது, அலுவல் ஆய்வுக் குழு கூடுகிறது. அங்கேதான் பேச வேண்டும் என்று சொல்லியாகி விட்டது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்பு தீர்மானங்களைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) இவ்வளவு பேர்கள் எழுந்து நிற்கலாமா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்). ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும் என்று கணக்கு இல்லை. கட்சித் தலைவர்களுக்கே வேண்டாம் என்று சொன்னேன். ஏதாவது அவையில் எழுப்ப வேண்டுமென்றால் மாண்புமிகு அவைமுன்னவர் அவர்களிடத்திலே பேசி விட்டு வந்து என்னிடம் சொல்லுங்கள். அடுத்து அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு ..........(குறுக்கீடுகள்).

(முற்பகல் 11-30)

திரு. எஸ். சிவராமன்: கேளுங்கள் என்று சொன்னவுடன் உட்கார்ந்துவிட்டோம். இப்போது அனுமதிக்க மறுக்கிறீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்டதற்கு உங்களிடத்தில் சொன்னேன்; அவை முன்னவரிடத்தில் பேசிவிட்டுப் பேசுங்கள் என்றேன். இங்கே அவையிலே வந்து பேசாதீர்கள்.





(குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள் அறைக்குச் செல்லும் போது அங்கே போய்ப் பார்த்து பேசிவிட்டு வாருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம் தயவுசெய்து அமருங்கள். முதலில் சொன்னீர்கள் கேட்டேன் என்று; துணைத் தலைவர் சொல்கிறார் இல்லையென்று. உட்காருங்கள். திருவாளர்கள் மணிமாறன், உத்திராபதி ஆகியோரில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வி. தங்கவேலு: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு நான் என்ன சொல்வது என்று தெரியவில்லை. திரு. தங்கவேலு, உட்காருங்கள். இது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: எங்களுக்குப் பாதுகாப்பு தேவை..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறைக்கு வாருங்கள். பாதுகாப்பு தருகிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: அவை முன்னவர் இருக்கிறார். எங்களுடைய உரிமை பாதுகாக்கப்படவில்லை............. (குறுக்கீடுகள்).

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உத்திராபதி உட்காருங்கள். அறைக்கு வந்து சொல்லுங்கள். முக்கியமானதாக இருந்தால் எந்த வழியிலாவது அனுமதிக்கிறேன். போதுமா? இதற்கு மேல் நான் என்ன செய்வது? (குறுக்கீடு) அறைக்கு வாருங்கள் சொல்கிறேன். உட்காருங்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: இங்கே வந்து சொல்லியாகி விட்டது. 2 நிமிடம் அனுமதியுங்கள்..........

மாண்புமிகு பேரவைத் தலைவலர்: ஆறுமுகம் உட்காருங்கள். இந்த அவையில் எழுப்பப்பட வேண்டிய விஷயம் என்றால் 2 நிமிடம் என்ன, 5 நிமிடம் அனுமதிக்கிறேன்.

திரு. கே. சுப்பராயன்: டெபுடி ஸ்பீக்கர் அனுமதிக்கிறேன் என்று சொன்ன பிறகு முடியாது என்று எப்படி சொல்கிறீர்கள் ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசிவிட்டு அதற்கு தீர்வைச் சொல்கிறேன், உட்காருங்கள்.

திரு. கே. சுப்பராயன் : டெபுடி ஸ்பீக்கர் அனுமதிக்கிறேன் என்று சொல்லிவிட்டு இப்போது எப்படி அதை மீறலாம் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் அனுமதியுங்கள். சொன்னார்களா, சொல்லவில்லையா என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. திரு. சுப்பராயன் அவர்கள் பேசுவது மட்டுமே நியாயம் என்று சொல்ல முடியாது. அலுவல் ஆய்வுக் குழு நாளைக்கு கூடுகிறது, அப்போது பேசுங்கள், அவை முன்னவரிடம் கலந்து பேச வேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர; அனுமதிக்கிறோம் என்று சொல்லவே இல்லை. ஆக உறுப்பினர்கள் சொல்வதுதான் உண்மை, பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் சொல்வது ** என்று வார்த்தையை உபயோகப்படுத்துவதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் கள் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். மாண்புமிகு திரு சுப்பராயன் சொன்னால் உண்மை, மற்றவர்கள் சொன்னால் ** என்றால் என்ன செய்வது? உண்மைக்கு மொத்த குத்த கையையே அவர்கள் எடுத்திருக்கிறார்களா என்னவோ தெரிய வில்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆறுமுகம் அவர்கள் உட்கார வேண்டும். இதற்கு மேலும் கேட்பது, நிற்பது சரியல்ல.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : அவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். முதலில் அலுவல் ஆய்வுக் குழு கூடுகிறது என்று சொன்னார்கள். பின்னால் ஒப்புக் கொண்டார்கள். இப்போது அனுமதிக்கவில்லை என்றால், அது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆறுமுகம், தயவு செய்து உட்காருங்கள். உங்களை விட வேகமாகப் பேசக் கூடியவர்கள்தான் நாங்கள். நாங்களே அமைதியாக இருக்கிறோம். வேகமாகப் பேசாதீர்கள், உட்காருங்கள். அறைக்கு வாருங்கள் பேசிக் கொள்ளலாம். ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந் தால், தேவைப்படுமானால் அனுமதிக்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காரச் சொன்னால் உட்கார மாட்டீர்கள். அவ்வளவு தானே?

நீங்கள் உட்காருங்கள், நான் கேட்கிறேன் என்று சொல்கிறேன் (குறுக்கீடு). என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசிக் கொள்ளலாம் என்று சொல்கிறேன், இதற்கு மேல் என்ன?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





## 3. கவன ஈர்ப்பு.

**(அ) தஞ்சை மாவட்ட விவசாயிகள் நேரடி விதைப்பிற்குக் கூட்டுறவுச் சங்கக் கடன்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள், மா. மணிமாறன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' தஞ்சை மாவட்டத்தில் நேரடி விதைப்பிற்கு இதுவரை கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்காமை குறித்த '' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

தென்மேற்குப் பருவ மழை பொய்த்துவிட்டதால் மாநிலத்தில் ஏற்பட்ட கடும் வறட்சி நிலையால், வேளாண்மைத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டதை எதிர்கொள்ள, வேளாண்மைத் துறையால் மாவட்ட ஈறாக, நிலவி வரும் சூழ்நிலையில் எத்தகைய மாற்றுப் பயிர் சாகுபடி செய்யப்படலாம் என்று தற்செயல் நிகழ்வு செயல்திட்டங்கள் (Contingency plans) தீட்டப் பட்டன. நெல், சிறுதானியங்கள், பருப்பு வகைப் பயிர்கள், பருத்தி ஆகிய பயிர்களில் குறுகிய மற்றும் மத்திய கால இடைவெளியில், பெரும் பகுதி நிலப்பரப்பை சாகுபடிக்கு மண் வளத்திற்கு இணங்க கொண்டுவர இத்திட்டங்கள் தீட்டப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் சாகுபடி செய்யப்பட உள்ள பயிர்களுக் கான பயிர் செலவு தேவைகளை குறைவின்றி முழுமையாக கூட்டுறவுகள் நிறைவு செய்ய வேண்டும் எனவும், வறட்சி நிலையை எதிர்கொள்ள என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என்பவை குறித்தும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் வேளாண்மைத் துறை இயக்குநர் ஆகிய இருவரும் இணைந்து இணை சுற்றறிக்கை மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும், அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் போன்ற இடுபொருட்களை விநியோகிக்க

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 12

வெளியிட்ட ஆணைகளை பயன்படுத்தி அவ்வகை விவசாயி
களுக்கு மானிய விலையில் உரம் விநியோகிக்க,
வழங்கப்பட்டுள்ளன. பயிர் கடனில் ரொக்கப் பகுதி மத்தியக்
கூட்டுறவு வங்கியில் பெறுவதற்கு பிரேரணைக் குறிப்பு அனுப்பு
வதற்கு முன்பே, தகுதியான விவசாய உறுப்பினர்கட்கு உரம்
வழங்கவும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், போதிய
பாசன நீர் வசதிகள் இல்லாத நிலையில், வேளாண்மைத்
துறை மாற்று விவசாய முறைகளில் ஒன்றாக நெல் நேரடி
விதைப்பு ( Direct sowing ) மூலம் சாகுபடி செய்ய
ஆலோசனைகள் தெரிவித்தது. இதற்கான ஏக்கர் ஒன்றுக்கான
பயிர் கடனளவுகளை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது :—

| | | | |
|---|---|---|---|
| ரொக்கம் .. | .. | .. | ரூ. 400 |
| உரம் .. | .. | .. | 370 |
| பூச்சி மருந்து | .. | .. | 130 |
| மொத்தம் | | .. | 900 |

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தஞ்சாவூர் மற்றும் கும்ப
கோணம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அம்மாவட்டத்தில்
உள்ள விவசாய உறுப்பினர்களின் பயிர்க் கடன் தேவைகளை
515 கிராமச் சங்கங்கள் மூலம் நிறைவு செய்து வருகின்றன.
1—4—1987 முதல் 31—10—1987 வரையுள்ள காலத்தில்,
அவ்வங்கிகள் வழங்கியுள்ள பயிர்க் கடன் (நெல் நேரடி விதைப்பு
தவிர) விவரங்கள் வருமாறு :—

| பயிரின் பெயர். | வழங்கப்பட்ட கடன் தொகை. | | |
|---|---|---|---|
| | தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கி. | கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. நெல் .. .. | 66.05 | 132.78 | 198.83 |
| 2. மானாவாரி கடலை | 10.33 | 0.21 | 10.54 |
| 3. வாழை .. .. | 1.73 | 19.44 | 21.17 |
| 4. கரும்பு .. .. | 0.90 | 223.61 | 224.51 |
| 5. பருத்தி .. .. | .. | 13.12 | 13.12 |
| 6. காய்கறிகள் .. .. | .. | 0.28 | 0.28 |
| 7. இதர பயிர்கள் .. | .. | 0.16 | 0.16 |
| மொத்தம் .. | 79.01 | 389.60 | 468.61 |



1987 நவம்பர் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேளாண்மைத் துறை அறிவித்தபடி நெல் நேரடி விதைப்புக்
காக மட்டும் ( Direct Sowing ) தஞ்சை மற்றும் கும்ப
கோணம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் முன்னர் குறிப்பிட்ட
தொகை தவிர, கீழ்க்கண்ட அளவிற்கு விவசாய உறுப்பினர்
களுக்கு (நெல் நேரடி விதைப்பு) கடன்களை வழங்கியுள்ளன—

| வரிசை எண்ணும் மத்திய கூட்டுறவு வங்கியின் பெயரும். | நேரடி விதைப்புக்காக வழங்கப் பட்ட பயிர்க் கடன். | | |
|---|---|---|---|
| | ரொக்கம். | இடு பொருட்கள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. தஞ்சாவூர் .. | 217.94 | 7.43 | 225.37 |
| 2. கும்பகோணம் | 179.73 | 46.47 | 226 20 |
| மொத்தம் .. | 397.67 | 53.90 | 451 57 |

| வரிசை எண்ணும், மத்தியக் கூட்டுறவு வங்கியின் பெயரும். | பயனடைந்தோர் எண்ணிக்கை. | சாகுபடி செய்யப் பட்ட நிலப்பரப்பு. |
|---|---|---|
| (1) | (5) | (6) |
| | | (ஏக்கரில்.) |
| 1. தஞ்சாவூர் .. | 18,107 | 52,000 |
| 2. கும்பகோணம் | 14,972 | 49,155 |
| மொத்தம் .. | 33,079 | 1,01,155 |

நேரடி விதைப்புக்காக அனுமதிக்கப்பட்ட பொருட்பகுதியில்
உறுப்பினர்கள் இன்னமும் உரத்தை பெற்றுக் கொள்ள வேண்டி
யுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 1

கடந்த ஆண்டு இதே காலத்தில் (அதாவது 1–4–1986 முதல்
31–10–1986 வரை) தஞ்சாவூர் மாவட்டத்தில் வழங்கியுள்ள
பயிர்க் கடன்கள் மற்றும் நடப்பு ஆண்டு அதே காலத்திற்கு
வழங்கியுள்ள பயிர்க் கடன்கள் விவரம் வருமாறு:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1–4–1986 முதல் 31–10–1986 வரை வழங்கப் பட்ட பயிர்க் கடன்கள். | 709.08 |
| 1–4–1987 முதல் 31–10–1987 வரை வழங்கப் பட்ட பயிர்க் கடன்கள். | 920.18 (468.61 + 451.57) |

கடந்த ஆண்டை விட நடப்பு ஆண்டின் சம காலத்தில் 2
கோடி ரூபாய்க்கு மேல் பயிர்க் கடன்கள் அதிகமாக வழங்கப்
பட்டுள்ளன. நெல் சாகுபடிக்கு (நேரடி விதைப்பு) மட்டும்
4.52 கோடி ரூபாய் அளவிற்கு 33,079 விவசாய உறுப்பினர்
களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலே குறிப்பிட்டனவற்றிலிருந்து, தஞ்சாவூர் மாவட்டத்தில்
உள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களான
விவசாய பெருங்குடி மக்களுக்கு, பாசன வசதி உள்ள காலத்தில்
சாகுபடி செய்யத் தரப்பட்ட கடன்களை விட, அதிகமாகவே
பாசன வசதியற்ற காலத்தில் (நேரடி விதைப்புக்காக) கடன்கள்
வழங்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகும்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த விவர அறிக்கையில் கூட்டுறவுப் பதிவாளர்
களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப்
பட்டு இருக்கிறது. அரசாங்கத்திலே போர்க்கால நடவடிக்கை
யாக வறட்சியைப் போக்குவதற்கு நேரடி விதை விதைக்க
வேண்டும் என்று அரசு அறிவுரை வழங்கியிருக்கிறது. நேரடி
விதை விதைக்க வேண்டும் என்று சொன்னால், நிலத்தை உழுது,
பண்படுத்திய பின்னாலே தான் விதைக்க முடியும். எனவே
விதைத்ததற்குப் பின்னாலே உரம் வழங்கப்படும் என்று சொல்
கிறார்களே தவிர, கடனை முன்னாலே வழங்கவில்லை. கடன்
வழங்காத காரணத்தால், அரசாங்கம் நேரடி விதை விதைப்
பைக் கொள்கையாகக் கொண்டிருக்கிற காரணத்தால், உழு
வதற்கு நிலத்தைப் பண்படுத்துவதற்கு பணம் இல்லாத காரணத்
தால், அரசாங்கத்தின கொள்கை விவசாயிகளுடைய வாழ்க்
கையைப் பாதிக்கின்ற அளவிற்கு இருக்கின்றது. எனவே அரசாங்
கத்திலே இதை அறிவிப்பாக அறிவித்து இருக்கிறார்களே தவிர
இன்றைக்கு அது செயலாக்கத்தில் இல்லை.



1987 நவம்பர் 12] [திரு. மா. மணிமாறன்]

இன்னொன்று கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கடன்களும்
மானியங்களும் வழங்கப்பட அறிவுரை வழங்கப்பட்டு இருப்ப
தாகச் சொல்லப்பட்டு இருக்கிறதே தவிர, இன்றைக்கு வரை
யிலும் சிறு விவசாயிகளுக்கு, மிகச் சிறு விவசாயிகளுக்கு மானி
யங்கள் வழங்கப்படவில்லை. எனவே அறிவித்த கொள்கைக்கு
முரண்பாடாக இது இருப்பதைப் பார்த்து, மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு, கூட்டுறவுச் சங்கங்கள்
கடன்களை வழங்குவதற்கும், ஏற்பாடு செய்ய வேண்டும். நேரடி
விதை விதைப்பு என்று சொல்லும்போது, முன்கூட்டியே கடன்
கொடுத்து இருந்தால்தானே விவசாயிகள் உழுது இருக்க
முடியும். எனவே நிலத்தை உழாத காரணத்தால், நேரடி
விதை விதைப்பைக் கொள்ள முடியாத விவசாயிகள் பல பேர்கள்
இன்று சிக்கலிலே இருக்கிறார்கள். எனவே இனிமேலாவது
அரசாங்கம் ஒரு திட்டத்தைச் செயலாக்குவதற்கு முன்னாலே
ஆழ்ந்து பரிசீலித்து முறையாக அதை செயலாக்குவதற்கு உத்தர
விடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே இந்த விவர அறிக்கையில்
நிலைமை தெளிவாக விளக்கப்பட்டு இருக்கிறது. புள்ளி விவரங்
களும் தெளிவாகக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே
சென்ற ஆண்டில் கொடுக்கப்பட்ட 1–4–1986 முதல் 31–10–1986
வரை தஞ்சை மாவட்டத்தில் வழங்கியுள்ள பயிர்க் கடன்கள்
மற்றும் நடப்பு ஆண்டின் அதே காலத்திற்கு வழங்கியவைகள்
2 கோடிக்கு மேலே தான் தரப்பட்டு இருக்கிறதே தவிர குறை
வாகக் கூட தரப்படவில்லை. சென்ற ஆண்டு தரப்பட்டது
7 கோடியே 9 இலட்சம் ரூபாய் என்றால் இந்த ஆண்டு 9
கோடியே 20 இலட்சம் ரூபாய் கடன் தரப்பட்டு இருக்கிறது.
கடந்த ஆண்டை விட நடப்பு ஆண்டில் சம காலத்தில் 2 கோடி
ரூபாய்க்கு மேலேதான் பயிர்க் கடன்கள் அதிகமாக வழங்கப்
பட்டு உள்ளன. நெல் சாகுபடிக்கு நேரடி விதை விதைப்பிற்கு
மட்டும் 4 கோடியே 52 இலட்சம் ரூபாய் அளவிற்கு 33,079
விவசாய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது என்றுதான்
எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. வழங்கப்படவில்லை
என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார்கள். இந்தக்
குறிப்பிலே வழங்கப்பட்டு இருக்கிறது என்று தெளிவாக எடுத்துச்
சொல்லப்பட்டு இருக்கிறது.

ஆகவே சென்ற ஆண்டோடு கணக்கு போடுகிற போது
இந்த ஆண்டு வறட்சி நிலைமை இருந்தாலும் கூட கூடுதலாகத்
தான் தரப்பட்டு இருக்கிறது. ஆகவே இருக்கின்ற சூழ்
நிலைமையைப் பொறுத்தும் சட்ட விதிகளை ஒட்டியும் கூட்டுறவு
வங்கிகளினுடைய தன்மையை அனுசரித்தும் இந்தக் கடன்கள்
ஒழுங்காகத்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. எங்காவது விடுபட்டு
இருப்பதைப் பற்றிக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது
பற்றி கவனிப்பதற்கான ஆலோசனையை அறிவுரையை
வழங்கலாம்.

[1987 நவம்பர் 12

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவை தலைவர்
அவர்களே இந்த ஆண்டு இயற்கை பொய்த்ததினால் நமக்கு
மேட்டூர் தண்ணீர் கிடைக்காத நேரத்தில் அரசு தஞ்சை
மாவட்ட விவசாயிகளுக்கு நேரடி விதை விதைப்பு மூலமாக
விதை விதைக்க வேண்டும் என்று சொல்லிய வேண்டுகோளுக்
கிணங்க தஞ்சை மாவட்ட விவசாயிகளும் வேறு வழியில்லாமல்
இன்றைக்கு நேரடியாக நெல்லை விதைத்திருக்கிறார்கள்.
ஆகவே நேரடியாக விதைக்கப்பட்ட நெல் முளைத்து வந்த
தற்குப் பிறகு இன்றைக்கு 4 மடங்கு களை எடுக்க வேண்டிய
அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு ஏர் உழுது
நடுவதை விட நேரடி விதைப்பு மூலமாக விவசாயிகளுக்கு
இன்றைக்கு அதிகமாக செலவுகள் ஆகின்றன. ஆகவே களை
எடுத்ததற்குப் பிறகும் உரம் போட வேண்டிய நிலைமை உள்ளது.
நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம்
அதிகாரிகள் அவ்வப்போது இப்படி அரசாங்கத்தினுடைய
கவனத்தை நாங்கள் ஈர்க்கிற போது எல்லாம் மத்திய கூட்டுறவு
வங்கி அதிகாரிகள் புள்ளி விவரத்தோடு கொடுத்து விடுகிறார்
கள்.

நான் கூட 15 தினங்களுக்கு முன்னால் தஞ்சை மத்திய
கூட்டுறவு வங்கிக்குப் போனபோது அறிந்தது, கோட்டூரில்
உள்ள அந்த விக்கிரவாண்டி சொசைட்டிக்கு 143 பேர்களுக்கு
டிரையல் போட்டு அனுப்பி 20 நாட்கள் வரைக்கும் கொடுக்காமல்
வைத்து விட்டார்கள் என்பதுதான். இப்படி இந்த டிரையல்
முடிந்ததற்குப் பிறகும் கூட கொடுப்பதில் பல நாட்கள் கால
தாமதம் ஏற்படுவதால் களை எடுப்பதிலே நஷ்டம் ஏற்பட்டிருக்
கிறது. இப்படி பல்வேறு நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டு இருக்
கிறார்கள். இப்போது தண்ணீர் திறந்து விடப்பட்டு ஆகிவிட்டது.
நாற்று விட்டவர்கள் எல்லாம் இப்போது பறித்துவிட வேண்டிய
ஒரு தீவிரமான விவசாயத்தை எதிர் நோக்கக் கூடிய இந்த
நேரத்தில் இந்தக் கூட்டுறவுக் கடனை ரொம்ப கால தாமத
மாகத்தான் இன்றைக்கு நடைமுறையில் கொடுத்துக் கொண்
டிருக்கிறார்கள். நான் வருகிற வரையிலும் நேரிலேயே பல
சொசைட்டிகளுக்குச் சென்று பார்த்தேன். இப்போது சர்க்கார்
சொன்னபடி வட்டியையும் முதலையும் கட்டினால் சலுகை என்று
அறிவித்தவுடன் இந்த உரக் கூப்பனுக்கு வாங்கிய உரத்தைக் கூட
குறைந்த விலைக்கு விற்று விட்டு அந்தக் கடனை எல்லாம் விவ
சாயிகள் கட்டிவிட்டு இன்றைக்கு விவசாயிகள் நெருக்கடியான
நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே நான் அமைச்சர் அவர்
களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் அப்படி கடனைக் கட்ட
முடியாமல் கொஞ்சம் 10 சதவீதம் அல்லது 5 சதவீதம் கட்ட
முடியாமல் பாக்கி வைத்திருந்தாலும் அல்லது கட்டின விவ
சாயியாக இருந்தாலும் வெகு விரைவில் இன்னும் ஒரு வார
காலத்திற்குள் விவசாயிகள் அனைவருக்கும் அரசு சலுகை அளிப்ப
தோடு இந்தக் கூட்டுறவுக் கடனை வழங்கி விவசாயத்தைப்
பாதுகாப்பதற்கு தடங்கலை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள்
துரிதமாக நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்பு
கிறேன்.



1987 நவம்பர் 12]

(முற்பகல் 11-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே தகுதிபடைத்த விவசாயிகள்
அத்தனை பேர்களுக்கும் விதிமுறைகளின்படி வழங்க வேண்டிய
கடன்கள் வழங்கப்படுவதற்கு அறிவுரைகள் அளிக்கப்பட்டு இருக்
கின்றன. அந்த வகையில்தான் கடன் வழங்கப்பட்டு இருக்கின்
றன என்று கணக்கு சொல்லப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் இதிலே காலத் தாழ்வு
ஏற்பட்டு விவசாயிகளுக்கு கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றன
என்று சொன்னால் அது தனியாக கவனிக்கப்பட்டு காலத்தாழ்வு
ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்படும். அவர்கள் விவசாயம்
செய்வதிலேயே காலத் தாழ்வோடு செய்ய வேண்டிய ஒரு
நெருக்கடி ஏற்பட்டு இருப்பதன் காரணமாக இதிலே காலத்
தாழ்வு காட்டக்கூடாது என்ற வகையில் என்ன நடவடிக்கை
எடுக்க வேண்டுமோ அதை எடுப்பதற்கு அரசு முனைப்போடு
பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் தகுதிபடைத்தவர்களுக்குத்தான் தர இயலுமே
தவிர திருப்பிச் செலுத்தாதவர்களுக்கு எல்லாம் விதியை மீறி
தருவது என்பது பொருத்தமாக இருக்காது. ஆனால் தகுதி
படைத்தவர்கள் அத்தனை பேருக்கும் விதிமுறைப்படி கடன்
அளிக்க இந்த வங்கிகள் எல்லாம் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன.
அதுவும் இப்படிப்பட்ட நேரத்தில் கட்டாயம் நமக்குப் பயிர்
நடைபெற வேண்டும், சாகுபடி நடைபெற வேண்டும். இந்த
ஆண்டு எப்படியேனும் உணவு நமக்கு கிடைக்க வேண்டும் என்ற
ஆர்வத்தில்தான் வேளாண்மைத் துறையின் சார்பாகவும்,
கூட்டுறவுத் துறையின் சார்பாகவும் பல்வேறு முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்
கூறுவதுபோல் காலத் தாழ்வு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்
கான அறிவுரைகள் முறைப்படி வழங்கப்படும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

திரு. பொ. உத்திராபதி : பாயின்ட் ஆப் ஆர்டர் சா .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயின்ட் ஆப்
ஆர்டர் வராது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே ** என்ற வார்த்தையை அவைக்குறிப்பி
லிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற வார்த்தையை
அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

(ஆ) கிராமங்களிலுள்ள தெரு விளக்குகள் பராமரிப்பு : [1987 நவம்பர் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் மாண்பு
மிகு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், செ. செம்மலை
சி. பழனிமுத்து மற்றும் ஈ.வே.கி.ச. இளங்கோவன் ஆகியோர்
ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ள
னர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :
(பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே "கிராமங்களில் உள்ள தெரு விளக்கு
களுக்கு ஆண்டுக்கொருமுறை தான் பல்புகள் மாற்ற வேண்டும்
என்னும் நடைமுறையால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள
இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த
நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

ஊராட்சிகள் பேரூராட்சிகள் பகுதிகளில் உள்ள தெரு விளக்கு
களைப் பராமரிக்கும் பொறுப்பினை தமிழ்நாடு மின் வாரியத்
திடமிருந்து மாற்றி அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளிடம்
1—7—1986 முதல் ஒப்படைக்க ஆணைகள் இடப்பட்டன. உள்
ளாட்சி அமைப்புகள் தெரு விளக்குகளை நன்முறையில் பரா
மரித்து வர வேண்டியதன் அவசியத்தினைக் கருதி சில அறி
வுரைகளை அரசு வழங்கியுள்ளது. அவ்வறிவுரைகளில் ஒன்றுதான்
மின்பாகங்களை எவ்வப்போது மாற்றப்பட வேண்டும் என்பது
குறித்ததாகும். பொறுப்பற்ற முறையில் தெரு விளக்கின் பாகங்
களை அடிக்கடி மாற்றுவதால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்
பிற்கு ஏற்படும் பண விரயத்தினை தவிர்ப்பதற்காகவும், ஒரு
குறிப்பிட்ட வரையறையினுக்குட்பட்டு அனைத்து உள்ளாட்சி
அமைப்புகளும் தெருவிளக்குகளின் பராமரிப்பினைத் தொடர்ந்து
செயல்படுத்த வேண்டும் என்பதற்காகவும் இக்குறிப்பிட்ட அறி
வுரை வழங்கப்பட்டது. வல்லுநர்களின் கருத்துப்படி சீரான
மின் ஓட்டத்தின் சூழல் விளக்குகள் இடங்கள் அமைவுகள்
(Chokes) ஒரு வருட காலம் வரை உழைக்கும் எனக் கருதப்
படுகிறது. மேலும் இக்கால வரம்பினை சந்தர்ப்பம் சூழ்
நிலை கருதி கடைப்பிடித்து வர வேண்டும் என அறிவுரைகள்
வழங்கப்பட்டுள்ளன.



1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :
(பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே இந்த பல்புகளை அடிக்கடி மாற்றுவதால்தான்
இந்த ஆணையே போடப்பட்டது, அடிக்கடி பியூஸ் போகிறது
என்பதால் இதற்கு காரணமே பராமரிப்பு மின் துறையிடமும்,
நிர்வகிக்கின்ற அந்தப் பணச் செலவுகளை ஏற்றுக்கொள்ளுவது
உள்ளாட்சித் துறையிடமும் இருக்கிறது. அதேபோன்ற நிலை
குடிநீர் பம்புகளை பராமரிக்கும் போது இருந்தது. மாவட்ட
ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் என்று இல்லாமல் ஊராட்சி
ஒன்றிய அலுவலகங்களில் இந்த கை பம்புக்கு என்றே தனியாக
ஒன்றியமே அலுவலர்களை நியமித்துக் கொண்டது. அதேபோல்
இந்த பல்புகளை மாற்றுவது அவைகளைப் பழுது பார்ப்பதற்கு
ஒன்றிய அளவிலே மின் துறை ஊழியர்களை உள்ளாட்சி நிறு
வனங்கள் நியமிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்பு
கிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நீண்ட காலமாக மின்சாரத் துறை
யிடத்தில் இந்தப் பராமரிப்பு இருந்து வந்தது. அதிலே பெரிய
சங்கடங்கள் இருக்கின்றன. அலுவலர்கள் அடிக்கடி வருவது
இல்லை அதனால் போதிய அளவில் விளக்குகளைப் பராமரிக்க
முடியவில்லை என்ற அந்தக் கருத்துக்களை எல்லாம் வைத்த
நேரத்தில் கவனமாகப் பரிசீலித்து அதை ஊராட்சி ஒன்றியங்
கள் அல்லது பேரூராட்சிகள் இடத்தில் ஒப்படைக்கலாம் என்று
முடிவு செய்யப்பட்டது. அப்படி ஒப்படைக்கலாம் என்று முடிவு
செய்யப்பட்ட பிறகு இப்போது நடைமுறையில் இந்தச் சிக்கல்
கள் எழுந்து இருக்கின்றன. ஆகவே இதற்குப் பரிகாரம்
காணுகின்ற வகையில், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள்
தங்களுடைய பொறுப்பிலேயே மின்சாரத்துறை அலுவலர்களை
நியமித்துக் கொள்வது என்றால் இப்போதே சம்பளம் கொடுப்
பதற்குப் பணம் இல்லை என்று சம்பளம் கொடுக்காமல் பல
நகராட்சிகளில், பேரூராட்சிகளில் குறைபட்டுக்கொண்டிருக்கிறார்
கள். ஆகவே இந்தச் சூழ்நிலையில் புதிய அலுவலர்களை நிய
மிப்பது சாத்தியமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

எப்படியும் இந்தக் குறைபாடுகள் இல்லாத வகையில் ஆண்
டிற்கு ஒரு முறை அந்த டியூப்கள், விளக்குகள் மாற்றப்பட
வேண்டுமென்று திட்டவட்டமாக ஒரு அறிவுரை வழங்கியிருப்பதை
வைத்துக்கொண்டு, ஆங்காங்கே அதிகாரிகள் அப்படி
அறிவுரை எங்களுக்கு வந்திருக்கிறது, ஆகவே மாற்ற மாட்
டோம் என்று சொல்வதற்கு இடமில்லாமல் நிலைமைக்கேற்ப
நடவடிக்கை எடுக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்
கிறது. ஆகவே இந்தக் குறைபாடுகளை நீக்குகின்ற வகையிலே
ஆங்காங்கே இருக்கின்ற அந்த ஊராட்சிமன்றத் தலைவர்கள்,
பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அல்லது நிர்வாக அதிகாரிகள்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 12

மாவட்ட ஆட்சி தலைவர்களோடு தொடர்பு கொண்டு,
தேவைக்கேற்ப மாற்றங்களைச் செய்துகொள்ளலாம். அந்த
விளக்குகள் உண்மையிலேயே எரியவில்லையென்றால், உண்மையி
லேயே எரியாமல் அவை கெட்டுப் போய் விட்டன என்றால்,
நடவடிக்கைகளை எடுத்து, உடனடியாக அவற்றை மாற்றுவதற்கு
அரசு நடவடிக்கை எடுக்கும்.

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தன்
னுடைய அறிக்கையிலே உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும்
பண விரயத்தைத் தவிர்ப்பதற்காக இந்த உத்தரவு போடப்
பட்டுள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். இப்படி பல்புகள்
அல்லது உதிரி பாகங்கள் அடிக்கடி கெட்டுப்போவதன் காரண
மாக, அது மக்களுடைய நன்மைக்காக மாற்றப்படுவதன் காரண
மாக பண விரயத்தைக்கூட நாம் கருத்தில் கொள்ள வேண்டிய
அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

அத்தோடு இன்னொரு கருத்தைக்கூட சொல்லியிருக்கிறார்
கள். வல்லுநர்கள கருத்துப்படி ஒரு ஆண்டு காலத்திற்கு இந்த
உதிரி பாகங்கள் உழைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்
படி ஏற்றுக்கொண்டால்கூட, இந்த உதிரி பாகங்களை சப்ளை
செய்கின்ற அந்தக் கம்பெனிகள் ஒரு வருட காலம் அதற்கு
"கேரண்டி" கொடுப்பார்களா? இடையில் உதிரி பாகங்கள்
அல்லது பல்புகள் கெட்டுப்போனால், இலவசமாக உள்ளாட்சி
மன்றங்களுக்குச் செலவு ஏற்படாமல் அவற்றை மாற்றுவதற்கு
அவர்கள் தயாராக இருப்பார்களா? அதையும் இந்தத் துறை
கவனிக்க வேண்டும்.

இறுதியாக அவர்கள் சொல்லியிருப்பது இக்கால வரம்பினை
சந்தர்ப்பம், சூழ்நிலை கருதி கடைப்பிடித்து வரவேண்டுமென்ற
அறிவுரை வழங்கப்பட்டிருப்பதாக அறிக்கையிலே சொல்லியிருக்
கிறார்கள். இப்போது அமைச்சரவர்கள் விளக்கமாகவும் சொன்
னார்கள். நான் அவரிடம் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்
லாம், ஒரு அரசு ஆணையை நடைமுறைப்படுத்துவதிலே ஏதா
வது மாற்றங்கள் ஏற்படவேண்டுமென்றால், வேறு ஒரு ஆணை
யின் மூலம்தான் செய்யமுடியும். அறிவுரைகளை வழங்கினால்,
கூட பெரும்பாலும் அதிகாரிகள் இந்த ஆணையைக் காட்டி
அறிவுரைகளை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. எனவே,
இப்படிச் சிக்கலாக இருக்கின்ற ஊரக வளர்ச்சித் துறையின்
இந்த அரசாணை எண். 554-ஐ ரத்து செய்வது, அமைச்சரவர்கள்
சொன்ன நிபந்தனைக்கு உட்பட்டு, மாற்றம் செய்வதற்கு மறு
ஆணையை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா அல்லது வெளி
யிடுவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.
[illegible]



1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்கள்,
பேரூராட்சி மன்றங்கள் இவைகளிலே நடந்துகொண்டிருக்கின்ற
நடைமுறைகள், அன்றாட வாழ்க்கையை ஒட்டிய செயல்
களாகும். ஆகவே அரசினிடத்திலே சில நேரங்களில் சில புகார்
கள் வருகின்றன. இந்த ஆணை ஏன் பிறப்பிக்கப்பட்டிருக்
கிறது என்பதற்கு ஒரு வரலாறு இருக்கிறது. இது இந்தச்
சட்டமன்றத்திலே, சென்ற ஆண்டு நவம்பர் திங்கள் என்று கருது
கிறேன், ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானமாக வந்து, ஒரு குறிப்
பிட்ட ஊராட்சி ஒன்றியத்தில் ஒரே நேரத்தில் ரூ. 2½
இலட்சத்திற்கு அந்த பல்புகள் வாங்கப்பட்டிருக்கின்றன. அப்
படிப்பட்ட முறைகேடுகள் நடைபெற்று இருக்கின்றன, அதனால்
ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து என்று ஒரு கவன ஈர்ப்புத்
தீர்மானமாக இங்கே கொண்டுவரப்பட்டு, அரசின் சார்பில் பதில்
அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அதை ஆராய்ந்து
இப்படிப்பட்ட தவறுகள் அல்லது தவறுகளாக மற்றவர்கள்
கருதுகின்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு என்ன வழி
என்று ஆராய்ந்துதான் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்
கிறது. அப்போது அன்றைக்குப் பொறுப்பிலே இருந்த
அமைச்சரவர்கள் இந்த மின்சார உதிரி பாகங்களை வாங்கு
கின்ற பொறுப்பை, அதிகாரத்தை அந்த மன்றங்களின் தலைவர்
களுக்கு அல்லது அதிகாரிகளுக்கு வழங்கிவிடலாம் என்று
சொன்னதன்பேரில், இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த
ஆணை பிறப்பிக்கப்படும் போது அதிகாரத்தை அவர்களிடத்
திலே கொடுக்கின்ற நேரத்தில், ஏற்கனவே சட்டமன்றத்தில்
விவாதித்திருக்கிற ஒரு கருத்தையொட்டி, தவறான முறையில்
செலவுகள் ஆகிவிடக் கூடாது என்கின்ற உணர்வோடு இந்தக்
கருத்து வழங்கப்பட்டிருக்கிறது. நிபுணர்கள் தந்திருக்கின்ற
அந்தக் கருத்துப்படி, ஒரு குழல் விளக்கு, டியூப் லைட் என்றால்,
20 வாட், 40 வாட் என்றால் ஒரு வருடத்திற்கு வரும் என்று,
சொல்கிறார்கள். அதையொட்டி தரப்பட்டிருக்கிறதே தவிர
அது சில நேரத்தில் அந்த மின்சாரத்தினுடைய சக்திகளை
ஒட்டியும், அது வந்துசேர்கின்ற சூழ்நிலையை ஒட்டியும் கெட்டுப்
போவதற்கு வாய்ப்பிருக்கிறது.

(முற்பகல் 11-50)

ஆகவே, நடைமுறைக்கேற்ப அந்த அதிகாரிகளும், பொறுப்
பிலே இருக்கின்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்களும்
அதற்கு முடிவுகள் எடுக்கலாம் என்பதற்காகத்தான் இக்கால
வரம்பினை சந்தர்ப்பம், சூழ்நிலை கருதி கடைப்பிடித்து வர
வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

ஆகவே, பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்றவர்களாக இருக்
கின்றவர்கள், அரசாங்கத்தின் மீது பழியைப் போட வேண்டும்
என்று இருக்கின்ற அரசியல்வாதிகள் அல்லது அரசாங்கத்திற்குக்
கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணுகின்ற

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 12

அதிகாரிகள் இவர்கள் வேண்டுமானால் இப்படி ஒரு சூழ்நிலை
யைப் பயன்படுத்தி, விளக்குகள் எரியவில்லையே என்று
மக்கள் கேட்கின்றபோது நாங்கள் என்ன செய்வது, அரசிட
மிருந்து ஒரு ஆணை வந்திருக்கிறது என்று அவர்கள் தங்களுடைய
பொறுப்பிலிருந்து தட்டிக் கழித்து அரசாங்கத்திற்குக் கெட்ட
பெயர் ஏற்படுத்த வேண்டும் என்று செயல்பட்டு இருக்கலாம்.
அது தானே தவிர ஒரு அரசு ஆணைக்கு மாற்றாக இன்னொரு
ஆணை என்றால் தினசரி ஆணைகள் பிறப்பித்துக்கொண்டே
இருக்க வேண்டும். அது நடக்காத காரியம். ஆகவே, மாண்புமிகு
சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளிலே,
அந்தத் தொகுதிகளுக்கு உட்பட்ட ஊராட்சி, பேரூராட்சி
மன்றங்களில் இந்த ஆணையினுடைய மிகத் தெளிவான
விளக்கத்தைச் சொல்லி மக்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களைப்
போக்குவதற்கு அவர்களும் ஒத்துழைக்க வேண்டும். இந்த
ஆணையிலே அவர்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடவடிக்கை
எடுக்கலாம் என்று இருக்கிறது. வேறு மாற்று ஆணை தேவை
யில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகக்
கூறினார்கள். இருப்பினும் இந்தத் தெரு விளக்குகளில்
போடப்பட்டுள்ள குழல் விளக்குகளுக்கு சோக்குகள் போடு
கின்றபோது, அந்த சோக்குகள் சரியான முறை
யிலே மின்சார அலுவலர்களால் பொருத்தப்படாமல்
இருந்தால்கூட அவை எரியாமல் போய்விடுகின்றன. இந்தக்
காலகட்டத்தில் இடி மின்னல் வந்தால் லைட்டுகள் உடனடியாகப்
பழுது அடைந்து டியூப்லைட்டுகள் எரியாமல் போய்விடுகின்றன.
ஆர்டினரி பல்புகளும் அதேபோல் ஆகிவிடுகின்றன. ஆகவே,
அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் நான் பார்த்தவரையிலும்
என்னுடைய தொகுதியில் 20 கிராமங்களிலே இதுபோன்ற
சூழ்நிலையில் விளக்குகள் எரியவில்லை என்றால், இதுபோல
அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது, அந்த ஆணை இருக்கின்ற
காரணத்தினால் நாங்கள் விளக்குகள் வாங்கிப் போடுவதற்கு
இயலாது என்று அங்குள்ள அதிகாரிகள் அத்தனை பேருமே
கூறுகிறார்கள். அந்த ஆணையையும் காண்பிக்கிறார்கள்.
100, 50 லைட்டுகள் என்றால் அவர்கள் சந்தர்ப்பம், சூழ்நிலை
என்று கருதக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு ஊராட்சி ஒன்றி
யத்தில் $2\frac{1}{4}$ லட்ச ரூபாய்க்கு வாங்க வேண்டும். அது எவ்வாறு
வாங்க வேண்டுமென்றால் சூப்பர் மார்க்கெட்டிற்குப் போய்
வாங்க வேண்டும். அதற்குப் பல கொட்டேஷன்கள் வாங்க
வேண்டும். ஆகவே அப்போது லைட்டுகள் ஒரே சமயத்தில்
நமக்குக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே உடனடியாக
இந்த ஆணையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

காரணம் அவர்கள் இந்த ஆணையைக் காட்டிக்கொண்டு
எங்களால் செய்ய இயலாது என்ற காரணத்தைக் கூறுகிறார்கள்.
விளக்குகள் உறுதியாக ஓராண்டு தெருவிலே எரியாது என்பது



1987 நவம்பர் 12] [திரு. சி. பழனிமுத்து]

எல்லோருக்கும் தெரியும். ஆகவே, இந்த ஆணையை தயவு
கூர்ந்து மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு, எல்லோருக்கும், விளக்குகள் பழுது அடைந்துவிட்டால்
மீண்டும் விளக்குகள் புதியதாக போடலாம் என்ற உத்திரவைப்
பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
இதைத்தான் நான் முன்னாலேயே தெரிவித்தேன். இந்த ஆணை
யைத் திரும்பப் பெறுவதிலே ஒரு சிக்கலும் இல்லை. இந்த
ஆணை போடப்பட்டுள்ள முக்கிய காரணமே ஒரு வருடத்திற்கு
ஒரு முறை வாங்க வேண்டும் என்பதல்ல. இந்த ஆணை,
அவர்கள்—ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தவர்கள் அவர்களா
கவே வாங்கிக்கொள்ளலாம் என்ற அனுமதி அளிப்பதற்காக
வழங்கப்படுகின்ற ஒரு உரிமை. அந்த உரிமையிலே எப்படி
யெல்லாம் வாங்க வேண்டும் என்று சில துணை முறைகள் அதிலே
தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு எப்படிப் பொருள் கொள்
கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. நாம்
இன்றைக்கு இதைப் பின் வாங்கிக்கொள்கிறோம் அல்லது திரும்ப
பெற்றுக்கொள்கிறோம் என்று வைத்துக் கொண்டால், மீண்டும்
வேறு ஒரு இடத்திலிருந்து இப்படியெல்லாம் மோசடி நடக்கிறது,
இப்படியெல்லாம் செய்கிறார்கள், இப்படியெல்லாம் தவறாக
நடத்துகிறார்கள் என்று அதிகாரிகள் மீதும் அல்லது பொறுப்
பிலே இருக்கின்றவர்கள் மீதும் குற்றங்கள் சுமத்தப்படக்கூடும்.
ஆகவேதான் அரசின் தரப்பிலே தெளிவாகச் சொல்லிவிட்டோம்.
இந்த, ஓராண்டிற்கு ஒருமுறைதான் என்பது கட்டாயப்படுத்துப்
ஆணை அல்ல. அந்தச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையிலே
ஒரு ஆண்டுவரை அது பயன்படுத்தக் கூடியது என்று சொல்
கிறோம். நம்முடைய வீடுகளிலே போடுகின்றபோது கூட
சில நேரங்களில் தவறுதல் நிகழ்ந்தால், இடையிலே பியூஸ் போய்
விடுகிறது கெட்டுப்போய் விடுகிறது. ஆகவே எப்படி நம்மு
டைய குடும்பங்களிலே, நம்முடைய வாழ்க்கையிலே நாம் நடை
முறையை அனுஷ்டிக்கின்றோமோ அதைத்தான் பொது வாழ்க்
கையிலேயும் அனுஷ்டிக்க வேண்டும். பொது வாழ்க்கைக்கு
வேறு நடைமுறை, நம்முடைய வாழ்க்கைக்கு வேறு நடைமுறை
என்பது அல்ல. ஆகவே அந்த உணர்வோடு நடந்துகொள்ள
வேண்டும். இந்த ஆணையை நாம் திரும்பப் பெற்றுக்கொள்வ
தனாலேயே மாத்திரம் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. அங்கே
பணியாற்றுகின்ற, பொறுப்பிலே இருக்கின்ற மனிதர்களை
வைத்துத்தான் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

ஏனென்றால், மின்சாரத் துறையிலேயிருந்து நம்முடைய
ஊராட்சி மன்றங்களுக்கு மாற்றுகிறபோது, இது விரிவாக விவா
திக்கப்பட்டிருக்கிறது. எப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்
றும் அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாதத்திற்கு
இரண்டு முறை மின்சாரத்துறையினுடைய அலுவலர்கள் வந்
பார்த்து, அவர்கள் வருகிற நேரத்திலேயே ஊராட்சி

ஒன்றியத்தினுடைய அதிகாரிகள், எந்தெந்த விளக்குகள் எரிகின்
றன, எந்தெந்த விளக்குகள் எரியவில்லை, என்ன தவறுகள் என்று
பட்டியல் தரவேண்டும். அதை மாவட்ட ஆட்சித் தலைவருக்
குச் சொல்ல வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் உடனே
அதை நிவர்த்திக்க வேண்டும் என்றெல்லாம் ஆணைகள் பிறப்பிக்க
பட்டிருக்கின்றன.

ஆகவே, இன்றைக்கு வந்திருக்கின்ற கடைசி ஆணையிலே
தான் இது இருக்கிறதே தவிர, அந்த நிர்வாகத்தை மாற்றுகிற
போது விளக்கமாக ஆணைகள் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே,
அரசாங்கம் இதிலே ஒன்றும் கடுமையாக இல்லை. யாரையும்
நம்பாமலும் இல்லை. தவறுகள் நிகழக்கூடாது என்பதற்
காகவும், சட்டமன்றத்திலேயே இந்தப் பிரச்சினை எழுப்பப்
பட்டது என்பதனாலேயும் இந்த விளக்கம் தரப்பட்டிருக்
கிறதே தவிர, நான் சட்டமன்றத்திலே சொல்கிறேன், சட்ட
மன்றத்திலே சொன்னால் அது சட்டத்திற்குச் சமம்தான்; வாக்
குறுதி தான். ஆகவே, ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற தலைவர்
கள் அல்லது அந்த அதிகாரிகள் இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம்
நேர்கிறபோது, கஷ்டங்கள் ஏற்படுகிற நேரத்தில், அவசர நேரத்
தில், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயிருந்து
அதிகாரத்தைப் பெற்று அல்லது ஆணையைப் பெற்று விளக்கு
களை மாற்றலாம், இதிலே அரசாங்கம் தலையிடாது. அப்படி
ஒருவேளை தேவையானால், அப்படியும் நடைபெறவில்லை என்று
நீங்கள் கருதினால், இந்த ஆணையிலே திருத்தம் கொடுப்பதற்கும்
அரசு தயாராக இருக்கிறது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் தந்துள்ள
அறிக்கையிலே, வல்லுநர்களின் கருத்துப்படி, ஒரு வருடத்
திற்கு இந்த விளக்குகளும், சோக்குகளும் உழைக்கும் என்று கூறு
கிறார்கள். ஆகவே, ஒரு வருட காலம் அந்தக் குறிப்பிட்ட
விளக்குகளும், சோக்குகளும் உழைப்பதற்கு அவை நல்ல பொருள்
தானா என்பதை நாம் பார்க்க வேண்டும். குறிப்பாக, இத்
தகைய குழல் விளக்குகளையும்; சோக்குகளையும், வாங்குகிற
போது, 'வெல் ரெப்யூட்டட் ப்ராடக்ஸ்' என்று சொல்கிறார்
களே, ஐ.எஸ்.ஐ. யினால் அங்கீகரிக்கப்பட்ட, குறிப்பாக,
பிலிப்ஸ், பஜாஜ் போன்ற கம்பெனிகளுடைய விளக்குகளையும்,
சோக்குகளையும்தான் வாங்க வேண்டும் என்ற ஒரு நிலையை நாம்
உருவாக்கவேண்டும். அதோடு, விளக்குகளை சப்ளை செய்கின்ற
வர்கள், விளக்குகளைக் கொடுப்பவர்கள், அந்த விளக்குகள் ஒரு
வருடம் எரிவதற்குண்டான காரண்டி தரவேண்டும். அப்படி
ஒரு வருட காலத்திற்குள் அந்த விளக்குகளும், சோக்குகளும்
செயலிழந்து போகுமேயானால், எந்த வியாபாரி அதை சப்ளை
செய்தாரோ அதே வியாபாரி, அதை மீண்டும் புதிதாகத் தர
வேண்டும் என்ற நிலையையும் உருவாக்கவேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன். அதோடு சில ஊராட்சி மன்றங்களில்,
சில போலி வியாபாரிகள் செயலிழந்து போன டியூபுகளையும்,



சோக்குகளையும் மீண்டும் போலித்தனமாகப் புதுப்பித்து. அதை
அங்கே சப்ளை செய்து கொண்டிருக்கிறார்கள், அதையும் கண்
காணிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக்
கொண்டு கடைசியாக, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, ஒட்டு
மொத்தமாக ஒவ்வொரு ஊராட்சிக்கும், 100 குழல் விளக்குகளும்,
சோக்குகளும் தேவை என்று இருக்குமேயானால், குறைந்த பட்சம்
10 சதவிகிதம் அதாவது நூற்றுக்கு 110 ஆகத் தருவதற்கு அரசு
ஆவன செய்ய வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் முன்
வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, வாங்கப்படுகிற விளக்குகள் சரியாக அங்கீகரிக்கப்பட்ட
நிறுவனங்களிடத்திலேயிருந்துதான் வாங்கப்படுகின்றன; வாங்கப்
படவேண்டும் என்பதுதான் ஆணை. அதைபோல, அவர்கள்
தரக்கட்டுப்பாடு-அந்த அங்கீகாரம் பெற்ற முறையிலேதான்,
அவர்களிடத்திலேயிருந்துதான் வாங்கப்படுகிறது, வாங்கியாக
வேண்டும். ஆனால் தரக் கட்டுப்பாடு அங்கீகரித்த அந்த நிறு
வனத்திலிடத்திலேயிருந்து வாங்குவதும், அது பிலிப்ஸ் ஆக இருந்
தாலும், வேறு எந்தக் கம்பெனியாக இருந்தாலும், ஒரு ஷார்ட்
சர்க்யூட் அல்லது மின்னல் அல்லது வேறு காரணங்களாலே
பழுதாகி விட்டால், பல்புகள் ஓராண்டுதான் இருக்கும் என்ற
உத்தரவாதத்திற்கு அவர்கள் பொறுப்பாளியாக மாட்டார்கள்.
ஆகவே உத்தரவாதம் தருவது என்பது; வேறு சில பொருள்
களுக்குப் பொருந்தும், இதிலே இயற்கையாக ஓராண்டு இருக்கும்
என்று அவர்கள் தருகிறார்கள். ஆனால், அது பயன்படுத்துகிற
முறை, பயன்படுத்துகிற இடத்தைப் பொறுத்து இருக்கிறது.
அதைத்தான் முன்னாலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். மின்னல் வருகிறது, மழை
வருகிறது, அதனாலே எல்லாம் கெட்டுப் போய்விடுகிறது என்று,
அப்படிக் கெட்டுப் போவதற்கு அந்த நிறுவனத்துக்காரர்கள்
பொறுப்பேற்கமாட்டார்கள். ஆகவே, இது நடைமுறை சாத்
தியமான ஒன்று அல்ல. இதை எப்படியோ நடைபெறாமல்
தடுக்க வேண்டும். ஆனால், வாங்குகிறபோது இவைகள் எல்லாம்
சரியாக இருக்கின்றனவா என்பதைப் பரிசோதனை செய்வதற்கு
கருவிகள் இருக்கின்றன. அதையும் மின்சாரத் துறையினுடைய
அலுவலர்களுடைய உதவியோடு, அந்த நிர்வாகிகள் வாங்குவார்
களேயானால் அவை சரியாக இருக்கின்றனவா என்பதை, டெஸ்ட்
என்று சொல்கிறார்களே, அந்த சோதனையைச் செய்து பார்த்து
விட்டு வாங்கலாம். அந்த முறையை நம்முடைய அதிகாரிகளும்,
பொறுப்பிலே இருக்கிறவர்களும் பின்பற்ற வேண்டும் என்று நான்
தெரிவித்துக் கொள்கிறேன். 100 விளக்குகள் தேவையான
இடத்தில் 110 என்று நாம் ஒன்றிற்காக ஒரு அனுமதியை
வழங்கினால், அதை எத்தனை இடத்திலே வாங்குவார்கள்? அந்த
100-இலே எந்த 10 கெட்டுப் போய், எந்த 10 ரீப்ளேஸ் செய்யப்
படும் என்று பிறகு அதுவே பிரச்சினையாக மாறிவிடும்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 12

(நண்பகல் 12-00)

ஆகவேதான் சட்டத்தை வைத்துக்கொண்டு,
வைத்துக் கொண்டு இது நடத்த முடியாத நடைமுறை அளவுகோலை
நாம் உணர வேண்டும். எனவே, ஒவ்வொருவரும் என்பதை
சொந்த நிகழ்ச்சியாகக் கருதி நடைமுறைப் நம்முடைய
அதற்கு எல்லோரும் உறுதுணையாக இருக்க படுத்தவேண்டும்
இப்போது, இந்த ஆணையினாலே ஒரு வேண்டும். ஆகவே,
மாற்றுவோம் என்று எந்த அதிகாரியாவது ஆண்டிற்கு ஒரு முறைதான்
அதிகாரியை விஷயம் தெரியாதவர் சொன்னால், அந்த
கொள்ள மாட்டோம், விஷமத்தனம் என்று நாங்கள் எடுத்துக்
நாங்கள் கொள்வோம். எந்த தலைவராவது செய்கிறார் என்றுதான்
ஒருவேளை இந்த ஆணையினுடைய—அந்த சொன்னால், அவர்
இண்டர்பிரிடேஷனை கருத்தில் வைத்துக் அதிகாரி சொல்கிற
கூடும் அல்லது தெரிந்தே கூட சொல்லக்கூடும். கொண்டு சொல்லக்
தரப்பிலேயிருந்து இந்தச் சட்டமன்றத்திலே ஆகவே, அரசின்
களை அளித்ததற்குப் பிறகும், இதை ஒரு இவ்வளவு விளக்கங்
தான் மாற்றுவோம் என்று சொன்னால், ஆண்டிற்கு ஒருமுறை
என்றால் யானைக்கு யர்ரம்'' என்றுதானே "குதிரைக்கு குர்ரம்
சொல்கிற அந்தப் பட்டியலுக்குள்ளேதான் பொருள் என்று
படுவார்கள். அவர்கள் சேர்க்கப்

ஆகவே, அருள்கூர்ந்து நம்முடைய உறுப்பினர்களுக்குத் தெரி
வித்துக் கொள்வேன், ஆணையை நாங்கள் திரும்பப் பெற்றுக்
கொள்வதில் சங்கடமில்லை. ஆனால் திரும்பப் பெற்றுக் கொள்
வதற்கு அவசியம் இல்லாமல், தேவையான மாற்றங்களை,
தேவையான நேரத்திலே அவர்கள் செய்து கொள்ளலாம் என்று
இருக்கிற சூழ்நிலையில் இதை நிறைவேற்றுவதற்கு எல்லோரும்
முயற்சி எடுக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டத்தி
லேயே இது தீர்த்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று, அர
சாங்கத்திற்கு வரவேண்டிய ஒன்றே அல்ல என்பதையும் தெரி
வித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) சட்டமுன்
வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி
கிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனிவகை
முறைகள்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய
அனுமதி அளிக்க வேண்டும்.''



1987 நவம்பர் 12]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Your objection has been
recorded Bill conside ation -க்கு வரும்போது விரிவாகப் பேசலாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை
முறைகள்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய
அனுமதி அளிக்க வேண்டும் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இச்சட்ட முன்வடிவை
பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறி
முகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு
1987.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன்.

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய
(திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய
அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இச்சட்ட முன்
வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு
அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) மூன்றாம் திருத்தச்
சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைபபடங்கள் (முறைப்படுத்
துதல்) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன்
அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. அரசினர் தீர்மானம்,

விதி 33-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற் றப்பெற்றது.

6. 1987–88 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1987–88 ஆம் ஆண்டிற்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூ. 252.42 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இப்போது வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடு வருவாய்க் கணக்கின்கீழ் ரூ. 225.03 கோடி நிதி ஒதுக்கத்திற்கும், மூலதன, கடன் கணக்குகளின்கீழ் ரூ. 27.39 கோடி நிதி ஒதுக்கத்திற்கும் வகை செய்கிறது.

2. 1987–88 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை முடிவு செய்கையில், எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்துக்கும் போதிய நிதி ஒதுக்கம் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தப் பட்டது. எனினும், மிக வேகமாக மாறி வருகின்ற ஒரு நிலைமை யில், அதாவது புதிய வளர்ச்சித் திட்டங்கள் காரணமாக வரவு செலவுத் திட்டத்திற்குப் பிந்திய அனுமதிகள் சில அவசியமா கின்றன. மேலும், மாநிலத்தில் நிலவுகின்ற கடுமையான வறட்சி யின் காரணமாகப் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணி களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தவிரவும்





அரசு சில புதிய நல்வாழ்வுத் திட்டங்களையும் அறிவித்துள்ளது. அத்தகைய திட்டங்களுக்குரிய அனுமதிகள் அனைத்தும் இத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியமான செலவினங் களை நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

3. இத் துணை மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கின்கீழ் ரூ. 225.03 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் வழங்கப்பட்டுள்ள உதவித் தொகை ரூ. 150.00 கோடியும் அடங்கும். தமிழ்நாடு மின்சார வாரியம், சிறிய, சொற்ப நிலம் வைத்துள்ள உழவர்களுக்கு இலவசமாகவும், மற்றைய விவசாயிகளுக்கு சலுகை வீதத்திலும் மின்சாரம் வழங்கி வருகிறது. மேலும் தமிழ்நாடு மின்சார வாரியம், 'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின்கீழ் கிராமப் பகுதிகளி லுள்ள குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கி வருகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு வணிக நிறுவனம் என்ற முறை யில், 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளுக்கு முன்னர் அதன் சராசரி மூலதனத்தில் 9.5 சதவீத ஆதாயமும் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளுக்குப் பிறகு திருத்தி அமைக்கப்பட்ட 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத் தின்படி, நிகர ஆண்டு நிலை இருப்பில் 3 சதவீத ஆதாயமும் காட்ட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அரசின் கொள்கை முடிவுகள் காரணமாகத் தமிழ்நாடு மின்சார வாரி யத்திற்கு ஏற்படுகின்ற இழப்புகளை ஈடு செய்ய அந்நிறுவனத் திற்கு உதவித் தொகை வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. எனவே இத்துணை மதிப்பீட்டில் அந்நிறுவனத்திற்கு உதவித் தொகையாக ரூ. 100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு மின்சார வாரியத்திலிருந்து அரசுக்கு வர வேண்டிய வழி வகை முன்பணப் பாக்கியிலிருந்து இத்தொகை சரிக்கட்டப் படும். இதனால் அரசு இந்நிறுவனத்திற்கு ரொக்கமாக எதுவும் கொடுக்க வேண்டியது இல்லை.

4. இதுபோலவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையில், அரிசியின் கொள் முதல் விலைக்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழும் முதலமைச் சரின் சத்துணவுத்திட்டத்துக்கும் வழங்கப்படுகின்ற அரிசியின் விலைக்கும் உள்ள வேறுபாடு காரணமாக அந்நிறுவனத்திற்கு ஏற்படுகின்ற இழப்புகளை ஈடு செய்ய அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது. எனவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு உதவித்தொகையாக ரூ. 50 கோடி வழங்கப்பட் டுள்ளது. இத்தொகை அந்நிறுவனத்திடமிருந்து அரசுக்கு வரவேண்டிய வழிவகை முன்பணங்களில் சரிக்கட்டசபடும். இந்த வகையிலும் அரசுக்கு ரொக்கச் செலவு எதுவும் இல்லை.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 12

5. எஞ்சிய செலவில் பெரும்பகுதி, வறட்சி நிவாரணப் பணி
களுக்கான செலவாகும். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக
நடப்பு நிதியாண்டில், அரசு ரூ. 51.66 கோடிவரையில் செல
விட்டுள்ளது. இதில் பெரும் பகுதி அதாவது ரூ. 29.94 கோடி
குடிநீர் வழங்கும் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.
இதில், சென்னை மாநகருக்கு மட்டும் குடிநீர் வழங்குவதற்காக
அனுமதிக்கப்பட்டுள்ள ரூ. 7.58 கோடி அடங்கும். வேலைவாய்ப்
பினை ஏற்படுத்துவதற்காக ரூ. 14.05 கோடி அளவில் வேலை
வாய்ப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6. இனி, வருவாய்க் கணக்கின்கீழ் வரும் பிற முக்கியமான
செலவினங்கள் குறித்து சுருக்கமாகத் தொட்டுக் காட்ட விரும்பு
கிறேன். அரசு சென்னை, அண்ணாமலை, மதுரை காமராஜர்,
அண்ணா பல்கலைக் கழகங்களுக்கான ஒரு மொத்த மானியத்
தொகையினை உயர்த்தியுள்ளது. இதற்காக, துணை மதிப்
பீட்டில் ரூ. 7.69 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், காத்
திருப்போர் பட்டியலில் உள்ள 23,000 முதியோருக்கு ஓய்வூதியம்
வழங்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. மதுவிலக்கு அமுல்
படுத்து அமைப்பை வலுப்படுத்துவதற்காக கூடுதல் பணியாளர்
கள் நியமிப்பதற்கும், சாதனங்கள் வாங்குவதற்கும் அரசு
அனுமதி அளித்துள்ளது. இதற்காக, எதிர்பாராச் செலவு நிதி
யிலிருந்து ரூ. 3.75 கோடி முன்பணம் வழங்கப்பட்டுள்ளது.

7, அடுத்து, மூலதனம்-கடன் கணக்கின்கீழ் ரூ. 27.39 கோடி
சேர்க்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீட்டில் மூலதனம்-கடன
கணக்கின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியமான செலவினங்
களைப் பற்றி இங்கே நான் சுருக்கமாகக் குறிப்பிட விரும்பு
கிறேன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம நடத்து வந்த
நியாயவிலைக் கடைகளை கூட்டுறவு அமைப்புகளுக்கு மாற்றி
அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்காக கூட்டுறவுச் சங்கங்
களுக்கு ரூ. 1.97 கோடி அனுமதிக்கப்பட்டு, இத் துணை மதிப்
பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனையில் அவசர
சிகிச்சைப் பிரிவு அமைந்துள்ள பகுதிக்கு மேலே, இதய சிகிச்சைப்
பிரிவு, விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு முதலியவற்றிற்காக
கூடுதலாக 7 மாடிகளைக் கட்டுவதற்காக ரூ. 1.26 கோடி அனு
மதிக்கப்பட்டுள்ளது. இதற்காக, எதிர்பாராச் செலவு நிதியி
லிருந்து ரூ. 10.00 இலட்சம் முன்பணம் வழங்கப்பட்டுள்ளது.
கேரள மாநிலம், வைக்கத்தில் தந்தை பெரியாருக்கு சிலை ஒன்
றையும், நினைவுச் சின்னம் ஒன்றையும் அமைப்பதற்கு அரசு
ரூ. 15.00 இலட்சம் அனுமதித்துள்ளது. நிலம் கையகப்படுத்து
வதற்கும் மற்றும் ஏனைய வளர்ச்சித் திட்டங்களுக்காகவும்,
கடன் தலைப்பின்கீழ், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு அரசு
ரூ. 4.00 கோடி வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர்
வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் தூத்துக்குடியில் 384
குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ. 1 கோடி கடன் வழங்கப்பட்
டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மேம்பாடு நல்வாழ்
விற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக்
கழகத்திற்கு அரசு ரூ. 50 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது.



1987 நவம்பர் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

8. இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள செல
வினங்கள் எதிர்பாராத இனங்கள் ஆகும். 1987—88 ஆம்
ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள
வளர்ச்சிப் பணிகளுடன் இவற்றுக்கும் அனுமதி வழங்க வேண்டி
யிருந்தது. இத்திட்டங்களை அரசு சரியான முறையில் செயல்
படுத்திட இயலும் வகையில், இந்தத் துணை மதிப்பீடுகளுக்கும்
தேவையான நிதி ஒதுக்கீட்டிற்கும் ஒப்புதல் அளிக்குமாறு இப்
பேரவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12—10.)

7. அறிவிப்பு.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு
ஓர் அறிவிப்பு, 1987—88 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த
முதல் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்
கைகள் மீது வெட்டுத் தீர்மானம் கொடுக்க விரும்பும் உறுப்பினர்
கள் பேரவையின் 190—வது விதிக்கிணங்க 13—11—1987 வெள்ளிக்
கிழமை மாலை 3—00 மணிக்குள் பேரவைச் செயலகத்திலே
கொடுக்க வேண்டும்.

8. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதி
நிலை அறிக்கை மற்றும் 1986-87 ஆம் ஆண்டிற்கான துணை நிதி
நிலை அறிக்கை மீதான விவாதம்— தொடர்ச்சி

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்
களால் கொண்டுவரப்பட்டுள்ள மின்சார வாரியத்தின் நிதிநிலை
அறிக்கையின்மீது நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரஸ்
கட்சியின் சார்பில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.
சென்ற ஆண்டு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது
பேசும்போது நான் சொல்லியிருந்த பல விஷயங்களுக்கெல்லாம்
மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மரியாதைக்குரிய அதிகாரி
களும் ஒவ்வொன்றுக்கும் பதில் அளித்திருக்கிறார்கள். அந்த
பதில் கொடுத்தது சிறப்பான முறையில் நடைபெற வேண்டும்
என்று அவர்களை அன்போடு நான் முதலில் வேண்டிக்கொள்கி
றேன்.

நம்முடைய மாநிலம் மின் உற்பத்தியில் மூன்றாவது இடத்
திலே இருக்கிறது என்பதும், மின் விநியோகத்தில் முதல் இடத்
திலே இருக்கிறது என்பதும் உண்மையிலேயே பாராட்டக்கூடிய
ஒன்றுதான். இங்கே பேசிய பல உறுப்பினர்கள், நாம் பல
திட்டங்களைப் போடுகிறோம், அந்த திட்டங்களை மத்திய அரசு
கிடப்பிலே போடுகிறது, அந்தத் திட்டங்களை அலட்சியம் செய்கி
றார்கள், அதற்காகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்

[திருமதி பொன்னம்மாள்] [1987 நவம்பர் 12

டும். அவர்கள் அந்த திட்டங்களையெல்லாம் முடிப்பதேயில்லை
என்கிறதெல்லாம் பேசினார்கள். ஒரு திட்டத்தைப் போடுவது
என்றால் ஏதோ மின்சார அடுப்பைப் பற்ற வைத்து தண்ணீர்
காய்ச்சுவது போலவும், அரிசியைப் போட்டு வேக வைப்பது
போலவும் அல்ல. ஒரு திட்டத்தைப் போடவேண்டுமென்றால்
முதலில் அந்த திட்டத்திற்கு இடம் வேண்டும். இடம் பார்க்க
வேண்டும் என்பது மட்டுமல்லாமல், அதற்குரிய கருவிகள் வேண்
டும். கருவிகள் வேண்டும் என்பது மட்டுமல்லாமல் அதற்கு
வேண்டிய நிலக்கரியைக் கொண்டு வர வேண்டும். அந்த நிலக்
கரியை எவ்வளவு தூரத்திலிருந்து கொண்டுவர வேண்டும்,
அந்த நிலக்கரி தரமாக இருக்கிறதா என்பதையெல்லாம் ஆராய்ச்சி
செய்ய வேண்டும். அது மட்டுமல்லாமல் அந்தத் திட்டத்திற்கு
மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து சில நிபுணர்களை
நியமித்து, அந்தத் திட்டத்தை ஆரம்பித்தால்—அனல், அணு, புனல்
மின்சாரத் திட்டத்தை ஆரம்பித்தால்—எவ்வளவு மின் உற்பத்தி
யாகும், அதற்கு என்ன செலவாகும் என்பதையெல்லாம் பார்க்க
வேண்டும்.

நான் ஒன்றை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 1980
ஆம் ஆண்டு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஆரம்பிக்க வேண்டு
மென்று, இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் ஆரம்பிக்க வேண்டும்
என்று நான், இங்கே பட்ஜெட்டில் சாங்ஷன் செய்தோம். அதை
மதுரை மாவட்டத்திற்கு சாங்ஷன் செய்தோம். மதுரை
மாவட்டத்தில் நிலக்கோட்டை தொகுதி பின்தங்கிய தொகுதி,
ஆகவே அங்கே இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்சை ஆரம்பிக்க வேண்
டும் என்று அந்தத் தொகுதியில் 100 ஏக்கர் நிலம் இடம் பார்த்
தோம். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்
தொகுதியான ஆத்தூர் தொகுதியில் நிலம் தேர்ந்தெடுக்கப்
பட்டது.

நிலமும் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்காக நிபுணர்கள் எல்லாம்
சென்று பார்த்தார்கள். ரெவின்யூ இலாக்காவிலிருந்து, 2, 3
அதிகாரிகளை நியமித்து, அவர்கள் 2, 3 ஆண்டுகள், அங்கே
தங்கி பணியாற்றியதற்கு, அவர்களுக்குச் சம்பளமாகவே, 4
இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. 3 ஆண்டுகள் கழித்து ஒரு
வாட்டர் டிவைனர் வந்து, செம்பட்டி ஏரியாவில் 80 சதவிகிதம்
தான் தண்ணீர் இருக்கிறது என்று சொன்னதால், இந்தத்
திட்டத்தை அங்கே நிறைவேற்ற முடியாது என்று சொல்லி
விட்டார்கள். எனக்கு அதில் மிக வருத்தம்.

அப்படிச் சொன்ன பிறகு அந்தத் திட்டம் நத்தம் பக்கம்
போனது. அங்கேயிருந்து இப்போது சோழவந்தான் பகுதியிலே
நிலத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு இண்டஸ்டிரியல்
காம்ப்ளக்ஸ் ஆரம்பிக்க, தொழிற்கூடம் ஆரம்பிக்க இடம்
வேண்டும், தண்ணீர் வேண்டும், மின்சாரம் வேண்டும், ரெயில்வே
ஸ்டேஷன் வேண்டும். இத்தனையும் இருந்தால்தான் அந்தத்
தொழிற்கூடத்தை ஆரம்பிக்க முடியும்.



1987 நவம்பர் 12] [திருமதி பொன்னம்மாள்]

அப்படி இருக்கும்போது ஒரு மின்சாரத் திட்டத்தை
நிறைவேற்ற வேண்டுமென்றால் அதற்கு என்னென்ன வேண்
டும் என்பதைப் பார்க்க வேண்டும். மத்திய அரசு அந்தத்
திட்டத்தை ஆராய்ந்து, மாநில அரசுக்கு அந்தத் திட்டத்தைக்
கொடுத்தால் அவர்களுக்கு வருவாய் வருமா, அவர்களால்
இதை அமல் நடத்தமுடியுமா என்பதை எல்லாம் ஆராய்ச்சி செய்ய
வேண்டும். பணம் இல்லாவிட்டால் உலக வங்கியை அணுகி,
அவர்களிடம் கடன்பெற்று, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற
வேண்டிய சூழ்நிலையிலே மத்திய அரசு இருக்கிறது. மத்திய
அரசு அனுமதி கொடுத்த பிறகு பிளானிங் கமிஷனுக்குச்
செல்ல வேண்டும். பிளானிங் கமிஷனிடமிருந்து அதற்கு
அப்ரூவல் பெற வேண்டும். அதற்குப் பிறகு திட்டம் வந்து,
திறமையான அதிகாரிகள் பார்வையிட்டு, இங்கே இதை ஆரம்
பிக்கலாம், இதை ஆரம்பித்தால் இவ்வளவு உற்பத்தி செய்ய
லாம் என்று ஆராய்ச்சி செய்து சொல்ல வேண்டும், 3 ஆண்டுகளி
லிருந்து 8 ஆண்டுகள் ஆகிறதென்று சொன்னார்கள். 8 ஆண்டு
களுக்கு மேலேயே செல்லும்போல் இருக்கிறது. எல்லாவற்றை
யும் பிளான் பண்ணிச் செய்ய வேண்டும். இதற்கு மத்திய
அரசு ஒப்புதல் அளிக்கவில்லை என்று விவரம் தெரிந்த உறுப்பினர்
கள் பேசியது குறித்து நான் வருத்தப்படுகிறேன்.

இன்னொரு உறுப்பினர் சொன்னார், நிலக்கரியில் களி மண்
இருக்கிறது, மண் இருக்கிறது, கல் இருக்கிறது என்று. திரு
ராஜீவ் காந்தி அவர்களா தமிழகத்திற்கு அனுப்பும் நிலக்கரியில்
கல்லைக் கல, மண்ணைக் கல, களி மண்ணைக் கல என்று
சொன்னார்கள்? நிலக்கரியைப் பூமியிலிருந்து வெட்டி எடுக்கி
றார்கள். அது வருகிறது. அப்படி வரும்போது அதில் கல்,
மண் இருக்கலாம். அப்படி இருந்தால் நல்ல கரி கொடுங்கள்
என்றுதான் கேட்க வேண்டும். அப்படியில்லாமல் அவர்கள்மீது
தவறான குற்றச்சாட்டு சொல்வதை வன்மையாகக் கண்டிக்கி
றேன் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓர் உறுப்பினர் சொன்னார், கண்டனத் தீர்மானம் நிறை
வேற்ற வேண்டுமென்று. தமிழக முதல்வரவர்களும்,
பிரதம அமைச்சர் அவர்களும் நெருக்கமான உறவோடு இருக்கி
றார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு மக்
களுக்குத் தொண்டு செய்வதில் கவனம் செலுத்தும்போது, கண்
டனத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால்—
விவரம் தெரியாமல் பேசினால்—அது நியாயமாக இராது என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பக்கம் இரண்டிலே, மத்திய அரசின் உதவி அதிகம்
கிடைத்த காரணத்தால் மின்வெட்டு இல்லாமல் காரியங்கள் ஆற்ற
முடிந்தது என்று பாராட்டப்பட்டுள்ளது. வடசென்னை, தூத்துக்குடி
அனல் மின் நிலையங்களுக்கு ஒப்புதல் கொடுத்து, அதற்குப்
பணம் போதாது என்பதால் உலக வங்கியிடமிருந்து 197.50
கோடி ரூபாய் பணம் கடன் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

இதற்காக மத்திய அரசைப் பாராட்ட வேண்டாமா ?
என்ன சொல்லுகிறார்களோ அதன்படி நடக்க வேண்டாமா ? அவர்கள்
இங்கே, எண்ணூர், தூத்துக்குடி ஆகிய இரண்டு இடங்களிலே
சிறப்பான முறையிலே. நல்ல முறையிலே மின்சாரத்தை உற்பத்தி
செய்ததற்காக அங்கே வேலை செய்த தொழிலாளர்களுக்கு மத்திய
அரசு விருது வழங்கியிருக்கிறது. இதைப் பாராட்ட வேண்
டாமா ? எனவே பேசும்போது சற்று நிதானமாகப் பேச
வேண்டுமென்று தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒரு விஷயம், நான் ஒரு விவசாயி. 1958-லே
4 மோட்டார்களுக்கு மின்சார இணைப்பு வாங்கினேன்.
அப்போது மின்சாரத் துறையிலே ஒன்றைச் சொன்னார்கள்.
2 கிணறுகளுக்கு 5 ஹார்ஸ் பவர் பம்ப்-செட் வைத்துக்
கொள்ள அனுமதி கொடுத்தார்கள். 2 கிணறுகளுக்கு 5
ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்துக்கொள்ள எழுதிக்
கொடுத்துவிட்டு, 3 ஹார்ஸ் பவர் மோட்டார் வேண்டுமானால்
வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். சர்வீஸ் வாங்
கியது 5 ஹார்ஸ் பவர் மோட்டாருக்கு. ஆனால் 3 ஹார்ஸ்
பவர் பம்ப் செட்டுதான் வைத்திருக்கிறோம். ஏழைகளுக்கு
இலவசமாக மின்சாரம் கொடுப்பதை வேண்டாமென்று சொல்ல
வில்லை.

(பிற்பகல் 12–20)

அதைக் கொடுக்க வேண்டும்தான். அவர்களுக்கும் ஒரு பங்கு
இருக்கிறது. நாம் பயன்படுத்தினோம், நாம் அனுபவித்தோம் ;
அதிலிருந்து நாம் பலன் பெற்றுள்ளோம் ; ஆகையால் நம்
முடைய பங்கையும் செலுத்த வேண்டும் என்ற ஆர்வம் அவர்
களிடம் இருக்கிறது. ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் ?
'பிட்டுக்கு மண் சுமந்த கதை'யை ஞாபகப்படுத்துவதைப்
போல் இனாம், இனாம் என்று சொல்கிறீர்கள்.

குடிசைகளுக்கு இனாமாக மின் விளக்குப் போடுகிறோம்
என்று சொல்கிறீர்கள். நீங்கள் இலவசமாக கொடுங்கள் ;
ஏனென்றால் எல்லோரும் ஓட்டுப்போட வேண்டும். அப்படி
என்றால் மின்சார உற்பத்தி எப்படி நடக்கும் ? நீங்கள்
மின்சாரத்தைக் கொடுத்தால், இது நம்முடைய நிலம், இது
நம்முடைய பம்புசெட் ; இதிலிருந்து நாம் தண்ணீர் இறைக்கி
றோம் ; ஆகையால் இதற்கு பணம் கட்ட வேண்டுமென்று
மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் 'சீப் பாப்புலாரிட்டி'க்
காக நீங்கள் அவர்களை சீப்பாக நினைக்கிறீர்கள். ஏதோ
சேலை வழங்குவது போல, சோறு கொடுப்பது போல,
செருப்பு கொடுப்பதுபோல எல்லாவற்றையும் செய்துகொண்டி
ருந்தால் திட்டங்கள் பாதிக்கப்படும். பெரிய பெரிய திட்டங்
கள் நிச்சயமாகப் பாதிக்கும். ஏனென்றால் எதிர்காலத்தில்
மின்சாரம் இல்லாவிட்டால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.



மின்சாரம் அணைந்துவிட்டால் சட்டமன்றத்தைக்கூட நடத்த
முடியாது. இப்படிப்பட்ட நிலையில் மின்சார உற்பத்திக்கு
அதிகப் பணத்தை ஒதுக்க வேண்டும். மத்திய அரசு உதவி
யையும் நீங்கள் நாட வேண்டும்.

1988 ஜூன் இறுதி வரையில் மின்வெட்டு இராது என்று
சொன்னீர்கள். அப்படி இருப்பதற்கு இப்போது புதிதாக 505
மெகாவாட் உற்பத்தித் திட்டம் வைத்திருக்கிறோம் என்று
சொல்லியிருக்கிறீர்கள். அப்படி உற்பத்தி செய்வதிலே சற்று
கவனம் செலுத்த வேண்டும். மின மோட்டார்கள் ஓடாமல் இருந்
தால், மினிமம் சார்ஜ் என்ற அடிப்படையில் ஐந்து ரூபாய்
கட்டினோம். ஆனால் கடந்த நான்கு வருடங்களாகக் கிணற்
றிலே தண்ணீர் இல்லாமல், பம்பு செட் ஓடாமல் வைத்திருக்
கிறோம். அப்படி இருந்தாலும், ஒரு ஆர்ஸ் பவருக்கு 75
ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. இது கொடுமை, மிகப்
பெரிய அக்கிரமம். இந்த முறையை மாற்றியாக வேண்டும்.

விவசாயிகள் சங்கம் ஒரு ஆர்ஸ் பவருக்கு 75 ரூபாய்
வசூலிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது என்கிறீர்கள்.
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். யாருக்கு ? தண்ணீர்
தாராளமாக இருந்து, 24 மணி நேரமும் மோட்டார் ஓடக்
கூடிய அளவுக்கு மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டால்,
அப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்களிடம் 75 ரூபாய் வாங்
கலாம் என்று சொன்னார்கள். இந்த முறையினால் சிறு விவ
சாயிகளுக்கு எந்தவிதமான பலனும் இல்லை. ஆகவே,
நீங்கள் மீட்டர் சிஸ்டத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு குடிசைகளுக்கு மின்சாரம்
வழங்குவது பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். அவர்கள் 12 ரூபாய்
கட்டினால் லைட் போடுகிறோம். அதைக் கட்ட அவர்கள்
தயக்கம் காட்டவில்லை. சினிமாவுக்குப் போனால் பணம்
கொடுக்கவில்லையா ? 2 சினிமா, 3 சினிமா பார்க்கிறார்கள்.
ஆகவே, அவர்கள் 12 ரூபாய் கட்டுவதற்குத் தயங்கவில்லை ;
கட்டத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் பணம் கட்டு
கிறார்கள் ; லைட் போடுகிறோம். அடுத்தபடியாக
ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற ......

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பல்வேறு சலுகைகளை ஏழை எளிய
மக்களுக்கு வழங்குகிறோம். அது தேவையில்லை, கூடாது
என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். அப்படி
என்றால் வாங்கிய கடனை எல்லோரும் கட்டலாம் அல்லவா ?
கட்டுவது நியாயம் தானே ; அது மட்டுமல்ல. ஆதி திராவிட
மக்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் மத்திய அரசு பாதி
மானியம் உதவியாக வழங்குகிறதே, அது எல்லாம் ஓட்டு
வாங்கவா என்று கேட்க விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 12

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : வாங்கிய கடனைக்
கட்ட மாட்டோம் என்பதை நாங்கள் கடுமையாக எதிர்க்கி
றோம். வாங்கிய கடனைக் கண்டிப்பாகக் கட்ட வேண்டும்.
கட்ட வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன். அதைப்
போலவே மின்சாரக் கட்டணத்தையும் கட்ட வேண்டுமென்று
தான் சொல்கிறேன். நான் எம்.எல்.ஏ., யாகக் கூட அல்ல ;
எக்ஸ் எம்.எல்.ஏ. யாக இருந்தபோது கூட மின்சாரக் கட்ட
ணத்தைக் கண்டிப்பாக நீங்கள் கட்ட வேண்டும் ; இல்லை
என்றால் பின்னாலே உங்கள் தலை மேல் தான் ஏறும் என்று
சொன்னேன். நீங்கள் முழுமையாகக் கட்ட முடியும் ; கட்டுங்
கள் என்று சொன்னேன். நாங்கள், காங்கிரஸ்காரர்கள் எதை
நினைக்கிறோமோ அதைச் சொல்வோம் ; எதைச் சொல்
கிறோமோ அதைச் செய்வோம். நாங்கள் ஓட்டுக்காக எதையும்
சொல்வதுமில்லை ; செய்வதுமில்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இன்றைக்கு என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற
திட்டங்கள் மூலமாகப் பல பணிகளைச் செய்து வருகிறோம் ;
பல திட்டங்களை நிறைவேற்றுகிறோம். அந்தத் திட்டங்
களுக்கெல்லாம் மின்சாரம் இன்றியமையாததாக இருக்கிறது
என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவைகளுக்கு
மின்வெட்டு இருக்கக் கூடாது. திட்டத்தை என்றைக்கு ஆரம்
பிக்கிறோமோ அன்றிலிருந்து மின் இணைப்பு கொடுக்க வேண்
டும்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு புதிதாக மின் இணைப்பு
கொடுக்கிறோம். ஏற்கனவே 40,000 மின் இணைப்பு கொடுக்
கும் திட்டம் இருக்கிறது. இப்போது கூடுதலாக 20,000 மின்
இணைப்பு கொடுக்க திட்டம் வைத்திருக்கிறோம். இப்படிப்
பட்ட நிலைமைகள் இருந்த போதிலும் இங்கே இருக்கின்ற
நம்முடைய மூத்த, முதிர்ந்த எம்.எல்.ஏ. தீர்த்தகிரி கவுண்டர்
அவர்கள் 20—5—1978-ல் மின் இணைப்பு கேட்டு அப்ளிகேஷன்
கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு
கிடைக்கவில்லை. 7—1—87-லே நீங்கள் பம்புசெட் வாங்கி
வையுங்கள் என்று உத்தரவு வந்திருக்கிறது. அதன் பிறகு
இப்போது இருக்கிற நம்முடைய மின்சார இலாகாவின் தலைவர்
அவர்கள் 'நீங்கள் 115-வது நம்பரில் இருக்கிறீர்கள் ; வரிசைப்
படித்தான் இணைப்பு கிடைக்கும் ; இப்போது சாத்தியம்
இல்லை, என்று தபால் அனுப்பியிருக்கிறார்கள். ஆக, 1978-ல்
அப்ளிகேஷன் போட்டும் இன்னும் இணைப்பு கிடைக்கவில்லை.
அவர்களுக்குக் கூடிய விரைவிலே மின்சார இணைப்பு கொடுக்க
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு கடன் வாங்கி தொழில்
நடத்துகிறார்கள். படித்த இளைஞர்கள் வேலை இல்லாமல்
கடன் வாங்கி சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில்



1987 நவம்பர் 12] [திருமதி பொன்னம்மாள்]

அப்படிப்பட்டவர்களுக்கு மின் இணைப்பு
நடத்துகிறார்கள். சீனியாரிட்டிப்படி
வழங்குவதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். என்று
வரிசைப்படிதான் மின் இணைப்புக் கொடுக்க முடியும்
சொன்னால் நிச்சயமாக அவர்கள் பாதிக்கப்படுவார்கள்.
தொழில் நடத்த முடியாமல், அந்தத் தொழிலையே விட்டு
விடுவார்கள். தொழில் நடத்த முடியாத நிலையில் அந்தப்
பணத்தை வேறு காரியங்களுக்குச் செலவிட்டு விடுவார்கள்.
அதனால் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத
நிலைமைதான் ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல்
இருக்க சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில்
தொடங்குகிறவர்களுக்குச் சலுகை அடிப்படையில் மின்
இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை கொடுப்பது சாலச் சிறந்த
தாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப் புறங்களில் இப்போது 6 மணி நேரம் பகலிலும்
8 மணி நேரம் இரவிலும் தண்ணீர் இறைக்க மின்சாரம் கொடுக்
கப்படுகிறது. தஞ்சை போன்ற மாவட்டங்களில் 20 மணி
நேரம் கொடுக்கிறோம். கரும்பு விவசாயம் செய்கிறவர்களுக்கு
இரவு நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச முடியாது. மற்ற விவசாயி
களுக்கும் இரவு நேரத்தில் தண்ணீர் பாய்ச்சுவது கஷ்டமாக
இருக்கும். ஆகவே அவர்களுக்கு பகலில் 8 மணி நேரம் மின்
சாரம் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்
சொல்லும்போது கண்டிப்பாக மீட்டர் சிஸ்டம் தான் வரும்
என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும். ஏனென்றால் மோட்
டார் ஓடாமல் ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் கட்ட வேண்டும்
என்று சொல்வது கொடுமையானது. இந்தக் கொடுமையை
நினைத்து எத்தனையோ பேர் மிகவும் கண் கலங்கிக் கொண்
டிருக்கிறார்கள். நானும் ஒரு விவசாயியாக இருப்பதால்
அவர்களுடைய கஷ்டம் நன்றாகத் தெரியும். ஆகையால்
இப்போது இருக்கிற முறையை மாற்றி, மீட்டர் சிஸ்டத்தைக்
கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துப் போர்டு சம்பந்தமாக
ஒரு கேள்வி வந்தது ; அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்
கள். பஞ்சாயத்துப் போர்டில் லைட்டுகளைப் பராமரிக்க
பண வசதி இல்லை. அதனால் அவர்களிடம் லைட்டுகளைப்
பராமரிக்கும் பொறுப்பு இருக்கக் கூடாது. பல்பு இல்லை ;
மீட்டர் போடவில்லை என்றால் மின்
சாரம் போய் விட்டது: அவர்கள் தான்
மின்சார இலாகாவில் சென்று வாங்க வேண்டும். இப்படிப்பட்ட பணிகளை
அவற்றைப் பொருத்த வேண்டும். பஞ்சாயத்து போர்டி
லிருந்து மின்சார இலாகாவினரே செய்து விட்டு எரியக்கூடிய விளக்குகளுக்குப் பணம் வாங்கும்போது
இதையும் சேர்த்து வாங்கிக் கொள்ளலாம். இப்படிப்பட்ட

முறை இருந்தால் தான் பஞ்சாயத்துக்களில் லைட் சரியாக எரியும் ; இல்லை என்றால் எரியாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இங்கே ஒரு முறை நான் போட்டி ருந்த ஒரு கேள்விக்கு முன்னாள் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். பல்பு மாற்றிய ஒரு வாரத்திற்குள் 'பியூஸ்' ஆகிவிடுகிறது. அதற்கு தரக் குறைவு காரணமா என்று கேட்டிருந்தேன். முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. காளிமுத்து, ஆம், தரம் இல்லாத பல்புதான் காரணம் என்று ஒத்துக் கொண்டார்கள். தரம் இல்லாத பல்புகளாக இருப்ப தால் கிராமப் புறங்களில் குழல் விளக்குகளைப் போடுகிறோம் என்றார். குழல் விளக்குகளைப் போடும்போது அவையும் தரமானவையாக இருக்க வேண்டும். தரமான பல்புகளை, குழல் விளக்குகளை நீங்கள் எங்கே போய் வாங்கினாலும் அது பற்றி எங்களுக்குக் கவலையில்லை. கூட்டுறவுத் துறையில் சென்று குழல் விளக்கு வாங்கினால் 32 ரூபாய் என்றும், வெளியே தனியார்களிடம் வாங்கினால் 22 ரூபாய் என்றும் சொல் கிறார்கள். எது சாத்தியமோ அதைப் பார்த்து, தரமான பொருள்களை வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் 'அஸசர்' களைப் போட்டிருக்கிறீர் கள். ஒருவர் ஆயிரம் சர்வீஸ் பார்க்க வேண்டும் என்று இருந்தது. ஆனால் இப்போது ஆள் குறைப்புத் திட்டத்தின் கீழ் ஒருவர் 2000 சர்வீஸ் பார்க்கலாம் என்றிருக்கிறது. அப்படியானால் பலரை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நிலைமைவரும். இப்போது இருப்பவர்கள் 10 ஆண்டு காலம், 8 ஆண்டு காலம் அஸசர்களாக இருந்து பணியாற்றுபவர்கள்' கணக்கு எடுப்பவர்கள், அவர்களில் பெரும்பாலும் அரிசனங் கள் இருக்கிறார்கள். நான் ஏற்கனவே ஒரு கேள்வி கேட்டிருந் தேன். மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்ற அரிசனங் களின் எண்ணிக்கை எத்தனை என்று கேட்டபோது மூன்றே மூன்று சதவீதம் தான் என்று பதில் வந்தது. அதன் பிறகுதான் இந்த அஸசர்களை நிறைய நியமித்திருக்கிறார்கள். அவர் களில் பெண்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை வீட்டுக்கு அனுப்பக் கூடாது. அவர்களை எல்லாம் நிரந்தரமாக பணியில் அமர்த்த வேண்டும். ஜூனியர் அசிஸ் டெண்ட் பதவியில் கூட அவர்களை அமர்த்திக் கொள்ளலாம். ஆயிரம் சர்வீஸ் ஒருவருக்கு என்று இருந்தால் எல்லோருக்கும் வேலை கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த முறையிலே உத்தரவிட்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987—88 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை





பற்றியும், 1986—87 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கை பற்றியும் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் களில் 18 பேர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரி வித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-30)

இந்த நூற்றாண்டில் வரலாறு காணாத வறட்சி கடந்த மூன்று ஆண்டுகளாக நிலவியதால், புனல் மின் உற்பத்தியில் 3,014 மில்லி யன் யூனிட் உற்பத்தி குறைந்துவிட்டது. அப்படி இருந்தும் உற்பத்தி திறனால் சிறந்த நிர்வாகத்தால் ஏற்கெனவே அதிக மின் அழுத்தம் உள்ள 1,100 தொழிற்சாலைகளுக்கு இருந்து வரும் 40 சதவிகிதம் மின் வெட்டை உயர்த்தாமல் பார்த்துக் கொண்ட தற்கும், மைய அரசே விவசாயிகளுக்கு நீர்ப்பாசனத்திற்கு தினம் சராசரி 10 மணி நேரம் மின்சாரம் வழங்கவேண்டுமென அறிவுரை வழங்கியபோது தமிழ்நாட்டில் தினம் நாள் ஒன்றுக்கு 14 மணி நேரமும் இன்னும் திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் ஏகபோக நெல் கொள்முதல் செய்யப்படும் தாலுக்காக்களில் 20 மணி நேரமும், கொடுக்கப்படுவதற்கும் தூத்துக்குடி அனல் மின் நிலையமும், எண்ணூர் அனல் மின் நிலையமும் இந்திய தேசிய சராசரி உற்பத்தித் திறன் 52.4 சத விகிதத்தைவிட அதிகமாக மின் உற்பத்தி செய்வதற்காக தூத்துக் குடி அனல் மின் நிலையம் 14 இலட்சமும், எண்ணூர் அனல் மின் நிலையம் 9 இலட்சமும் ஒவ்வொரு மின் நிலையமும் 2 ஆண்டுகள் மைய அரசின் சிறப்பு மிக்க பரிசுகளைப் பெற்றதற்கும், பாரத கனரக தொழிற்சாலையால் தயாரிக்கப்பட்ட 210 மெகா வாட் மின் இயந்திரங்களை இந்தியாவில் 61 மின் உற்பத்தி நிலையங் களில் இயக்குவதில் இயந்திரங்களில் இந்திய தேசிய சராசரி 59.6 சதவிகிதத்தை விட அதிகமாக 76.1 சதவிகித உற்பத்தித் திறனைக் காட்டுவதற்கும், 1986-87-ஆம் ஆண்டு உற்பத்தி செய்ய வேண்டிய 240 மெகாவாட் புதிய மின் சக்திக்குப் பதில் 325 மெகாவாட் கூடுதலாக மின் உற்பத்தி செய்ததற்கும், 1986-87 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு நீர்ப்பாசனத்திற்கு 40,000 பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்க வேண்டிய இலக்கைத் தாண்டி மேலும் 1993 பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுத்து 31-3-1987 அன்று மொத்தம் 11,16,177 பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுத்ததன் மூலம் இந்தியாவிலேயே தமிழக அரசைத் தலைநிமிர்த்து நிற்கும்படி முதல் வரிசையில் கொண்டு வந்ததற்கும், 1986-87 ஆம் ஆண் டில் 38,701 குடிசைகளுக்கு ஒரு விளக்கு திட்டம் கொண்டு வந்து 7,48,816 குடும்பங்களில் 31—3—1987 அன்று ஒளி விளக்குகள் எரியும்படி செய்ததற்கும், இந்தியாவில் 100 சதவிகிதம் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்ற பெருமையை அரசுக்கு தேடித் தந்ததற்கும், காற்றுவிசை மூலம் அதாவது உற்பத்தி செய்ததில் 1986-87-க்கு இந்தியாவில் முதல் இடம் பெற்றதற்கும், மின் உற்பத்தி செய்வதில் பெட்

ரோல் எண்ணெய் உபயோகிப்பதில் சிக்கனத்தைக் கையாண்டு 1985-86 மற்றும் 1986-87 ஆண்டுகளில் 57 கோடி ரூபாயைச் சேமித்ததற்கும் ; மின் திருடர்களைக் கண்டுபிடித்து தண்டித்து கடுமையான நடவடிக்கை எடுத்ததன் மூலம் சுமார் 9 கோடி ரூபாய் மின் வாரியத்திற்கு அதிக வருவாய்த் தேடித் தந்ததற்கும், 1987-88-ஆம் ஆண்டிற்கு உற்பத்தி செய்யவேண்டிய 505 மெகா வாட் மின் உற்பத்தி இலக்கையும் எட்டிவிடுவோம் என்று சொன்ன தோடு மாத்திரமல்லாமல் 7-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிதாக உற்பத்தி செய்ய வேண்டிய 1,416 மெகாவாட் மின் சாரத்தையும் குறித்த காலத்திற்குள் உற்பத்தி செய்வோம் என்று உறுதியளித்ததற்கும், மின்சார வாரியத் தலைவரையும், அலு வலர்களையும், தொழிலாளர்களையும் தமிழக முதல்வர் சார்பில் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இவ்வளவு சாதனைகளையும் கண்ட அரசு எந்த அரசாக இருந்தாலும் அந்த அரசும் அந்தத் துறையும் பெருமையையும் மனநிறைவையும் அடையும் என்பதில் ஆச்சரியமில்லை. அந்த உணர்வைத்தான் இவ்விவாதத்தில் கலந்து கொண்ட எல்லா மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், கட்சி வேறுபாடின்றி, ஒருவரைத் தவிர பிரதி பலித்தார்கள்'.

ஒருவன் சம்சாரம் இல்லாமல் வாழ்ந்தாலும் வாழலாம் ஆனால், மின்சாரம் இல்லாமல் வாழமுடியாது. மனிதனுடைய சராசரி ஆயுள் இரண்டு மடங்காக நீடிப்பதற்குக் காரணமே மின்சாரம்தான். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத் திற்கும் நவநாகரீகத்திற்கும் மின்சாரம் மிகவும் அவசியமாகும். அந்த மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட 6-ஆவது ஐந்து ஆண்டுத் திட்டத்தைவிட 7-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 100 சதவிகிதத்திற்கு மேலும் புரட்சித் தலைவர் மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அரசு ஒதுக்கியிருப்பது பாராட்டிற் குரியது. 7-ஆவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 5,750 கோடியில் ரூபாய் 2,000 கோடியை, 35 சதவீதத்தை மின்சார உற்பத்திக்காக மாநில அரசே ஒதுக்கி இருக்கிறது. இதில் மைய அரசு பணம் எதுவும் இல்லை. மின் உற்பத்தி செய்ய 5 முதல் 10 வருடமாவதால் 7-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே மின் உற்பத்தியைத் துவக்குவதற்கு திட்டங் களை ஆரம்பிக்க வேண்டும்.

மைய அரசு அனல் மின் நிலையம், புனல் மின் நிலையம், கேஸ் டர்பைன் மின் நிலையம் என மொத்தமாக 980 மெகாவாட் திறன் கொண்ட 6 மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அனுமதி கொடுக்காமல் 1982-ல் இருந்து நிலுவையில் வைத்திருக்கிறது. இந்த 6 திட்டங்களின் விவரம் (1) பைக்காரா இறுதித் கட்டம், நீலகிரி மாவட்டம், (2) சாத்தனூர் அணைத் திட்டம், வட ஆற்காடு மாவட்டம், (3) கீழ்பவானி வடகரை கால்வாய்த் திட்டம், பெரியார் மாவட்டம். (4) பரலையாறு, கன்னியா குமரி மாவட்டம், (5) பேசின் பிரிட்ஜ், சென்னை, (6) கடலூர் அனல் மின் நிலையம், தென்னாற்காடு மாவட்டம்.





அதைப்போல 7 புனல் மின் திட்டங்கள். (1) ஒக்கனேக்கல், தருமபுரி மாவட்டம், (2) நெல்லித்துறை, கோவை மாவட்டம், 3) பாண்டியாறு புன்னம்புழா, நீலகிரி மாவட்டம், (4) சண் முகா நதித் திட்டம், மதுரை மாவட்டம், (5) அமராவதி, கோவை மற்றும் பெரியார் மாவட்டம், (6) பவானிக் கட்டளைக் கால்வாய், சேலம் மற்றும் பெரியார் மாவட்டம், (7) சோழத்தி புழா, நீலகிரி மாவட்டம் ஆகிய திட்டங்களும் மைய அரசின் அனுமதிக்காக நிலுவையில் உள்ளன. இவைகளில் அமராவதி நதித் திட்டம், சண்முகா நதித் திட்டம், பவானிச் கட்டளைக் கால்வாய்த் திட்டம் ஆகிய மூன்றும் 1972, 1979, 1984-ல் இருந்து மைய அரசு அனுமதிக்காக காத்திருக்கின்றன. இந்த மூன்றும் அனுமதிக்கப்பட்டாலேயே 150 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய ஏதுவாக இருந்திருக்கும்.

இந்த மூன்று திட்டங்களுக்கும் காவிரி நதி நீர்ப் பங்கீட்டிற்கும் சம்பந்தமில்லை. ஆனாலும் மைய அரசு தேவையில்லாமல் காவிரி நதி நீர்ப் பங்கீட்டு தகராறைக் காரணம் காட்டி கால தாமதம் செய்து வருகிறது. காவிரி நதி நீர் தகராறை " டிரிபி யூனல் " முடிவுக்கு விட்டிருந்தால் ஒக்கனேக்கல், நெல்லித்துறை, பவானிக் கட்டளைக் கால்வாய் போன்ற மூன்று திட்டங்களும் 1964-ல் இருந்து மைய அரசின் நிலுவையில் இருக்க வேண்டியது இல்லை. காவிரி நதி நீர் தகராறை டிரிபியூனலுக்கு விடச் சொல்லி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். கூடங்குளத்தில் அனல் மின் நிலையம் துவங்க அனுமதி வேண்டு மென்று வற்புறுத்தி மாத்திரம் இதுவரை பாரதப் பிரதமர் அவர் களுக்கு முதல்வர் அவர்கள் 8 தடவை கடிதம் எழுதியிருக் கிறார்கள். அதைப்போலவே பல திட்டங்களுக்கும் விரைவில் அனுமதி தர வேண்டுமென்று கோரி மாநில மின் துறை அமைச்ச ரால் மைய மின் துறை அமைச்சருக்குப் பல தடவை கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. கடிதம் எழுதுவதும், நேரே சந்திக்கும் போது வலியுறுத்துவதும்தான் ஜனநாயக மரபுகள். ஆனால் சட்டசபை தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கருத்து தெரி விக்கப்பட்டது. காவிரி நதி பற்றிய தீர்மான தகராறைத் தீர்ப்புக்கு டிரிபியூனலுக்கு விட வேண்டுமென்று இந்த சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியது. முதல்வர் எழுதுகிற கடிதம் சட்டசபைத் தீர்மானத்திற்குச் சமமாகும். சட்டசபை தீர்மானம் போட்டு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதியும் மைய அரசு மனமிரங்க வில்லை என்று சொன்னால் இந்த வேதனையை நாம் பகிர்ந்து கொள்வது தவிர வேறு மார்க்கத்திற்கு மாண்புமிகு முதல்வரைத் தான் நாட வேண்டும்.

உதாரணத்திற்காகச் சொல்கிறேன். 1985 அக்டோபரில் பேசின் பிரிட்ஜ் கேஸ் டர்பைன் 120 மெகாவாட் திறன் கொண்ட உற்பத்தி நிலையத்தை துவக்கும் திட்டத்திற்கு மைய அரசு அனுமதி அளித்தது. ஆனால் அது இன்னும் ' ஸ்டில் பார்ன் பேபி'

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 12

யாகவே இருக்கிறது. காரணம் இதுவரை அதற்கு திரவஎரிபொருள்
இணைப்பு கொடுக்காமல் மைய அரசு காலம் தாழ்த்தி வருகிறது.
சென்னையில் மின் அழுத்தக் குறைவு மற்றும் அடிக்கடி ஏற்படும்
ஏற்றத்தாழ்வு ஆகியவை பற்றி உறுப்பினர்கள் பேசினார்கள்.
அதுவும் வட சென்னையில் மின் அழுத்த ஏற்றத் தாழ்வு அதிக
மாக இருக்கிறது என்று வட சென்னை வியாபாரிகளும், மாண்பு
மிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்களும்
கூட என்னிடம் வந்து சொன்னார்கள். இந்தக் குறையைப்
போக்குவதற்கென்றேதான் பேசின் பிரிட்ஜ் கேஸ் டர்பைன் மின்
நிலையம் கேட்கப்பட்டது. ஆனால் மைய அரசு மனமிரங்க
வில்லை. இந்தியாவில் ஏற்கெனவே டெல்லி, குஜராத், மராட்டி
யம், மேற்கு வங்காளம், அசாம் மற்றும் திரிபுரா ஆகிய 5
மாநிலங்களிலும் ஒரு யூனியன் பிரதேசத்திலும் கேஸ் டர்பைன்
10 மெகாவாட் திறனிலிருந்து 672 மெகாவாட் திறன்வரை
அனுமதிக்கப்பட்டு இயங்கி வருகிறது. ஏன்? சில மாதங்களுக்கு
முன்பு அரியானா மாநிலத்தில் ஃபரிதாபாத்தில் 100 மெகாவாட்
மின் நிலையம் ஒன்றும், கர்நாடகத்தில் 120 மெகாவாட், மேலும்
80 மெகாவாட் என்று இரண்டு கேஸ் டர்பைன்களும் ஆக
மொத்தம் மூன்று கேஸ் டர்பைன்கள் வழங்க, துவக்க அனு
மதியை மைய அரசு வழங்கியிருக்கிறது. நாமும் நேரில் மைய அரசு
மின் துறை அமைச்சரையும், பெட்ரோலிய துறை அமைச்ச
ரையும் சந்தித்து அனுமதி தரச் சொல்லி கேட்டு, பேசி, கடிதமும்
எழுதியிருக்கிறோம். ஆனால் அனுமதி தரவில்லை. தமிழ்
நாட்டுக்கு மாத்திரம் அயல்நாட்டு செலாவணி என்ற பூச்சாண்டி
யைக் காட்டுகிறார்கள். பேசின் பிரிட்ஜ் கேஸ் டர்பைன் மின்
நிலையத்திற்குத் தேவையான பெட்ரோலிய திரவப் பொருள்
(லிக்யுட் பியூவல்) ஆண்டு ஒன்றுக்குத் தேவைப்படுவது 70,000
கிலோ லிட்டர் ஆகும். இதற்கு அயல்நாட்டுச் செலாவணி
தேவைப்படுவது 10 கோடி ரூபாய் ஆகும்.

(பிற்பகல் 12-40).

அதைப்போலவே தஞ்சாவூரில் கோவில்களப்பால் என்ற ஊரில்
வீணாக வெளியே வந்துகொண்டிருக்கும் எரிவாயுவைப் பயன்
படுத்தி 5 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி
இயந்திரத்தை உடனே உற்பத்தியை துவக்க தமிழ்நாட்டுக்கு
வரவழைத்துக் கொடுங்கள் என்று கேட்டோம். நாமே அதை
உற்பத்தி செய்வது என்றால் 18 மாதம், 24 மாதம் ஆகும்.
ஆகையால் தமிழ்நாட்டுக்கு அந்த இயந்திரத்தை இறக்குமதி
செய்து கொடுங்கள் என்று கேட்டால் வீணாக எரிவாயு கோவில்
களப்பால், நரிமணம் போன்ற இடங்களில் எரிந்து ஆவியா
ளாலும் ஆகலாமே தவிர 5 மெகாவாட் இயந்திரத்தை இறக்குமதி
செய்துதர மாட்டோம் என்று சொல்கிறார்கள்.



1987 நவம்பர் 12] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

இந்தியாவில் எரிவாயுவைப் உபயோகப்படுத்தாமல் வீணாக
எரிந்து ஆவியாக ஆகாயத்தில் கலக்கவிடுவதால் இந்தியாவிற்கு
ஆண்டுக்கு ஏற்படும் நஷ்டம் ரூபாய் 500 கோடி என்று அண்மை
யில் நான் படித்திருக்கிறேன். தொழிற்சாலையைத் தொடங்கு
வதற்கு சிமெண்ட், மின்சக்தி, தண்ணீர் போன்றவைகள் முக்கிய
மான அத்தியாவசிய பொருள்கள் என்பது எல்லோருக்கும் தெரி
யும். ஆனால் மின் உற்பத்தி செய்வதற்குத் தேவையான மிக
அத்தியாவசியப் பொருள் நிலக்கரி, பெட்ரோலிய எண்ணெய்
போன்றவை என்பதை நாம்உணர்ந்து அத்தியாவசியப் பொருளுக்கு
தேவையான மிக அத்தியாவசிய மூலப் பொருளான நிலக்கரி,
பெட்ரோலிய எண்ணெய் ஆகியவைகளை நம்மிடம் போதிய
அளவு இல்லாத போது இறக்குமதி செய்ய அனுமதிப்பதுதான்
விவேகமாகும்.

நிலக்கரியை ஆஸ்திரேலியாவிலிருந்தும், பெட்ரோலியத்தை
வேறு நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்கிற ஜப்பான்,
அமெரிக்காவைவிட வியாபாரத்தில் செல்வத்தை அந்நிய
செலாவணியை ஈட்டி இருக்கிறது. இங்கிலாந்தில் நல்ல
நிலக்கரி இருந்தும் அங்குள்ள நிலக்கரியின் விலையைக் குறைப்
பதற்காகவும், சமன் செய்வதற்கும் பல ஆயிரக்கணக்கான
மைல்களுக்கு அப்பால் ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரியை
இன்னும் இங்கிலாந்து அரசு இறக்குமதி செய்துகொண்டிருக்
கிறது. ஆனால் நமது மைய அரசில் மின் சக்தி சம்பந்தமாக
கொள்கை முடிவு எடுப்பவர்கள் தமிழ்நாட்டுக்கு பாகுபாடு
காட்டுவதால், 40 சதவிகித மின் வெட்டினாலும், புது
மின்சக்தி உற்பத்தி செய்யப்படாததாலும் ஏற்கனவே உள்ள
தொழிற்சாலைகளில் பல கோடி ரூபாய் மதிப்பிற்கு உற்பத்தி
இழப்பு ஏற்படுகிறது என்பதையும், புதிதாகத் தொழிற்
சாலைகள் ஏற்படுத்த முன்வராததால் தமிழ்நாட்டின் தொழில்
வளம் பின்நோக்கிப் போவதையும் கவனத்தில் கொண்டு,
கொள்கையைத் திருத்திக்கொள்ள முன்வர வேண்டும்.

15–1–1987-ல் மாநிலங்களின் மின்துறை அமைச்சர்கள்
மாநாட்டில் பாரதப் பிரதமர் பேசுகிறபோதுதான் எவ்வளவோ
கேட்டுக்கொண்டும் மின் உற்பத்தி செய்ய தனியார் துறையில்
யாரும் உற்சாகம் காட்டவில்லை; அதற்கு ஏதாவது சிரமம்
இருந்தால் அந்த சிரமத்தைப் போக்க வேண்டும் என்று பேசி
னார்கள். தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்
மின்சாரத் துறை பொறுப்பை என்னிடம் ஒப்படைத்த பிறகு
மின்சாரம் உற்பத்தி செய்ய தனியார் முன்வந்தால் அவர்களை
ஊக்குவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். சென்னையில்
'செட்கோ' என்ற தொழிலதிபர்கள் கூட்டு நிறுவனம்
ஆஸ்திரேலியாவிலிருந்து உயர்தரமான நில்க்கரியை இறக்குமதி
செய்ய அனுமதி கொடுத்தால் 210 மெகாவாட் திறன் கொண்ட
மின் உற்பத்தி நிலையத்தைத் துவக்க தயாராய் இருப்பதாக
சொன்னார்கள். 'செட்கோ' நிறுவனத்தின் புள்ளி விவரம்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 12

மூலம் மின் உற்பத்தி செய்ய நிலக்கரி ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுமானால் அயல்நாட்டுச் செலாவணி பாதிக்கப்படாது என்று ஆதாரங்களை எடுத்து மைய அரசின் மின்துறை அமைச்சருக்குச் சொன்னோம். ஆண்டு ஒன்றுக்கு நிலக்கரியை ஆஸ்திரேலியாவிலிருந்து 1.2 மில்லியன் டன் இறக்குமதி செய்தால் அதன் விலை சுமார் ரூ. 46 கோடி ஆகும். ஆனால் இன்றைய தினம் பல்வேறு தொழிற்சாலைகளில் கேப்டிவ் ஜெனரேட்டர்களை இயக்கவும், பம்புசெட்டுகளில் உபயோகப்படுத்துவதற்கும் இறக்குமதி செய்யப்படும் பெட்ரோலிய எண்ணெய் வகைக்கு செலவாவது ரூ. 90 கோடி ஆகும். எனவே, 46 கோடி ரூபாய்க்கு நிலக் கரியை இறக்குமதி செய்ய அனுமதித்தால் 44 கோடி ரூபாய் அந்நிய செலாவணி சேமிப்பு ஏற்படும் என்று எடுத்துச் சொல்லப் பட்டது. அது மாத்திரமல்ல, மைய அரசு 1987 பிப்ரவரி முடிய மின் உற்பத்திக்குச் செலவு செய்த அந்நிய செலாவணி யின் மதிப்பு 154.69 கோடி ரூபாயாகும். இந்த புள்ளி விவரம் மைய அரசினுடைய மின் இலாகா வெளியிட்ட 'டிபார்ட்மென்ட் ஆஃப் பவர் 1986–87 ரிப்போர்ட்' என்ற புத்தகத்தில் இருக் கிறது.

பொதுவாக, மைய அமைச்சர் முதல் சட்டமன்ற உறுப்பினர் கள் வரை எல்லோரும் மின் திறன் உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். மின் உற்பத்தித்திறன் அதிகரிப்பதற்கு தரமான நிலக்கரி வேண்டும். போக்குவரத்துக் கட்டணம் குறை வாக இருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டு மின்வாரியத் திற்கு உபயோகப்படுகிற நிலக்கரியின் 1970–71 ஆம் ஆண்டில் 29.25 சதவீதமாக இருந்த சாம்பல் அளவு 1986–87-ல் 48.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. நிலக்கரியைவிட அதன் போக்கு வரத்துக் கட்டணமாக 2, 3 மடங்கு தமிழ்நாடு மின் வாரியம் அதிகமாகச் செலுத்துகிறது. அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் குறிப்பிட்டதைப்போல், சிமென்ட், ஸ்டீல், சர்க்கரைக்கு இந்தியா பூராவும் ஒரே விலை நிர்ணயித்தது போல் நிலக்கரிக்கும் ஒரே விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று மைய அரசை நமது அரசு அடிக்கடி வலி யுறுத்தி வருகிறது. அப்படிச் செய்தால் மின் வாரியத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 100 கோடி ரூபாய் சேமிப்பு கிடைக்கும்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனம், தமிழ்நாடு மின் வாரியம் தனியாக அனல் மின் நிலையம் ஒன்றைத் துவக்குவதற்கு நிலக்கரி கொடுக்கத் தயாராக இல்லையோ அல்லது தயாராக இருந்தாலும் கொடுக்கச் சொல்லி ஆணையிட மத்திய அரசுக்கு மனம் இல்லையோ என்னவோ தெரியவில்லை. நெய்வேலி இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு 28 சதவீதத் திற்கு மேல் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். தமிழ்நாடு மின்சார வாரியம் தனியாக நெய்வேலிக்கு



1987 நவம்பர் 12] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

அருகே உற்பத்தி செய்யும் 100 சதவீத மின்சாரத்தை யும் தமிழ்நாட்டுக்கே உபயோகப்படுத்தும் நோக்கத்துடன் அனல் மின் நிலையம் துவக்க அனுபவம் உள்ள நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தை ஒரு திட்டம் தயாரிக்கச்சொல்லி நமது அரசின் மூலம் கேட்டால் அவர்கள் தங்கள் திறமையைக் காட்ட தகுதியான இடம் இராஜஸ்தான் என்று சொல்லி அங்கே போகிறார்கள். கையிலே வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு தமிழ்நாடு அழுதுகொண்டு இருக்கிறது.

வடநாட்டிலிருந்து நிலக்கரி எத்தனை நாட்களில் வருமோ அதே நாட்களில் ஆஸ்திரேலியாவிலிருந்து தூத்துக்குடி துறை முகத்திற்கு நிலக்கரி வந்து சேரும். வடக்கிலிருந்து வரும் நிலக் கரியின் அடக்கவிலையை விட போக்குவரத்துக் கட்டணம் இரண்டு மூன்று பங்கு, அதிகமாக இருக்கிறது. உதாரணமாக 1–12–86 அன்றைய நிலவரப்படி எண்ணூர் அனல் மின் நிலை யத்திற்கு சிங்கரேணியிலிருந்து வருகிற நிலக்கரி கிரேட் இ— உயர்ந்த கிரேட் கூட அல்ல—சுரங்கத்தில் அடக்கவிலை ஒரு டன் 291 ரூபாய். ஆனால் போக்குவரத்துக் கட்டணம் 216 ரூபாய். சந்தா சுரங்கத்தில் கிரேட் இ நிலக்கரியின் விலை— சுரங்கத்தில் அடக்க விலை—165 ரூபாய். போக்குவரத்துக் கட்டணம் 254 ரூபாய். மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு வருகிற நிலக்கரி கிரேட் இ, சிங்கரேணி சுரங்கத்தில் ஒரு டன் விலை 291 ரூபாய் ; ஆனால் போக்குவரத்துக் கட்டணம் 302 ரூபாய். எண்ணூருக்கு வருகிற நிலக்கரி கிரேட் எஃப், ஜகனாத் சுரங்கத்தில் ஒரு டன் அடக்கவிலை 137 ரூபாய். போக்குவரத்துக் கட்டணம் 381 ரூபாய். லாஜ்குரா சுரங்கத்தில் கிரேட் எஃப் நிலக்கரியின் விலை 127 ரூபாய். போக்குவரத்துக் கட்டணம் 468 ரூபாய். தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு வருகிற நிலக்கரியின் விலை—ஜகனாத் சுரங்கத்திலிருந்து வருகிற நிலக்கரி—137 ரூபாய். போக்குவரத்துக் கட்டணம் 384 ரூபாய். 100 சதவீதம் இறக்குமதி வரி கட்டினாலும் தரம் வாய்ந்த ஆஸ்திரேலிய நிலக்கரியின் விலை, அதிக சாம்பல் கலந்த வட நாட்டு நிலக்கரி விலையைவிட மலிவாக உள்ளது என்பதை மத்திய அரசுக்கு நாங்கள் எடுத்துக் காட்டினோம். மத்திய அரசின் மின்சாரம் மற்றும் நிலக்கரி சம்பந்தப்பட்ட துறை விழித்துக் கொண்டே பார்க்க மறுக்கிறது.

இங்கே விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் வலியுறுத்தியதன் அடிப்படையில் உடனடியாக பேசின் பிரிட்ஜ் 120 மெகாவாட் காஸ் டர்பைன் மின் உற்பத்தி நிலையத்திற்கு தேவையான திரவ எரிபொருளை வழங்க வேண்டும் என்றும் கோவில் களப்பாலிலும், புவனகிரியிலும்—ஒவ்வொரு இடத்திலும்—5 மெகா வாட் மின் உற்பத்தி செய்ய மைய அரசின் பெல் நிறுவனத்தின் மூலம் அமெரிக்காவிலிருந்து சாதனங்களை வரவழைத்துக் கொடுக்க அனுமதியும், நெய் வேலி லிக்னைட் கரியைப் பயன்படுத்தி தனியாக ஒரு அனல்

மலைவாழ் மக்களுக்கும் கட்டித் தரப்படுகிற வீடுகளுக்கு, கட்டி பூர்த்தியான உடனேயே மின் இணைப்புக் கொடுக்கச் சொல் வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் உறுப் பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது போல நலிவுற்ற மக்களுக்கு மின்சார வசதி அளிப்பதன் மூலம் மின்சார வாரியத்திற்கு ஏற்படும் நஷ்டம் முழுவதையும் மாநில அரசு ஈடு கட்டும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சற்று முன்பு சமர்ப்பித்த அறிக்கையிலேயே இது விளக்கப்பட்டிருக் கிறது. மின்சார வாரியத்திற்கு நஷ்டம் என்பது உண்மை யிலேயே ஏற்படாத வகையில் அரசு பாதுகாத்து வருகிறது.

வறட்சியினால் போதிய மின் சிமெண்ட் கான்கிரீட் கம்பங்கள் உற்பத்தி செய்ய முடியாததால், தெருவிளக்கு, ஒரு விளக்கு மற்றும் விவசாய பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுப்பதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையே. ஆண்டுக்கு சிமெண்ட் கான்கிரீட் கம்பங்கள் தேவைப்படுவது 3 இலட்சத்து 60 ஆயிரம் ஆகும். அதில் மின் இலாகா 2 இலட்சத்து 65 ஆயிரத்தை ஆண்டு ஒன்றுக்கு தயார் செய்கிறது. தட்டுப்பாட்டை சமாளிக்க தனியாரிடமிருந்து தற்போது டெண்டர் மூலம் 2 இலட்சம் கம்பங்கள் வாங்குவதற்கு ஏற்பாடா கியிருக்கிறது.

தமிழ்நாட்டில் 24,575 விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. கடுமையான வறட்சியை முன்னிட்டு விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமெரிக்காவில் இருந்தபோதே 10 கோடி ரூபாய் செலவு ஆனாலும், உடனடியாக எங்கு தண்ணீர் கிடைக் கிறதோ அங்கெல்லாம் மின் இணைப்புக் கொடுக்கச் சொல்லி மின்சார வாரியமும் மின் இணைப்புக் கொடுத்து வருகிறது.

அத்துடன் ஒரு ஆண்டுக்கு 40 ஆயிரம் வழக்கமாக கொடுத்த தற்கு மேல் அதிகமாக இந்திய கிராமீய மின்சாரக் கழகத்திடம் கடன் உதவி பெற்று மேலும் ஒரு இருபதாயிரம் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கச் சொல்லியும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் விவசாயிகள் சிலர் குறைந்த அளவு குதிரைத் திறனை ஓட்டி மின்சாரம் அனுபவித்தாலும் ஓட்டுமொத்தமாக அதாவது ஃபிளாட் ரேட்டாக 75 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது என்று வருத்தம் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் கூடத் தெரிவித்தார்கள். இதை மின்சார வாரியமும், அரசும் நன்கு உணரும். ஏற்கனவே இதுபற்றி எடுத்த கொள்கை முடிவின் அடிப்படையில் மீட்டரே வைக்காமல் ப்ளாட் ரேட் ஓட்டு

மொத்தமாகக் கட்ட வேண்டுமென்று முடிவு எடுத்தோம். அதை
மீண்டும் மாற்றி மீட்டரைப் பொருத்த வேண்டுமென்று முடிவு
எடுக்க வேண்டுமென்றால் விவசாய சங்க பிரதிநிதிகள் மாண்புமிகு
முதல்வர் அவர்களை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கசாமி அவர்கள் மின்
உற்பத்தி நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு
இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டுமென்று சொன்னார்கள்.
அவர்கள் சொன்னபடி பார்த்தால், சிமெண்ட் ஆலைகள்,
சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றில் தொழிலாளர்களுக்கு
இலவசமாக சிமென்டோ, சர்க்கரையோ வழங்கப்படுவதில்லை.
தொழிலாளர்களுக்கு எல். டி. கன்செஷன் வேண்டுமென்ற
மின்சார வாரியத்தினுடைய பரிந்துரை அரசின் ஆய்வில்
உள்ளது. முதல்வர் அவர்களைக் கலந்து கொண்டு முடிவு
எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசரத்தினம் அவர்கள்
இரண்டு கோவில்களுக்கு சலுகை கட்டணத்தில் மின் இணைப்புக்
கேட்டார்கள். விரைவில் கொடுக்கச் சொல்லி ஆணையிடப்
பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தெய்வநாயகம் அவர்கள்
தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மின்வாரியத்திட
மிருந்து மின்சாரத்தை குறைந்த விலைக்கு வாங்கி அதிக
விலைக்கு நுகர்வோர்களுக்கு விற்கிறார்கள் என்று குறிப்பிட்
டார்கள். அது உண்மை தான். தமிழ் நாட்டில் மதுரை,
கோவை மாநகராட்சிகளும், தஞ்சை, கரூர், பொள்ளாச்சி,
போன்ற நகராட்சிகளும் இதுபோன்ற வியாபாரத்தில் ஈடுபட்
டிருக்கின்றன. வாரியத்திடம் இந்த மாநகராட்சிகளும், நக
ராட்சிகளும் குறைந்த அழுத்த இணைப்புக்கு எல். டி. கனெக்ஷன்
50 பைசா அல்லது 55 பைசாவிற்கு வாங்கி, அதை நுகர்வோர்
களுக்கு 70 பைசா முதல் 150 பைசா வரையில் விற்கிறார்கள்.
உயர் அழுத்த இணைப்புகளுக்கு (ஹை டென்ஷன்) மின்சார
வாரியத்திடமிருந்து யூனிட்டுக்கு 72 பைசா முதல் 98 பைசா
வரையில் விலைக்கு வாங்கி 80 பைசா முதல் 193 பைசா
வரையில் விலைக்கு விற்கிறார்கள். இதனால் நுகர்வோர்கள்
பாதிக்கப்படுகிறார்கள். அதனால் இந்த முறையை மாற்றச்
சொல்லி வாரியம் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது.
அரசு அதுபற்றி பரிசீலனை செய்து வருகிறது.

அடுத்து மீனவர்கள் வசிக்கும் குப்பங்களுக்கு மின் இணைப்பு
கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் சொன்னார்கள்.
அதுபற்றி நடவடிக்கையெடுக்கப்படும்.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 12

வேலூர் மின்சார வாரிய அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப் பட்டும் ஒரு பகுதி இன்னும் வேலூரில் இருக்கிறது என்று சொன்னார்கள். இடவசதி கிடைத்தவுடன் அதைத் திருப்பத் தூருக்குப் போகச் சொல்லி கட்டளையிடப்படும். திரு. அன்பழகன் அவர்கள் இதுபற்றி சொன்னார்கள்.

இன்னொன்று, கதவடைப்பு அல்லது வேலை நிறுத்தம் இராணிப்பேட்டை போன்ற தொழிற்சாலை வளாகத்தில் ஏற் படும் அளவிற்கு மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது என்று திரு. பழனி அவர்கள் சொன்னார்கள். சுய தேவைப் பூர்த்தி செய்து கொள்ளும்பொருட்டு கும்மிடிப்பூண்டி, இராணிப் பேட்டை, ஒசூர் ஆகிய இடங்களில் உள்ள சிப்காட் தொழிற் சாலை நிறுவனங்களுக்கு ஒவ்வொரு இடத்திலும் 5 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி செய்யும் நிலையம் ஏற்படுத்த வாரியம் பரிந்துரை செய்து, முதல் கட்டமாக ஒசூரில் 5 மெகா வாட் மின் உற்பத்தி நிலையம் விரைவில் துவக்கப்பட மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை யெடுத்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

மதுரை மாநகராட்சி மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய சுமார் எட்டு கோடி ரூபாய் பணத்தை தவணைகளில் கட்டச் சொல்லி அரசு ஆணையிட்டிருக்கிறது.

மால்கோ அலுமினிய கம்பெனி 20 கோடி ரூபாய் கட்ட வேண்டுமென்று மின்சார வாரியம் கோரியதை சென்னை உயர்நீதி மன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன்மீது உச்ச நீதிமன்றத்திற்கு மின்வாரியம் முறையீடு செய்திருக்கிறது எனவே உச்ச நீதிமன்றம் தீர்ப்பைச் சொல்கிற வரையில் அதுபற்றி எதுவும் சொல்ல இயலாது.

சென்னை மாநகராட்சியில்கூட தெரு விளக்குகளை மாநக ராட்சியே மேற்பார்வை செய்து வருகிறது. சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகராட்சிகள் மற்றும் தஞ்சை, கரூர், பொள்ளாச்சி போன்ற நகராட்சிகளில் நிலவும் இரட்டை ஆட்சி முறை பற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடனும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடனும் கலந்து பேசி நல்ல முடிவு எடுக்கலாம்.

கிராமங்கள், பேரூராட்சிகள், நகரியங்கள் ஆகியவைகளில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறையே மின் விளக்குகள் எரி வதைப் பராமரித்து வருகின்றன. நகராட்சிகளில் மாத்திரம்தான் மின்சார வாரியம் தெரு விளக்குகளை மேற்பார்வை செய்வதைப் பொறுப்பேற்று இருக்கிறது. குடிதண்ணீர், நகராட்சிகளில் 24 மணி நேரமும் கிடைப்பதற்கு அரசாங்கம் டெபாசிட் ஒர்க் என்ற முறையில் வாரியத்தை செய்யச் சொல்லி ஆணையிட்டிருக்கிறது. ஆனால் கிராமங்களுக்கு அதுபோன்ற திட்டங்களை விஸ்தரிக்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசவேண்டும்.



1987 நவம்பர் 12] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

வீட்டு இணைப்புகள்—வீடுகளுக்கு இணைப்பு கொடுப்பது, தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு கொடுப்பது ஆகியவை களிலும், நீர்ப்பாசன பம்ப் செட்டுகளின் குதிரை ஓட்ட கணக்குப் பதிவேடுகளிலும் முரண்பாடுகள், முறைகேடுகள் இருப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் புகார் கொடுத் தால் அதன் மீது தக்க நடவடிக்கையெடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

தொழிலாளர்களுடன் மின்சார வாரியம் நல்ல உறவு வைத்திருக்கிறது. எண்ணூர், தூத்துக்குடி ஆகிய இரண்டு அனல் மின் நிலையங்களும் தொழில் கூட்டுறவுப் பணிச் சங்கம் (இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் சர்வீஸ் சொசைட்டி) தற்காலிக ஊழியர்களுக்காக நடத்தி வருகிறது. மின் வாரியம் 1986–87, 1987–88 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையில் பொறியாளர்கள் மற்றும் வேறு பல பணிகளில் 7,817 பேர் களுக்கு வேலை வாய்ப்பு அளித்ததற்கு பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 1–00)

இந்திய அரசாங்கம், யூனிடோ, ஐ. எல். ஓ. திட்டத்தின் கீழ் இந்தியாவில் ஆலோசனைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 3 மின் வாரியங்களில் தமிழ்நாடு மின்சார வாரியமும் ஒன்று என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் தொழிற் சாலைகளில் அனுமதிக்கப்பட்ட அளவை மீறி தவறாக மின்சா ரத்தை உபயோகப்படுத்தினார்கள் 'அன்-ஆத்தரைஸ்டு ஓவர்-லோடு' என்ற குற்றத்தின் மீது பெனல்டி போடவேண்டியதாக இருக்கிறது. பெனல்டி போடுவதற்கு முன்பு விசாரிப்பதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று தெரிவித்தார்கள். இது நல்ல யோசனை. இதைப்பற்றி நிபுணர் குழு ஒரு அறிக்கையை வாரியத்திடம் கொடுத்து, வாரியம் இதைப் பற்றி ஆய்வு செய்கிறது. விரைவில் தேவையான விதிவிலக்குகள், பரிகாரங் கள் தரப்படும்.

பாலாறு படுகைத் திட்டத்தின் கீழ் 90 நாட்களுக்குள் தாசில்தார் சான்றிதழ் வழங்கவேண்டும் என்று இருப்பது கஷ்டத்தைத் தருகிறது என்று சொன்னார்கள். இதை மேலும் 90 நாட்களுக்கு நீடிக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள் நேற்றைய தினம் மிக உருக்கமாகப் பேசினார்கள். ஏழை களுக்குக் குடிசை வீட்டுக்கு மின் விளக்கு கொடுக்கிறேன் என்கிறார்கள், விவசாயிகளுக்கு இலவசமாக மின்சார இணைப்பு கொடுக்கிறேன் என்கிறார்கள், ஆனால் என்னுடைய தொகுதி யிலே ஒன்று கூட இல்லையே என்று சொன்னார்கள். நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சேகரித்த விவரத்தை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன்.

ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் உள்ள மொத்த கிராமங்கள்
63 ஆகும். டோட்டல் நம்பர் ஆப் சர்வீசஸ் 1–11–1987 அன்று
குடிசை வீடுகளுக்கு விளக்கு கொடுத்த எண்ணிக்கை மாத்திரம்
1,641 ஆகும். அக்ரிகல்சுரல் சர்வீசஸ், விவசாயிகளுக்கு பம்பு
செட்டுகள் இணைப்புக்கு கொடுக்கப்பட்ட எண்ணிக்கை 1,974
ஆகும். நம்பர் ஆப் சர்வீசஸ் எஃபக்டட்,— இது ஏதோ பழங்கதை
அல்ல. .—4–1987 முதல் 31–10–1987, கரை கடந்த சில மாதங்
களில் மாத்திரம் 46 குடிசைகளுக்கு ஒரு விளக்கும், 102 விவ
சாயிகளுடைய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பும் கொடுக்கப்
பட்டு இருக்கிறது. வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டி
வந்த அப்ளிகேஷன் பெண்டிங், நிலுவையில் உள்ள நம்பரே 15
தான். அதைப்போலவே 265 தான் மொத்தம், விவசாயி
களுக்கு பம்பு செட்டுகளுக்கு இணைப்பு வேண்டும் என்று கேட்ட
தாக இருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததில் 1972 முதல் 1986
வரை நீக்கப்பட்ட ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்குச் சிறப்பு
பண உதவி அளிக்க வேண்டும் என்ற பிரச்சினையைப் பற்றி
இந்த மாமன்றத்திற்கு மின்சார வாரியம் என்ன நடவடிக்கை
எடுத்தது என்பதைப் பற்றித் தெரிவிக்க நான் கடமைப்பட்டு
இருக்கிறேன். 30–9–1987 அன்று வரை அப்ளிகேசன், 6,209
மனுக்களே வந்தன. அதில் இந்த ஒரு மாத காலத்திற்குள்
249 பேர்களுக்குக் கொடுப்பதற்குத் தீர்மானம் செய்யப்பட்டு
இருக்கிறது. இன்னும் மீதமுள்ள 5,006 மனுக்களைப் பற்றி
விரைவில் பரிசீலனை செய்து, அதற்குரிய பரிகாரமும் தரப்படும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பல்வேறு பிரச்சினை
களுக்குக் கூடுமானவரை நான் பதிலை அளித்து இருக்கிறேன்.
மேலும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் நூற்பாலைகள், மின்
சாரத்தையே அடிப்படையாக் அதிகமாக உபயோகப்படுத்துகிற
'மோஸ்ட் பவர் இன்டென்சிவ் இண்டஸ்ட்ரீஸ்' போன்ற இவை
கள் எல்லாம் மின்சாரம் இல்லாததால் கஷ்டப்படுவதாகச் சொன்
னார்கள். மின் வாரியத்துனுடைய தகவல் பிரகாரம் தற்போது
சில தொழிற்சாலைகள் இரவில் 2 ஷிப்டுகளைத்தான் ஓட்டு
கிறார்கள். 3 ஷிப்டுகள் ஓட்டுவதற்குத் தொழிற்சாலைகள்
முன் வருமானால் அது எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும்
நாம் ஒன்றைச் செய்யலாம். இப்போது மின் வாரியத்திடம்
இரவு நேரத்தில் 150 முதல் 200 மெகா வாட் வரை மின் சக்தி
உபரியாக இருக்கிறது. இது நிரந்தரமாக அவ்வளவையும்,
கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் இல்லாமல் கிடைக்கின்ற
போது, கொடுங்கள் வாங்கிக் கொள்கிறோம் என்ற முறையில்
சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள். மின்சார வாரியத்தை
அணுகினால் 150 முதல் 200 வரை உள்ள மெகாவாட்டைத்
தொழிற்சாலைகள் பெற்று அவர்கள் புதிய தொழில்களைத்
துவக்கலாம். ஏற்கனவே வேண்டும் என்று கேட்பவர்களுடைய





தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்று தெரிவித்துக் கொண்டு, நேரம் இல்லாத காரணத்தால் நான் பதில் கூறவில்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் மீது மின்சார வாரியம் நல்ல முடிவுகளை எடுத்து அதைத் தெரிவிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை மாநகராட்சியின் இரட்டைக் கொள்கையைச் சமப்படுத்துவதற்கு ஆலோசனை செய்கிறேன் என்று சொன்னார்கள். அதோடு நான் கூறிய கூற்று மதுரை மாநகராட்சி கடன் வழங்க வேண்டும் என்று 4½ கோடி ரூபாயும், அதற்கு வட்டி 2 கோடி ரூபாயும் ஆக மொத்தம் சுமார் 6 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என்று நமது மின்சார வாரியம் கேட்டுக் கொண்டு அவர்களுடன் வாதாடிக் கொண்டிருக்கிறது. கடன் வழங்குவதற்கு மாநகராட்சி தயாராகவும் இல்லை. வழக்கு மன்றத்தில் இருந்த வழக்கையும் முன்னாள் மேயர் திரு. பட்டுராஜன் அவர்கள் வாபஸ் பெற்று விட்ட காரணத்தால் அந்தப் பணத்தைக் கட்ட வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதையும் நமது மாநில அரசு தயவு செய்து வஜா செய்ய வகை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அதை செய்வார்கள் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்தால்தான் அந்த மின்சார வாரியம் அங்கு தகுந்த முறையில் செயல்படும் என்று மக்கள் நம்புகிறார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையாக என்ன சொல்லப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி மின்சார வாரியம் வசூலிக்கத் தயாராகத்தான் இருக்கிறது. எமன் என்றால்கூட விட மாட்டார்கள். ஆனால் தமிழக அரசு மாநகராட்சிகளுக்கு இத்தனை தவணைகளில் கொடுக்க வேண்டும் என்று ஒரு ஆணை பிறப்பித்து இருக்கிறது. அதன்படி அவர்கள் கட்டி விடுகிறார்கள். அதன்படி கட்டவில்லை என்று சொன்னால் வசூலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாலாற்று படுகையிலே சான்றிதழ் பெறுவதிலே இன்னும் 90 நாட்கள் அதிகமாக ஒதுக்குவதாக சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாலாற்றுப் பகுதிக்கு சம்பந்தம் இல்லாத இடத்தில் கூட இதைக் கேட்பதால் பல விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் வருவாய்த்துறையின் மூலமாக அந்தச் சான்றிதழ்களை அளிக்கக் கூடாது என்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் அந்த பாலாற்றுப் படுகை சான்றிதழ் தேவையில்லை என்ற ஒரு உத்திரவை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 12

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் என்பது
ஒரு தனியான வாரியம். அதைப்பற்றி அவர்களுடன் கலந்து
தான் முடிவு சொல்ல முடியும்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரிடமிருந்து இரண்டு
விளக்கங்களைப் பெற விரும்புகிறேன். ஒன்று, உச்ச நீதிமன்ற
தீர்ப்பின்படி 7 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட
வேண்டிய 6 சதவீதம் கூடிய பணத்தை வழங்கப்படுவது பரி
சீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
பரிசீலனை என்ற பெயரில் ரூல்ஸ்-ஐக் காட்டி அந்த 7 ஆயிரம்
தொழிலாளர்களில் பெரும் பகுதியினருக்கு மறுக்கின்ற போக்கு
நிலவுகின்றது, ஆகவே ரூல்ஸை மேற்கோள் காட்டாமல் தீர்ப்
பின்படி அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுப்பார்களா?

இன்னொரு முக்கியமான விஷயம், அனல் மற்றும் புனல்
மின் திட்டங்கள் ஏறத்தாழ 13 திட்டங்கள் மத்திய அரசிடம்
இன்னமும் கிடப்பில் இருக்கின்றன என்பதையும், அது குறித்து
வேதனையை மட்டுமே பகிர்ந்து கொள்ளலாம் என்றும் அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது,
இது மாநிலத்தினுடைய ஒட்டு மொத்தமான பிரச்சினை என்
பதால் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய அனைத்து அரசியல்
கட்சிகளையும் அழைத்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றி
வைப்பதற்குப் பொருத்தமாக என்ன நடவடிக்கைகளை மேற்
கொள்ளலாம் என்பதுபற்றிப் பரிசீலிப்பதற்கு சர்வ கட்சிக்
கூட்டத்தை கூட்ட அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்
உரையில் சொல்லும்போது மால்கோவிடத்தில் பெறவேண்டிய
20 கோடி ரூபாயைப் பற்றிச் சொன்னார்கள். அது சம்பந்தமாக
உச்ச நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று சொன்னார்கள்.
நான் கேட்டது 20 கோடி ரூபாய் பாக்கி எப்படி வந்தது?
மாதம் 10 ஆயிரம் ரூபாய், 15 ஆயிரம் ரூபாய் என்றால் ஒரு
கட்டவில்லை என்றால் அடுத்த மாதத்தில் அதன் மின் இணைப்
பைத் துண்டிக்க வேண்டியது தானே நம்முடைய பழக்கம்;
ஏன் அதைச் செய்யவில்லை, இந்த நிலுவை எவ்வளவு ஆண்டு
காலமாக இருந்து வருகிறது என்பதுதான் என்னுடைய கேள்வி.
அதை வசூல் செய்ய ஏன் தவறினார்கள் என்பதுதான் என்
னுடைய கேள்வி.

இன்னும் ஒன்று, மின் கட்டணத்தை உயர்த்துவதைத் தவிர
வேறு வழி இல்லை என்று இந்த கொள்கை விளக்கக் குறிப்பில்
இருக்கிறது. அதை இன்னும் உயர்த்தக் கூடாது என்றும் நான்
தெரிவித்தேன். தமிழக அரசு பல்வேறு நல திட்டங்களுக்குச்
செலவிடும் மின்சாரத்தாலே ரூபாய் 246 கோடி அதிகமாகிறது



1987 நவம்பர் 12] [திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்]

என்று சொல்லி அதை அரசே சரிக் கட்டி விடுகிறது என்று
சொன்னார்கள். மின் கட்டணத்தை உயர்த்த அரசு எண்ணி
இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் அமைச்சர்
அவர்கள் விளக்கம் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. கே. சுப்பராயன் அவர்கள் கேட்ட விளக்கத்திற்கு சுப்ரீம்
கோர்ட்டின் தீர்ப்பின் பிரகாரமே பரிகாரம் தரப்படும். அதை
மீறினால் கோர்ட்டின் அவமரியாதைக் குற்றத்திற்கு ஆளாவோம்
என்று நாங்கள் நன்கு உணர்வோம்.

மால்கோ அலுமினியம் தொழிற்சாலையைப் பற்றிக் கேட்
டார்கள். அவர்கள் பெனல்ட்டிதான் போட்டார்கள். அந்த
பெனல்டி போட்டது தவறு என்றும், ஆகவே வசூலிக்கத் தகுதி
உடையதா என்பது பற்றியும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்து
இருக்கிறது. மின் வாரியம் அவர்களிடம் வசூல் செய்ய வேண்டும்
என்று சொல்கிறீர்கள். தொடர்ந்து அவர்கள் தடை ஆணை
யைச் சென்னை உயர் நீதிமன்றத்தில் வாங்கியதால்தான்
அதைச் செய்ய முடியவில்லை. அதற்கு மாறாக மின்சார
வாரியமே கொடுக்க வேண்டும் என்றுகூட உயர்நீதிமன்றம் தீர்ப்பு
அளித்து இருக்கிறது. மால்கோ அலுமினியத் தொழிற்சாலை
மின்சார வாரியத்திடம் வசூலிக்காமல் இருக்க வேண்டும்.

(பிற்பகல் 1–10)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, விவசாய பம்பு செட்டுகளை 'ஷிப்டிங்'
செய்வதற்கு ஒரு இடத்திலே பயன்படாத மின்சாரத்தை வேறு
இடத்திற்கு மாற்றிக் கொள்வதற்குக் கிராமப்புற அளவிலே
விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதைக்
குறைந்தபட்சம் அவர்கள் செலவிலே செய்வதானால், டிவிஷன்
அளவிலே அதற்கு ஒரு விதி விலக்கு கொடுக்க அமைச்சரவர்கள்
உத்தரவாதம் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : அதுபற்றி கலந்து
பேசி, பிற்பாடு பதில் சொல்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மின்சார
வாரியத்தில் நல்ல தொழிலுறவு ஏற்பட்டிருப்பதாகச் சொன்
னார்கள். 'சோவீனிர்' வெளியிட்டு விளம்பரம் தேடிக் கொண்
டார்கள் என்ற காரணத்திற்காக 41 தொழிலாளர்களை
வேலை நீக்கம் செய்வதற்காக மின் வாரியம் எடுத்துக் கொண்
டிருக்கிற முடிவு, இதன் காரணமாக வாபஸ் பெற்றுக் கொள்
கிறது என்ற கணக்கில் எடுத்துக் கொள்ளலாமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி உயர்நீதி
மன்றமே தெளிவான தீர்ப்பை அளித்திருக்கிறது என்று கருது
கிறேன். நான் தீர்ப்பை பார்த்து விட்டு பிற்பாடு பதில் சொல்
கிறேன்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதியில் ஏழைகள்
தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு கிணற்று விவ
சாயத்தைத் தவிர, வேறு விவசாயமே கிடையாது. பம்புகளுக்குக்
கொடுத்ததைத் தவிர, இன்னும் வேறு அதிகமான பேர்களுக்குக்
கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைத்தான் நான் குறிப்பிட்
டேன். கட்டிய வீடுகளுக்கு, இலவசமாகக் கட்டிக் கொடுத்த
வீடுகளுக்கு, ஒரு வீட்டிற்குக் கூட அந்த மாதிரி கொடுத்துக்
காணவில்லையே என்று சொன்னேன். மேலும் ஏதோ எரியும்
விளக்குகளில், மிகக் குறைந்த பவரே, லாந்தர் விளக்கு மாதிரி
எரிகிறது. அதையும் அபிவிருத்தி செய்வதற்கு நம்முடைய
அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து என்ன நடவடிக்கை எடுப்பார்கள்
என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினமே,
ஒட்டப்பிடாரம் பகுதியில் மின் அழுத்தக் குறைவு இருந்தால்,
அதைப் போக்கவும், விளக்குகள் எரியாத இடங்களுக்கு மனுக்கள்
வந்திருந்தால், அவைகளுக்கு விரைவிலே அனுமதி அளிக்கவும்,
அதைப்போலவே விவசாயிகளின் பம்புகளுக்கு இணைப்புகள்
கொடுக்கவும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. வி...
வில் ஒரு மாத காலம் பார்த்து, எப்படி மின்சார வாரியம் தங்கள்
தொகுதியில் பணிபுரிகிறது என்பதைப் பார்த்து, பிற்பா...
அவர்களே மகிழ்ச்சியாகச் சொல்லும்படி நடவடிக்கை எடுக்க...
படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மின்வாரியத்தில் 1984 ஆம் ஆண்டு
தொழிற்சங்கங்களோடு தொழிலாளர்கள் ஊதிய உயர்வு
பற்றி போட்ட ஒப்பந்தம் எப்போது அமல்படுத்தப்படும் என்
பதை அமைச்சரவர்கள் மூலமாக தெரிந்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை மானியத்திலே
பேசுகின்றபோது ஏற்கனவே மின்வாரியத்தில் மின் அனுமதிபெற்
றவர்கள் குறைந்த மின் அழுத்த சக்தியை வைத்துக்கொண்
டிருந்த போதிலும், கூடுதலான இணைப்புகளை வைத்து இருக்கி
றீர்கள் என்ற காரணம் காட்டி, இப்போது ரூ. 2,000-லிருந்து
ரூ. 5,000 வரை கட்டவேண்டுமென்று பலருக்கும் திருநெல்வேலி





மாவட்டத்தில் நோட்டீஸ் வந்திருக்கிறது. உண்மையிலேயே
குறைந்த மின் அழுத்தத்தை உபயோகிப்பவர்களுக்கு அவ்வாறு
செய்வது நியாயமில்லை என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர்
அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன். அதன் மீது
துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? ஏற்கனவே
"ரெவின்யூ ரெக்கவரி" என்றெல்லாம் பணத்தை வசூலித்த
வர்களுக்கு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு நியாய
மான "பிசினஸ் ஸ்டாண்டர்டு" அடிப்படையிலே மாண்புமிகு
அமைச்சரவர்கள் "நோ ஒர்க், நோ பே" என்று சொல்வார்
கள். அதுபோன்று "நோ யூஸ், நோ கலெக்ஷன்" என்ற முறை
யிலே அந்தப் பணத்தைத் திருப்பித் தர மின் வாரியம் முன்
வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கே. சுப்பராயன் : நான் இரண்டு கேள்விகளைக் கேட்
டேன். அதில் ஒன்றுக்குப் பதில் இல்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைக் கம்பல்
பண்ண முடியாது. அமைச்சர் அவர்களை இப்படிச் சொல்லுங்
கள் என்று சேர் சொல்ல முடியாது. கொள்கை சம்பந்தமாக
தகவல் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலை
வர் அவர்களே, நான் பதில் கூறாத பொருட்களுக்கு நிச்சயம்
வாரியம் குறிப்பு எடுத்திருக்கிறது. அவற்றின்மீது நிச்சியமாக
சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்குப் பதில் அனுப்பப்படும் என்று
நான் உறுதி கூறுகிறேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு
நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட
தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள்
(நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்
வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1987)
ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தமிழ்நாடு 1987-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நில உச்ச
வரம்பு நிர்ணயித்தல்) அவசரச் சட்டத்திற்கு (தமிழ்நாடு அவ
சரச் சட்டம் 4/1987) பதிலாகக் கொண்டு வரப்பட்டுள்ள
தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு
நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு(சட்டமன்றப் பேரவை
சட்ட முன் வடிவு எண் 40/1987) இது.

*10–11–1987ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்
வெளியிடப்பெற்றுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 12

அண்மையில் புகுத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் தமிழ்நாடு
நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின்
37–B பிரிவின்படி கல்வி மற்றும் மருத்துவமனை நோக்கங்களுக்
சாக நிலத்தை வைத்திருப்பதற்கு அல்லது கையகப்படுத்துவதற்கு
பொதுப் பொறுப்புக் கழகங்கள், கல்வி நிலையங்கள், மருத்துவ
மனைகள் ஆகியவற்றிற்கு ஆதரவாகப் பின் தேதியிட்டு இயங்
கும் வகையிலோ அல்லது முன் தேதியிட்டு இயங்கும் வகையிலோ
அனுமதி கோரி அரசுக்கு விண்ணப்பிக்க வழிவகை செய்யப்
பட்டுள்ளது. ஆனால், மேற்சொல்லப்பட்ட 37–B பிரிவின் கீழ்
வழங்கப்படும் அனுமதியானது, பின்னுற (Only prospective effect)
இயங்கும் வகையில் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டுமென்றும்
அத்தகைய அனுமதியானது பொதுப் பொறுப்புக் கழகங்களுக்கு
மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும் என்றும் மற்றும் மேற்சொல்
லப்பட்ட 37–B-யில் வருகின்ற மருத்துவமனை என்னும் சொற்
றொடருக்குப் பொருள் வரையறை ( Define ) செய்யப்படுதல்
வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டு, அதற்கிணங்க 1987
ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்)
அவசரச் சட்டம் 1987 (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1987)
ஆளுநர் அவர்களால் அதிகார முறையில் வெளியிடப்பட்டது.

மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்கு பதிலாக இச்சட்ட முன்
வடிவு கொண்டு வரப்படுகின்றது.

சட்ட முன் வடிவைப் பேரவை ஏற்க வேண்டுமென கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி
கிறேன் :—

" 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள்
(நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்
வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/
1987)......உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு
அனுப்பப் பெற வேண்டும். (உறுப்பினர்கள் பெயர் பின்னர்
அறிவிக்கப்படும்."

திரு. எம். செல்லமுத்து : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த அரசினால், நம்முடைய வருவாய்த்
துறை அமைச்சர் அவர்களால் முன் வைக்கப்பட்டிருக்கக்கூடிய
இந்தத் திருத்தச் சட்டம் விவசாய நிலங்கள் சம்பந்தப்பட்ட
நில உச்சவரம்புச் சட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய
ஒரு திருத்தச் சட்டமாகும். இந்த நில உச்சவரம்புச் சட்டத்தில்
37 பிரிவிற்கு 'பி' என்ற ஒரு புதிய பிரிவும் சேர்க்கப்பட்டு கொண்டு



1987 நவம்பர் 12] [திரு. கோ. வீரய்யன்]

வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பற்றி நம்முடைய
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கும்போது சொன்
னார்கள். பொது பொறுப்புக் கழகங்கள், கல்வி நிறுவனங்களின்
பெயராலும், மருத்துவ நிறுவனங்களின் பெயராலும் நிலங்களை
முன் தேதியிட்டோ அல்லது பின் தேதியிட்டோ என்பதற்குப்
பதிலாக பின்தேதியிட்டு வைத்துக் கொள்வதற்கு வகை செய்
யக்கூடிய முறையில் இந்தச் சட்ட முன்வடிவு முன்மொழியப்
பட்டிருக்கிறது.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆளுநர் அவர்களால்
அவசரச் சட்டமாக அறிவிக்கப்பட்டச் சட்டத்திற்கு இந்த 40/87
என்ற சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதாகக் குறிப்பிட்டார்
கள். குறிப்பாக இந்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டில் அரசு
இதுவரையில் கடைப்பிடித்து வந்திருக்கக்கூடிய நிலச் சீர்திருத்
தக் கொள்கைகளிலிருந்து அதற்கு எதிராகப் பின்னுக்கு போய்
இருக்கக்கூடிய அளவிற்கு இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு
அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக நில உடைமைக்கு
உச்சவரம்பு கட்டப்பட்டு உபரி நிலம் எடுக்கப்பட்டு அவைகளை
நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுத்து அவர்களைப் பொருளாதார
ரீதியாக முன்னுக்குக் கொண்டு வருவதற்காக கொண்டுவரப்பட்ட
அந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டதோ
அந்த நோக்கமே இன்றையதினம் தோல்வியடைந்திருக்கிறது.
அப்படிப் பலவீனப்பட்டிருக்கக்கூடிய நேரத்தில், குறிப்பாக 1.50
கோடி ஏக்கர்கள் வரை விவசாயத்தில் இருக்கக்கூடிய தமிழகத்
தில் 1961 ஆம் ஆண்டிலிருந்து 26 ஆண்டுகள் முயற்சித்தும்கூட
உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக அரசு கையகப்படுத்தியிருப்
பதோ 1.20 இலட்சம் ஏக்கர். அப்படிக் கையகபபடுத்தியதிலே
ஒரு பாதிதான் விநியோகிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தக் சூழ்நிலை
யில் மூலச் சட்டத்திலே இருக்கக்கூடிய இரண்டாவது பிரிவு
கோவில் மடம், அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்க
ளுக்கு இந்த நில உச்சவரம்புச் சட்டம் பொருந்தாது என்று
கூறியிருப்பதே சரியல்ல. அதற்கும் இந்த உச்சவரம்புச் சட்டம்
பொருந்தும் என்று திருத்தப்பட வேண்டும் என்று 1960 ஆம்
ஆண்டிலிருந்து நாங்கள் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

(பிற்பகல் 1–20)

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு இந்த ஒரு
புதிய பிரிவைச் சேர்ப்பது பொது அறக்கட்டளைகள், குறிப்பாக,
கல்வி, மருத்துவத்திற்கு விவசாய நிலங்களை வைத்துக்கொள்ள
அரசு அனுமதி கோரலாம் என்று கொண்டுவந்திருப்பது சரி
யானது அல்ல, நியாயமானது அல்ல. பழைய நிலையிலிருந்து
பின்வாங்கக் கூடிய அளவிற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1987 நவம்பர் 12

குறிப்பாக, இது அவசரச் சட்டத்தில் இருந்ததை விட— அவசரச் சட்டத்தில் பொது பொறுப்புக் கழகங்கள், மருத்துவப் பிரிவுகள், அல்லது கல்விப் பிரிவுகள் வைத்துக் கொள்ளலாம் என்பதிலிருந்துகூட மாற்றி இப்போது, பொது பொறுப்புக் கழகங்களினுடைய மருத்துவப் பிரிவுகளுக்கும் அல்லது கல்விக்கும் மட்டும் உள்ள நிலங்களுக்கு என்று நாங்கள் குறிப்பிடுகிறோம்: அதேபோல் முன் தேதியிட்டு என்பதை மாற்றி பின் தேதி இட்டதற்கு மட்டும் நாங்கள் சொல்கிறோம் என்று நீங்கள் குறிப்பிடுகிறபோதுகூட சொல்லலாம்.

அவசரச் சட்டத்திலேயே இந்த அளவிற்குப் போய்— இதிலி ருந்து பின் வாங்கி— இன்றைக்கு ரொம்ப மோசமான நிலைக்குப் போகிறது என்பதைத் தெரிந்ததற்குப் பிறகு, அதில் ஏரடி பின் வாங்கி அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அசல் சட்டத்தினுடைய 5ஆவது பிரிவில் கல்வி, மருத்துவமனை நிறுவனங்களுக்கு நிலம் எவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. குறிப்பாக, பிரிவு5-இல் அதனுடைய அட்டவணையில் கல்லூரிகள் என்றால் 40 ஸ்டாண்டர்டு ஏக்கர், உயர்நிலைப்பள்ளி கள் என்றால் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர், நடுநிலைப் பள்ளிகள் என்றால் 10 ஸ்டாண்டர்டு ஏக்கர், ஆரம்பப் பள்ளிகள் என் றால் 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், பாலிடெக்னிக்குகள் என்றால் 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், விவசாயப் பிரிவு கல்வி என்றால் ஸ்டாண்டர்டு ஏக்கர், அனாதை இல்லங்கள் என்றால் 25 ஸ்டாண் டர்டு ஏக்கர் வரையில் வைத்துக் கொள்ளலாம் என்று அதற்கு சீலிங்கே விதித்து அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே போல் நிலமே இல்லாமல் இருந்தால், அந்த சீலிங் அளவிற்கு நிலம் வாங்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்று அந்தச் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அப்படியிருந்தும்— அந்த அளவிற்கு வாங்க வேண்டிய அவ சியம் இல்லை என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறபோது, இப்போது நீங்கள் புதிதாக ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, பொது பொறுப்புக் கழகங்கள் கல்வி என்ற பெயரால் விவசாயம், பொறி யியல்; மருத்துவம், கால்நடை மருத்துவக் கல்லூரிகளுக்கும், விவசாயப் பிரிவு பள்ளிகளுக்கும், பாலிடெக்னிக்கினுடைய பள்ளி களுக்கும், நிலம் வைத்துக் கொள்வதற்குக் கோரலாம்; அதே போல், மருத்துவம் என்ற பெயரில், நோயாலோ, காயத்தாலோ வந்து வைத்தியம் செய்து கொள்பவர்கள், அத்துடன் மகப்பேறு இல்லங்கள், காப்பகங்கள், நோயாளர்கள் தங்குமிடங்கள், நோய் நீங்கி நலம் பெறும் காலத்தில் தங்கியிருக்கும் இடங்கள்— அப் படிப்பட்ட இந்த அமைப்புகள் பொது பொறுப்புக் கழகங்களின் பெயரிலே இருக்குமேயானால், அவைகள் தங்களுக்கு நிலம் வேண்டும் என்று கோரி, விவசாய நிலங்களைக் கையகப் படுத்துவதற்கு அரசிற்கு அனுமதி கோரலாம், அதற்கு எந்த சீலிங்கும் கிடையாது, எந்த எல்லையும் கிடையாது, எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லக்



1987 நவம்பர் 12] [திரு. கோ. வீரய்யன்]

கொண்டு வரப்பட்டிருப்பது எந்த அளவிற்குப் கூடிய அளவிற்குக் பொருத்தமானது என்பதை இந்த நேரத்தில் யோசிக்க வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல்தான், பொது அறக்கட்டளைகள் விவசாய நிலங் கள் வைத்துக் கொள்ள அரசிற்கு மனுச் செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதற்கு மேலும், போய், முன் தேதி யிட்டு, இப்போதுகூட துவங்கப்பட்ட அந்த பொது பொறுப்புக் கழகங்கள் அப்படிப்பட்ட நிறுவனங்களை உண்டாக்கி ஒரு பாலி டெக்னிக் என்ற பெயரில் அல்லது சில கல்லூரிகள் என்ற பெயரில் அல்லது சில மருத்துவ வசதிகளைச் செய்யக்கூடிய இடங்கள் என்ற பெயரில் கொட்டகைகளை மட்டும் போட்டுக் கொண்டு அவைகள் இந்தக் காரியங்களிலே ஈடுபட்டுக் கொண் டிருக்கின்றன என்று காரணம் காட்டி அதன் பெயரிலே நிலம் பெறுவதற்கு அரசிற்கு மனுச் செய்யலாம்; அரசிற்கு மனுச் செய்து அந்த அனுமதியைப் பெற்று நிலங்களைக் கொண்டு வரமுடியும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்த முடிவு எடுத் திருப்பது எந்த வகையிலேயும் சரியானது அல்ல.

ஒரிஜினல் சட்டத்திலேயே ஏராளமான ஓட்டைகள் இருக் கின்றன, ஏராளமான விதிவிலக்குகள் இருக்கின்றன. அதனால் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய உபரி நிலம் அளவிற்கு கிடைக்க வசதி இல்லாத நிலையிருக்கிறது என்று சொல்லும் போது, மேலும் அதிலே வாய்ப்பளித்து, சிலர் அப்பாப்பட்ட பெயர்களிலே, பொது பொறுப்புக் கழகங்கள் என்ற பெயரில், மருத்துவமனை என்ற பெயரில், கல்வி என்ற பெயரில், "நான் விவசாயக் கல்லூரி வைத்திருக்கிறேன் அல்லது மருத்துவக் கல்லூரி வைத்திருக்கிறேன், நான் பொறியியல் கல்லூரி வைத் திருக்கிறேன் அல்லது நாங்கள் கால்நடை மருத்துவக் கல்லூரி வைத்திருக்கிறோம்" என்று அவைகளுக்கு விவசாய நிலங்கள் சேருவதற்கும், அதேபோல், மருத்துவமனைக்கு காயத் தாலோ, அல்லது நோயாலோ வரக்கூடியவர்களுக்கு வைத்தியம் செய்யக்கூடியவர்கள் எல்லாம், "பொது பொறுப்புக் கழகத் தின் சார்பில் நாங்கள் நிர்வகிக்கிறோம், அதற்கு விவசாய நிலம் வேண்டும்" என்று கோரிப் பெற்று, விவசாய நிலத்தை வைத் துக் கொள்ளலாம் என்று சொல்லக்கூடிய முறையில் இப்படி ஒரு திருத்தம் கொண்டு வந்திருப்பது நிச்சயமாக எந்த வகை யிலும் பொருத்தமானது அல்ல.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கே தெரியும், சமீபத் திலே டெல்லியிலே கூடிய, நாடு முழுவதும் இருக்கக்கூடிய வருவாய்த்துறை அமைச்சர்களுடைய அந்தக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகளுக்கு விரோதமாக, கொள்கை களுக்கு விரோதமாக, சாதாரண ஏழை எளிய மக்களுக்கு உபரி யைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக, வசதிபடைத்தவர்கள் மேலும் விவசாய நிலங்களைத் தங்கள் வசம் கையகப்படுத்திக்

[திரு. கோ. வீரய்யன்] [1987 நவம்பர் 12

கொள்வதற்கான முறையிலே இருக்கக்கூடிய சட்டமாக, சட்ட முன் வடிவாக இது கொண்டுவரப்பட்டிருப்பது எந்த வகையிலும் பொருத்தமானதல்ல, நியாயமானதல்ல.

இந்தச் சட்டம் என்பது மிகவும் பிற்போக்கான, மோசமான, நிலவுடைமையாளர்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒரு சட்ட முன் வடிவாக அமைந்திருக்கின்ற காரணத்தினாலே அரசு எப்படி அவசரச் சட்டத்திலிருந்து பெருமளவுக்கு, மோசமான நிலைமைக்குப் போய்விடும் என்பதை உணர்ந்து, அதிலிருந்து எப்படி பின் வாங்கியிருக்கிறதோ அதைப் போல இந்தச் சட்டத்தையும் அரசு கைவிட வேண்டும். அபபடிக் கைவிடுவதற்கு சங்கடம் இருக்குமேயானால், கட்டாயம் இதைப் பொதுமக்கள் கருத்து அறிவதற்காகப் பொறுக்கு குழுவிடம் ஒப்படைத்து, பொதுமக்களுடைய கருத்தை அறிந்து அதற்குப் பிறகு சட்டசபையினுடைய அனுமதிக்குக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன். இதைக் கட்டாயமாக பொதுமக்களுடைய கருத்துக்கு விடுங்கள். இது, மிக மிக மோசமான, நிலவுடைமையாளர்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒரு சட்டமாக இருக்கிறது. எனவே இதில் பொதுமக்களுடைய கருத்தையறிந்து அதற்குப் பிறகு இந்தச் சட்டதிருத்தத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று கூறிக்கொள்கிறேன். இதைக் கட்டாயமாக பொறுக்கு குழுவினுடைய பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும்; பொதுமக்களுடைய கருத்து இதன்மீது அறியப்பட வேண்டும். இது மோசமான, பிற்போக்கான சட்டம் என்ற முறையில், முதலிலேயே நான் கூறியதைப்போல அரசு கை விடுவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும். அப்படி முடியவில்லையென்று சொன்னால் இதில் பொதுமக்களுடைய கருத்தையறிய பொறுக்கு குழுவிற்கு அனுப்பிவிட வேண்டுமென்று மீண்டும் என்னுடைய கருத்தை வலியுறுத்தி அமர்கிறேன், வணக்கம்.

*திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நிலச் சீர்திருத்தச் சட்டத் திருத்தத்தை முன் மொழிந்து, அதிலே பேசுகின்ற ஒரு வாய்ப்பை வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தம் என்பது நம் தமிழ்நாட்டிலே வழக்கமாக அடிபடுகிற ஒரு சொல்தான். அதிலே கூடுதலாக, புரட்சி என்ற சொல்லும் சேர்ந்து அடிபடும். புரட்சி, இவ்வளவு நாளும் தமிழ் நாட்டிலே வந்திருக்கிற நிலச் சீர்திருத்தச் சட்டங்களெல்லாம், இருக்கிற நிலத்தை எடுப்பதற்காக என்று நாம் சீர்திருத்தம் செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய நாவலர், நிதியமைச்சர் அவர்கள், இவ்வளவு நாள் நாங்கள் ஏன் எடுத்துக்கொண்டிருந்தோம்; எங்களுடைய அரசு புரட்சிகரமாக நிலத்தைச் சேர்த்துக் கொடுப்பதற்கு ஒரு வழி செய்ய வேண்டு



1987 நவம்பர் 12] [திரு. மா. மணிமாறன்]

மென்று மருத்துவ வசதி, கல்வி நிலையங்கள் என்ற பெயராலே நிலத்தைச் சேர்த்துக் கொடுப்பதற்கு ஒரு நடவடிக்கையாக நம் அரசு சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறது. இதையும் ஒரு புரட்சியாகச் சேர்த்துக்கொள்ளலாம். இவ்வளவு நாட்களாக நாம் எடுத்து எடுத்துப் பார்த்தோம்; எடுக்க முடியவில்லை;. எடுக்க முடியவில்லை என்றால் என்ன செய்வது? இருப்பதைக் கொடுத்து விட்டுப் போய்விடலாம், அந்த ஒரு நல்ல நடவடிக்கை என்று நீங்கள் சேர்த்து கொடுத்து இருக்கிறீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட அடிக்கடி சொல்வார்கள், உச்சவரம்பு இல்லை இது; மிச்சவரம்புதான் இது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குற்றம் சாட்டினாாகள்; அன்றைக்கு இருந்த அரசாங்கத்தை. அண்ணாவினுடைய பெயரை அடிக்கடி சொல்லிக் கொள்கிற நாவலர் அவர்கள் அண்ணா அவர்களுடனேயே இருந்த நீங்கள் நில சீர்திருத்தக் கொள்கையிலே ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தால் அந்தக் கருத்தைக்கேட்ட நீங்களும், இப்போது இருக்கிற நிலத்தைப் பிடுங்கி பணக்காரர்களுக்கு கொடுக்க முன் வருகிறீர்களே, நியாயமா? அதை மறுபரிசீலனை செய்யுங்கள். நிலச் சீர்திருத்தத்தின் பெயரால் நிலம் எடுக்க முடிகிறதா? 1975-லே ஹைகோர்ட்டிலே ஒரு ஜட்ஜ்மெண்ட் கொடுத்தார்கள். உள்குத்தகை செல்லுபடியாகும் என்று சொல்லப்பட்டது. அப்படிச் சொன்னதற்குப் பிறகும் இன்றைக்கு வரையில் ஒரு மாற்றுச் சட்டம் உருவாகாத காரணத்தினாலே, எடுக்கப்படுகிற மிச்ச நிலங்களைக்கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒப்படைக்க முடியாத ஒரு நிலை இன்றைக்கு வரையில் இருக்கிறது.

உங்களால் இன்றைக்கு விவசாயிகள் பினாமிகளாக உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். விவசாய குத்தகை உரிமை பதிய முடியாத காரணத்தினாலே, அந்த 1975 ஆம் ஆண்டின் ஹைகோர்ட்டின் தீர்ப்பின் காரணமாக குத்தகை உரிமையாளர்கள் யார் என்று நிர்ணயிக்கப்பட முடியாத இந்த வேளையில் பினாமி அதிகம் உருவாகிக்கொண்டிருக்கிறார்கள். நிலவுடமையாளர்கள் பினாமியை உருவாக்குகிறார்கள்; நிலக் குத்தகைதாரர்கள் பினாமியை உருவாக்குகிறார்கள், அப்படி பினாமி உருவாவதன் காரணமாக உச்சவரம்பிலிருந்து எடுக்கப்படுகின்ற நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒப்படைக்க் முடியாத நிலை இன்றைக்கு இந்த அரசில் நிலவிக்கொண்டிருக்கிறது. ஆறாவது இடத்திலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு விநியோகிக்கின்ற நிலை இருந்ததை மாற்றி, இரண்டாவது இடத்திற்கு கலைஞர் கொண்டு வந்ததற்குப் பின்னால் இந்த அரசு இந்த ஒட்டையை அடைக்க முடியாமல், உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பின்னால் ஒரு மாற்று சட்டத்தைக் கொண்டுவர முடியாத காரணத்தினாலே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு வரையில் உச்சவரம்பில் நிலம் பெற முடியாத நிலை இருக்கிறது. இந்த நிலையில் நீங்கள் நிலத்தைச் சேர்த்துக் கொடுக்கிறீர்கள். யார் யாருக்கு

நிலத்தைச் சேர்த்துக் கொடுக்கிறீர்கள்? இன்றைக்கு இருக்கிற
வசதி வாய்ப்பு உள்ளவர்களெல்லாம் ரொம்ப அக்கறை எடுத்துக்
கொண்டு, பொதுமக்கள் மருத்துவம் பார்ப்பதற்காக,
ஆஸ்பிடல் கட்டப்போகிறார்களா? அப்படியில்லையென்றால்,
பொது மக்கள் எல்லாம் படிப்பதற்காக, மருத்துவம், பொறி
யியல் போன்றவற்றைப் படிக்கட்டும் என்று அக்கறை எடுத்துக்
கொண்டு பணம் வாங்காமல் கல்லூரி கட்டிக்கொடுக்கிறார்களா?
2½ இலட்சம், 3 இலட்சம் பணம் வாங்குகிற அந்த ஆட்களுக்குப்
போய் நீங்கள் ஏன் நிலத்தை வாங்கிக் கொடுக்கிறீர்கள்?
நிலத்தை வாங்குவது என்றால், அவர்களே பணத்தைப்போட்டு,
அவர்களே வாங்கிக் கொள்ளட்டுமே; அவர்களுக்குப் போய் ஒரு
பாதுகாப்பை இந்த அரசாங்கம் கொடுக்கலாமா?

(பிற்பகல் 1-30)

உங்களைச் சந்தேகப்பட வேண்டியதாக இருக்கிறது. தனியார்
தங்களிடம் குவிந்திருக்கிற நிலங்களை விற்றுவிட விலை பேசிக்
கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலச்சுவான்தாரர்
களுக்கு, பணத் திமிங்கலங்களுக்கு நீங்கள் ஏன் பாதுகாப்பு
கொடுக்கிறீர்கள்? இன்றைக்கும் மருத்துவக் கல்லூரி என்று
சொல்லிக்கொண்டு ரோட்டையே வளைத்துப் போட்டுக்கொண்
டிருக்கிற ஆட்களின் மீது நம்முடைய அரசால் நடவடிக்கை
எடுக்க முடியவில்லை. (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின்
அனுமதியுடன் அவையின் நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. மா. மணிமாறன்: அந்த நிலங்களையெல்லாம் எடுக்க
முடியாமல் இருக்கிறீர்கள். எதற்காக நீங்கள் அவர்களுக்குப்
பாதுகாப்பாக நிற்கிறீர்கள்? இன்னும் சொல்லப் போனால்
பெரிய பணத் திமிங்கலங்களுக்கு, நில உடைமையாளர்களுக்கு
இந்த அரசு ஒரு பினாமியாக இருக்குமோ என்ற சந்தேகம்கூட
எனக்கு இருக்கிறது. ஆகவே, தயவு செய்து இந்தச் சட்ட முன்
வடிவைத் திரும்பவும் மறுபரிசீலனை செய்யுங்கள். பினாமியை
ஒழிப்பதற்கு நீங்கள் வேகமாகச் செயல்படுவதாகச் சொல்கிறீர்
கள். பினாமியை ஒழிப்பதற்கு நாங்கள் சட்டம் கொண்டுவந்
திருக்கிறோம். அதற்கு டெல்லியில் இருப்பவர்கள்தான் ஒப்புதல்
கொடுக்காமல் இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லுகிறீர்கள்.
உங்கள் மீது மத்திய அரசாங்கத்திலிருந்து வருகிற அமைச்சர்கள்
குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது உடனே நீங்கள் என்ன
சொல்லுகிறீர்கள்? நாங்கள் கொண்டு வந்திருக்கிற பினாமி
ஒழிப்புச் சட்டத்திற்கு நீங்கள் இன்றைக்கு வரை அனுமதி
அளித்து, அதைச் சட்டமாக ஆக்கிவிடவில்லை என்று அவர்கள்
மீது குற்றஞ்சாட்டுகிறீர்கள். ஆனால் இங்கே நீங்கள் பினாமிக்
குப் பாதுகாப்பாக இருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் பினாமி நிலம்
இருக்கிறது என்று சொல்லுகிற நீங்கள் அதற்காக ஒரு சட்டத்
தையே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி அதற்கு இன்னும்





மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை என்று சொல்லிக் கொண்
டிருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் அப்படிப்பட்ட நிலங்
களை எடுக்க முனைகிறபோது, அவர்கள் மீது கேஸ் போட்டு
கோர்ட்டுக்கு ஒரு 200 சொச்சம் பேர்களைக் கொண்டுபோய்
நிறுத்துகிறீர்கள். எனவே மற்றவர்களுக்கு பினாமியாக மாறிக்
கொண்டிருக்கிற நிலைமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் உங்களைக் கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன். தனிப்பட்டவர்களுக்காக அரசாங்கம்
நிலத்தை அக்விசிஷன் செய்து கொடுக்கிறது. தனியுடைமை
யாளர்கள் நிலத்தை வாங்குவதற்கு நீங்கள் போய் அரசாங்க
மெஷினரியைப் பயன்படுத்தி குறைந்த விலையில் நிலம் வாங்கிக்
கொடுக்கிறீர்கள். இது எப்படி நியாயமாகும்? இன்றைக்கு
உச்சவரம்பின் மூலமாக நிலமே கிடைக்க வில்லை. மிச்ச
நிலத்தை எடுக்க முடியாத நிலைதான் இருக்கிறது. உச்சவரம்புச்
சட்டத்தை உங்களாலே சரியாகச் செயல்படுத்த முடியவில்லை.
இப்படிப்பட்ட நிலையில் நீங்கள் இன்னும் பினாமிகளை உருவாக்
கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தக் காலகட்டத்தில் தயவுசெய்து
நீங்கள் மற்றவர்களுக்கு பினாமியாக மாற வேண்டாம் என்று
கேட்டுக்கொண்டு மரியாதைக்குரிய திரு. வீரய்யன் அவர்கள்
சொன்னதைப்போல் இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி
ஆராய்ந்து, திரும்பவும் சட்டமாக்க வேண்டுமா என்று மறு
பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில
உச்சவரம்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இந்தச் சட்ட
முன் வடிவைப் பொறுத்தவரையில் ஜனதா கட்சி சார்பாக நான்
ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே
இருக்கிற ஒரு சட்டத்திற்கு இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக
ஒரு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் இப்போது
தேவையில்லாத ஒன்றாகும். ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலேயே
விவசாய நிலங்களை சில காரியங்களுக்கு என்று வைத்துக்கொள்ள
வகை செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில்
இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் விவசாய நிலங்களைச் சிலர்
இன்னின்ன காரியங்களுக்காக — அதாவது மருத்துவ மனைக்
காக, கல்லூரிகளுக்காக உபயோகப்படுத்த இருக்கிறோம் என்று,
ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அரசாங்கத்தில் அனுமதி
வாங்கி, பல ஆண்டுகளாகக் கிடப்பில் போடுவதற்கான வாய்ப்பு
இருக்கிறது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக்
கொண்டிருப்பவர்கள்கூட தங்களுடைய நிலத்தில் இன்னின்ன
திட்டம் இருக்கிறது என்று சொல்லி அரசாங்கத்தின் அனுமதி
வாங்கி, பல ஆண்டுகளுக்கு கிடப்பில் போட்டுக்கொள்ள இந்தச்
சட்டத் திருத்தத்தில் வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே இருக்
கிற சட்டமே போதுமான ஒன்றாக இருக்கிறது. கல்வி நிலை

யங்களுக்கு, மருத்துவ மனைக்கு இவ்வளவு நிலம் வேண்டும்
என்று எடுத்துக் கொள்ள ஏற்கெனவே இருக்கிற சட்டத்தில்
இடமிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலையில்
திரும்பவும் ஒரு சட்டம் கொண்டு வருவது என்பது அவர்களுக்கு
—பினாமி நிலத்தை வைத்திருப்பவர்களுக்கு — சாதகமாக
இந்தச் சட்டத் திருத்தம் போய்விடுமோ என்ற அச்சத்தை
எனக்கு ஏற்படுத்துகிறது. அதன் காரணமாக இந்தச் சட்ட முன்
வடிவிற்கு என் ஆட்சேபணையைக் கூறி, இதைப் பொறுக்குக்
குழுவிற்கு விட வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை
முடிக்கிறேன். நன்றி.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால்
கொண்டுவரப்பட்டிருக்கும் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்
சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச்
சட்ட முன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன். ஏற்கெனவே இது குறித்து ஒருஅவசர சட்டத்தை முன்ன
தாகவே பிரகடனப்படுத்தி அதை இப்போது சட்டமாக்க வேண்
டும் என்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் நிலச்
சீர்திருத்தம் என்பதே நிலப் பிரபுக்கள் வைத்திருக்கிற பினாமி
நிலங்களைப் பாதுகாத்து வருகிற ஒரு வரலாறே தவிர
வேறொன்றுமல்ல. அதுதான் தொடர்ச்சியாக வந்துகொண்
டிருக்கிறதே தவிர இதில் ஒன்றும் புதிதாக இல்லை. கடந்த
3 மாத காலமாக நாம் ரேடியோவைத் தொடர்ந்து கேட்டால்,
நம் நாட்டுப் பிரதமர் அவர்கள் ஒவ்வொரு மாநிலத்திலும்
நிலச் சீர்திருத்தம் உடனடியாக வர வேண்டும் என்றும், மிச்ச
நிலத்தை எடுத்து நிலமற்ற கிராமப்புற விவசாயத் தொழிலாளர்
களுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும் என்றும் சொல்லி வருவதைப்
பார்க்கலாம். இதை ஒரு மாதத்திற்குப் 10 தடவையாவது
நம் நாட்டுப் பிரதமர் அறிவித்துக்கொண்டிருக்கிறார்.

நல்ல அறிவிப்பு வருகிறதே தவிர நில உச்சவரம்பு வந்து
அதன் மூலம் எடுக்கக் கூடிய நிலம் கிராமப்புறத்தில் நிலத்தையே
நம்பி வாழக்கூடிய விவசாயத் தொழிலாளிக்கு கிடைத்திருக்கிறதா
என்று பார்த்தால், இல்லை, வெறும் ஏமாற்று சீர்திருத்தமாகத்
தான் இருக்கிறதே தவிர மக்களுக்கான சீர்திருத்தமாக இல்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தமிழ்நாட்டிலுள்ள கிராமப்
புற மக்கள் ஒரு போராட்டத்தை நடத்தி, 16 ஆயிரம் பேர்
சிறைக்குச் சென்று, பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட
பிறகு ஒரு நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அது
30 ஸ்டாண்டர்டு ஏக்கர். தனி நபர்களும் வைத்துக் கொள்ளலாம்
குடும்ப நபர்களும் வைத்துக் கொள்ளலாம் என்று கொண்டு
வந்தார்கள். கொண்டு வந்தது நல்ல நோக்கம்தான். அப்படி
மிச்சம் நிலம் எடுத்து எவ்வளவு பேர்களுக்குக் கொடுத்தார்கள்?



ஒன்றுமில்லை. அடுத்து வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி
யில் தீவிரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 15
ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்து இலட்சக்கணக்கான ஏக்கர்
மிச்ச நிலத்தை எடுத்துக் கொடுக்கப் போகிறோம் என்று கொண்டு
வந்தார்கள். காங்கிரஸ் கட்சி நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக்
கொண்டு வந்தபோதுகூட முன்னாள் முதலமைச்சர், திராவிட
முன்னேற்றக் கழகத்தை வழி நடத்திச் சென்றவர், பேரறிஞர்
அண்ணா அவர்கள், இதே சட்டமன்றத்தில், ''இது உச்ச வரம்பு
அல்ல, மிச்ச வரம்பு'' என்றுகூட அன்றைக்குப் பேசியிருக்கிறார்
கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் 15
ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று அறிவிக்கப்பட்டு அமுல்படுத்தப்
பட்டு மிச்சம் நிலம் இருக்கிறதா, எடுத்தார்களா, கொடுத்தார்
களா என்றால் இல்லை. ஏதோ பெயரளவிற்கு அங்கே கொடுத்
தேன், இங்கே கொடுத்தேன் என்று முடிந்து விட்டது. பிறகு
அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்
முன்னாள் வருவாய்த்துறை அமைச்சராகஇருந்த திரு.எஸ்.டி.எஸ்.
அவர்கள், 1958-இல் இருந்து 1960 ஆம் ஆண்டு வரை உள்ள
அந்த இடைப்பட்ட காலத்திலே தமிழ்நாட்டில் நிலப்பிரபுக்கள்
இலட்சக்கணக்கான ஏக்கர் நிலத்தைப் பினாமியாக வைத்துக்
கொண்டிருக்கிறார்கள், எங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியில்
சட்டத்தை நிறைவேற்றி அந்த மிச்ச நிலத்தை எடுத்து நிலமற்ற
வர்களுக்குக் கொடுக்கப் போகிறோம், அந்த மோசடியை ஒழிக்கப்
போகிறோம் என்று சொல்லி தீவிரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு
வந்தார்கள். எதிர்க்கட்சி வரிசையில் உள்ள நாங்கள் கூட
அதை மகிழ்ச்சியோடு வரவேற்றோம். நீண்ட காலத்திற்குப்
பிறகு கிராமப்புற மக்களுக்கு ஒரு சலுகை கிடைக்கப் போகிறது
என்று அந்தச் சட்டத்தை ஆதரித்தோம். ஆனால் அந்தச்
சட்டம் என்னவாயிற்று? மத்திய சர்க்காரின் அனுமதிக்கு
அனுப்பப்பட்டது. மத்திய சர்க்கார் என்ன செய்தது? நிலச்
சீர்திருத்தம், நிலச்சீர்திருத்தம் என்று இன்றைக்கு விடாப்பிடி
யாகச் சொல்லக்கூடிய மத்திய சர்க்கார் அந்தச் சட்டத்தைத்
திருப்பி அனுப்பு என்று சொல்லி திருப்பி அனுப்பி விட்டார்கள்.
இன்றைக்கு அந்தச் சட்டம் விட்டத்திலே சொருகப் பட்டிருக்
கிறதா, கிடப்பிலே போடப்பட்டிருக் கிறதா, பரிசீலிக்கப்படு
கிறதா என்பதைப் பற்றி ஒன்றுமே பேச்சு, மூச்சு கிடையாது.
இன்றைக்கு நிதியமைச்சர் அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்திலாவது
அது எந்த நிலையில் இருக்கிறது, திருத்தப்பட்டிருக்கிறதா,
திருப்பி அனுப்பப் பட்டிருக்கிறதா என்பதைச் சொல்லியாக
வேண்டும். ஆரம்ப காலச் சட்டத்திலே பழத் தோட்டம் என்ற
பெயரால் மேய்ச்சல் நிலம் என்ற பெயரால், கல்வி நிலையங்கள்
என்ற பெயரால், மருத்துவமனை என்ற பெயரால், குழந்தைகள்
விளையாடுவதற்கு மைதானம் என்ற பெயரால், இப்படி பல்வேறு
நல்ல காரியங்களின் பெயரால் சட்டத்திலே விதிவிலக்கு அளிக்கப்
பட்டிருக்கிறது. அப்படி இருப்பதை யாரும் ஆட்சேபிக்க முடி
யாது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே, ஒரு கிராமப்புறத்தில்
மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டால்

[திரு. பொ. உத்திராபதி] [1987 நவம்பர் 12

ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்கிறார்கள். நிலம் இருந்தால்
மருத்துவ மனை கிடைக்கும் என்றால் அதை யாரும் தடங்கல்
செய்யப் போவதில்லை. தஞ்சை ஜில்லாவில் உள்ள சின்ன
சங்கராச்சாரியாரின் சொந்த கிராமமான இருள்நீக்கி கிராமத்
திற்கு மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் எல்லாம்
ஒவ்வொரு ஆண்டும் வருகிறார்கள். இப்போதுகூட அங்கே
மருத்துவமனை அமைக்கப் போவதாக மத்திய சர்க்காரால் அறி
விக்கப்பட்டு, நமது அமைச்சர்களால் சொல்லப்பட்டு அங்கே
நிலம் கேட்டார்கள். உண்மையிலேயே அங்கேயுள்ள சிறு நிலச்
சொந்தக்காரர்கள், குத்தகை விவசாயிகள், தங்கள் ஊருக்கு
மருத்துவமனை வரப்போகிறது என்று கருதி எழுதிக் கொடுத்து
விட்டிருக்கிறார்கள். நல்ல காரியங்களுக்கு நிலம் கேட்கும்போது
உள்ளபடியே கொடுக்கக் கூடிய மிராசுதாரர்கள், சிறு விவசாயிகள்
இன்றைக்கும் கிராமப்புறத்திலே இருக்கிறார்கள். ஆகவே
இப்படிப்பட்ட அவசரச் சட்டம் தேவையில்லை. 37-வது பிரிவு
தேவையில்லை. யாரைப் பாதுகாக்க வருகிறார்கள்? குறிப்பாக
இன்றைக்கு பினாமியாக நான்காயிரம், ஐந்தாயிரம் ஏக்கர் என்று
வைத்துக்கொண்டு அதை பாதுகாப்பவர்கள் இன்றைக்கு மருத்துவ
மனை என்ற பெயரால், கல்வி நிலையங்கள் என்ற பெயரால், பல
ஏக்கர் நிலங்களுக்கு அனுமதி வாங்கி நிலத்தைப் போட்டு வைத்
துக் கொள்ள இந்தத் திருத்தச் சட்டம் வாய்ப்புக் கொடுக்கும்.

பெயர் சொல்ல நான் விரும்பவில்லை. நான் ஒரு கேள்வியைப்
போட்டிருக்கிறேன். அதை ஏற்றுக் கொண்டதாக எனக்குத்
தகவல் வந்திருக்கிறது. அது அவைக்கு வரும்போது கேட்கிறேன்.
எங்கள் மாவட்டத்தில் 15 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒரு
வேளாண்மைக் கல்லூரி அமைக்கப் போவதாகச் சொல்லப்பட்டு
வருகிறது. அதற்கு அனுமதி கேட்கப் படுவதாகச் சொல்லப்
பட்டு அந்தநிலத்தை அவர்களே வைத்துக்கொண்டு விவசாயம்
செய்து கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-40)

இன்றைக்கு நிலங்கள் இப்படி மறைக்கப்பட்டு, குவிக்கப்
பட்டிருக்கிற நேரத்தில், அகில இந்திய அண்ணா திராவிட முன்
னேற்றக் கழக புரட்சிகர ஆட்சி, நிலப் பிரபுக்கள் நிலங்களைப்
பாதுகாத்து வைத்துக் கொள்ள ஏதோ ஒரு நிர்ப்பந்தத்தின்
பேரிலோ அல்லது வேறு எந்த வகையிலோ இந்தச் சட்டத்தைக்
கொண்டு வந்திருக்கிறது. தமிழகத்திலுள்ள நிலப்பிரபுக்களைப்
பாதுகாக்க வேண்டுமென்று ஏதோ ஒரு வகையில் நிர்ப்பந்தம்
வந்திருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல
எண்ணத்திலே கொண்டு வந்துள்ளார்கள் என்று சொல்ல விரும்ப
வில்லை ஏதோ நிர்ப்பந்தத்தால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்
திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் வாழக்
கூடிய, குறிப்பாக இன்றைக்குத் தண்ணீர் இல்லாமல் வறட்சியால்
பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய கிராமப்புற விவசாயிகளுக்கு நிலம்



1987 நவம்பர் 12] [திரு. பொ. உத்திராபதி]

கிடைக்க நல்ல சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். வரக்
கூடிய பட்ஜெட் கூட்டத் தொடரிலே மீண்டும் அந்தச் சட்டத்தை
நிறைவேற்றி, பினாமியாகப் பாதுகாத்து வைத்திருக்கக் கூடிய
நிலங்களை எடுத்து, நிலமற்ற கிராமப்புற விவசாயிகளுக்குத் தர
நடவடிக்கை எடுத்தால், நாங்கள் எல்லாம் முழுமனதோடு அதை
ஆதரிப்போம்; பாராட்டுவோம்; அதை நிறைவேற்ற ஒத்துழைப்
போம். அப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய முன் வர வேண்டும்.
அப்படியில்லாமல், இப்படிப்பட்ட காரியத்தைச் செய்து நிலப்
பிரபுக்களைப் பாதுகாக்க திருத்தம் வேண்டாம். இந்தத் திருத்
தத்தை நிறைவேற்றாமல், இதை பொறுக்குக் குழுவுக்கு அனுப்பி,
பொறுக்குக் குழு பரிசீலித்து, மறு திருத்தமாக இதைக் கொண்டு
வர வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில்
வலியுறுத்தி, மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் இந்தத் திருத்
தத்தை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு
வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு
தற்காலிகத் தலைவரவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தி
னுடைய முக்கியமான நோக்கத்தை என்னுடைய முன்னுரையில்
சுருக்கமாக நான் குறிப்பிட்டுக் காட்டினேன். இந்தச் சட்டத்
திற்கு நோக்கம் கற்பித்து, ஏதோ நிர்ப்பந்தத்தின் அடிப்படையில்.
இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்ததாக மாண்புமிகு
உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் குறிப்பிட்டார்கள்
எந்த ஒரு நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலேயும் இப்படி ஒரு
அவசரச் சட்டத்தைக் கொண்டு வரும் நெருக்கடி நிலையில் இந்த
ஆட்சியில்லை, அந்த அவசியமும் இல்லை. என்பதை முதலிலே
நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இந்த அவசரச் சட்டம் மேலும், சீர்படுத்துவதற்கும்,
செம்மைப்படுத்துவதற்கும், பொதுமக்களுக்கு நன்மையாக
அமைவதற்கும் பயன்படும் வகையில் அமைய வேண்டுமென்ற
நோக்கத்தின் அடிப்படையிலேதான் கொண்டு வரப்படுகிறது என்
பதை உணர வேண்டும். 1961 ஆம் ஆண்டு நில உச்சவரம்புச்
சட்டத்தை நிறைவேற்றியபோது மத சம்பந்தமான பொது
டிரஸ்டுகள் இந்தச் சட்டத்திலிருந்து அறவே விலக்கு
அளிக்கப்பட்டிருந்தன. யாரும் அவர்கள் நிலங்களில் கை
வைக்க முடியாது. அதுதான் 1961 ஆம் ஆண்டுச் சட்டம்.

இந்த அவசரச் சட்டம் வேண்டாம், தள்ளிவிடலாம் என்று
சொல்கிறார்கள். 1961—லிருந்து முழு சுதந்திரத்தோடு, நூற்றுக்கு
நூறு சுதந்திரத்தோடு மத டிரஸ்டுகளும், பொது டிரஸ்டுகளும்
இருந்து வந்திருக்கின்றன என்பதோடு அவர்கள் கூடுதலாக நிலம்
வாங்கி டிரஸ்டுகளுக்கு சேர்த்துக் கொண்டு வந்தால், நில உச்ச
வரம்புச் சட்டத்தின் கீழ் அதைத் தடுத்து நிறுத்த எந்த ஒல
பிரிவும் இல்லை. 1961லிருந்து 1972 வரையிலும் இந்த நிலை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 12

என்ன என்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். இப்படி கல்வி
நிலையங்களுக்கு, மருத்துவ நிலையங்களுக்குப் பயன்படுத்து
வதன் மூலம்தான் பொது மக்களுக்குப் பயன்பட
வேண்டும். சமுதாயத்திற்குப் பயன்படுத்துகின்ற அளவுக்குத்தான்
கூடுதலாகப் பெறலாமே தவிர, அப்படி இல்லாவிட்டால் பெறக்
கூடாது என்பதுதான் இந்த சட்டத்தின் நோக்கம். இந்த
சட்டம், ஏற்கெனவே உள்ள சுதந்திரத்தையும் எடுத்து, பொது
மக்களுக்கு நல் வாழ்வு கொண்டுவருவதற்குப் பயன்படுகின்ற
ஒரு சட்டமே தவிர, இதிலே தீய நோக்கம் எதுவும் இல்லை
என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன். இதனால் ஏற்படுகிற
விளைவு என்ன என்பதைச் சொல்கிறேன்.

(பிற்பகல் 1–50)

இந்தச் சட்டம் 15–7–1987-ல் இருந்து அதாவது ஆளுநர்
அவர்கள் அவசரச் சட்டமாக இதனைப் பிறப்பித்த தேதி
யிலிருந்து நடைமுறைக்கு வருகிறது. 15–7–1987-க்கு முன்னால்
அந்தந்த நிறுவனங்கள், டிரஸ்டுகள் ஆகியவற்றுக்கு, அவை
களுக்கு சட்டப்படி இருக்க வேண்டிய நிலத்திற்கு மேற்கொண்டு
அதிகமாக இருக்குமானால் அந்த நிலம் அரசுக்குச் சொந்தமாகி
விடும். இந்தச் சட்டப்படி அப்படி எடுத்துக் கொள்கிற உரிமை,
வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது. அதுபோல அவர்களுக்கு
அவற்றை திருப்பிக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்று
முடிவு செய்கிற அதிகாரமும் நமக்குத்தான் உண்டு. பொது
நிறுவனம் நடத்துகிறவர்கள் உண்மையிலேயே தங்களிடம் இருக்
கும் நிலங்களை கல்வி, மருத்துவம் போன்றவற்றிற் வளர்ச்சிக்கு
பயன்படுத்துகிறார்களா? அப்படி என்றால் உண்மையிலேயே
அவர்களுக்கு எவ்வளவு நிலம் வேண்டும் என்றெல்லாம் பார்க்க
வேண்டும். சாதாரணமாக பாலிடெக்னிக் என்று சொன்னால்
25 ஏக்கர், 15 ஏக்கர் என்று இருக்க வேண்டும். இன்றைக்கு
அவற்றை பல டிரஸ்டுகள் வைத்திருக்கிறார்கள், ஆனால் அவர்கள்
எல்லாம் புதிதாக நிலத்தை கையகப்படுத்த உரிமையில்லை.
எந்த ஒரு நோக்கமாக இருந்தாலும் சரி, இந்த சட்டத்தின்படி
ஏற்கெனவே வாங்கப்பட்ட நிலமும் தேவைக்கு அதிகமாக இருக்கு
மானால் அவை எல்லாம் அரசுக்கு சொந்தமாகிவிடுகிறது. அரசு
விரும்பினால் அவர்களுக்குத் திருப்பி தருவதற்கும் உரிமை
இருக்கிறது. திருப்பி தருவதும் தாராததும் அரசின் கையில்
இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதுபோல சரியாக
இல்லாமல், நடைமுறையில் இல்லாமல், போகஸ் ஆக, ஏமாற்
றாக எங்காவது இருக்குமேயானால் டிரஸ்டுக்கு அந்த நிலத்தைத்
தர டியாது என்று சொல்கிற உரிமை அரசுக்கு இருக்கிறது.
எந்த அளவுக்கு அவர்களுக்குத் தேவையோ, பயன்படுமோ
அதை மட்டும் அவர்களுக்குத் தரலாம். எந்த அளவுக்குக் கேட்க



1987 நவம்பர் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

லாம் என்றால் 500 ஏக்கர் 100 ஏக்கர் வேண்டுமென்று கேட்டால் தர வேண்டிய அவசியமில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதுமாதிரி 5 ஏக்கர், 10 ஏக்கர், 15 ஏக்கர் தேவை என்றால் அதை தந்துவிட்டு மற்றவற்றை நிலமற்றவர்களுக்கு கொடுக்க அரசுக்கு இதனால் வழிவகை ஏற்பட்டிருக்கிறது. மேற்கொண்டு டிரஸ்டுகள் தங்களுக்கு நிலம் தேவை என்று சொல்லி அவர்களாகவே நிலம் வாங்கவும் முடியாது. ஆனால் 1961-க்கும் 1972-க்கும் இடையிலே அவர்கள் தாங்களாகவே வாங்க வழிவகை இருந்தது. ஆனால் இப்போதோ அரசின் அனுமதியில்லாமல் புதிதாக அவர்கள் நிலம் வாங்க முடியாது. அரசாகப் பார்த்துக் கொடுக்கிற நிலத்தைத்தான் அவர்கள் வாங்க முடியும்.

மத்திய அரசின் யோசனையும் நமக்கு பயன்படும் அளவுக்கு இச்சட்டத்தில் இருக்கிறது. 'புல் கண்ட்ரோல்' அரசுக்கு வருவதால் இச்சட்டம் நல்லமுறையில் பயன்படும் என்கிற அளவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படக் கூடும். இந்த அவசரச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பிரிவு 37–பி-க்கு மட்டும்தான் இப்போது கொண்டு வருகிறோம். மற்றவைகளை எல்லாம் இந்த அவையிலேயே ஏற்கெனவே நிறைவேற்றி விட்டோம்.

நில உச்சவரம்புச் சட்டப்படி 31–10–1987 வரை கணக்கிட்டுப் பார்த்ததில் இருக்கின்ற உபரி நிலம் 1,67,579 ஏக்கர். இதுவரை கொடுக்கபபட்டிருக்கிற நிலம் 1,25,535 ஏக்கர். இதை 95,065 பேர்களுக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறோம். எவ்வளவு டிரஸ்டுகள் இருக்கின்றன. எவ்வளவு உபரி நிலம் டிரஸ்டுகளிடம் இருக்கின்றன என்கிற ஒரு சர்வேயை எடுத்தோம். சப்-ரெஜிஸ்ட்ரார் அலுவலகங்களின் மூலமாகக் கணக்கெடுத்துப் பார்த்தோம். அப்போது 3,307 நிறுவனங்கள் கூடுதல் நிலம் வாங்கி வைத்திருப்பதாகக் கணக்கில் தெரிய வந்தது. எவ்வளவு நிலம் என்றால் 9,427 ஏக்கர் நிலம் கூடுதலாக வாங்கியிருக்கிறார்கள். இன்னும் இம்மாதிரி எடுக்க வேண்டியிருக்கிறது.

இந்தத் சட்டத் திருத்தத்தின் மூலம், அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினாலும், 9,427 ஏக்கர் நிலமும் அரசின் கையில் வந்துவிடும்; அந்த நிலம் கையகப்படுத்தப்படும். இந்தச் சட்டத்தை நிறைவேற்றும் நாளிலிருந்து அந்த நிலத்தைக் கையகப்படுத்த உரிமை இருக்கிறது. எந்த எந்த நிலம் நியாயமாக, ஒழுங்காக மக்களுக்குப் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது அல்லது இல்லை என்று தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு அரசிடம் வந்துவிடுகிறது. அப்படி வருகின்றபோது 9,427 ஏக்கர் நிலத்தில் எந்த அளவுக்குத் திருப்பிக் கொடுக்கலாம்; எந்த அளவுக்கு அரசாங்கம் கையில் வைத்துக்கொள்ளலாம்; அரசாங்கம் கையிலே வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு பிரித்துக் கொடுக்கலாம் என்று அரசாங்கம் முடிவு செய்யலாம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 12

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 40/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 13–11–1987 காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

85. நகராட்சி மன்றங்கள் ஏற்பாடு செய்யும் விழாக்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்படவேண்டிய நபர்கள் பற்றிய விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறையின் 13–4–1987 ஆம் நாளிட்ட 396 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

86. மாம்பழங்கள் வணிகத்தை பொறுத்த மட்டில் தர்மபுரி மாவட்டம் முழுவதையும் அறிவிக்கப் பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 27–2–1987 ஆம் நாளிட்ட 242 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 30 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது[.

87. உளுந்தைப் பொறுத்த மட்டில் கோயம்புத்தூர் , பெரியார் மாவட்டங்களை அறிவிக்கப் பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 3–7–1987 ஆம் நாளிட்ட 1051 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை ]1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

88. அண்ணா மாவட்டம், திண்டுக்கல் வட்டத்தை சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 13–8–1987 ஆம் நாளிட்ட 648 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை ]1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

89. 1984-85 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை, (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (3) பிரிவுக் கூறின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ் ஆங்கிலம்).

90. 1985-86 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 323 (2) பிரிவுக் கூறின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

91. 1979-80 ஆம் ஆண்டிற்கான ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

92. 1980-81 ஆம் ஆண்டிற்கான ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

13. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை).

14. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 100 வரை).

---

136537

V211.31 N87

N87-45-1